2959

T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: 33 No1

March. 5

1987


N87
N87·33·1
126504

TD
V811,31 N87
1127-33-1
136504
சென்னை-600 008.

## உள்ளடக்கம்.

5—3—1987


| | பக்கங்கள். |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் / Personnel of the Government of Tamil Nadu | i—ii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய பட்டியல் | iii—v |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் அலுவலர்கள் (அகர வரிசைப்படி) | vi—xiv |
| 1. வினாக்கள்—விடைகள்— | 1—30 |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | |
| 2. தகவல் கோரல்— | 31 |
| 3. கவன ஈர்ப்பு— | |
| (அ) விவசாயிகள் நிலவள வங்கிக் கடன்களைத் திரும்பக் கட்ட இயலாத நிலை குறித்து | 31—34 |
| (ஆ) சி.ஐ.டி. நகர் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளுக்குப்பட்டா வழங்குதல் | 34—36 |
| 4. அறிக்கை அளித்தல்— | |
| பொது நிறுவனங்கள் குழு | 36 |
| 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம் விவாதம்—(தொடர்ச்சி) | 36—194 |
| * திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் | 36—42 |
| திரு. பொன் முத்துராமலிங்கம் | 42—59 |
| மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் | 59—90 |
| திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் | 91—102 |
| * திரு. மு. ஜான் வின்செண்ட் | 102—107 |
| * திரு. எஸ். பி. மணவாளன் | 108—112 |
| * திரு. க. நரசிம்மபல்லவன் | 112—115 |
| திரு. எஸ். என். இராமசாமி | 116—119 |
| * திரு. ஆர். ஈஸ்வரன் | 119—122 |
| திரு. கூடலூர் இ. வி. வேலு | 122—131 |

| | | |
|---|---|---|
| * | திரு. த. மாரிமுத்து | 131—136 |
| | திரு. ஏ. எஸ். ரவீந்திரன் | 137—144 |
| * | திரு. பொ. உத்திராபதி | 144—153 |
| * | திரு. வி. கோ. செல்லப்பா | 153—158 |
| | திரு. க. இரா. சின்னராசு | 158—164 |
| | திரு. கே. முத்துவேல் | 164—167 |
| | திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன் | 167—172 |
| | திரு. ச. கோவிந்தசாமி | 172—176 |
| * | திரு. மா. மீனாட்சிசுந்தரம் | 176—182 |
| * | திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 182—186 |
| * | திரு. மு. மாரிமுத்து | 186—190 |
| | திரு. ஜே. முகம்மது கனி | 191—192 |
| * | திரு. கே. வி. வேணுகோபால் | 192—194 |

6. அறிவிப்பு—

பேரவை அலுவல் 107

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 194


2959

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்,

### ஆளுநர்

திரு. சுந்தர்லால் குரானா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

| | | |
|---|---|---|
| 1. | முதலமைச்சர் | மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் |
| 2. | நிதி அமைச்சர் | மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் |
| 3. | உணவு அமைச்சர் | மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் |
| 4. | உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி |
| 5. | தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. க. இராசாராம் |
| 6. | மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் |
| 7. | கல்வி மற்றும் சட்ட அமைச்சர் | மாண்புமிகு திரு. சி. பொன்னையன் |
| 8. | போக்குவரத்துத் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. சு. முத்துசாமி |
| 9. | வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு |
| 10. | சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மீன் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் |
| 11. | மதிய உணவு, சமூக நலம் மற்றும் கதர் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் |
| 12. | ஊரகத் தொழில் அமைச்சர் | மாண்புமிகு திரு. அனூர் பு. கோ. ஜெகதீசன் |
| 13. | வணிக வரித்துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. த. இராமசாமி |
| 14. | ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. எ. அருணாசலம் |
| 15. | பொதுப் பணித் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் |

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

### GOVERNOR

THIRU SUNDAR LAL KHURANA

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

| | | |
|---|---|---|
| 1. | The Chief Minister | **Hon. Dr. M. G. Ramachandran** |
| 2. | The Minister for Finance | **Hon. Dr. V. R. Nedunchezhian** |
| 3. | The Minister for Food | **Hon. Thiru S. Ramachandran** |
| 4. | The Minister for Local Administration and Labour | **Hon. Thiru K. A. Krishnasamy** |
| 5. | The Minister for Industries and Agriculture | **Hon. Thiru K. Rajaram** |
| 6. | The Minister for Health | **Hon. Thiru P. U. Shanmugam** |
| 7. | The Minister for Education and Law | **Hon. Thiru C. Ponnaiyan** |
| 8. | The Minister for Transport | **Hon. Thiru S. Muthusamy** |
| 9. | The Minister for Housing and Handlooms | **Hon. Thiru S. Thirunavukkarasu** |
| 10. | The Minister for Tourism, Prohibition and Electricity | **Hon. V. V. Swaminathan** |
| 11. | The Minister for Noon-Meal, Social Welfare and Khadi | **Hon. Thiru R. Soundarajan** |
| 12. | The Minister for Rural Industries | **Hon. Thiru Anoor P. G. Jagadeesa** |
| 13. | The Minister for Commercial Taxes | **Hon. Thiru S. Ramasamy** |
| 14. | The Minister for Adi-Dravidar Welfare | **Hon. Thiru A. Arunachalam** |
| 15. | The Minister for Public Works | **Hon. Thiru K. K. S. S. R. Ramachandran** |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### பேரவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்

### பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. மா. சின்னராசு

டாக்டர் கே. சமரசம்

திரு. கே. குப்புசாமி

திரு. செ. செம்மலை

திரு. டி. ஆர். வேங்கடரமணன்

### செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி

## பேரவையின் முக்கிய அலுவலர்கள்.
(அகர வரிசைப்படி.)

| | |
|---|---|
| பள்ளிகொண்ட பெருமாள், திரு. பெ., பி.ஏ., பி.எல். | கூடுதல் செயலாளர் |
| பத்மநாப நம்பியார், திரு. பி. எம்., பி.ஏ., பி.ஜி.எல். | இணைச் செயலாளர் |
| சீனிவாசன், திரு. ச., பி.எஸ்ஸி. | முதுநிலைக் குழு அலுவலர் |
| சீதாராமன், திரு. வெ., பி.காம்., பி.ஜி.எல். | துணைச் செயலாளர் |
| டில்லிதுரை, திரு. த.ப., பி.எஸ்ஸி., பி.எல். | துணைச் செயலாளர் |
| ஜானகிராமன், திரு. செ.சு., பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் |
| சீனிவாசன், திரு. கு.அ., பி.ஏ. | குழு அலுவலர் |
| இராமச்சந்திரன், திரு. ஆர்.கே., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| கனகசபாபதி, திரு. பெ.ச., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| கேசவராம், திரு., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| சுந்தரராஜன், திரு. கா.செ., பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| தியாகராஜன், திரு. கே., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| பாலகிருஷ்ணன், திரு. ப., பி.காம். | சார்புச் செயலாளர் |
| ரெஜினால்ட் ஜான், திரு. ஜே., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| ஜான், திரு.வ.சா., பி.ஏ. | சார்புச் செயலாளர் |



| | |
|---|---|
| ஜேக்கப் ஆர்தர், திரு.டி., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| ஜோசப், திரு.மா.கு., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| வெங்கட்டராமன், திரு.கோ., | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர் |
| சுவாமிநாதன், திரு ச., எம்.ஏ. | தலைமை நிருபர் (குழுக்கள்) |
| நம்பி ஐயங்கார், திரு.எஸ். | தலைமை நிருபர் (பேரவை) |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

## உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி)

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | **அ** | |
| 1 | அண்ணாதாசன் திரு. ஏம். | திருவரம்பூர் |
| 2 | அப்துல் சமத் திரு. ஆ. கா. அ. | திருவல்லிக்கேணி |
| 3 | அப்துல் மஜீத் திரு. எச். | வாணியம்பாடி |
| 4 | அரங்கநாயகம் திரு. செ. | தொண்டாமுத்தூர் |
| 5 | அரிக்குமார் திரு. இரா. | பெரணமல்லூர் |
| 6 | அருணாசலம் திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 7 | அருணாசலம் திரு. எ. | வரகூர் (செ.வ.) |
| 8 | அன்பழகன் திரு. கே. | ஓமலூர் |
| 9 | அன்பழகன் திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 10 | அன்பழகன் திரு. பொ. | இளையான்குடி |
| | **ஆ** | |
| 11 | ஆண்டி அம்பலம் திரு. மெ. | நத்தம் |
| 12 | ஆதிமூலம் என்கிற தில்லைகாந்தி திரு. | ஆண்டிமடம் |
| 13 | ஆறுமுகம் திரு. அ. | வந்தவாசி |
| 14 | ஆறுமுகம் திரு. எச். ஜி. | பென்னாகரம் |
| 15 | ஆறுமுகம் திரு. ஆர். எஸ். | ஒட்டபிடாரம் (செ.வ.) |
| 16 | ஆறுமுகம் திரு. எ. எஸ். ஏ. | விருதுநகர் |
| 17 | ஆறுமுகம் திரு. மு. | சேலம்-2 |
| 18 | ஆனந்த கிருஷ்ணா திரு. ஜி. | பூந்தமல்லி |
| 19 | ஆனந்தன் திரு. மு. | உளுந்தூர்பேட்டை |
| | **இ** | |
| 20 | இரகுபதி திரு. கோ. | காட்பாடி |
| 21 | இரத்தினம் திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 22 | இரத்தினவேலு திரு. செ. | முசிறி |
| 23 | இராசமாணிக்கம் திரு. ஆர். | அரூர் (செ. வ.) |
| 24 | இராசமாணிக்கம் திரு. எல்ல. | தாம்பரம் |
| 25 | இராசரத்தினம் திரு. எப். எம். | கொளச்சல் |
| 26 | இராசரத்தினம் திரு. எம். | விழுப்புரம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | **இ—தொடர்ச்சி.** | |
| 27 | இராசாங்கம் திரு. மு. | திருவிடைமருதூர் |
| 28 | இராசாம்பாள் திருமதி த. | தலைவாசல் (செ. |
| 29 | இராசாராம் திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 30 | இராசாராமன் திரு. எஸ். | பாபநாசம் |
| 31 | இராசேந்திரன் திரு. எஸ். என். | தூத்துக்குடி |
| 32 | இராமச்சந்திரன் டாக்டர் எம். ஜி. | ஆண்டிப்பட்டி |
| 33 | இராமச்சந்திரன் திரு. கே. எஸ். எம். | போடிநாயக்கனூர் |
| 34 | இராமச்சந்திரன் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 35 | இராமச்சந்திரன் திரு. ச. | பண்ருட்டி |
| 36 | இராமச்சந்திரன் திரு. சோ. மா. | அண்ணா நகர் |
| 37 | இராமச்சந்திரன் திரு. ப. ந. | பட்டுக்கோட்டை |
| 38 | இராமசாமி திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 39 | இராமசாமி திரு. த. | இராமநாதபுரம் |
| 40 | இராமலிங்கம் டாக்டர் கே. பி. | ராசிபுரம் |
| 41 | இளங்கோவன் திரு. ஈ. வே. கி. ச. | சத்தியமங்கலம் |
| | **ஈ** | |
| 42 | ஈஸ்வரன் திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| | **உ** | |
| 43 | உச்சி திரு. கே. | கூடலூர் |
| 44 | உத்திராபதி திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| | **எ** | |
| 45 | எத்திராசன் திரு. இ. | அச்சரப்பாக்கம் (செ. வ.) |
| | **க** | |
| 46 | கணபதி திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 47 | கதிர்வேலு திரு. மா. | ராணிப்பேட்டை |
| 48 | கந்தசாமி திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 49 | கந்தசாமி திரு. பி. | பொங்கலூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| | க—தொடர்ச்சி. |
| 50 கல்லன் திரு. கே. | உதகமண்டலம் |
| 51 கனீர்த்தான் திரு. சோ. | சங்கராபுரம் |
| 52 காளிமுத்து டாக்டர் கா. | மதுரை கிழக்கு |
| 53 கிருஷ்ணசாமி திரு. கே. ஏ. | ஆயிரம் விளக்கு |
| 54 கிருஷ்ணசாமி திரு. வி. இரா. | அணைக்கட்டு |
| 55 கிருஷ்ணமூர்த்தி திரு. கி. | கும்பகோணம் |
| 56 கிருஷ்ணராஜ் திரு. ஜி. | சேலம்-1 |
| 57 குப்புசாமி திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 58 குப்புசாமி திரு. வே. | செய்யாறு |
| 59 குமர குருபர ராமநாதன் திரு. ச. | விளாத்திகுளம் |
| 60 குமரி அனந்தன் திரு. | ராதாபுரம் |
| 61 குமாரதாஸ் டாக்டர் தே. | கிள்ளியூர் |
| 62 கோமதி சீனிவாசன் திருமதி | வலங்கைமான் (செ.வ.) |
| 63 கோவிந்தசாமி திரு. ஆர். | குடியாத்தம் |
| 64 கோவிந்தசாமி திரு. ச. | எடப்பாடி |
| 65 கோவேந்தன் திரு. எம். ஆர். | பேராவூரணி |
| | ச |
| 66 சங்கரலிங்கம் திரு. ச. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.) |
| 67 சண்முகம் திரு. இரா. | திருத்தணி |
| 68 சண்முகம் திரு. என். | சோளிங்கர் |
| 69 சண்முகம் திரு. ப. உ | மேல்மலையனூர் |
| 70 சண்முகையா பாண்டியன் திரு. எம். | ஆலங்குளம் |
| 71 சந்திரசேகரன் திரு. ஆ. | சோழவந்தான் |
| 72 சந்திரசேகர் திரு. மு. | முகையூர் |
| 73 சம்சுல் ஆலம் திரு. வி. எஸ். டி. | பாளையங்கோட்டை |
| 74 சமரசம் டாக்டர் கே. | காவேரிப்பட்டினம் |
| 75 சரோஜா திருமதி இரா. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 76 சாமிக்கண்ணு திரு. தா. | செங்கம் (செ.வ.) |
| 77 சித்தன் திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 78 சித்தன் திரு. வி. பி. | வில்லிவாக்கம் |
| 79 சிவக்குமார் திரு. ஆ. | சமயநல்லூர் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| | ச—தொடர்ச்சி. |
| 80 சிவக்குமார் திரு. எம். | கூனூர் (செ.வ.) |
| 81 சிவஞானம் திரு. ந. | திருவோணம் |
| 82 சிவப்பிரகாசம் திரு. சீ. | சேந்தமங்கலம் (ஆ.வா) |
| 83 சிவராமன் திரு. எஸ். | சின்னசேலம் |
| 84 சிவராஜ் திரு. சு. | ரிஷிவந்தியம் |
| 85 சின்னக்குழந்தை திரு. மு. | ஆரணி |
| 86 சின்னசாமி திரு. வே. கு. | பவானிசாகர் |
| 87 சின்னராசு திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 88 சின்னராசு திரு. மா. | மேட்டுப்பாளையம் |
| 89 சுந்தரதாஸ் திரு. மா. | விளவன்கோடு |
| 90 சுப்பராயன் திரு. கே. | நிருப்பூர் |
| 91 சுப்பிரமணிய ஆதித்தன் திரு. எஸ். ஆர். | திருச்செந்தூர் |
| 92 சுப்பிரமணியன் திரு. உ. | சிவகங்கை |
| 93 சுப்பிரமணியன் திரு. வி. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 94 சுப்புராயர் திரு. சி. | கம்பம் |
| 95 சுவாமிநாதன் திரு. வி. வி. | புவனகிரி |
| 96 செங்காளியப்பன் திரு. ஆர். | சிங்காநல்லூர் |
| 97 செங்கோட்டையன் திரு. கு. அ. | கோபிசெட்டிபாளையம் |
| 98 செங்கோட்டையன் திரு. பெ. | கபிலர்மலை |
| 99 செம்மலை திரு. செ. | தாரமங்கலம் |
| 100 செல்லமுத்து திரு. எம். | திருவாருர் (செ. வ.) |
| 101 செல்லப்பா திரு. வி. கோ. | கடலூர் |
| 102 சேகர் திரு. கே. பி. கே. | பொன்னேரி (செ.வ.) |
| 103 சொர்ணலிங்கம் திரு. கா. | திருவாடானை |
| 104 சோலைராசு திரு. க. | மருங்காபுரி |
| 105 சௌந்திரராஜன் திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 106 சௌரிராஜன் டாக்டர் கே. | தியாகராயநகர் |
| | ஞா |
| 107 ஞானசுந்தரம் திரு. சா. | மன்னார்குடி |
| | ட |
| 108 டேனியல்ராஜ் திரு. எஸ். | ஸ்ரீ வைகுண்டம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | **த** | |
| 109 | தங்கமணி திரு. மு. | மாயூரம் |
| 110 | தங்கமணி திரு. கே. எம். | திண்டிவனம் |
| 111 | தங்கராசு திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 112 | தங்கராசு திரு. செ. | மங்களூர் (செ. வ.) |
| 113 | தங்கவேல்ராஜ் திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ. வ.) |
| 114 | தங்கவேலு திரு. வி. | வால்பாறை (செ. வ.) |
| 115 | தமிழ்மணி திரு. | திருப்போரூர் (செ. வ.) |
| 116 | தமிழரசன் திரு. கு. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 117 | தனபால் திரு. ப. | சங்கரி (செ. வ.) |
| 118 | தாமரைக்கனி திரு. இரா | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 119 | தியாகராசன் திரு. ஆர். | விருத்தாசலம் |
| 120 | திருஞானம் திரு. பி. ஆர். | ஏற்காடு (ஆ. வா.) |
| 121 | திருநாவுக்கரசு திரு. எஸ். | அறந்தாங்கி |
| 122 | திருமலைசாமிக் கவுண்டர் திரு. சு. | உடுமலைப்பேட்டை |
| 123 | தீர்த்தகிரி கவுண்டர் திரு. டி. | மொரப்பூர் |
| 124 | தீர்த்தராமன் திரு. ப. | பாலக்கோடு |
| 125 | துரை அன்பரசன் திரு. | நெல்லிக்குப்பம் |
| 126 | துரை கிருஷ்ணமூர்த்தி திரு. | தஞ்சாவூர் |
| 127 | துரை கோவிந்தராசன் திரு. | திருவையாறு |
| 128 | துரைசாமி திரு. சைதை சா. | சைதாப்பேட்டை |
| 129 | துரைராசு திரு. எஸ். பி. | காரைக்குடி |
| 130 | துரை ராமசாமி திரு. | வெள்ளக்கோவில் |
| 131 | தெய்வநாயகம் திரு. எ. | மதுரை சென்ட்ரல் |
| 132 | தேவராஜ் திரு. வி. எம். | வேலூர் |
| | **ந** | |
| 133 | நடராசன் திரு. ஆ. | பேரூர் |
| 134 | நரசிம்ம பல்லவன் திரு. க. | உத்திரமேரூர் |
| 135 | நரசிம்மன் திரு. பூ. மு | பள்ளிப்பட்டு |
| 136 | நல்லமுத்து டாக்டர் க. | பெரம்பலூர் (செ. வ.) |
| 137 | நல்லுசாமி திரு. என். | திருச்சிராப்பள்ளி-2 |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | **ந—தொடர்ச்சி** | |
| 138 | நாச்சிமுத்து திரு. கே. பி. | மேட்டூர் |
| 139 | நாராயணன் திரு. பு. கோ. | பவானி |
| 140 | நெடுஞ்செழியன் டாக்டர் இரா. | ஆத்தூர் |
| | **ப** | |
| 141 | பஞ்சவர்ணம் திரு. வி. எஸ். | அருப்புக்கோட்டை |
| 142 | பட்டாபிராமன் திரு. செ. | திருவள்ளூர் |
| 143 | பரமசிவம் திரு. பா. ந. | பல்லடம் |
| 144 | பழனி திரு. த. | ஆற்காடு |
| 145 | பழனிச்சாமி திரு. கா. செ. | காங்கேயம் |
| 146 | பழனிமுத்து திரு. சி. | ஆத்தூர் |
| 147 | பாண்டியன் திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 148 | பாண்டுரங்கன் திரு. மு. | கலசப்பாக்கம் |
| 149 | பாப்பா சுப்பிரமணியன் திரு. | குத்தாலம் |
| 150 | பாரதி திரு. ஜி. கே. ஜெ. | திருவொற்றியூர் |
| 151 | பாரமலை திரு. க. | மானாமதுரை (செ. வ.) |
| 152 | பாலகிருஷ்ணன் திரு. ச. | மொடக்குறிச்சி |
| 153 | பாலகிருஷ்ணன் திரு. வி. | சிவகாசி |
| 154 | பாலச்சந்திரன் திரு. வை. | பத்மநாபபுரம் |
| 155 | பாலசுப்பிரமணியன் திரு. க. | சீர்காழி (செ. வ.) |
| 156 | பாலசுப்பிரமணியன் திரு. எஸ். | அம்பாசமுத்திரம் |
| 157 | பாலசுப்பிரமணியன் திரு. வேடசந்தூர் வி. பி. | வேடசந்தூர் |
| 158 | பாலாஜீ திரு. கே. | காஞ்சிபுரம் |
| 159 | பாலுச்சாமி திரு. ஏ. | பரமக்குடி (செ.வ.) |
| 160 | பாலுசாமி திரு. அ. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 161 | பிரணவநாதன் திரு. அ. | கடலாடி |
| 162 | பிரேம்குமார் திரு. ஆ. | திண்டுக்கல் |
| 163 | புருசோத்தமன் திரு. எஸ். | அரியலூர் |
| 164 | புஷ்பராசு திரு. த. | திருமயம் |
| 165 | பெரியசாமி திரு. அ. | தாராபுரம் (செ.வ;) |
| 166 | பெரியசாமி திரு. ரா. | தொட்டியம் |
| 167 | பெருமாள் திரு. தெ. | கடையநல்லூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | **ப — தொடர்ச்சி** | |
| 168 | பெருமாள் பிள்ளை திரு. கோ. | கன்னியாகுமரி |
| 169 | பொன் முத்துராமலிங்கம் திரு. | மதுரை (மேற்கு) |
| 170 | பொன்னம்மாள் திருமதி ஏ. எஸ். | பழனி (செ. வ.) |
| 171 | பொன்னுசாமி டாக்டர் அ. | பெருந்துறை |
| 172 | பொன்னையன் திரு. சி. | திருச்செங்கோடு |
| | **ம** | |
| 173 | மணவாளன் திரு. எஸ். பி. | திருப்பத்தூர் |
| 174 | மணிமாறன் திரு. மா. | நன்னிலம் (செ.வ.) |
| 175 | மலர்மன்னன் திரு. அ. | திருச்சிராப்பள்ளி-1 |
| 176 | மனோகரன் திரு. கி. | புரசைவாக்கம் |
| 177 | மனோகரன் திரு. தி. நா. கோ. அ. | திருநாவலூர் |
| 178 | மாசிலாமணி டாக்டர் ந. | ஜெயங்கொண்டம் |
| 179 | மாதவன் திரு. செ. | திருப்பத்தூர் |
| 180 | மாதையன் திரு. யு. பி. | அந்தியூர் (செ.வ.) |
| 181 | மாரிமுத்து திரு. த. | குளத்தூர் (செ.வ.) |
| 182 | மாரிமுத்து திரு. மு. | திருப்பரங்குன்றம் |
| 183 | மீனாட்சிசுந்தரம் திரு. மா. | வேதாரண்யம் |
| 184 | முகம்மது கனி திரு. ஜே. | புதுக்கோட்டை |
| 185 | முகம்மது சலீம் டாக்டர் த. | பெரியகுளம் |
| 186 | முசிறிபுத்தன் திரு. பி. | குளித்தலை |
| 187 | முத்துசாமி திரு. சு. | ஈரோடு |
| 188 | முத்துராமலிங்கம் திரு. பி. கே. எம். | உசிலம்பட்டி |
| 189 | முத்துவேல் திரு. கே. | முதுகுளத்தூர் |
| 190 | முத்தையா திரு. இரா. | சேடப்பட்டி |
| 191 | முருகானந்தம் திரு. டி. என். | செஞ்சி |
| 192 | முனிரத்தினம் திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| | **ய** | |
| 193 | யசோதா திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | **ர** | |
| 194 | ரகுமான்கான் திரு. அ. | சேப்பாக்கம் |
| 195 | ரமணி திரு. கு. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 196 | ரவீந்திரன் திரு. ஏ. எஸ். | திருவண்ணாமலை |
| 197 | ராமஜெயம் திரு. ம. நா. | வானூர் (செ.வ.) |
| 198 | ராமன் திரு. கி. | ராஜபாளையம் (செ.வ.) |
| 199 | ராஜாபாபு திரு. ஜெ. | போளூர் |
| 200 | ரெங்கசாமி திரு. ஆர். | கோவில்பட்டி |
| 201 | ரெத்தினராஜ் திரு. எஸ். | நாகர்கோவில் |
| | **ல** | |
| 202 | லட்சுமி திருமதி பி. | அவினாசி (செ.வ.) |
| | **வ** | |
| 203 | வடிவேல் திரு. கு. | கரூர் |
| 204 | வளர்மதி திருமதி பா. | மயிலாப்பூர் |
| 205 | விஜயபாலன் திரு. என். | பூம்புகார் |
| 206 | விஜயலட்சுமி பழனிச்சாமி திருமதி | வீரபாண்டி |
| 207 | வீராணம்பலம் திரு. க. வெ. | மேலூர் |
| 208 | வீரய்யன் திரு. கோ. | நாகப்பட்டினம் |
| 209 | வீரப்பன் திரு. ஆர். எம். | திருநெல்வேலி |
| 210 | வீராசாமி திரு. தா. | ஒரத்தநாடு |
| 211 | வெங்கடரெட்டி திரு. டி. | ஓசூர் |
| 212 | வெங்கடாசலம் திரு. அ. | ஆலங்குடி |
| 213 | வெங்கடாசலம் திரு. கி. | லால்குடி |
| 214 | வெங்கடாசலம் திரு. டி. எம். | பரகூர் |
| 215 | வேங்கடரமணன் திரு. டி. ஆர். | தென்காசி |
| 216 | வேணுகோபால் திரு. எஸ். | டாக்டர் இராதாகிருஷ்ண நகர் |
| 217 | வேணுகோபால் திரு. கே. வி. | தல்லி |
| 218 | வேலு திரு. கூடலூர் இ. வி. | தண்டராம்பட்டு |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | ஜ | |
| 219 | ஜான் வின்சென்ட் திரு. மு. | நாங்குநேரி |
| 220 | ஜகதீசன் திரு. ஆனூர் பு.கோ. | செங்கல்பட்டு |
| 221 | ஜெகதீசன் திரு. சு. | அரவக்குறிச்சி |
| 222 | ஜெயச்சந்திரன் திரு. சா. | காட்டுமன்னார் கோவில் (செ.வ.) |
| 223 | ஜெயராமன் திரு. வே. இரா. | தேனி |
| | ஹ | |
| 224 | ஹேமச்சந்திரன் திரு. ஜே. | திருவட்டாறு |
| 225 | பிரான்சிஸ் திரு. ஜி. கே. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்.

திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி — தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1987, மார்ச் 5, வியாழக்கிழமை

மாசி 21, அக்ஷய—திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின்
நீள்வினையால் நீளும் குடி"

'முயற்சியும், நிறைந்த அறிவும்' என்று சொல்லப்பட்ட இரண்டினையும் உடைய, இடைவிடாத கருமச் செயலால் ஒருவனுடைய குடி உயர்ந்து விளங்கும்.

## 1. வினாக்கள்-விடைகள்,

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**முக்கிய நிகழ்ச்சிகளுக்கு சர்க்கரை, எண்ணெய் வழங்க பர்மிட் வழங்கல்.**

61—(*வினா எண். 4063) திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

திருமணம் போன்ற முக்கிய நிகழ்ச்சிகளுக்குச் சர்க்கரை, எண்ணெய் போன்றவை வழங்க பர்மிட் வழங்கும் முறை தற்போது அமுலில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமணம் போன்ற முக்கிய நிகழ்ச்சிகளுக்கு சர்க்கரை வழங்க பர்மிட் வழங்கும் முறை அமுலில் உள்ளது. சமையல் எண்ணெய்க்கு பர்மிட் வழங்குவது இல்லை.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட விஷேச நிகழ்ச்சிகளுக்கு பெர்மிட்மூலம் எவ்வளவு வழங்கப்பட்டிருக்கிறது? அத்தியாவசியத் தேவையான சமையல் எண்ணெய் போன்றவற்றை வழங்க அரசு ஆவண செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமணம் போன்ற முக்கிய நிகழ்ச்சிகளுக்கு இரண்டு மூட்டை சர்க்கரை வழங்கப்பட்டு வருகிறது. பாமாலின் எண்ணெய், சமையல் எண்ணெயைப் பொறுத்தவரையில் நாம் அப்படி வழங்குவதில்லை. அதைப்பொறுத்தவரை, பொது விநியோக முறையிலே மிகவும் சிரமம் இருப்பதால் இது போன்று திருமண நிழ்ச்சிகளுக்கு வழங்குவது இல்லை.

திரு தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொங்கல், தீபாவளி, கிருஸ்துமஸ் போன்ற நிகழ்ச்சிகளுக்குக் கூடுதலாக லெவி சர்க்கரை, சமையல் எண்ணெய் போன்றவற்றை வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வப்போது இருக்கின்ற இருப்பை வைத்து முடிவு செய்யப்படும்.

இலங்கைத் தமிழர்களுக்குப் பொதுமக்களிடமிருந்து நன்கொடை.

62 — (*வினா எண். 8083) திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் திரு. ஆ. நடராசன் மற்றும் திரு. என்.எஸ்.வி. சித்தன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலங்கைத் தமிழர்கள் நல்வாழ்வுக்காக அரசு பொது மக்களிடமிருந்து நன்கொடையாக வசூலித்த தொகை எவ்வளவு?

(ஆ) அந்தப் பணம் அவர்களுக்காகச் செலவு செய்யப்பட்டதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இலங்கைத் தமிழர்கள் நல்வாழ்வுக்காகப் பொது மக்களிடமிருந்து நன்கொடையாக 31-10-1986 வரை வசூலித்தத் மொத்த தொகை ரூ. 5,24,78,830.75

(ஆ) தற்போது முகாம்களில் தங்கியுள்ள அகதிகளின் நலனுக்காக 31-10-1986 வரை ரூ. 40,18,735.35 செலவிடப்பட்டுள்ளது.

திரு எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு சென்ற வருடம் வசூலித்ததையும் முன்பு வசூலித்த தொகையையும் சேர்த்துச் சொல்லியிருக்கின்றார்கள். வசூலித்த தொகை ரூ. 5 கோடிக்கு மேல் இருக்கும்போது செலவு இலட்சக்கணக்கில் என்று சொல்கின்றார்கள். இதை இந்த அரசு எப்படிச் செலவழித்திருக்கின்றது? இந்தத் தொகை எந்த முறையிலே செலவிடப்படுகிறது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தின் முடிவிற்கேற்ப இந்நிதி சேகரிக்கப்பட்டுள்ளது. ஆகவே அனைத்துக் கட்சித்தலைவர்கள் கொண்ட குழுவின் கூட்டத்தினை அமைத்து அதன் முடிவிற்கேற்ப இந்த நிதியை எவ்வாறு செலவிடுவது என்பதைத் தீர்மானம் செய்து அதன்படி செலவிடுவது என்ற குறிப்பை அரசு நடைமுறையில் வைத்துள்ளது.





திரு. என்.எஸ்.வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசு ஒரு பொருளாதாரத் தடையை விதித்திருப்பதன் காரணமாக, முற்றுகையின் காரணமாக அந்தப் பகுதியிலே வாழ்கின்ற தமிழர்களின் நிலைமை பாதிக்கப்பட்டிருக்கின்றது என்பதை அறிந்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு பிரதமர் திரு. ராஜிவ் காந்தி அவர்கள் கூட இந்திய அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளைப் பற்றி நாடாளுமன்றத்திலே அறிவித்திருக்கின்றார்கள். அதைப்பற்றி, உங்கள் மூலம், அமைச்சர் பெருமகனாரிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புவது, இந்தப் பிரச்சினையில் தமிழக அரசு எடுத்த நடவடிக்கை என்ன? அண்மையில் பிரதமரைச் சந்தித்து ஏதாவது விவாதிக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பிரதமரை டெல்லியில் கடந்த மாதம் 6-ஆம் தேதி சந்தித்தபோது இதைப் பற்றி விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். நம்முடைய அரசைப்பொறுத்தவரையில் இலங்கை அரசு இராணுவத் தீர்வை முழுமையாக நம்பியிருக்கிறது. 'அரசியல் தீர்வு' என்கின்ற பெயரால் ஏமாற்றுகிறது. இந்த இரட்டை முறையை அவர்கள் மேற்கொண்டிருக்கின்றார்கள், Double dealing என்கின்ற வகையில், என்று பிரதமர் அவர்களிடம் தெளிவாக கருத்துச் சொல்லியிருக்கிறோம். நாம் சொன்ன கருத்துக்கு ஏற்ப, அண்மையிலேகூட, இதுவரையிலே சந்திக்காத எதிர்க்கட்சித் தலைவர் சிரிமாவோ பண்டாரநாயகா அவர்களே ஜெயவர்த்தனா அவர்களைச் சந்தித்துப் பேசியதிலிருந்து யாழ்ப்பாணத்திற்குப் பேராபத்து வருமோ என்கின்ற சூழ்நிலையை கருதித்தான் மாண்புமிகு பிரதமர் அவர்கள் நேற்றையதினம் அத்தகைய ஒரு கருத்தை வெளியிட்டிருக்கின்றார்கள்.

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிக்காக ஒரு குறிப்பிட்ட நிறத்தில் டிக்கெட் வெளியிட்டிருக்கிறார்கள். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டை எல்லாம் சொல்ல முடியாது.

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்களே நான் சொன்னதைக் குற்றச்சாட்டு என்று சொன்னால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * என்று சொன்னால் அது குற்றச்சாட்டு இல்லையா? உறுப்பினர் சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) முறையோடு, கேள்வி கேட்க வேண்டும். கேள்வி நேரத்தின்போது குற்றச்சாட்டு சொல்வது முறையல்ல.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. ஆ. நடராசன்: * *

திரு. ஏ.எஸ். எ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்வ கட்சி கூடி ஒரு முடிவை எடுக்கிறதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 31-10-1986ல் வசூலான தொகை பற்றி இங்கே சொல்லப்பட்டது. இவ்வளவு தொகை வசூல் ஆகி, கிட்டத்தட்ட 1½ வருடம் ஆகிறதே, இலங்கைத் தமிழர்களின் நல்வாழ்வு குறித்து முந்தையகூட்டத்தில் கூட பேசப்பட்டிருக்கிறதே, இருந்தும் அவர்களின் நல்வாழ்வுச் சாக, பணிகளைச் செய்வதில் இவ்வளவு காலதாமதம் ஏன்? குழுக் கூட்டம் மறுபடியும் எப்போது கூட்டப்படும்? இலங்கைத் தமிழர்களின் நல்வாழ்வுக்காக இனிமேலாவது துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுமா? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் நடராசன் அமருங்கள்.

திரு. ஆ. நடராசன்: * *.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து வருகிற அகதிகளில் வறுமையுற்றிருக்கின்றவர்களுக்காக அரசு செலவு செய்கிறது. அதை இந்திய அரசு ஈடுகட்டுகிறது. ஆனால் கொஞ்சம் வசதி படைத்தவர்களாக இருந்தால் அவர்களாகவே தங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொள்கிறார்கள். இந்த பணத்தை எப்படி செலவு செய்வது, சிறு தொழில்களை ஏற்படுத்திக்கொடுப்பதா என்பது போன்றவற்றிற்கு உறுப்பினரிடமிருந்து எல்லாம் ஆலோசனைகளைப் பெற்று செய்ய வேண்டியிருப்பதால்தான் காத்துக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நடராசன் அவர்கள் கூறியதுபோன்று * * அதுகுறித்து உரிய அமைச்சரிடமோ அல்லது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடமோ உரிய முறையில் கேட்டிருக்க வேண்டும். அதற்கு மாறாக இங்கே திடீரென்று * * சொல்வதன் மூலம் அது உண்மையா இல்லையா என்று தெளிவாகப் புரியாத நிலையில் அதற்குப் பதில் சொல்ல முடியாது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் கவனத்திற்கு அவர் அதை ஏற்கெனவே கொண்டு வந்திருக்க வேண்டும். * * கொடுத்திருக்க வேண்டும். அல்லது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடமாவது முன்கூட்டியே சொல்லியிருக்க வேண்டும். அப்படிப்பட்ட குற்றச் சாட்டு வருகிறபோது முன்கூட்டியே சொல்ல வேண்டும். அப்படி இல்லையென்றால் அமைச்சர்கள் பதில் சொல்ல முடியாது.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



### மலிவு விலையில் பொதுமக்களுக்கு கோதுமை விநியோகம்.

63—(* வினா எண். 11261) திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலிவு விலையில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்ய மத்திய அரசு மாநில அரசுக்கு கோதுமை ஒதுக்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) பொது விநியோக முறையில் வழங்க மைய அரசு குவிண்டால் ரூ. 190 என்ற விலையில் மாதமொன்றுக்கு 30,000 டன்கள் கோதுமை வழங்குகிறது. இவ்வரசு அதை கிலோ 2.05 என்ற விலையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகிக்கிறது. இதைத் தவிர ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாடு திட்டம் அமுலில் உள்ள பகுதிகளில் விநியோகிப்பதற்கு குவிண்டால் ரூ. 125 என்ற விலையில் மைய அரசு கோதுமையை வழங்கு கிறது. அது, மைய அரசின் அறிவுரைப்படி குடும்ப அட்டைதாரர் களுக்கு கிலோ ரூ. 1 50 என்ற விலையில் விநியோகிக்கப்படுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு வழங்கும் 30,000 டன் கோதுமையும் போதுமானது என்று இந்த அரசு கருதுகிறதா? மேலும் ஒதுக்கீடு வேண்டுமென்று தமிழக அரசு கோரி இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு மாதம் ஒன்றுக்கு 30,000 டன் கோதுமையை ஒதுக்கினாலும் நமக்கு மாதம் ஒன்றுக்கு 6,000 டன்னுக்கு மேல் செலவு ஆவதில்லை: ஆக, அவர்கள் ஒதுக்கு வதையேகூட நாம் செலவிடவில்லையென்றால் அதற்குக் காரணம் நம்முடைய மக்கள், கோதுமையை அவ்வளவாக விரும்பவில்லை, அரிசியைத் தான் பெரும்பாலான மக்கள் உணவாகப் பயன் படுத்துகிறார்கள். மேலும் அரிசி போதுமான அளவு கிடைக் கிறது என்பதும் இப்போதுள்ள நிலைமை.

### அமராவதி ஆற்றிலிருந்த மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியக்கிராமங்களுக்கு குடிநீர் வழங்குதல்.

64—(* வினா எண். 3915) திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியம் அமராவதி ஆற்றிலிருந்து நல்லண்ணகவுண்டன் புதூருக்கு குடிநீர் வழங்கும் திட்டம் மயிலாபுரம் மடத்தூர் ஆகிய கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் வேலை எந்த நிலையில் உள்ளது?

(ஆ) இத்திட்டத்தில் மயிலாபுரம், மடத்தூர் கிராமங்களையும் இணைக்கும் திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியம், நல்லண்ணகவுண்டன் புதூருக்கு, அமராவதி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் முடிக்கப்பெற்று, குடிநீர் வழங்கப்பெற்று வருகிறது. வழங்கப்பெறும் குடிநீர் நல்லண்ணகவுண்டன் புதூருக்கு மட்டுமே போதுமானதாக உள்ளதால் மயிலாபுரம், மடத்தூர் ஆகிய குடியிருப்புகள் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை.

(முற்பகல் 10-10)

திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நல்லண்ண கவுண்டர் புதூர் திட்டநீரானது ஒரு சிறிய கிராமத்திற்குத்தான் போய்க்கொண்டிருக்கிறது. அதிலிருந்து இரண்டு பர்லாங் தூரம் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தினால் மடத்தூர், மயிலாபுரம் ஆகிய இரண்டு ஊர்களுக்கும் கொடுக்கலாம். அதுசம்பந்தமாக போன வருடத்திலே சட்டசபையிலே நான் ஒரு கேள்வி கேட்டிருந்தேன். அதையும் சேர்த்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். அந்த ஊருகளுக்குத் தனியாக ஒரு திட்டமாவது வகுத்து அந்த இரண்டு கிராமங்களுக்கும் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, மடத்தூரிலே இருக்கின்ற மக்கள் தொகையே 1,421. அதற்கு இரண்டு திறந்த வெளிக் கிணறுகள் இருக்கின்றன. கையிறைப்பான் பொருத்தப்பட்ட ஆழ் துளைக் கிணறு ஒன்று இருக்கிறது. ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதியிலேயும் தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டி ஒன்றும் கட்டப்பட்டு அதுவும் தண்ணீர் வழங்கி வருகிறது. ஆகவே இந்த ஊருக்கு மட்டும் பயனளிக்கும் வகையில் தனியாகக் குடிநீர்த் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர்: தலைவர் அவர்களே, என்னுடைய உடுமலை தொகுதியில் பூலாங்கிணறு கூட்டுக் குடிநீர்த் திட்டம், மானுப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம், உடுமலைக்கு அடிஷனலாக இன்னொரு திட்டம் என்று இந்த மூன்று திட்டங்கள் பற்றி கிட்டத்தட்ட நான்கு வருடங்களாக வேலை செய்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால் உடுமலையிலே இன்றைக்குத் தண்ணீர்ப் பஞ்சம் கடுமையாக இருக்கிறது. ஒரு குடம் தண்ணீரை நாற்பது பைசாவுக்கு ஏழை எளிய மக்கள் வாங்கிச் சாப்பிடுகிறார்கள். அந்த நிலையிலே இந்தத் திட்டங்களைச் சீக்கிரம், விரைவாக அமல்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொளகிறேன்.



மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. உடுமலைப்பேட்டையில் தண்ணீர் தட்டுப்பாடு என்று சொல்கிறார்கள். அதற்கான தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மருதவஞ்சேரி ஊராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி.

65—(* வினா எண். 7958) திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியத்தில் மருதவஞ்சேரி ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, கட்டி முடிக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் இன்னும் தனியார் ஒருவரின் நெல் கிட்டங்கியாகப் பயன்பட்டுவருவது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருதவஞ்சேரியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 1978 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒப்பந்தக்காரரால் கட்டி முடிக்கப்பட்டது. மேற்சொன்ன பணி தொடர்பான இறுதிப் பட்டியலுக்கு (Bill) நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணி, உதவிக்கோட்டப் பொறியாளரால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேல்நிலைத் தொட்டி அமைப்பில் செய்த சில வேலைகள் விடப்பட்டிருக்கின்றன என்றுகூறி பட்டியல் தொகையை ஒப்பந்தக்காரர் பெற்றுக்கொள்ள மறுத்ததுடன், மேல்நிலைத் தொட்டி கட்டிடத்தின் சாவியையும் தர மறுத்துவிட்டார். மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி நெல் கிடங்காகப் பயன்படுத்தப்படவில்லை. தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு 4-7-1986 முதல் மேல்நிலைத் தொட்டியின் பொறுப்பை குடவாசல் ஊராட்சி ஒன்றியம் ஏற்றுக்கொண்டு 17-7-1986 முதல் மேல்நிலைத் தொட்டி மூலம் பொது மக்களுக்கு குடி தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவிக்கின்றபொழுது பில் பட்டியல் வழங்கப்படாத காரணத்தால் அந்த வாட்டர் டேங்க் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படாமல் இருந்ததாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அந்த வேலையைச் செய்த அந்த கான்ட்ராக்டர் ஆக்கிரமணம் செய்யவில்லை. ** (கூச்சல்-குழப்பம்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1987 மார்ச் 5

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்திலே குற்றச் சாட்டு கூடாது. அது சம்பந்தப்பட்டது நீக்கப்படுகிறது.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபோன்ற குற்றச்சாட்டு களை எழுதிக் கொடுங்கள்; அமைச்சருக்கு எழுதிக் கொடுங்கள், நடவடிக்கை எடுப்பார்கள். கேள்வி நேரத்திலே அது வேண்டாம். குற்றச்சாட்டு கேள்வி நேரத்தில் தேவையில்லை.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : ** அப்படிப்பட்ட நிலையை அறிந்து அரசு முறையான நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன். (கூச்சல்—குழப்பம்).

திரு. ஆ. நடராசன் : நான் பேசும்பொழுது அனுமதிக்க வில்லையே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் பேசும்பொழுது நானும் கேட்டுக்கொண்டு இருக்கிறேன். நீங்கள் நான்கு பேர் எழுந்து கொண்டிருக்கும்பொழுது அவர்கள் எழுந்து கொண்டா இருந்தார்கள்? (குறுக்கீடு) அவர் எழுப்பிய விவகாரம் வேறு. நீங்கள் பேசிய விவகாரம் வேறு. நீங்கள் பொதுப்படையாகச் சொன்னீர்கள். யார் அடித்தார்கள் என்றா சொன்னீர்கள்? (குறுக்கீடு) அதையும் நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடு) இப்படி என் அனுமதியில்லாமல் எழுந்து பேசுவது முறையல்ல; இது கேள்வி நேரம். கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு கூடாது.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பிரச்சினைகள் தீர்ந்து தற்போது குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மட்டும் நான் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை நகரில் பாதாள சாக்கடை...

66—(* வினா எண். 8187) திரு. எ. தெய்வநாயகம் மற்றும் திரு. க. பாரமலை : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை நகரில் பாதாள சாக்கடைத் திட்டத்தை மேம்பாடு செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1987 மார்ச் 5]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம். மதுரை நகரில் வைகை ஆற்றிற்குத் தெற்குப் பகுதியில் உள்ள பகுதி 9 மற்றும் 10 ஆகிய இரண்டிற்கும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை மேம்பாடு செய்ய ரூ. 9.28 கோடி மதிப்பீட்டில் திட்டம் தீட்டப்பெற்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது. வாரியத்தின் தொழில் நுட்பப் பரிந்துரைகள் பெற்றபின், இத்திட்டத்திற்கு அரசு நிர்வாக ஒப்புதலை வழங்கும்.

திரு. எ. தெய்வநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரம் வளர்ந்து, பெரிதாகிக் கொண்டே செல்கிறது. மதுரைக்குத் தென்பகுதியிலே செல்கின்ற பாதாள சாக்கடைத் திட்டம் ஒன்று இருக்கிறது. அது உலக வங்கியின் உதவியுடன் செயல்படும் திட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தத் திட்டமும் இதில் சேர்ந்துள்ளதா? அதற்குண்டான வாய்ப்பையும் தமிழக அரசு பரிசீலனை செய்கிறதா என்பதைக் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, மதுரை தெற்குப் பகுதி பாதாளச் சாக்கடைத் திட்டம் எப்பொழுதும் இதில் இணைக்கப்படவில்லை. அது தேவையை ஈடுகட்ட முடியாமல் இருக்கிறது. அகவே, இப்பொழுது தனிப்பட்ட முறையிலேதான் 9—ஆம், 10—ஆம் பகுதிகளுக்குத் திட்டம் வகுக்கப்பட்டு நடைமுறைக்குக் கொண்டு வர ஆய்வு இருக்கிறது.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்பகுதிகள் 9, 10, ஆகியவற்றிற்குச் சுமார் ரூ. 9 கோடியிலே திட்டம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன் னார்கள். அவற்றை எப்பொழுது நடைமுறைப்படுத்த அரசு உத்தேசித்துள்ளது? வட பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டம் முழுமையாக நிறைவேறவில்லையே, அதை எடுத்துக் சொள்கின்ற திட்டம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்தத் திட்டம் பல பகுதிகளை உள்ள டக்கியதாக இருக்கிறது. 9—வது பகுதியிலே ஏறக்குறைய 10 வார்டுகள் இருக்கின்றன. அதைப் போல் 10—வது பகுதியிலேயும் 5, 6 வார்டுகள் இருக்கின்றன. அவை பூராவுக்கும் நான் ஏற்கனவே சொன்னதைப் போல, ரூ. 9.28 கோடிக்குத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. அங்கே இப்பொழுதிருக்கிற மக்கள் தொகை 33,000 ஆகும். 2,016 ஆம் ஆண்டில் அது 66,000 பேர்களாகும் என்று கணக்கிடப்பட்டு இந்தத் திட்டம் தற்போது ஆய்வில் இருக்கிறது. அதை விரைவிலே எடுத்துக் கொள்வதற் கான நடவடிக்கையை அரசு மேற்கொண்டிருக்கிறது. ஆகவே, அது முடிந்த பிறகுதான் மற்ற திட்டங்கள் எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1987 மார்ச் 5

## தாம்பரம் நகராட்சியில் குடிநீர் மேல் நிலைத் தொட்டி கட்டும் பணி.

67— (*வினா எண் 9230) திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு தொழில் மற்றும் வேலைவாய்ப்பு துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாம்பரம் நகராட்சியில் 3½ கோடி ரூபாய் செலவில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி கட்டும் பணிகள் எப்பொழுது துவக்கப் படும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் நகராட்சியில் தற்போதைய மக்கட்தொகையைக் கருத்தில் கொண்டு குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்று செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆய்வுப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகள் முடிவடைந்தவுடன் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வாரியம் மற்றும் அரசின் அனுமதியுடன் திட்டம் செய லாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் முடிவடைவதற்குப் பல ஆண்டுகள் ஆகும் போல் தோன்றுகிறது. இதற்கிடையில் தாம்பரம் மறை மலை நகருக்கு அருகில் உள்ள பகுதியில் இப்போதுள்ள வீடுகளுக்குப் போக மிச்சம் உள்ள நீரை, இடைகாலத்தில், இந்த வறட்சி நேரத்தில், பயன்படுத்திக் கொள்ள, அரசு தாம்பரம் நகரத்திற்கு அனுமதி வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, தற்போதைய திட்டத்திற்கு தாம்பரம் நகராட்சி இப்போது தான் ஆய்வுத் தொகை செலுத்தியிருக்கிறது. புதிய திட்டம் ஒன்றினை மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்து இருக்கிறார்கள். அந்தத் திட்டத்தினை நகராட்சி குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அனுப்பு மானால் அதைப் பற்றி பரிசீலனை செய்யலாம்.

## கலைவாணர் வாழ்க்கை வரலாறு.

68—(*வினா எண் 7241) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கலைவாணர் வாழ்க்கை வரலாற்றைப் புத்தகமாக வெளியிட அரசு முடிவு செய்துள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைவாணர் பற்றிய நூல் வெளியீட்டுக்கு இயல் இசை நாடக மன்றம் மானிய உதவி வழங்கி நூல் வெளியிடப்பட்டுள்ளது,



1987 மார்ச் 5]

(முற்பகல் 10-20)

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, இந்தக் கலைவாணர் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகம் யாரால் எழுதப் பட்டது? கலைவாணரோடு நெருங்கிப் பழகி, பத்து வருடங் களுக்கு மேல் அவர்களிடம் உதவியாளராக இருந்த திரு. இராம தாஸ் போன்றவர்களிடம் விவரங்கள் கேட்டு அந்தப் புத்தகம் எழுதப்பட்டிருக்கிறதா? தமிழக அரசின் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் நீண்ட நாட்கள் கலைவாணரோடு கூடவே இருந்தவர்கள். ஆகவே, புரட்சித் தலைவர் அவர்களுக்கு அவரைப் பற்றிய விவரங்கள் நன்றாகத் தெரியும். அவர்களைக் கேட்டு இந்தப் புத்தகம் தயாரிக்கப்பட்டிருக்கிறதா என்கின்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, திரு. வெ. நாராயணன் அவர்கள் எழுதிய இந்த நூலுக்கு அரசு மானியம் தந்து, வெளியிட்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே. கலைத் துறையைச் சேர்ந்தவர்களைப் பற்றி இதுவரையில் பாடப் புத்தகங்கள் வந்ததில்லை. இந்தப் புத்தகம் கலைத் துறையைச் சேர்ந்த கலைவாணரைப்பற்றி இருப்பதால், பள்ளிகளில், கல்லூரிகளில் பாடப் புத்தகமாக வைக்க அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, கலைவாணர் அவர்கள் நாட்டுக்குத் தந்து சென்றிருக்கிற அரிய கொள்கைகளைப் பற்றி எப்படி பாடப் புத்தகங்களில், எந்த இடத்தில் கொண்டு வருவது என்று அரசு ஆராய்ந்து வருகிறது.

டாக்டர் கே. குமரசம் : தலைவரவர்களே, திராவிடப் பரம்பரையைச் சேர்ந்த கலியூர் செல்வராஜ் அவர்கள் கலைவாணர் பற்றி ஒரு தொகுப்பு நூலை வெளியிட்டிருக் கிறார்கள். அதிலே முழுமையான விவரங்கள் இருக்கின்றன. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அதற்கு வாழ்த்துரை வழங்கி இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அதைப் போன்ற புத்தகங்களை வாங்கி, பள்ளிகளுக்கும் பல்கலைக் கழகங்களுக்கும் நூல் நிலையங்களுக்கும் வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, சென்ற வாரம் உயர்திரு. கலியூர் செல்வராஜ் அவர்கள் கலைவாணரைப் பற்றி எழுதி வெளியிட்டுள்ள நூலை அனைத்து நூலகங்களிலும் போட வேண்டும் என்று அரசு ஆணையிட்டிருக் கிறது; அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயல், இசை, நாடக மன்றம் கலைவாணர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தை வெளியிட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் புத்தகத்தை அனைத்து நூலகங்களும் வாங்க வேண்டுமென்று அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, திரு. வேலாயுதம் என்பவர் எழுதிய ''கலைவாணர்-தமிழர்களின் ஆய்வு'' என்ற நூலும், திரு. வெ. நாராயணன் அவர்கள் எழுதிய கலைவாணர் பற்றிய நூலும், அவரே 'கலைவாணர் வாழ்வில்'. என்று வெளியிட்டுள்ள நூலும், 'கலைவாணர் என். எஸ். கே. என்று கலியூர் செல்வராஜ் அவர்கள் எழுதிய நூலும் அனைத்து நூலகங்களாலும் வாங்கப்பட வேண்டுமென்று அரசு ஆணையிட்டிருக்கிறது.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : தலைவரவர்களே, கலைவாணர் அவர்கள் பல புரட்சிகரமான கருத்துக்களை வில்லுப் பாட்டு மூலம் தமிழக மக்களிடையே பரப்பி வந்தார்கள் அந்த வில்லுப்பாட்டை வைத்து, மத்திய மாநில அரசுகள் செய்கின்ற நல்ல காரியங்களை, குறிப்பாக குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைப் பரப்புகின்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை அரசு ஆராயும்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் அமைத்தல்.

69*—(வினா எண் 8151) திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, ஆலங்குடியில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆலங்குடியில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் ஒன்றினை அமைக்கும் செயற்குறிப்பு பற்றி உயர்நீதிமன்றப் பதிவாளருடன் அரசு கலந்து ஆலோசித்ததில் அங்கு ஒரு இரண்டாம் வகுப்பு குற்றவியல்



நீதிமன்றம் ஏற்படுத்துகின்ற அளவுக்கு அந்த எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வழக்குகள் வரவில்லை எனத் தெரிவித்துள்ளார். எனவே, அங்கு ஒரு இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் ஏற்படுத்தும் நிலை ஏற்படவில்லை.

திரு. அ. வெங்கடாசலம் : தலைவரவர்களே, ஆலங்குடியில் இரண்டாம வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் அமைப்பதற்கு சாத்தியக் கூறு இல்லை என்று உயர்நீதி மன்றத்தினுடைய பதிவாளர் அவர்கள் அந்த மனுவைத் தள்ளுபடி செய்த பிறகு ஆலங்குடியில் மாவட்ட முன்சீப் கோர்ட் அமைக்கப்பட வேண்டு மென்று மாவட்ட நீதிபதி அவர்களால் சிபாரிசு செய்யப்பட்டு அரசுக்கு மனு வந்திருக்கிறது. ஆகவே, இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் இல்லை என்றாலும் மாவட்ட முன்சீப் கோர்ட் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதி மன்றமோ, உரிமையியல் நீதிமன்றமோ, மாவட்ட முன்சீப் கோர்ட்டோ அமைக்கப் படுவதற்கான அறிவிப்பு எதுவும் அரசிட மிருந்து வரவில்லையே, அதற்கான காரணம் என்ன என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, மாவட்டம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உரிமையியல் நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டுமென்ற கொள்கையினை அரசு எடுத்து, படிப்படியாக நீதிமன்றங்களை மாவட்டந்தோறும், வட்டந் தோறும் ஏற்படுத்தி வருகிறது. ஆலங்குடி பகுதியில் உரிமையியல் நீதிமன்றம் வேண்டுமென்ற கோரிக்கை அரசுக்கு வந்திருக்கிறது. அங்கு வழக்குகள் வருவதனால், உயர்நீதி மன்றத்திடம் அரசு இதுகுறித்துக் கேட்டிருக்கிறது. உயர்நீதி மன்றத்தின் பரிந்துரை அல்லது தாக்கீது பெற்று, இது குறித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. கே. முத்துவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில், கமுதயை சுமார் ஏழு ஆண்டுகளுக்கு முன்பு தாலுகா அந்தஸ்துக்கு உயர்த்தியும், இதுவரை எந்த விதமான கோர்ட்டும் அங்கு வரவில்லை. அங்கே கோர்ட் வருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடாசலம் அவர்களுக்கு அளித்த பதில் தான் இதற்கும். வட்டந்தோறும் குற்றவியல், உரிமையியல் நீதிமன்றங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று அரசு கொள்கை முடிவெடுத்து, அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நிதிநிலைக் கேற்ப ஆண்டுதோறும் எவ்வளவு நீதிமன்றங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று முடிவெடுத்து நடவடிக்கை எடுத்து வருகிறது. அப்போது இது கவனிக்கப்படும்.

[1987 மார்ச் 5

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்** : மாண்புமிகு பேரவைத் அவர்களே, உயர்நீதி மன்றத்தின் பரிந்துரையை ஏற்றுக் கொண்டு, இந்த அரசு மாவட்ட முன்சிப்பின் அதிகார வரம்பை ரூ. 5,000-லிருந்து ரூ. 15,000 ஆக உயர்த்தியது. அவ்வாறு உயர்த்தியதன் காரணமாக மாவட்ட முன்சிப் நீதிமன்றங்களில் ஏகப்பட்ட வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, அவ்வளவும் இன்றைக்கு தேங்கியிருக்கின்றன. எனவே, இந்த அதிகார வரம்பை ரூ. 10,000 ஆகக் குறைத்தால், இந்த வழக்குகள் விரைவாக பைசலாகும். எனவே, இதைக் கருத்தில் கொண்டு அரசு இந்த அதிகார வரம்பை ரூ. 10,000 ஆகக் குறைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றம் மாவட்டத்திலுள்ள உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பை ரூ. 20,000 அல்லது ரூ. 25,000 வரை உயர்த்தலாம் என்று அரசுக்குப் பரிந்துரை செய்தது. ஆங்கு வழக்கறிஞர்கள் சப்-ஜட்ஜ் கோர்ட்டில் இருக்கக் கூடிய வழக்குகளையெல்லாம் விரைவாக நடத்துகின்ற திறமை வழக்கறிஞர்களுக்கு இல்லாது போகும் என்று அரசு உயர்நீதி மன்றத்திற்குத் தெரிவித்த பிறகு, ரூ. 15,000 ஆக அது குறைக்கப்பட்டிருக்கிறது. வழக்கறிஞர் களும் தாமதத்திற்குக் காரணம் என்பது உயர்நீதி மன்றத்தின் கருத்து. இது குறித்து உயர்நீதி மன்றம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**அவினாசியில் நிரந்தர இரண்டாம் வகுப்பு நீதிமன்றம் அமைத்தல்.**

70—(*வினா எண் 9829) **திருமதி பி. லட்சுமி** : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அவினாசியில் நிரந்தரமாக இரண்டாம் வகுப்பு நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு உண்டா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசியில் நிரந்தரமான இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் அமைப்பதற்கான செயற் குறிப்பு ஏதுமில்லை.

**திருமதி பி. லட்சுமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசியில் நிரந்தரமான இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் அமைப்பதற்கான செயற் குறிப்பு ஏதுமில்லை என்று சொன்னார்கள். எனவே, முன்சிப் கோர்ட்டு அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.



1987 மார்ச் 5]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு குற்றவியல், உரிமையியல் நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்ற நோக்கோடு அரசு முடிவெடுத்து, அதற்கான அறிக்கையை உயர்நீதிமன்றத்திடம் கேட்டிருக்கிறது. அவினாசியைப் பொறுத்தவரைக்கும் அங்கே குற்றவியல் நீதிமன்றம், உரிமையியல் நீதிமன்றம் தேவை என்று அரசு கருதுகிறது. மேட்டுப்பாளையத்திலிருந்து அவினாசி தொலை தூரத்தில் இருக்கின்ற காரணத்தினால், மக்களுடைய இன்னலைக் குறைக்க அந்தப் பகுதியில் ஒரு நீதிமன்றம் இருக்க வேண்டும் என்று கருதி, உயர்நீதி மன்றத்திடம் அரசு ஒரு தாக்கீதைக் கேட்டிருக்கிறது. அவர்கள் மாவட்ட நீதிபதியிடம் அதற்கான தகவலைக் கேட்டிருக் கிறார்கள். அது வந்ததற்குப் பிறகு இது குறித்து ஆய்ந்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. மா. சின்னராசு** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மேட்டுப்பாளையத்தில் இருக்கின்ற இரண்டாம் நிலை சப்-மாஜிஸ்திரேட் வாரத்திற்கு மூன்று நாட்கள் அவினாசிக்குச் சென்று விடுகின்ற காரணத்தினால், மேட்டுப்பாளையம் மக்களுக்கு அது பாதிப்பாக அமைந்து விடுகிறது. எனவே, அவினாசியில் விரைவில் ஒரு இரண்டாம் நிலை சப் மாஜிஸ்திரேட்டு கோர்ட் ஏற்படுத்த வேண்டும். மேட்டுப்பாளையம் ஒரு தாலுகா தலைநகரமாகவும், அது பெரும் மக்கள் தொகை கொண்டிருக்கின்ற நகரமாகவும் இருப்பதால், அங்கே ஒரு சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் கோர்ட்டு அமைப்போமேயானால், மேட்டுப்பாளையத்திலிருந்து 70 கிலோ மீட்டர் சென்று திருப்பூரில் வழக்கு நடத்துகின்ற குறையைத் தீர்க்க முடியும். இது குறித்து நான் ஏற்கனவே ஒரு கோரிக்கை வைத்திருக்கிறேன். எனவே, விரைவில் மேட்டுப்பாளையத்தில் ஒரு சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் கோர்ட்டை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதுபோல், அவினாசியில் விரைவாக ஒரு குற்றவியல் நீதிமன்றமும், உரிமையியல் நீதிமன்றமும் வருவது தேவை என்பதை உயர்நீதி மன்றத்திடம் அரசு தெரிவித்து, உயர்நீதி மன்றம் மாவட்ட நீதிபதியின் அறிக்கையைக் கேட்டிருக்கிறது. அந்த அறிக்கை வந்த பிறகு, உடனடியாக அதற்கான நடவடிக்கைகள், முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மேட்டுப்பாளையத்தில் சப்- டிவிஷனல் மாஜிஸ்திரேட்டு கோர்ட் தேவை என்பதை உணர்ந்து, அது சம்பந்தமான தாக்கீது தர உயர்நீதி மன்றத்திடம் அரசு கேட்டிருக்கிறது. அதற்கான தகவல்கள் வந்தவுடன், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ச. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் தற்போது திருச்செங்கோட்டில் செயல்பட்டு வருகிறது. அந்த நீதிமன்றத்தை, சங்ககிரிக்கு அரசு எப்போது கொண்டுவரும்? நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சங்ககிரிக்கு வருகை தர இருப்பதால் அதனை முன்னிட்டாவது இந்தத் திட்டம் விரைவாகச் சேர்க்கப்படுமா?

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரிக்கு சப்-டிவிஷனல் கோர்ட் ஏற்கெனவே, சென்ற ஆண்டே, அரசு தந்திருக்கிறது. ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு நீதிமன்றம் தரவேண்டுமென்ற முடிவை அரசு எடுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சங்ககிரிக்கு நீதிமன்றம் தேவை என்பதற்காக திருச்செங்கோட்டில் இருப்பதை எடுத்து அங்கே போடுவதால் பிரச்சினை தீர்ந்துவிடாது. சங்ககிரிக்குத் தனியாக நீதிமன்றம் தர அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் புரட்சித் தலைவருடைய காலத்திலே எல்லா இடங்களிலும் நீதிமன்றங்கள் தந்துவருகிறார்கள் என்று சொன்னார்கள். பண்டைய காலத்திலிருந்து விருத்தாசலத்திலிருந்து வருகிற சப்-கோர்ட்டும், முன்சீப் கோர்ட்டும் 15 ஆண்டுகளாக இடம் இல்லாமல் வாடகைக் கட்டடத்திலேதான் இருந்துவருகின்றன. அது விஷயமாக அமைச்சரிடத்திலே ஏதாவது குறிப்பு இருந்தால் அதைத் தெரிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்களுக்கு நிதி ஒதுக்கும்போது கோர் செக்டார் என்ற பிரத்தியேக பிரிவின் கீழ் எடுத்துக் கொள்வது இல்லை. நீதிபரிபாலனத்திற்காக ஒதுக்கப்படுகிற தொகை மிகக் குறைவாகத்தான் இருக்கிறது. மாநில அரசு வருவாயிலிருந்து அது ஒதுக்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டிலிருந்து ஓரளவுக்கு இதற்காக அதிகமாக நிதியை ஒதுக்கி இப்படி இடிந்து விழுகிற நிலையில் இருக்கிற கட்டடங்களுக்கு நிதி ஒதுக்குகிறோம். மத்திய அரசும் அதிகமாக இதற்கு நிதி ஒதுக்கக்கூடிய முறையிலே இதை கோர் செக்டாரிலே சேர்க்க வேண்டுமென்ற கருத்து அமைச்சர்கள் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்களிடத்திலேயும் இதுபற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசு ஒதுக்குகிற நிதியைப் பொறுத்து மாநில அரசு இதிலே தக்க நடவடிக்கை எடுக்கமுடியும்,



உதகையில் அருங்காட்சியகம்.

71—(* வினா எண் 9902) திரு. கே. உச்சி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகையில் நடப்பாண்டில் தொடங்கப்படவிருக்கும் அருங்காட்சியகத்தின் மதிப்பீடு எவ்வளவு?

(ஆ) அதன் பணிகள் எப்போது துவங்கும்?

(இ) அருங்காட்சியகம் எப்போது முதல் செயல்படத் துவங்கும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) உதகையில் அருங்காட்சியகம் ரூ. 2 இலட்சம் மதிப்பீட்டில் தொடங்கப்பட உள்ளது.

(ஆ&இ) 1986-87 ஆம் ஆண்டு இரண்டாம் பகுதித் திட்டத்தில் (PART-II SCHEME) உதகை அருங்காட்சியகம் அமைப்பதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. தகுந்த கட்டிடம் கிடைத்தவுடன் அருங்காட்சியகம் செயல்படத் தொடங்கும்.

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்காலிகமாக ஒரு கட்டடத்தில் அதை ஆரம்பிக்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசு ஏற்கத் தயார்; காரணம், கட்டுவதற்குப் பல லட்ச ரூபாய்கள் செலவாகும். வாடகைக்கு இடம் பெற முயன்றால் செலவும் குறைவாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு இடம் கிடைக்க தக்கபடி உதவ வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அந்தக் கருத்தைத் தெரிவித்து அந்த அடிப்படையில் இடம் கிடைக்குமானால் உடனடியாகத் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

குடிசை மாற்று வாரிய வீடுகள்.

72—(* வினா எண் 9324) திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984-85-ல் குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகளுள் எத்தனை குடியிருப்போருக்கு சொந்தமாக்கப்பட்டது?

(ஆ) இந்த ஆண்டும் இத்திட்டம் தொடருமா?

(இ) அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 1984-85-ல் கட்டப்பட்ட 2,000 குடியிருப்புகளில் 2 குடியிருப்புகள் தவணை முறையில் சொந்த மாக்கிக்கொள்ளும் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளன.

(ஆ) இத்திட்டம் தொடரும்.

(இ) 1986–87-ல் 688 குடியிருப்புகள் கட்ட திட்டமிடப் பட்டுள்ளது. வாடகை முறையில் ஒதுக்கீடு பெறுவோர் விருப்பப் பட்டால், தவணை முறையில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கொடுக்கிற இந்தக் குடியிருப்புகள் என்ன விலைக்கு விற்கப்படுகின்றன? அவற்றின் கட்டுமான அடக்க விலை என்ன? அதனால் மக்களுக்கு நன்மை செய்யவேண்டு மென்பதால் அரசுக்கு ஏற்படுகிற இழப்பு எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின்கீழ் ஒரு வீடு சுமார் 20 ஆயிரம் ரூபாய் ஆகிறது. சொந்தமாக்கிக் கொள்கிற இந்தத் திட்டத்தின்கீழ் 25 ஆண்டுகளில் சொந்தமாகிறது. தரைத் தளத் திற்கு 45 ரூபாயும், முதல் தளத்திற்கு 40 ரூபாயும், இரண்டாவது தளத்திற்கு 35 ரூபாயும் மூன்றாவது தளத்திற்கு 30 ரூபாயும் அவர்களிடமிருந்து வசூல் செய்யப்படுகிறது. அவ்வாறு கட்டி விட்டால் 25 ஆண்டுகளிலே அந்தக் குடியிருப்புகள் அவர்களுக்குச் சொந்தமாகி விடுகின்றன.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள ஏழை மக்களின் நலிவு நீங்கக் கொண்டு வந்திருக்கிற இந்தத் திட்டத்தைச் சிலர் தவறாகப் பயன்படுத்துகிற முறையில் வீட்டை வாங்கி வேறு ஒருவருக்கு விற்றுவிட்டு மீண்டும் குடிசை மாற்று வாரியத்திடம் வீடு வேண்டு மென்று கேட்கிறார்களே, அதைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? இந்தத் திட்டத்தை மற்ற மாவட்டத் தலைநகரங்களிலேயும் செயல்படுத்தும் திட்டம் உண்டா? அப்படியென்றால் எந்த எந்தத் தலைநகரங்களில் என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோல் சொந்தமாக்கிக் கொள்ள வீட்டைத் தரும்போது, அவர்கள் பணம் முழுவதும் முழுமை யாகக் கட்டிச் சொந்தமாக்கிக் கொள்ளும்வரை 25 ஆண்டுக் காலம் விற்கக் கூடாது. அப்படி அவர்கள் விற்பார்களானால், தகவல் வருகிறபொழுது குடிசை மாற்று வாரியம் உரிய நடவடிக்கை எடுத்து, அவற்றை ரத்து செய்து, மீண்டும் மற்றவர் களுக்கு ஒதுக்கீடு செய்கிறது.





குடிசை மாற்று வாரியம் 1971-லே ஆரம்பிக்கப்பட்ட தென்றாலும் சென்னை மாநகரத்திலே மட்டும்தான் அவர் களுடைய பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் திட்டத்தை இப்பொழுது சென்னை நகரத்திற்கு மட்டும் செயல்படுத்தினால் போதாது என்று சொல்லி, ஏறக்குறைய 46 நகரங்களுக்கு இந்தத் திட்டத்தை விரிவாக்கம் செய்திருக்கிறார்கள். ஆக, 209 மாவட்டங்களிலே 46 முனிசிபல் நகரங்கள் தேர்வு செய்யப் பட்டு அவற்றிலே இந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட் டுள்ளன.

திரு. கூடலூர் இ.வி.வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் ஒளி விளக்காக விளங்கிக் கொண்டிருக்கிற தமிழகத்ினுடைய முதல்வர் ஆட்சியில் குடிசைப் பகுதியாக வாழ்ந்து கொண்டிருக்கிற கிராமப் பகுதிகளில் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படுமா? அதிலே, குறிப்பாக, வட்டாட்சியகம் இருக்கிற தலைமையகப் பகுதிகளுக்கு முன்னுரிமை அளித்து, இந்த ஆண்டு பணிகள் துவக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன், சென்னை யிலே மட்டும் நடைபெற்ற பணி, மாவட்ட அளவிலே 46 நகரங்களுக்கு இப்பொழுது விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. நிதிநிலைக்கேற்ப, கொஞ்சம் கொஞ்சமாக, எல்லாப் பகுதி களிலும், தமிழகம் முழுவதும் இருக்கிற குடிசைவாசிகளுக்கு உதவ வேண்டுமென்பதுதான் புரட்சித் தலைவரின் எண்ணமாகும். எனவே, நிதிநிலைக்கேற்ப, கொஞ்சம், கொஞ்சமாக விரிவு படுத்தப்படும்.

ஜெயங்கொண்டம் தொகுதி செங்குந்தபுரம் விசைத்தறிக் கூடம்.

73 —(* வினா எண் 9926) டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள செங்குந்தபுரம் விசைத் தறிக் கூடத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, தற்போது ஜெயங்கொண்டம் தொகுதியிலேயே அரசுக்குச் சொந்தமான ஒரே ஒரு தொழிற்கூடம் என்று சொன்னால், இந்தச் செங்குந்தபுரம் விசைத்தறிக்கூடம் தான். 100 விசைத் தறிகளைக் கொண்டு இயங்கிக் கொண்டு வருகிறது. தற்போது அரசுக்கு இலாபகரமாக இருக்கிறது. அந்தப் பகுதி தொழில் வளத்தை

மிகவும் பின்தங்கிய பகுதி, நெசவாளர்களும் விவசாயிகளும் அதிகம் நிறைந்த பகுதி. அரசுக்கும் மற்றவர்களுக்கும் பயன் கிடைக்கின்ற வகையில, அந்த காம்ப்ளக்சுக்குள்ளே இடவசதி அதிகமாக இருக்கிறது. குறைந்த அளவிலே முதலீடு செய்தால் கூட அரசுக்கும் அந்தப் பகுதியினுடைய மக்களுக்கும் பயன்தரக் கூடிய முறையிலே அது விளங்கும். எனவே, இந்தக் கேள்வியினுடைய முக்கியத்துவம் அறிந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைத்தறிகளுக்கு அனுமதி வழங்குவது முன்பு மைய அரசினுடைய பொறுப்பிலே இருந்தது. எனவே, ஆண்டுதோறும் மைய அரசு மாநிலங்கள் வாரியாக விசைத்தறிகளை ஒதுக்கீடு செய்தது. 6-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே தமிழகத்திற்கு ஏறக்குறைய 800 விசைத்தறிகள் ஒதுக்கப்பட்டு, ஒவ்வொரு இடத்திற்கும் 50 விசைத்தறிகள் வீதம் 16 இடங்கள் தேர்வு செய்யப்பட்டன. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன இடத்திலே 100 விசைத்தறிகள் 1981-லே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இப்போதைக்கு, 1986-வது ஆண்டு 5 ஆம் மாதத்திலேயிருந்து மாநில அரசே, தன்னுடைய Director of Handlooms and Textiles மூலம் விசைத்தறிகளுக்கு அனுமதி வழங்கலாம் என்று மத்திய அரசு அனுமதி வழங்கியது. எனவே, இப்பொழுது விசைத்தறிகளை யார் வேண்டுமானாலும், ரூ. 250 கட்டி, Director of Handlooms and Taxteles அவர்களிடம் பதிவு செய்து கொண்டு, ரிஜிஸ்டிரேஷன் சர்ட்டிபிகேட் பெற்றுக் கொண்டால், எங்கு வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம் என்று இருக்கிற காரணத்தாலே, இப்பொழுது அரசே முன்வந்து துவங்க திட்டம் ஏதும் இல்லை; தனியார் யாரும் முன் வந்தால் அவர்களே துவங்கலாம்.

**டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பிட்ட இடத்தில் துவங்குவதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லையென்றாலும் கூட அந்தத் தொகுதியிலே பல்வேறு இடங்களில் நெசவாளர்கள் நிறைந்திருக்கிறார்கள். ஆகவே, அதைக் கருத்திலே கொண்டு, செங்குந்தபுரம் விசைத்தறிக் கூடத்தை ஒரு மெயின் சென்டராக வைத்துக் கொண்டு, கல்லாத்தூர், உதயநத்தம், மேலநத்தம் போன்ற பல்வேறு இடங்களில்— நெசவாளர்கள் நிறைந்திருக்கிறார்கள். சப் சென்டர்கள் அமைத்தால், அரசுக்கு உதவிகரமாக இருக்கும். எல் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி என்ற காரணத்தால், தொழில் துவங்குவதற்கு வசதி வாய்ப்புகள் தனியார்களுக்கு இல்லை. எனவே, ஏழைகள் நிறைந்திருக்கின்ற அந்தப் பகுதிக்கு ஏழைகளுக்காக உழைக்கின்ற இந்த அரசு என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்ன மாதிரி, இது இப்பொழுது புதிதாக ஆரம்பிக்கிற திட்டம் அல்ல. முதலிலே, ரிஜிஸ்டிரேஷன் சர்ட்டிபிகேட்டை மத்திய அரசு கொடுத்துக் கொண்டிருந்தது. இப்பொழுது எல்லா மாநில அரசுகளும் தரலாம் என்று மத்திய அரசு அதைப் பரவலாக்கியுள்ளது. இப்பொழுது ரூ. 250 கட்டினாலே, ரிஜிஸ்டிரேஷன் சர்ட்டிபிகேட் பெற முடியும். அரசினுடைய வங்கிகள் தாராளமாகக் கடன் உதவிகள் தருகின்றன. அந்தத் தொகுதியிலே இருக்கிற நெசவாளப் பெருமக்களை எல்லாம் இணைத்து, சொசைட்டிகளை உருவாக்கி அவற்றை ஊக்குவித்து, இப்படித் தனியாகச் சங்கங்கள் துவங்க அவர்கள் அங்கே உதவலாம்.

(முற்பகல் 10-40)

**திரு. ஆர். ரெங்கசாமி:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கூட்டுறவு நூற்பாலை இருக்கிறது, அதையொட்டி ஒவ்வொரு மாவட்டத்திலும் விசைத்தறிக் கூடம் நிறுவ அரசிடம் திட்டம் உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டேன். கூட்டுறவு நூற்பாலை மாவட்டத்திற்கு ஒன்று என்று இருக்கிறது. மூலக்கேள்வி பவர் லூம் காம்ப்ளக்ஸ் ஆரம்பிப்பது பற்றி. ஏற்கெனவே 21 இடங்களில் விசைத்தறிக் கூடங்கள் இருக்கின்றன. இதற்குமேல் அரசின் சார்பில் இப்போது ஆரம்பிக்கிற திட்டம் எதுவும் இல்லை.

**திரு. வி. பி. சிந்தன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஏராளமான விசைத்தறிகளுக்கு உரிமம் வழங்கப்பட்டு, அவற்றிலே உற்பத்தி செய்யப்படுகின்ற கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள துணிகள் விற்பனை ஆகாமல், பல இடங்களில் நெசவுத் தொழிலாளர்கள் வேலையும் இல்லாமல் இருந்துகொண்டு இருக்கிற இந்த நேரத்தில் மீண்டும், மீண்டும் விசைத் தறிகளுக்கு லைசென்ஸ் அளிப்பது அரசின் கொள்கையா? அது பயன் அளிக்குமா என்பதைப்பற்றி மாண்புமிகு அமைச்சரிடத்தில் விளக்கம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு பொதுவான கேள்வி. மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கு இது எதிர் மாறான கேள்வி. அவர் ஆரம்பிக்கவேண்டுமென்று சொல்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் வேண்டாம் என்று சொல்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய 350-க்கு மேற்பட்ட கூட்டுறவு நூற்பாலைகள்

இருக்கின்றன. அந்த நூற்பாலைகளில் உருவாக்கப்படுகிற நூல்களைப் பொறுத்தவரையில் நம்முடைய தேவைக்கு உபயோகப்படுத்தியது போக மீதியை விற்பனை செய்வதற்காக வேறு மாநிலங்களை நம்ப வேண்டி இருக்கிறது, வெளி மாநிலங்களுக்கு அனுப்பவேண்டியிருக்கிறது. எனவே, ஹேண்ட் லூம் என்பதோடு ஓரளவுக்கு பவர்லூமையும் டெவலப் பண்ணினால் தான் அவற்றை எல்லாம் இங்கே உபயோகப்படுத்த முடியும். இல்லாவிட்டால் இயங்கிக் கொண்டிருக்கிற 350-க்கு மேற்பட்ட நூற்பாலைகள் கொஞ்சம், கொஞ்சமாக நலிந்துபோகிற சூழ்நிலை ஏற்படும். எனவே, ஒருபுறத்தில் கூட்டுறவு நூற்பாலைகளைக் காப்பாற்றுகின்ற வகையிலும், மற்றொருபுறத்தில் கைத்தறியினைக் காப்பாற்றுகின்ற வகையிலும் ஓரளவுக்கு விசைத்தறிகளுக்கு நாம் அனுமதி கொடுக்கிறோம். இந்திய அரசு அந்த அதிகாரத்தை வைத்துக்கொண்டிருந்தது. இப்போது இந்தியா முழுவதிலும் மாநில அரசுகளுக்கு அந்த அதிகாரம் பரவலாக்கப்பட்டு இருக்கிறது. அதற்கேற்ப நாம் பரவலாக்கிக் கொண்டு அனுமதி கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு நூற்பாலை என்ற கொள்கையை அரசு செயல்படுத்துகிறது என்று சொன்னார்கள். அந்த வகையில் புதிதாகத் தொடங்கப்பட்ட அண்ணா மாவட்டத்திற்கு ஒரு நூற்பாலை இதுவரையில் தொடங்கப்படவில்லை என்பதால் அங்கே விரைவில் ஒரு நூற்பாலை தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புது மாவட்டம் அண்ணா மாவட்டம் மட்டுமல்ல. இப்போது பல மாவட்டங்கள் புதிதாக ஏற்பட்டு இருக்கின்றன. அதாவது மாவட்டத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில் புதிய மாவட்டங்களில் ஏற்படுத்துவது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதில் அளிக்கிறபோது மத்திய அரசிலிருந்து உரிமை மாநில அரசுக்கு வந்திருக்கிறது என்று சொன்னது வரவேற்கத் தகுந்தது. 250 ரூபாய் கட்டி யார் வேண்டுமானாலும் விசைத்தறி ஆரம்பிக்கலாம் என்றிருப்பதற்குப் பதிலாக கைத்தறி நெசவாளர்களிலேயே நலிந்த பிரிவினருக்கு, இன்னும் குறிப்பிட்டுச் சொல்லப்போனால் மாஸ்டர் வீவர்களிடம் சில ஆயிரம் ரூபாய்களுக்குக் கடன்பட்டு ஏறத்தாழ கொத்தடிமை நிலைமையிலே இருக்கின்ற அந்த ஒரு சமூகத்தினைக் கண்டுபிடித்து அவர்களுக்கு அரசாங்கத்திலே இருந்து விசைத்தறி போட்டுக் கொடுக்கிற வகையில் மானியம், கடன் போன்ற ஏற்பாடுகளை அரசு செய்து தருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டிருக்கிற 21 பவர் லூம் காம்ப்ளக்ஸ் இருக்கின்றன, அவற்றைப் பொறுத்தவரையில எல்லாம் கைத்தறி நெசவாளர்களைக் கொண்ட சங்கங்கள் அமைந்து அவர்களுக்கு பயன்தரத்தக்க வகையில்தான் நாம் ஆரம்பித்திருக்கிறோம். இப்போது 250 ரூபாய் கட்டினால் ரிஜிஸ்ட்ரேஷன் சர்ட்டிஃபிகேட் தரப் படுகிறது. இதிலே கைத்தறி நெசவாளர்களுக்கு முன்னுரிமை கொடுத்து உதவிகள் செய்யப்படும்.

திரு.ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இயங்கி வருகிற விசைத்தறிக் கூடங்களில் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. அதனால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழந்துகொண்டிருக்கிறார்கள். தற்போது மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்களது ஆட்சியில் பள்ளி மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கப் படுகிறது. அதேபோல் போக்குவரத்துக் கழகத்தில் பணி யாற்றுகிற ஊழியர்களுக்கு இலவச சீருடை வழங்கப்படுகிறது. ஆகவே, இப்படி விசைத்தறிக் கூடங்களில் தேங்கிக் கிடக்கிற அந்தத் துணிகளை பள்ளி மாணவர்களுக்குச் சீருடையாக வழங்கவும், போக்குவரத்துக் கழகங்களில் அவற்றை வாங்கவும் அரசு ஆணையிடுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அதோடு நூல்கள் கிடைக்கவில்லை என்ற காரணத்தாலும் பல விசைத்தறிக் கூடங்கள் இன்றைக்கு மூடப்படுகிற நிலைமை இருக்கிறது. ஆகவே விசைத்தறிக் கூடங்களுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் நூல் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டு இப்பொழுது சீருடைகள் போன்றவற்றிற்கு கோ-ஆப்டெக்ஸ் மூலமாக துணிகள் கொள்முதல் செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. நூல் தமிழகத்தில் கிடைப்பதில்லை என்ற பிரச்சனை இப்போது இல்லை. பிரச்னை ஏற்படுகிறபோது அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும்.

கூட்டுறவு வங்கிகளுக்கு பிரைமரி கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் அளிக்கும் வட்டித் தொகை.

74—(*வினா எண். 11920 திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு வங்கிகளுக்கு பிரைமரி கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் அளிக்க வேண்டிய வட்டித் தொகை செலுத்த அரசு உதவி செய்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மத்திய கூட்டுறவு வங்கிகளிடமிருந்து குறைந்த வட்டியான 7.5 சதவிகிதத்திற்கு நடைமுறை மூலதனக் கடன் பெறுகின்றன. அதனால் மத்திய கூட்டுறவு வங்கிக்கு ஏற்படும் இழப்பினை (சேவைத் தொகை) ஈடு செய்யும் பொருட்டு தமிழக அரசு 3 சதவிகிதம் மானியமாக மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கி வருகிறது.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரைமரி கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கம் கொடுக்கிற, ஈடு செய்கிற வட்டித் தொகையைக் கணக்கிடுகிற போது சில கூட்டுறவுச் சங்கங்கள் தவறான வழியில் பதிவு செய்து, தவறான கணக்குகள் வைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அப்படிப்பட்ட சங்கங்களை ஆய்வு செய்து தடை செய்ய அரசாங்கம் முயற்சி எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரைமரி சங்கங்களுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்திலேதான், வங்கிகள் 10 சதவீதத்திலே கடன் கொடுக்கிறபோது, அரசு மத்திய கூட்டுறவு வங்கி மூலம் 7.5 சதவீதத்தில் கடன் கொடுத்து, அதனால் வங்கிகளுக்கு ஏற்படுகிற இழப்பை ஈடு செய்ய 3 சதவீதம் வட்டியை மானியமாகக் கொடுத்து நெசவாளர்களுக்கு உதவி வருகிறது. பிரைமரி கூட்டுறவுச் சங்கங்கள் தவறு செய்வதாகத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினருக்குத் தகவல் தெரிந்து குறிப்பிட்டுச் சொல்வாரேயானால் உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.

## ஆற்காடு, திமிரி ஒன்றியங்களில் சத்துணவுக் கூடங்களுக்கு கட்டிடம் கட்டுதல்.

75—(*வினா எண். 9337) திரு. த. பழனி: மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு திமிரி ஒன்றியங்களில் எத்தனை இடங்களில் சத்துணவுக் கூடங்களுக்கு இந்த ஆண்டு கட்டிடம் கட்டப்படும்?

(ஆ) எத்தனை சத்துணவுக் கூடங்களில் திருக்குறள் ஆசிரியர்கள் இல்லாமல் இருக்கிறார்கள்?

(இ) அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆற்காடு ஒன்றியத்தில் 3 இடங்களிலும், திமிரி ஒன்றியத்தில் 4 இடங்களிலும் இந்த ஆண்டு சத்துணவுக் கூடங்களுக்குக் கட்டிடம் கட்டித் தரப்படும்.



(ஆ) மற்றும் (இ): திருக்குறள் ஆசிரியர்கள் என்று அமைப்பாளர்களைதான் பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் திருக்குறள் கற்றவர்களா என்பதை அவர்களைத் தேர்ந்தெடுக்கும்போதே பார்வையிட்டு, அவர்கள் நியமிக்கப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பள்ளி சத்துணவு அமைப்பாளர்கள் கட்டவேண்டிய டெபாசிட் தொகை.

76—(*வினா எண். 11583)—திரு. கு. ரமணி: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளி சத்துணவு அமைப்பாளர்கள் ஒவ்வொருவரும் ரூ 600 டிபாசிட் கட்டவேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) சத்துணவு அமைப்பாளர்கள் பொறுப்பில் மையங்களுக்குத் தேவையான உணவுப்பொருட்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவை பல ஆயிரம் ரூபாய் மதிப்புள்ளதாகும். காய்கறி, விறகு. மற்றும் தானியப் பொருட்கள் வாங்க ஒரு குழந்தைக்கு 13 காசு வீதம் முன்பணம் வழங்கப்படுகிறது. எந்த ஒரு குறிப்பிட்ட நேரத்திலும் சத்துணவு அமைப்பாளர்கள் பல ஆயிரம் ரூபாய்கள் மதிப்புள்ள பொருட்களையும் கணிசமான அளவிற்கு பணத்தையும் கையாளுவதால் அவர்களிடமிருந்து ஒரு பொருத்தமான தொகையைப் பிணை வைப்புத்தொகையாகப் பெறுவது அவசியமென கருதப்பட்டு, இதனால் அரசின் நலன் நன்கு பாதுகாக்கப்படும், மேலும், இது சத்துணவுப் பணியாளர்கள் தங்கள் பணிகளைப் பொறுப்புடன் கவனிக்கச் செய்யும் என கருதப்பட்டது. எனவே, சத்துணவு அமைப்பாளர்களிடமிருந்து ரூ. 600 பிணை வைப்புத்தொகையாகப் பெற ஆணையிடப்பட்டது. பிறகு ஓரே தடவையில் ரூ. 600 கட்டுவது சிரமம், தவணை முறையில் கட்ட அனுமதிக்க வேண்டும் என்று சத்துணவு அமைப்பாளர்கள் சங்கங்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் பிணை வைப்புத் தொகையை மூன்று தவணைகளில் செலுத்த அனுமதி வழங்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட ஆணையை எதிர்த்து சத்துணவு அமைப்பாளர்கள் சங்கம் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து உள்ளது. உயர்நீதிமன்றத்தின் இடைக்கால தடைக்கிணங்க தற்போது அவர்களிடமிருந்து பிணை வைப்புத் தொகை வசூலிப்பது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே. நான் முந்தைய கேள்விக்கு துணைக் கேள்வி கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இந்தக் கேள்வி நீக்கப் படுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு அறிவித்த பொங்கல் பரிசான ரூ. 300 என்னும் தொகை சத்துணவு அமைப்பாளர்களுக்குச் சில இடங் களிலே வழங்கப்பட்டிருக்கிறது. சில இடங்களிலே பணி செய்கிற மற்றவர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. நான் அறிந்த வரையில் சில இடங்களில் சத்துணவுக் கூடங்களில் பணியாற்றுகிற பொறுப்பாளர்கள் தவிர ஏனைய பணியாளர்களுக்கு வழங்கப்பட வில்லை என்று என்னிடத்திலே சொன்னார்கள். ஆகையினால் அதை எல்லோருக்கும் வழங்குவதற்கு அரசு உத்தரவிட்டுவிட்டதா அல்லது அதில் மாறுபாடு இருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

(முற்பகல் 10-50).

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மிகுந்த இரக்க உணர்வோடு எல்லோருக்கும் 300 ரூபாய் பொங்கல் பரிசு வழங்க வேண்டுமென்று ஆணையிட்டு, எல்லா இடங்களிலும் பணியாற்றுகின்ற சத்துணவு அமைப்பாளர் களுக்கும், ஆயாக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. எங்காவது தவறு ஏற்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுவார்களானால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப் படும்.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு அமைப்பாளர்கள் சம்பளம் போதவில்லை என்று கூறுகிறார்கள். ஆகவே, அவர்களின் சம்பளத்தை உயர்த்துகிற திட்டம் எதுவும் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, சத்துணவு அமைப்பாளர்கள் பொதுவாக அந்தந்த கிராமங் களிலிருந்து அங்கேயிருக்கிற பள்ளிகளில் ஒரு குறிப்பிட்ட நேரம் மட்டுமே பணியாற்றி, தங்களுடைய ஊருக்கு பணியாற்றுகிற பணி மனப்பான்மையோடு, தொண்டு உள்ளத்தோடு பணியாற்ற வேண்டுமென்பதற்காகத் தான் இந்தத் திட்டத்திலே அவர் களுக்குப் பணி வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



உழைப்பு, சம்பளத்திற்கான உழைப்பு என்றோ, ஊதியத்திற் கான உழைப்பு என்றோ ஏற்றுக்கொள்ளப்படுவதற்கில்லை. காலத்தால் போற்றப்படுகிற உழைப்பாக இவர்கள் சமுதாயத் திற்குத் தங்கள் உழைப்பைத் தந்து கொண்டிருக்கிறார்கள்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சத்துணவு மையங்கள் ஓரளவிற்குப் பேரூராட்சி, நகராட்சி போன்ற இடங்களில் ஒரு ஊரில் மட்டும் 20-க்கும் மேற்பட்ட வையாக இருக்கின்றன. ஒவ்வொரு அமைப்பாளரிடத்திலும் நாம் ஒப்படைத்து இருக்கும் பொருள்களின் மதிப்பு பல்லாயிரக் கணக்கான, அல்லது சில இலட்சங்கள் ரூபாய் அளவிற்கு இருக்கிறது. அதிலே திருடு போனாலோ, குறைந்தாலோ, ஈடுகட்டுவதற்கான நிலை இல்லை. அந்த வகையில் மிகப் பெரிய நஷ்டத்தை அரசுக்குத் தருகிறது. ஆகவே, இந்த நிலை வராமல் தடுக்கக்கூடிய வகையில், இதுபோன்று 10, 15 சத்துணவுக் கூடங்கள் இருக்கிற ஒரு நகரிலே ஒரே இடத்தில் பொருள்களை வைத்து காலையில் அவர்களுக்கு அவர்களின் தேவைக்கேற்ப மட்டும் கொடுக்கும் வகையில் இது மாற்றி யமைக்கப்படுமா? அதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, இது அவ்வளவு சாத்தியக்கூறான விஷயம் அல்ல. காரணம் ஒரே இடத்தில் இந்தப் பொருள்களை வைத்துவிட்டு அவர்கள் காலையில் வந்து அதனை எடுத்துக்கொண்டு, அவர்களுடைய உரிய இடங்களுக்குப் போய் 12 மணியிலிருந்து 1 மணிக்குள் உணவைச் சமைத்து வழங்குவது என்பது முடியாது. ஆகவே, அந்தந்தப் பள்ளிகள் இருக்கிற இடத்தில் அந்த உணவுப் பொருள்களை வைத்துக் கொள்வதுதான் இந்த அரசினுடைய திட்டத்திற்கு நல்ல உதவியாக இருக்கும்.

திருமதி டி. யசோதா: தலைவர் அவர்களே, சத்துணவு அமைப் பாளர்களாகப் பணியாற்றுகின்றவர்களை மாற்றக் கூடாது என்று சமூக நலத்துறையின் மூலம் ஆணை பிறப்பிக்கப்பட்ட பிறகும் கூட அவர்கள் மாறுதல் செய்யப்படுவது குறித்து அரசு ஏதேனும் நடவடிக்கையெடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, அவர்களை மாற்றுவது இல்லை. ஏதாவது குற்றச்சாட்டுகள் இருந்தால், அதன்மேல் விசாரணை நடத்தப்பட வேண்டியிருக்கு மானால், அத்தகைய நேரத்தில் அந்த ஊரில் அவர்களால் ஏதாவது பிரச்சினை உருவாகிறது என்று தெரிந்தால், அந்தப் பிரச்சினை உருவாகாமல் தடுப்பதற்குத்தான் அவர்கள் மாற்றப் படுகிறார்களே தவிர, வேறு எதற்கும் தற்போது சத்துணவு அமைப்பாளர்கள் யாரும் மாற்றப்படுவது இல்லை.

திரு. க. இரா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு அமைப்பாளர்கள் சத்துணவு தயாரித்து குழந்தைகளுக்கு அளிப்பதோடு மட்டுமல்லாமல் குடும்ப நலத் திட்டத்திற்கு ஆள் பிடித்து வரவேண்டுமென்று சொல்வதாகச் சொல்கிறார்களே: இது அரசுக்குத் தெரியுமா? அப்படி இருந்தால் அந்தப் பணியில் அவர்களை ஈடுபடுத்தாமல் அவர்களைத் தடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, குடும்ப நலத் திட்டத்தில் அவர்களை ஈடுபடுத்துவது இல்லை. குழந்தைகளை அழைத்துக்கொண்டு தாய்மார்கள் சத்துணவுக் கூடங்களுக்கு வருகிறார்கள். எனவே, அந்தத் தாய்மார்களுக்கும் சத்துணவுக் கூட அமைப்பாளர்களுக்கும் இடையே ஒரு சுமுக நெருக்க உறவு ஏற்படுகிறது. எனவே, குடும்ப நலத் திட்டத்தைப் பற்றி அவர்களிடத்தில் எடுத்துச் சொல்வதற்கு அவர்களுக்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது என்பதால் அதுபற்றி எடுத்துச் சொல்வதற்கு மட்டும் கேட்டிருக்கிறோமே தவிர குடும்ப நலத் திட்டத்திற்கு ஆள் பிடித்து வரவேண்டுமென்று யாரும் சொல்லவில்லை. அப்படிச் சொல்வது தவறு என்று நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டு அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. முகமது கனி: தலைவர் அவர்களே, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு இந்தச் சத்துணவுத் திட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். அவர்களைப் போற்றும் வகையில் இந்தத் திட்டத்திற்கு அவர்களுடைய பெயரை வைக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, 'யாம் பெற்ற இன்பம் பெறுக இந்த வையகம்' என்ற மூதுரைக்கு ஏற்ப இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்த நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தனக்கு மட்டும் இந்தப் பெயர் சொந்தமல்ல, இந்த நாட்டை இதற்கு முன்னாலே ஆண்ட முதலமைச்சர்களுக்கும், வருகிற முதலமைச்சர்களுக்கும் அந்தப் பெருமை இருக்கவேண்டுமென்ற நிலையில்தான் இன்றைக்கு 'முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்' என்று பெருமையோடு பெயர் சூட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. க. நரசிம்மபல்லவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களில் வேலை செய்கின்ற அமைப்பாளர்கள் குற்றம் செய்தால் மாற்றலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், குற்றமே செய்யாமல் இருக்கிறபோது கிராமத்துப் பிரச்சினையை வைத்து ஒரு சில இடங்களில் அந்தப் பதவியிலே இருக்கக்கூடியவர்கள் அவர்களை மாற்ற வேண்டும் என்றும், மாற்றாவிட்டால், அவர்கள் இருக்கக்கூடிய



சத்துணவுக் கூடத்திற்குக் குழந்தைகள் சென்று சாப்பிட வேண்டாம் என்றும் தடை செய்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றங்கள் செய்தவர்களைத்தான் சில நேரங்களில் மாற்றுகிறார்கள். வேறு ஊர் பிரச்சினைகள் ஏற்படுகிறபோது, அதிகாரிகள் அதிலே முயன்று சுமுகமாகப் பேசித் தீர்த்து, உரிய முடிவை எடுத்து வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்கேயாவது தவறு நடந்திருந்தால், அதைப்பற்றி என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

திரு. டி. எம். வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சத்துணவுத் திட்டத்திற்கான அமைப்பாளர்களை நியமிப்பதற்கு மாவட்ட கலெக்டருடைய நேர்முக உதவியாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பதிலாக இதற்கு என்று தனியாக ஒரு துறையைத் துவக்குவதற்கு அரசிடம் எண்ணம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய சத்துணவுத் திட்டத்தினுடைய நேர்முக உதவியாளர்கள் அந்தத் துறை சம்பந்தப்பட்டவர்கள்; அவர்கள் மட்டுமல்லாமல் கல்வித் துறையில் இருக்கின்ற ஒரு அதிகாரியும், அதைப்போலவே சமூக நலத்துறையில் இருக்கின்ற ஒரு அதிகாரியும், ஆக 3 பேர்களும் இருந்துதான் தேர்ந்தெடுக்கிறார்கள்.

திருமதி டி. யசோதா: * *

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் எதிர்க்கட்சித் துணைத் தலைவர். எனவே அவர்கள் கேட்கலாம். (குறுக்கீடு). நீங்கள் உட்காருங்கள். நீங்கள் இரண்டு பேர்களைக் கொண்ட கட்சி. அவர்கள் 62 பேர்களைக் கொண்ட கட்சி. (குறுக்கீடு). இப்படி எழுந்து பேசக்கூடாது- இது முறை அல்ல. (குறுக்கீடு). கேள்வி நேரத்திலே கட்சிப்பாகுபாடு கிடையாது. எல்லா உறுப்பினர்களும் சமம்தான். நீங்கள் கேட்டதால் இதைச் சொல்கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவருடைய சத்துணவுத் திட்டத்திற்குச் சிலர் களங்கத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு, அந்தச் சத்துணவுக் கூடங்களுக்கு வழங்கப்படுகிற

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

காய்கறிகள் போன்றவற்றில் பூச்சிகள், புழுக்கள் விழுந்து விட்டதாக பல இடங்களில் குறைபாடுகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அப்படிச் சொல்கிறவர்களைக் கண்டுபிடித்து, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, சுகாதாரத் துறையின் மூலமாக நம்முடைய சத்துணவுக் கூடங்கள் இருக்கிற இடங்களில் தேவையான மருந்துகளைத் தெளிப்பதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்த உத்தரவுகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. தற்போது அந்த மாதிரி சம்பவங்கள் எங்கும் நடைபெற்றதாகத் தகவல் இல்லை. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் அவைக் குறிப்பில் இருந்து நீக்குவது மரபல்ல. உறுப்பினர் ஏ.எஸ்.ஏ. ஆறுமுகம் அவர்கள் சில வாசகங்களைச் சொன்னார்கள். அவர்கள் பேசியது நீக்கப்படுகிறது. (குறுக்கீடு).

திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்: திருமதி யசோதா அவர்கள் சொன்னதையும் சேர்த்து எடுங்கள் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுவும் நீக்கப்படுகிறது.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: தலைவர் அவர்களே, இந்தச் சத்துணவை அறிமுகப்படுத்திய மாண்புமிகு முதல்வர் அவர்களைப் போன்று, இந்த உணவிற்குச் சத்துணவு என்று பெயர் வைத்தவர்களுக்கும் நான் பாராட்டு தெரிவிக்கவேண்டும். இந்தச் சத்துணவு என்ற பெயரால் இன்று சாம்பார் சாதம், தயிர் சாதம் போன்றவை எல்லாம் கொடுக்கப்படுகின்றன. எனவே, உண்மையான சத்துணவாக இருக்க, வாரத்திற்கு ஒரு முறை பிரியாணி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரியாணியில் இருக்கின்ற சக்தியை விட தாவர உணவில் சக்தி அதிகமாக இருக்கிறது என்று ஆய்ந்ததற்குப் பிறகுதான் தாவர உணவு வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 77 முதல் 80 வரை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



(முற்பகல் 11-00).

### 2. தகவல் கோரல்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காலையில் நீங்கள் என்னுடைய அறைக்கு வந்திருந்தீர்கள். அப்போது, என்ன கேட்கப் போகிறீர்கள் என்பதை என்னிடம் சொல்லியிருக்கலாம் அல்லவா?

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டரிலோ, பாயின்ட் ஆப் இன்பர்மேஷனிலோ வராது. ஆகவே, இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்திரவிடுகிறேன்.

### 3. கவன ஈர்ப்பு.

(அ) விவசாயிகள் நில வள வங்கிக் கடன்களைத் திரும்பக் கட்ட இயலாத நிலை குறித்து.

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்றும் தக்காவிக் கடன் பெற்றும் வெட்டப்பட்ட கிணறுகளும், ஆழ்குழாய்க் கிணறுகளும் அறவே நீர் இன்றி பொய்த்துப் போன காரணத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கடனைத் திரும்பக் கட்ட இயலாது திண்டாடும் நிலைமை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

அறிக்கை.

பிரதம நிலவள வங்கிகளில் நீண்ட காலக் கடன்கள் பெற்று தோண்டப்பட்ட கிணறுகள் பொய்த்து விட்டால், அத்தகைய கிணறுகட்கு மானியம் அளிப்பதற்காக தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி அளவில் பொய்த்த கிணறு நிதி ஒன்று நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. மேற்படி "பொய்த்த கிணறு நிதியில்" இருந்து வழங்கப்படும் மானியமானது அரசினால் அங்கீகரிக்கப் பட்ட விதிமுறைகட்கு உட்பட்டே வழங்கப்பட்டு வருகின்றது.

2. அரசினால் அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகளின்படி, மேற்படி நிதிக்கு கீழ்க்கண்ட வழிமுறைகளில் நிதி பெறப்படும்:—

(அ) தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் இலாபத்தில் இருந்து 10 சதவீதம்,

(ஆ) அரசினால் அவ்வப்பொழுது கொடுக்கப்படும் தொகைகள்,

(இ) தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியில் அரசு செலுத்தியுள்ள பங்குத் தொகைக்கு வழங்கப்பட வேண்டிய ஈவுத் தொகை போக எஞ்சியுள்ள ஈவுத்தொகையில் பாதி மற்றும்

(ஈ) இந்நிதி முதலீட்டால் பெறப்பட்ட வட்டித் தொகை.

3. இந்நிதியில் இருந்து இதுவரை 2240 கிணறுகட்கு ரூ. 121.88 இலட்சம் அளவிற்கு மானியம் வழங்கப்பட்டு விட்டது. தற்சமயம் மாநில நிலவள வங்கியில் இந்த நிதிக் கணக்கில் தொகை ஏதும் இல்லை. இதுவரை இந்நிதிக்கு மாநில நிலவள வங்கியின் இலாபப் பங்கீட்டில் இருந்தும், ஈவுத்தொகையில் இருந்துமே தொகை பெறப்பட்டு வந்தது; தற்போது இந்நிதியில் தொகை ஏதும் இல்லாத காரணத்தினால் 255 இனங்களில், ரூ. 29.12 இலட்சம் அளவிற்கு அனுமதிக்கப்பட்ட மானியம், விவசாயிகளின் கடன் கணக்குகளில் ஈடுகட்ட முடியாமலும், மேலும், 314 இனங்களில் மனுக்கள் பெறப்பட்டு பரிசீலனையிலும் நிலுவையாக உள்ளன. தற்போது தமிழ்நாடு மாநில நிலவள வங்கியும் அதிகமான நட்டத்தில் செயல்படுவதால், பொய்த்த கிணற்றினால் பாதிக்கப் பட்ட விவசாயிகட்கு மேலே குறிப்பிட்டபடி மானியம் வழங்கு வதற்காக மேற்கூறிய நிதிக்கு அரசிடம் இருந்து 100 இலட்ச ரூபாய் கோரி (Govenment contribution) கூட்டுறவுச் சங்கப் பதிவாளரால் பிரேரணை பெறப்பட்டு இது அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும் இவ்வகையில் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட விதிகளின்படி சிறிய விவசாயிகளாக இருந்தால் 90 சதவீத அளவிற்கும், பெரிய விவசாயிகளாக இருந்தால் 75 சதவீத அளவிற்கும் மானியம் அளிக்கப்படும். எஞ்சியுள்ள தொகை கடன் தாரர்கள் அடமானப் பத்திரத்தில் உள்ள ஷரத்துக்களின்படி உரிய காலத்திற்குள் செலுத்த வேண்டும்,



4. சமீபத்தில், அரசினால் அறிவிக்கப்பட்டுள்ள வட்டிச் சலுகைகளின்படி, பொய்த்த கிணற்றினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பயன் அடையும் பொருட்டு, இதற்காக அனுமதிக்கப் படும் மானியத்தொகை வரவு வைக்கப்படாத இனங்களிலும் மானியத் தொகை போக எஞ்சியுள்ள கடன் தொகையில் அரசின் அறிவிப்பின்படி 31-12-86 அன்று தவணைக் கடந்த அசல் பகுதியில் 50 சதவிகிதத்திற்கு குறையாமல் 28—2—87-க்குள்ளும், எஞ்சிய தொகை 30—6—87-க்குள்ளாகவும் செலுத்துபவர்கட்கும், மேற்படி வட்டிச் சலுகையினை, அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி, அளிக்குமாறு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரால் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

5. மேலே கூறியுள்ள மாநில நிலவள வங்கியின் பொய்த்த கிணறுகள் நிதியைத் தவிர, புதியதாக ஒரு "பொய்த்த கிணறு இழப்பீட்டு நிதி" ஒன்றினை ஏற்படுத்த நாபார்டு அறிவுரைகள் வழங்கியுள்ளது. இப்புதிய திட்டமும் அரசின் பரிசீலனையில் உள்ளது. தக்காவிக் கடன்கள் நிலவள வங்கிகளால் வழங்கப்படாத தினால், அது குறித்து குறிப்பு ஒன்றும் இல்லை.

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொய்த்த கிணறுகளுக்கு மானியம் வழங்க நிலவள வங்கிகளிடம் இந்தக் கணக்கில் தொகை இல்லை என்றும் இதற்கு ரூபாய் 100 இலட்சம் கோரி கூட்டுறவு சங்கப் பதிவாளரால் பிரேரணை பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது என்றும் சிறிய விவசாயிகளாக இருந்தால் 90 சதவீதமும், பெரிய விவசாயி களாக இருந்தால் 75 சதவீதமும் தள்ளுபடி செய்ய இருப்பதாகவும் மீதித் தொகை தவிர மீதம் உள்ள பணத்தை விவசாயிகளுக்குக் கடன்தாரர்கள் அடமானப் பத்திரத்தில் உள்ள ஷரத்துக்களின் படி உரிய காலத்திற்குள் செலுத்த வேண்டும் என்றும் இந்த விவர அறிக்கையில் சொல்லப்பட்டு இருக்கிறது. விவசாயிகளுக்குத் தனிப்பட்ட முறையில் அந்த அந்த நிலவள வங்கிகள் அனுப்புமா என அறிய விரும்புவதோடு, அரசு அலுவலர்கள் வீடு கட்டக் கடன் பெற்று இருந்தால் கட்டிய தொகை போக மீதம் உள்ள தொகையை இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு இந்திய துணைக் கண்டத்திற்கே முன் மாதிரியாக இருந்து write off செய்வதுபோல் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இல்லாமல் பொய்த்துப் போன காரணத்தினால் அத்தகைய கிணறுகளை வெட்டுவதற்கு கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கடனைப் பெற்று மற்றும் தங்கள் கையில் இருக்கும் நகை நட்டுகளை அடகு வைத்து வெட்டிய கிணறுகளில் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இல்லாமல் பொய்த்துப்போன காரணத்தினால் அந்தக் கடனைத் தள்ளுபடி செய்ய இயலுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று குறிப்பிட்டு இருக்கிறேன். அரசின் பரிசீலனைக்குப் பிறகு அரசு மானியம் தருமானால் அதிலிருந்து

தரலாம். ஆனால், நிலவள வங்கிகளின் நிலைமை பற்றி இந்த அறிக்கையில் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. வீடு கட்டு வதற்கு அரசு கடன் தந்து அவர்கள் இறந்து விடுவார்களானால் அவர்கள் மீதி கட்டவேண்டியது தள்ளுபடி ஆகவில்லை. அவர்கள் ஒவ்வொருவரும் மாதந்தோறும் 3 ரூபாய் கட்ட வேண்டும் இன்ஷூரன்ஸ் என்ற வகையில். இப்படி எல்லோரும் சேர்ந்து கட்டுகின்ற பணத்திலிருந்துதான் அது தரப்படுகிறதே தவிர வேறு அல்ல. ஆகவே, அதோடு இதை இணைக்கக் கூடாது. ஆனால், சென்ற ஆண்டு தள்ளுபடி செய்ததிலே ஓரளவுக்கு இவர்களுக்கும் சாதகமாக அமைந்திருக்கிறது. தள்ளுபடி என்ற பெயரில் கூட்டுறவுக்குத்தான் தள்ளுபடி ஆகிறதே தவிர அரசுக்குத் தள்ளுபடி என்று ஆகவில்லை. அரசின் பணம்தான் அங்கே போய்ச் சேருகிறது. ஆக, அந்த வகையில் எந்த எந்த அளவுக்கு நன்மைகளும், சலுகைகளும் தர இயலுமோ அந்த அளவுக்குத்தான் விதிமுறைகளின்படி தர இயலும். ஆக, அவர்கள் கேட்டு இருக் கிறார்கள். அதை அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது.

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்ததைப் போல தக்காவிக் கடன்களைத் தள்ளுபடி செய்ய அரசு முன் வருமா என அறிய விரும்புவதோடு இன்றைக்கு 100 லட்ச ரூபாய் கேட்டு பிரேரணை வந்திருக்கிறதே, அந்தத் தொகை வருகிற வரைக்கும் இந்தக் கடன்களை அந்த விவசாயிகள் கட்டுவதற்கு அவகாசம் கொடுத்து தள்ளி வைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடன் வேறு, தக்காவிக் கடன் வேறு; தக்காவிக் கடன்கள் வருவாய்த் துறை யின் மூலமாக அளிக்கப்படுகின்ற ஒன்று. இப்போது தக்காவிக் கடன்கள் தரப்படுவது இல்லை. ஏற்கனவே தரப்பட்ட தக்காவிக் கடன்கள் பற்றி தனிக் கேள்வி போட்டால் அவர்களுடைய நிலைமைகளைப் பற்றி சொல்லலாம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(ஆ) சி. ஐ. டி. நகர் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளுக்குப் பட்டா வழங்குதல்.

*திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''சைதை 140-வது வட்டம் சி.ஐ.டி. நகர் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் ஒரு பகுதியினருக்குப் பட்டா வழங்கப்பட்டும், மீதிப் பகுதியினருக்குப் பட்டா வழங்கப் படாமலிருப்பதும்'' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.





மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

உலக வங்கித் திட்டம் பாகம் 2-ன் கீழ் சைதை 140—வது வட்டம் சி.ஐ.டி. நகர், குத்தகை மற்றும் விற்பனை உடன்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டது. இத்திட்டப் பகுதியில் 249 மனைகளுக்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அங்கீகாரம் அளித்துள்ளது. அங்கீகாரத்தின்படி சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் மேற்படி பகுதியில் தகுதி வாய்ந் தோர் பட்டியல் தயாரித்து குடிசைமாற்று வாரியத்திற்கு மனைகள் ஒதுக்கீடு வழங்க அனுப்பியுள்ளார். 249 மனைகளில் குத்தகை மற்றும் விற்பனை உடன்பாட்டுத் திட்டத்தின்படி மனைகள் வழங்க தகுதி பெற்றவர்கள் 211 நபர்கள் ஆவர். இவர்களில் முன்பணம் கட்டி குத்தகை மற்றும் விற்பனை உடன் பாடு செய்து கொண்ட 123 நபர்களுக்கு ஒதுக்கீடு வழங்கப் பட்டுள்ளது. மீதமுள்ள நபர்கள் முன்பணம் கட்டாத காரணத் தால் இன்னமும் ஒதுக்கீடு வழங்கப்படவில்லை. இவை போக, மேற்படி பகுதியில் 30—6—84-க்கு முன்பிருந்தே வசித்து வந்த தற்கு குடியிருப்புதாரர்கள் ஆதாரங்கள் காட்டாத காரணத்தால் 26 நபர்களுக்கு தகுதி வாய்ந்தோர் பட்டியல் மாவட்ட ஆட்சி யரால் அனுப்பப்படவில்லை. இப்பகுதியில் பொது உபயோகத் திற்கு 2 மனைகளும், பொதுக் கிணற்றுக்கு 2 மனைகளும், சத்துணவுக் கூடத்திற்கு 1 மனையும் வழங்கப்பட்டுள்ளது. 7 நபர்களுக்கு அவர்களுக்குள்ளே தகராறு என்ற காரணத்தால் தகுதி வாய்ந்தோர் பட்டியல் இன்னமும் மாவட்ட ஆட்சியரால் தயாரித்து வாரியத்திற்கு அனுப்பப்படவில்லை.

எனவே, மீதமுள்ள நபர்கள் முன்பணம் கட்டி தக்க ஆதாரங்கள் கொடுத்த பின்னர் மாவட்ட ஆட்சியரால் தகுதி வாய்ந்தோர் பட்டியல் தயார் செய்யப்பட்டு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் மனைகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

*திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் குறிப் பிட்டுள்ளதைப் போல் 211 நபர்களில் 123 நபர்களுக்கு ஒதுக்கீடு வழங்கப்பட்டு, மீதி நபர்கள் முன்பணம் கட்டாத காரணத்தால் ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள், ஆனால், அந்தத் தகவல்களை உரிய நபர்களுக்குத் தெரியப்படுத்தாத காரணத்தால் அவர்கள் எங்களுக்குப் பட்டா கொடுக்கவில்லை என்று குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, விவர அறிக்கையில் இருக்கின்ற குறிப்பினை சம்பந்தப் பட்ட நபர்களுக்குத் தெரியப்படுத்தினால், அவர்கள் அதற் கேற்றாற்போல் நடவடிக்கை மேற்கொண்டு பட்டா பெற வாய்ப்பாக இருக்கும். எனவே, அமைச்சரவர்கள் அதற்கான நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்,

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீட்டு மனை கிடைக்கப் பெறாதோர் குடிசை மாற்று வாரியத்துடன் தொடர்பு கொண்டால் அவர்கள் முன்பணம் ஏறக்குறைய ரு. 89 கட்ட வேண்டும் என்ற விவரம் அவர்களுக்குச் சொல்லப்படும். தனியாக அவர்களுக்கு அனுப்ப முடியுமா என்பதைக் குடிசை மாற்று வாரியத்தோடு கலந்து அதற்குரிய நடவடிக்கை எடுக்கப் படும்.

***திரு. சைதை சா. துரைசாமி:** துணைத் தலைவர் அவர்களே, இதே நகரில் அடுத்த பகுதி, சி.ஐ.டி. நகர் கால்வாய் அருகே அமைந்திருக்கின்ற 141-வது வட்டம் ஓப் தெருவில் உள்ள 22 குடியிருப்புதாரர்களுக்கு, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்குக் குடிசை மாற்று வாரியம் பரிந்துரை செய்தும், அந்த இடம் கால்வாய்க்கு அருகில் இருக்கிறது என்று பட்டா வழங்க MMDA அதிகாரிகள் மறுக்கிறார்கள். எனவே, ஒரு பகுதியான சி.ஐ.டி. நகர் பகுதிக்கு வழங்கியதற்குப் பிறகு, மற்றொரு பகுதியான ஓப் தெருவிற்கு அந்தத் திட்டம் பொருந்துகின்ற அடிப்படையில், அந்த 22 நபர்களுக்கு, குடியிருப்புதாரர்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே, இதுகுறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

### 4. அறிக்கை அளித்தல்.

### பொது நிறுவனங்கள் குழு.

**டாக்டர் கே. சமரசம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்காணும் அறிக்கையை நான் இந்தப் பேரவைக்கு அளிக்கின்றேன்:"இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 மற்றும் 1983-84-ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) சமூக நலத்துறை தொடர்பான பத்திகள் மீதான மேற்படி குழுவின் நாற்பதாவது அறிக்கை"

### 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்(தொடர்ச்சி)

***திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையின்மீது சில கருத்துக்களை நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

நல்ல சில திட்டங்களை உரையில் கூறியிருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். இருக்கின்ற சாராயக் கடைகளுக்கு மூடு விழா நடத்திய இந்த அரசை மனதாரப் பாராட்டுகிறேன். இருந்தாலும் அதிலேகூட சிறிய வருத்தம் என்ன



வென்றால், அது முழுமையான மதுவிலக்கு அல்ல என்பது தான். இன்னும் சொல்லப் போனால், சில ஆயிரக்கணக்கான அளவிலே இருக்கின்ற பணக்காரர்கள் விஸ்கி, பிராந்தி, ஒயின் போன்றவற்றைக் குடிக்கலாம். குடித்துக் கெட்டும் போகலாம். ஆனால், பல கோடிக்கணக்கான அளவில் இருக்கின்ற ஏழை எளிய மக்கள் குடித்துக் கெட்டுப் போகக் கூடாது என்ற நல்லெண்ணத்தோடு கள், சாராயக் கடைகளை இந்த அரசு எடுத்திருப்பதைப் பாராட்டினாலும்கூட, நடைமுறையில் நடைபெறுவது என்ன என்பதை நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

ஏழை எளிய மக்கள் முன்பு சம்பளத்தில் ஒரு பகுதியை வைத்துக் குடித்தவர்கள், இன்றைக்கு சம்பாதிக்கின்ற அத்தனை பணத்தையும் செலவழித்து இந்த விஸ்கி, பிராந்தி குடிக்க வேண்டுமென்ற அளவிற்கு வந்துவிட்டார்கள் என்று நினைக்கும் போது அரசினுடைய நல்ல திட்டம் இப்படி பாழாகிப் போகின்றதே என்று நான் வருத்தப்பட்டுக் கொள்கின்றேன். இதை நிவர்த்தி செய்வதற்கு நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புவதெல்லாம், காங்கிரஸ் ஆட்சியிலே இருந்தது போல் முழுமையாக அதாவது 'There should be a tctal proi.ibition' இருக்க வேண்டும் என்று கூறிக் கொண்டு இந்த நல்ல திட்டத்தை மேலும் நல்லபடியாக எல்லோரும் பயன்பெறும் வகையில் இதைச் செய்ய வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11–10)

அடுத்து தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையம் கொடைக் கானலில் ஆரம்பிக்கப்பட்டு, இன்று தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை தமிழ் மக்களும் தொலைக்காட்சி காணுகின்ற நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த மத்திய அரசுக்கு, குறிப்பாக இளைஞர்களின் விடிவெள்ளி, எங்களுடைய இளைய தலைவர் ராஜீவ் காந்தி அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றி சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக மின் உற்பத்தியைப் பொறுத்தவரையில் இந்த உரையிலே அதிகமான ஆர்வமும், அக்கறையும் காட்டப்பட்டுள்ளது. இந்த நிலையில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் தாளவாடி மலைப்பகுதியில் இருக்கின்ற தேர்மாளம், திங்களூர் பஞ்சாயத்துக்களில் இருக்கின்ற மக்களுக்கு—Three phase connection—மின் இணைப்பினை உடனடியாக தந்தாக வேண்டும். அந்த மலைப் பகுதியில் இருக்கின்ற மக்கள் விவசாயத்தை நம்பி வாழுகின்ற மக்கள். விவசாயம் செய்வதற்கு மின்சாரம் இருந்தால்தான் நல்லமுறையில் விவசாயம் செய்து ஓரளவிற்கு அவர்களுடைய வாழ்க்கையை நடத்திச் செல்வதற்கு பயன் உள்ளதாக இருக்கும் என்ற காரணத்தினால் ஸ்பெஷல் பிரியாரிட்டி முறையிலே இந்த அரசு செய்தாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

[திரு. ஈ.வே.கி.ச. இளங்கோவன்] [1987 மார்ச் 5

அடுத்தபடியாக சிறு தொழில்களைப் பற்றிக் கூறும்போது இந்த ஆளுநர் உரையிலே 'There has also been an impressive growth in small industries sector' என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இது எதை வைத்து இப்படி கூறப்பட்டு இருக்கிறது என்றால் 77,382 சிறு தொழில்கள் பதிவு செய்யப்பட்டு இருக்கின்ற அந்த எண்ணிக்கையை வைத்து இங்கே நாம் பெருமைப் பட்டுக் கொள்கின்றோம். இங்கே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆரம்பிக்கப்பட்ட சிறு தொழில்களில் எத்தனை லாபகரமாக நடக்கின்றது, அதன் மூலம் உற்பத்தித் திறன் எவ்வளவு அதிகமாக இந்த நாட்டிற்கு கிடைக்கின்றது என்பதை நாம் எண்ணி மகிழ்ச்சி அடைய வேண்டுமே தவிர வெறும் எண்ணிக்கையைக் கொண்டு நம்மை நாமே முரசு தட்டி பாராட்டிக்கொள்வது வருந்தத்தக்க விஷயம்,

அடுத்து மிக முக்கியமான பிரச்சினையாக இன்று தமிழ் நாட்டில் இருப்பது குடிநீர்ப் பிரச்சினை. வழக்கமாக பெய்யக் கூடிய மழை அளவு சில வருடங்களுக்கு இல்லாத காரணத்தினால் கடுமையான குடிநீர்ப் பிரச்கினை, இந்தத் தமிழகத்தில் எல்லா இடங்களிலும் ஏற்பட்டு இருக்கிறது. குறிப்பாக பெரியார் மாவட்டத்தில் எனது சத்தியமங்கலம்தொகுதியில் இந்தக் குடிநீர்ப் பிரச்சினை மிக பிரமாண்டமான பிரச்சினையாக இருக்கிறது. அதை ஒழிப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக எனது தொகுதியிலே இருக்கின்ற கொடிவேரி கூட்டுக்குடிநீர்த் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எகம்மநாயக்கன்பாளையம், காளியூர் போன்ற மற்ற ஊர்களுக்கு இதை விரிவுபடுத்த வேண்டும். விரிவுபடுத்துவதிலே சிக்கல்கள் அதிகமாக இல்லை. ஆனால் சட்டங்களும் சம்பிரதாயங்களும் இதற்கு குறுக்காக இருக்கின்றன என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் குடிநீர்த் திட்டங்கள் குடிநீர் வாரியத்தின் அதிகாரத்தின் கீழ் இருக்கின்றன. இப்படி நீங்கள் இதை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்கும் போது உரிய பஞ்சாயத்துக்கள் பணங்களைக் கட்டினால்தான் நாங்கள் செய்து தருவோம் என்று ஒரு முட்டுக்கட்டை போட்டு வைத்திருக்கிறார்கள். இதையெல்லாம் எடுத்து விட்டு போர்க்கால நடவடிக்கையாக குடிநீரை எந்தெந்த கிராமங்களுக்குத் தரமுடியுமோ அதை உடனடியாகத் தந்தாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் பண்ணாறி, சிக்கரசன்பாளையம், ராஜன்நகர், புதுப்பீர்கடவு போன்ற ஊர்களுக்கு ஒருங்கிணைந்த பண்ணாறி கூட்டுக் குடிநீர் திட்டம் என்ற திட்டத்தை அரசு பரிசீலனை செய்து வருகிறது. அதே போல தாளவாடி மலைப்பகுதி தலமலை, தொட்டபுரம், கோடிபுரம் ஆகிய ஊர்களில் கூட்டுக் குடிநீர்த்திட்டத்தை அமைப்பதற்கு அரசு ஆராய்ந்து வருகிறது. ஆராய்ச்சிகளையும் விரைவுபடுத்தி விரைவிலேயே இந்தத் திட்டங்களை கொண்டு வருவதற்கு ஆவன செய்ய வேண்டும்.



[திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்]

1987 மார்ச் 5]

இந்தக் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்காகப் பரவலாக ஆழ்குழாய்க் கிணறுகள் போடப்பட்டு வருவதை நான் பாராட்டுகிறேன்.

அடுத்தது தமிழகத்திலே பல இடங்களில் ஆனால் இந்த ஆழ் குழாய்க் கிணறுகள் யாருடைய அதிகாரத்தின் கீழ் போடப்பட்டு வருகிறது? இது குடிநீர் வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து கொண்டிருக்கிறது. ஒரு ஊரிலே எங்கே ஆழ் குழாய்க் கிணறுகள் வேண்டும் என்பது அங்கே இருக்கின்ற அந்த ஊர் மக்களுக்குத் தெரியும், அங்கே இருக்கின்ற பஞ்சாயத்துத் தலைவருக்குத் தெரியும், அங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியும். இன்னும் சொல்லப் போனால் அரசு ஊழியர்களுக்கும் தெரியும். ஆனால் இவர்கள் யாரையும் கலந்தாலோசிக்காமல் தான்தோன்றித்தனமாக ஏதோ இந்த நாட்டிலே இருக்கின்ற தனிக்காட்டு ராஜாக்களாக, இந்த குடிநீர் வாரியத்தின் அதிகாரிகள் யாரையும் கேட்காமல் அவர்கள் செல்ல வேண்டியது. வசதியான இடங்களில் நீர் வருகின்றதோ, இல்லையோ 100 அடி 150 அடி ஆழ் குழாய்க் கிணறுகளை போட வேண்டியது. போட்ட பிறகு 200 அடி 300 அடி என்று பில் போட்டு அதற்கு பணத்தை வாங்கிக் கொள்கின்ற நிலைமைதான் இன்றைக்கு குடிநீர் வாரியத்தில் நடந்துகொண்டிருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். எனது தொகுதியில் இருக்கின்ற துறையம் பாளையம் பஞ்சாயத்தில் உள்ள அண்ணா நகரில் கடும் குடிநீர்ப் பிரச்சினை. இன்னும் சொல்லப் போனால், நேற்றுகூட இங்கே சில உறுப்பினர்கள் குளிக்க முடியாத பிரச்சினையை பெரும் பிரச்சினையாக கிளப்பினார்கள்.

ஆனால் நான் சொல்கின்ற அண்ணா நகரிலே நிலைமை என்னவென்றால், மக்கள் குளித்தே பல நாட்கள் ஆகின்றன. அவ்வளவு வறட்சியான குடிநீர்ப் பஞ்சம் அங்கே நிலவுகிறது. அந்த ஊரிலே குடிநீர் ஆழ்குழாய்க் கிணறு ஒன்று அமைக்க வேண்டும் என்று கூறி, அங்கே இருக்கின்ற அதிகாரிகள் அந்த இடத்திற்கு வந்து, ஆழ்குழாய்க் கிணறு எங்கே அமைத்தார்கள் என்றால் அந்த ஊருக்கு வெகு தூரத்திலே இருக்கின்ற சுடுகாட்டிலே அமைத்தார்கள். அதை மக்கள் எதிர்த்தார்கள். காரணம், ஊருக்கு நடுவிலேயே பூமிக்கு அடியிலே நல்ல நீரோட்டம் இருக்கிறது; ஆகவே, அங்கே போட்டுத் தாருங்கள் என்று கேட்ட மக்களை, எங்களுடைய இஷ்டம், நாங்கள் போடுகின்ற இடத்திலே வந்து தண்ணீரைப் பிடித்துக்கொள்ள வேண்டுமே தவிர, நீங்கள் சொல்கின்ற இடத்தில் நாங்கள் போட்டால் எங்களுடைய அதிகாரம் என்ன ஆவது, ஜம்பம் என்ன ஆவது என்று சொல்கின்ற நிலைமைதான் இருக்கிறது. மக்களுடைய குறைகளைக் கண்டிப்பாகத் தீர்த்தாக வேண்டும் என்ற நல்லெண்ணம் அந்த அதிகாரிகளுக்கு இல்லை.

* *

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்] [1987 மார்ச் 5

அரசு எவ்வளவு செலவு செய்து, நல்ல பல திட்டங்களை கொண்டு வந்தாலும் கூட, இருக்கின்ற அதிகாரிகள் உருப்படியாக செயல்படாமல் இருந்தால், அந்த நல்ல திட்டங்கள் மக்களுக்குப் போய்ச் சேராது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேற்றே சொல்லி இருக்கிறோம். அதாவது ஸ்பெசிபிக்காக இருந்தால் சொல்லுங்கள்; ஸ்பெசிபிக்காக இல்லாததைச் சொல்ல வேண்டாம் என்று. ஆகவே, ஸ்பெசிபிக்காக இருந்து, அதைச் சொன்னால், அதை விசாரிப்பதற்கு வசதியாக இருக்கும். எனவே, அதை நீக்க உத்தரவிடுகிறேன்.

**திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்:** ஆகவே, அரசு அதைக் கண்காணித்து கடுமையான நடவடிக்கைகளை அந்த அதிகாரிகள் மீது எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடுகூட, பாசன நீர் வளம் தமிழகத்திலே மிக விரைவாகக் குறைந்து கொண்டே வருகிறது. இந்த உரையிலே தெளிப்பு மற்றும் சொட்டு நீர்ப் பாசன முறைக்கு முக்கியத்துவம் கொடுத்து இருப்பதை மனதாரப் பாராட்டுகிறேன். அதை நாம் முன்பே செய்திருக்க வேண்டும். பொள்ளாச்சி மகாலிங்கம் போன்ற வர்கள் எல்லாம் அதைப்பற்றி பல காலம் வலியுறுத்தி வந்திருக் கிறார்கள். அந்த முறையிலே, குறைந்த தண்ணீரை வைத்துக் கொண்டு, அதிக அளவு ஏக்கருக்கு நீரைப் பாய்ச்சி பயிரை வளர்க்கக் கூடிய அந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, தமிழகத்திலே பல நீர்ப்பாசனத் திட்டங்கள் கிடப்பிலே போடப்பட்டிருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் எனது தொகுதியில் 7 நீர்ப்பாசனத் திட்டங்கள் ஆய்வுக்குப் பிறகு கிடப்பிலே போடப்பட்டிருக்கின்றன. சிக்கரசம்பாளையத்திலே போடப்பட்டுள்ள கோம்புப்பள்ளம் திட்டத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும். அதேபோல் தான், புதுப்பீர்கடவிலே கோளிப்பள்ளம் என்ற திட்டமும் ஏறத்தாழ 26 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டு, பொதுப் பணித்துறையால் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது. அதை உடனடியாக நிறைவு செய்வதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசு செய்கின்ற இத்தகைய நிவாரணப் பணிகளைப் பாராட்டுகின்ற அதே நேரத்தில், பஞ்சத்தை, பற்றாக்குறையை, வறட்சியைப் போக்கு வதற்கு நிரந்தரமாகச் செய்யக்கூடிய திட்டங்களை நாம் கண்டிப்பாக ஆராய வேண்டும்.

இங்கே இந்த உரையிலே, தெலுங்கு கங்கைத் திட்டத்தைப் பற்றி குறிப்பிடாதது கண்டு மிகவும் வருந்துகிறேன். 'இந்து' பத்திரிகைகூட இதைச் சுட்டிக்காட்டியிருக்கின்றது. தெலுங்கு கங்கைத் திட்டத்தில் தமிழ்நாடு ஒத்துழைப்பு தரவில்லை; தர வேண்டியபணத்தை ஒழுங்காகக் கட்டவில்லை என்று ஆந்திரஅரசு



1987 மார்ச் 5] [திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்]

குற்றம் சாட்டியது, ஒருவேளை உண்மையாக இருக்குமோ என்ற அந்த நிலைமையைப் போக்குவதற்கு தெலுங்கு கங்கைத் திட்டத்தை விரைவிலேயே நிறைவேற்றிட ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, கங்கை-காவிரி இணைப்பு. 19 ஆம் நூற்றாண்டிலே வாழ்ந்த பிரிட்டிஷ் பொறியாளர் சர் ஆர்தர் காட்டன் முதல் சிறந்த பொறியாளர் விஸ்வேஸ்வரய்யா மற்றும் முன்னால் மத்திய அரசிலே இருந்த நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு. கே.எல். ராவ், கேப்டன் தஸ்தூர் போன்ற பொறியியல் நிபுணர்கள் எல்லாம் கங்கை-காவிரி இணைப்பு நாட்டின் வளர்ச்சிக்கு அவசியமானது என்று வலியுறுத்திக் கூறியுள்ளனர். சமீபத்திலேகூட, மத்திய அரசு நீர் வளத் துறை அமைச்சர் திரு. பி. சங்கரானந்த் பேசும்போது இமயமலையிலே உற்பத்தி யாகின்ற நதிகளையும், தென்னிந்திய நதிகளையும் இணைப்பது குறித்து ஆராய்ந்து வருகிறோம் என்று கூறியது வரவேற்கத் தக்கது. அந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு தமிழக அரசு, மத்திய அரசைக் கண்டிப்பாக வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அந்தத் திட்டங்கள் நிறைவேறு மேயானால், தமிழகத்திலே நீர்ப்பற்றாக்குறை அறவே ஒழியும் என்பதோடு, பாரதத் திருநாட்டின் ஒருமைப்பாடும், ஒற்றுமையும் வலிவு பெறும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20)

'வீடு இல்லாதவர்களுக்கு வீடு' என்று உலக ஆண்டாகக் கொண்டாடப்படுகின்ற இந்த ஆண்டிலே ஏழைகளுக்கு வீடுகள் பலவற்றைக் கட்டிக் கொடுக்கிற திட்டத்தை அரசு கொண்டு வந்திருப்பது பாராட்டத்தக்கது. ஆனால் இத்தனை வீடுகளையும் கட்டுவதற்கு இந்த அரசுக்கு போதுமான நிதி வசதி உண்டா? இது சம்பந்தமாக போதுமான நிதி வசதி உண்டாவதற்கு என்ன திட்டங்களை வைத்திருக்கிறார்கள் என்பதை விளக்கினால் அது கேட்பதற்கு இன்னும் நன்றாக இருக்கும் என்பதை மட்டும் இங்கே கூறிக்கொண்டு, கடைசியாக எனது தொகுதியைப் பற்றி ஒன்றைக் கூற விரும்புகிறேன்.

நலிவுற்ற, மத்திய ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் (IUDP) நடுத்தர நகராட்சிகளுக்கு 9 நகராட்சி களுக்கு, மத்திய அரசு ஒவ்வொரு நகராட்சிக்கும் ஒரு கோடி ரூபாய் வீதம் நிதி உதவி கடனாகக் கொடுத்து, குறைந்த வட்டியிலே அளித்திருக்கிற ஒரு மேம்பாட்டுத் திட்டத்தை வைத்திருக்கிறது. அந்த 9 நகராட்சிகளில் ஒன்றாக சத்திய மங்கலம் நகராட்சி சேர்க்கப்பட்டிருந்தது. ஆனால் கடைசியிலே அது நீக்கப்பட்டது ஏன் என்று தெரியவில்லை. சத்திய மங்கலத்திலே வாழ்பவர்களெல்லாம் குபேரர்கள் அல்ல என்பதை

நான் கூறிக்கொண்டு ஏழை எளிய மக்கள் நிறைந்த அந்த நகராட்சிக்கு நிதி வலிமையையும், வசதியையும் ஏற்படுத்துவதற்காக மத்திய அரசு அளிக்கின்ற அந்தக் கடன் உதவியை மாநில அரசு கண்டிப்பாக வாங்கித் தரவேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொண்டு, இன்னொன்றையும் கடைசியாக நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாக சமீப காலங்களிலே தமிழக அரசியலிலே நடந்த சில கசப்பான நிகழ்ச்சிகளை நான் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அரசியலிலே மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் மீண்டும் தங்களுடைய அரசியல் வாழ்வை புதுப்பித்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தோடு சில பலபோராட்டங்களை நடத்தினார்கள். ஆனால் அந்தப் போராட்டங்களுக்கு மக்களிடையே செல்வாக்கும் இல்லை, மரியாதையும் இல்லையென்ற உடனே சிறை சென்றோமானால் இந்த தமிழகம் கொதித்து எழும், இங்கு கலவரங்கள் உண்டாகும், அரசாங்கம் ஸ்தம்பித்து நிற்கும். நாம் திரும்பவும் புகழை நாட்டிக் கொள்ளலாம் என்று எண்ணியவர்கள் ஏமாந்த அந்த நிகழ்ச்சியின் உச்ச கட்டம்தான் தமிழகத்திலே வெடிகுண்டு சம்வங்கள் ஏற்பட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். முளையிலே அதை கிள்ளியெறிவதற்கு இந்த அரசாங்கம் எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். வெடிகுண்டுகளை அறிந்திராத தமிழகம் இப்போது அதை தெரிந்து கொண்டிருக்கிறது என்றால் இந்த நிகழ்ச்சிகளுக்கு யார் காரணம் என்பதை நீங்கள் புரிந்துகொண்டு, இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டு விடை பெறுகிறேன், நன்றி வணக்கம்.

திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழக ஆளுநர் அவர்கள் ஜனநாயக சம்பிரதாயப்படி இந்த ஆண்டு நிகழ்த்திய ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற அடிப்படையில் சிலபல எண்ணங்களை இந்த மன்றத்தினுடைய கவனத்திற்கு நான் என்னுடைய இயக்கத்தின் சார்பாக எடுத்து வைக்க விரும்புகிறேன். கடந்த இரண்டு மூன்று தினங்களாக ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது ஆளுகின்ற கட்சியிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்களும், பிரதான எதிர்க்கட்சியாக உள்ள காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும், அன்பிற்குரிய மற்ற எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் கருத்துக்களை இங்கே பரிமாறிக் கொண்டார்கள். இரண்டு மூன்று தினங்களாக ஆளுகின்ற கட்சியிலே உள்ளவர்களும். பிரதான எதிர்க் கட்சியிலே உள்ளவர்களும் ஒரு கருத்தை மீண்டும் மீண்டும் மன்றத்திலே வலியுறுத்திச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசும் மாநில அரசும் உறவு கொண்டாடுகிற முறை என்பது கணவன்



மனைவி உறவாக இருக்கவேண்டுமென்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று மத்தியிலே ஆளுகின்ற கட்சிக்கும், மாநிலத்திலே ஆளுகின்ற கட்சிக்கும் கணவன் மனைவி உறவு இருக்கவேண்டுமென்று வலியுறுத்திச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து பேசுகின்ற இரு கட்சிகளைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களும் மறைமுகமான எதிர்ப்புகளை, மறைமுகமான எச்சரிக்கைகளை அவ்வப்போது இங்கே இந்த மன்றத்திலே எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் தெளிவாகச் சொன்னால் இந்த இருசாராருக்கும் இரண்டு மூன்று தினங்களாக ஒரு Cold War நடந்து கொண்டிருக்கிற காட்சியை எங்களாலே பார்க்க முடிகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் கணவன் மனைவி உறவில் ஏற்பட்டுவிட்ட பிரச்சினைகள் அறையிலே தீர்க்கப்பட்டிருக்குமேயானால் நாங்கள் அதுபற்றி கருத்துக்கள் சொல்லத் தேவையில்லை. ஆனால் அறையிலே பேசப்படவேண்டிய பிரச்சினைகள் அம்பலத்திற்கு வந்துவிட்ட காரணத்தினாலே நாங்களும் சில எண்ணங்களைத் தெரிவிக்கின்ற நிலையிலே இருக்கிறோம். அவ்வாறக்கும் கணவன் மனைவியாக மத்திய அரசு, மாநில அரசுகளுடைய உறவு நெருக்கமாக ஆகிவிட்ட காரணத்தினாலோ என்னவோ ஒருவருடைய குறைபாடு இன்னொருவருக்கு பளிச்சென்று தெரிகிறது. இருசாராரும் ஒவ்வொருவருடைய குறைபாடுகளையும் நன்றாக உணர்ந்து கொண்டிருக்கிற காரணத்தினாலும்தான் அடிக்கடி ஒருவரை யொருவர் அச்சுறுத்துவதும் அந்த அச்சுறுத்தலுக்கு எச்சரிப்பதும் ஒருவருடைய குறைபாடுகளை இன்னொருவர் பயன்படுத்துவதுமான ஒருஅரசியல் வேடிக்கை இங்கே நடந்து கொண்டிருப்பதை எங்களாலே பார்க்க முடிகிறது.

[மாண்புமிகு பேரவை தலைவர் தலைமை]

ஆனால் ஒன்றை மட்டும் நான் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன். உங்களுக்கிடையே உள்ள இந்த "கணவன் மனைவி உறவு" என்பது காலப் போக்கில் விபரீத விளைவுகளைக்கூட ஏற்படுத்தலாம், ஆனால் அந்த உறவால் ஏற்படுகிற பாதிப்பு என்பது தமிழகத்து மக்களையும் பாதித்துவிடக்கூடாது என்பதை மட்டும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆளுநர் உரையில் மத்திய அரசினுடைய துணைகொண்டும் மாநில அரசு தன்னிச்சையாகவும் செயல்படுத்தும் சில திட்டங்களைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது.

திரு. செ. அரங்கநாயகம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இந்திய தேசிய காங்கிரசுக்குமிடையே இருக்கிற

[திரு. செ. அரங்கநாயகம்] [1987 மார்ச் 5

உறவு கணவன் மனைவி உறவு என்று அழுத்தி அழுத்திப் பேசிக் கொண்டு வருகிறார்—ரொம்பவும் கவலையோடு பேசுகிறார். இந்தச் சூழ்நிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பாத்திரம் என்ன என்பதை மட்டும் நான் அறிய விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, ஒரே நிமிஷத்தில் சொல்லி முடித்து விடுகிறேன். இங்கே பேசிய உறுப்பினர் திரு. சமரசம் அவர்கள் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் அகில இந்திய அண்ணா தி. மு. க. வுக்கும் இடையே உள்ள உறவு "கணவன் மனைவி உறவு" என்று சொன்னார்கள். அவர்களைப் பொறுத்த மட்டில் அப்படிப்பட்ட வர்ணனைகளில் ஈடுபடுவதில்லை. என்றாலும் எங்களைப் பொறுத்தவரையில் "உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்" என்று தெளிவாகவே சொல்லி இருக்கிறோம்.

திரு. பொன் முத்துராமலிங்கம், தலைவர் அவர்களே, முன்னாள் அமைச்சர் அவர்கள் தங்களுடைய நிலைபற்றி சொன்னார்கள். அரசியல் அரங்கத்தில் நாங்கள் கொண்டுள்ள உறவு தோழமை உறவே, தவிர கணவன் மனைவி உறவு அல்ல என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல் ஆளுநர் உரையில் மத்திய அரசு மற்றும் மாநில அரசு ஆகியவை இணைந்து செயல்படுத்தக்கூடிய 10 திட்டங்களைப்பற்றி அறிவித்திருக்கிறார்கள். இந்த பத்து திட்டங்களும் மாநில அரசால் தன்னிச்சையாகவும் அல்லது மத்திய அரசோடு இணைந்தும் செயல்படுத்தப்படக் கூடிய திட்டங்களாகும். இந்தத் திட்டங்கள் முழுக்க முழுக்க வெற்றி பெற வேண்டும் என்று நான் வாழ்த்துகிறேன். ஆனால் இந்தத் திட்டங்கள் எல்லாம் நடைமுறையில் சாத்தியமான திட்டங்கள்தானா? இந்தத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்படக் கூடிய திட்டங்களா? இந்தத் திட்டங்களுக்கு நிதியாதாரம் இருக்கின்றதா என்பதை யெல்லாம் ஒரு கண நேரம் ஆழ்ந்து ஆளுநர் உரையைப் படித்தால் நமக்குப் புரியும். இந்தத் திட்டங்களில் பல திட்டங்கள் நிறைவேறாத திட்டங்களாக இருப்பதைக் கண்டு தான் என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து அதைத் திருத்திக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்.

இன்றைக்குப் பெருமளவில் வீடு கட்டும் திட்டம் ஒன்று [illegible]க்கப்பட்டது. இந்தத் திட்டத்தை நான் ஆளுநர் [illegible] பார்க்கிறேன். கடந்த ஆண்டில் அதாவது 1986 [illegible] இதேபோன்று ஆளுநர் உரையில் ஒரு திட்டத்தை



1987 மார்ச் 5] [திரு பொன் முத்துராமலிங்கம்]

அறிவித்தார்கள், அந்தத் திட்டத்தின்படி 30 லட்சம் வீடுகள் கட்டி அதில் 5 லட்சம் வீடுகளை ஆதிதிராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் நரிக்குறவர்களுக்கும் கொடுத்துவிட்டு எஞ்சியுள்ள வீடுகளை...

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது என்னுடைய உரையில் குறிப்பிட்ட உறவுமுறைபற்றி விமர்சனம் செய்தார்கள். நான் பேசும்போது "நாட்டு நலப்பணிகளை நிறைவேற்றுவதில் மத்திய அரசும் மாநில அரசும் கணவன் மனைவி உறவோடும் நாட்டு வளர்ச்சிக்கான திட்டங்களை நிறைவேற்றும் என்று குறிப்பிட்டேன். நாட்டு மக்களுக்கு உரிமைகளைப் பெற்றுத் தருவதில் திராவிட முன்னேற்றக் கழகத்தைவிடவோ மற்ற எந்தக் கட்சியைவிடவோ நாங்கள் குறைந்தவர்கள் அல்ல "உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்கு உயிர் கொடுப்போம்" என்ற அண்ணாவின் தத்துவத்தை உள்ளடக்கியதுதான் எங்களுடைய லட்சியம் என்பதை நான் மீண்டும் மாண்புமிகு உறுப்பினருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நன்றி. குடும்பப் பிரச்சினை அம்பலத்திற்கு வந்துவிட்ட காரணத்தால் பதில் சொன்னேனே தவிர, இல்லையென்றால் நான் பதில் சொல்லியிருக்க மாட்டேன்.

ஏற்கெனவே, சென்ற ஆண்டே ஆளுநர் உரையில் 6 லட்சம் வீடுகளைக் கட்டி ஆதிதிராவிடர்களுக்கும் நரிக் குறவர்களுக்கும் பழங்குடியினருக்கும் ஒதுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

[முற்பகல் 11–30]

எஞ்சியுள்ள 5 இலட்சம் வீடுகளை வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழக்கூடிய மக்களுக்கு அரசு கட்டிக் கொடுக்குமென்று அறிவித்ததோடு அல்லாமல், அதைத் திட்டத்தில் 3 ஆண்டுகளில் 30 இலட்சம் வீடுகளைக் கட்டி, நலிந்த பிரிவினருக்கு, சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு வழங்கப்படுமென்று அறிவித்தார்கள், அந்தத் திட்டம் இப்போது இந்தப் பெரும்பாலான வீடு கட்டும் திட்டத்தில் அடங்கியிருக்கிறதா என்பதுதான் என்னுடைய கேள்வியாகும். இங்கே சொல்லியிருக்கின்ற விவரங்களைப் பார்த்தால் அந்த 30 இலட்சம் வீடு கட்டும் திட்டம் இப்போது சொல்லப்பட்டுள்ள பெரும்பாலான வீடுகள் கட்டும் திட்டத்தில் அடங்கிய ஒன்றாகும்.

பெரும்பாலான வீடுகள் கட்டும் திட்டம் பற்றிய சில விவரங்களை ஆளுநர் உரை நமக்குத் தெரிவிக்கிறது. அந்த விவரம் என்ன சொல்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். நிதிநிலையில் ஒதுக்கப்பட்ட பணம் நேரடியாக நலிந்த பிரிவினருக்கு

[திரு. பொன் முத்துராமலிங்கம்] [1987 மார்ச் 5

வீ வதற்காக வழங்கப்பட மாட்டாது. மாறாக அந்த நிதி ஒதுக்கத்தில் ஒதுக்கப்பட்ட பணம் வட்ட, கிராம அளவிலே உள்ள சங்கங்களுக்கு வழங்கப்படும். அந்தச் சங்கங்கள் எல்லாம் கட்டுமானப் பொருள்களான ஓடுகள், செங்கல், நீர்த்த சுண்ணாம்பு, இரும்புக் கம்பிகள் தயார் செய்து, அந்தச் சங்கத்திலே உறுப்பினர்களாக உள்ளவர்கள் இந்தப் பொருள்களைப் பெற்று, அதற்குப் பின்னாலே தங்களுடைய உழைப்பினாலும் அவர்கள் வீடுகளைக் கட்டிக்கொள்ளலாம் என்று இந்தத் திட்டம் தெரிவிக்கிறது. அதுமட்டுமல்ல, இந்தத் திட்டத்தில் மத்திய அரசு திட்டங்களான என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி. போன்ற திட்டங்களையும் ஒருங்கிணைத்து செயல்படுத்த வேண்டுமென்று ஆளுநர் உரை தெரிவிக்கிறது.

இதுமட்டுமல்ல, நிதி வழங்குகின்ற வங்கிகள், ஸ்தாபனங்கள் மூலமாக 4 சதவிகித வட்டிக்குக் கடன் பெற்று, 3 ஆண்டுத் தவணையில் அதைத் திருப்பிச் செலுத்திடும் அடிப்படையில் இந்தச் சங்கங்களுக்குக் கடன் வழங்கப்படும் என்ற விவரத்தையும் இந்தப் பெரும்பாலான வீடுகள் கட்டும் திட்டம் இங்கே நமக்குத் தந்து கொண்டிருக்கிறது. நான் இந்த மன்றத்தில் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக ஒன்றைக் கேட்டுக் கொள்கிறேன். சென்ற முறை அறிவித்த 30 இலட்சம் வீடுகளில் எத்தனை வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன; இந்தப் பெரும்பாலான வீடுகள் கட்டும் திட்டத்தில் சொல்லப்படுகிற விவரங்களெல்லாம் கடந்த முறை ஆளுநர் அவர்கள் உரையில் தெரிவிக்கப்பட்டு இருக்கின்றனவா? இன்னும் சொல்லப் போனால் இந்த ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டிருக்கிற, அறிவிக்கப்பட்டிருக்கிற பெரும்பாலான வீடுகள் கட்டும் திட்டம், கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து, அப்படி உறுப்பினராக இருக்கும் முறையில் கட்டுமானப் பொருள்களை கூட்டுறவுச் சங்கத்திலிருந்து பெற்று, வீடுகளைக் கட்டிக்கொள்ளலாம் என்ற விவரம் தவிர, இதில் வேறு என்ன விவரம் இருக்கிறது என்பதை இந்த மன்றத்தின் வாயிலாக தொடர்புடைய அமைச்சரவர்களைக் கேட்க விரும்புகிறேன். கடந்த முறை கவர்ச்சிகரமான திட்டம் என்று வீடு கட்டும் திட்டத்தை அறிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் பேசுகின்றபோது, புரட்சித் தலைவர் அவர்களின் திட்டங்கள் ஆரம்பத்தில் புதிராக இருக்கும், இறுதியில் புதுமையாக இருக்கும் என்று சொன்னார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்களை ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் திட்டத்தை மீண்டும் மீண்டும் படித்துப் பாருங்கள். 30 லட்சம் வீடுகள் கட்டும் திட்டம் சென்ற ஆண்டு; இந்த முறை பெரும்பாலான வீடுகள் கட்டும் திட்டம். இதை ஒரு முறை படித்தால் புரட்சித் தலைவர் திட்டம் ஆரம்பத்தில் புதுமையாக இருந்தது, இறுதியில் புதிராக இருக்கிறது என்ற உண்மை உங்களுக்கு நன்றாக விளங்கும்.



1987 மார்ச் 5] [திரு. பொன் முத்துராமலிங்கம்]

அடுத்து இன்னொரு திட்டம். முதலமைச்சருடைய குழந்தைகள் சத்துணவுத் திட்டம். இதில், 1988 ஆம் ஆண்டில் முடிவடையக்கூடிய தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டத்தின் பயனாக அளிக்கப்பட்டு வரக்கூடிய சத்துணவு சுகாதார ஏற்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கி, 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும், கருவுற்ற தாய்மார்களுக்கும் இந்த வசதிகள், வாய்ப்புகள் செய்து தரப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். நான் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், 1988-ல் முடிவடையக் கூடிய ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டமும், அதுபோல இப்போது நடைமுறைப் படுத்தும் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டமும், இந்தத் திட்டம் அமுலுக்கு வந்த பிறகு செயல்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

அதோடு, இந்தத் திட்டத்திற்கு 400 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும். கருவுற்ற தாய்மார்கள் எவ்வளவு என்று கணக்கிட்டுப் பார்த்தால், 25 இலட்சம் அளவிலே அது வரக்கூடும். 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் எவ்வளவு என்று பார்த்தால், அவர்களும் 25 இலட்சம் அளவுக்கு இருப்பார்கள். இதையெல்லாம் கணக்கிட்டால், ஆண்டுக்கு 400 கோடி ரூபாய் அளவுக்குச் செலவாகும் என்று உத்தேசமாக என்னால் கணக்கிட முடிகிறது.

இப்போது 400 கோடி ரூபாய்க்கு நீங்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே பணத்தை ஒதுக்கியிருக்கிறீர்களா? அப்படி ஒதுக்கி இருப்பதாக இருந்தால் பதில் உரையிலே அருள்கூர்ந்து தெரிவிக்க வேண்டும். இந்தத் திட்டத்திலே எவ்வளவு ஒதுக்கியிருக்கிறீர்கள் என்பதைத் தெரிவிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று, ஏற்கெனவே 30 லட்சம் வீடு கட்டிக் கொடுப்பதற்காக ஆண்டுக்கு ஆயிரம் கோடி ஆகிறது. இதிலே ரூ. 400 கோடி ஆகிறது. ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது? இந்த ஆண்டு அறிக்கை என்ன சொல்கிறது என்றால் இரண்டாயிரத்து சில்லரை கோடி ரூபாய் என்று உங்களுடைய ஆண்டறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்றது. இதிலேயே ஆயிரம், ஆயிரத்து ஐநூறு கோடி ரூபாய்க்கு மேல் சென்றுவிட்டால், அரசாங்க ஊழியர்களுக்கு வேறு ஊதியம் கொடுக்கவேண்டியிருக்கின்றது. எனவே ஒரு திட்டத்தை வகுத்தால், அந்தத் திட்டத்தை மாநில அரசால் செயல்படுத்த முடியுமா என்பதைப் பார்த்து அறிவிக்க வேண்டுமே அல்லாமல் சாதாரண மக்கள், சமுதாயத்திலே நலிந்த மக்கள் பிரிவினரை ஏமாற்றுகின்ற அடிப்படையிலே திட்டத்தை அறிவித்து பின்னர் மக்களுடைய மறதிதான் தங்களுக்கு லாபம் என்று கருதி ஆண்டுதோறும் புதிய புதிய திட்டங்களை அறிவித்து, ஏற்கெனவே அறிவித்த திட்டங்களை நிறைவேற்றாமல் இருப்பது ஒரு நல்ல சம்பிரதாயமாக அமையாது என்பதை நான் ஒரு எச்சரிக்கையாகவே எடுத்துச் சொல்ல

விரும்புகிறேன் இன்றைக்கு மக்களை ஏமாற்றிக் கொண்டு செல்லலாம் ஆனால் ஒரு காலத்தில் மக்களுக்குப் பதில் சொல்லவேண்டிய கடமைக்கு ஆளாக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் பல்வேறு திட்டங்களை இன்றையதினம் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். நான் முக்கியப் பிரச்சினை ஒன்றைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு முக்கிய பிரச்சினையாக இருப்பது தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தீர்கள். தமிழ்நாட்டில் தமிழ் மொழி பாதுகாக்கப்பட வேண்டும் இந்தி திணிப்பது என்பதே கூடாது. ஆங்கிலம் 8-வது அத்தியாயத்திலே சேர்க்கப்பட வேண்டும். தேசிய மொழியாக ஆக்கப்பட வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தைப் போட்டு, அதை எங்களுடைய முழுமையான ஆதரவோடு நிறைவேற்றி இந்த மன்றம் மத்திய அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறது. ஆனால் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்ற தீர்மானத்திற்கு, ஒரு அரசாங்கத்திலே முழுமையாக, ஏகமனதாக நிறைவேற்றி அனுப்பப்பட்ட அந்தத் தீர்மானத்திற்கு மத்திய அரசிடமிருந்து பதில் வந்திருக்கிறதா? அதைப் பற்றி கேட்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு யார் யாரோ—வெளியிலேகூட ஒரு நடிகை வருமான வரி பாக்கி கட்டியிருக்கிறேன். அதற்கான ஆதாரத்தை கொடுக்கிறேன் என்று சொல்லி, சில மாதங்களிலே மத்திய அமைச்சரிடம் இருந்து பெற்று பத்திரிகை நிருபர்களுக்குச் சொல்லியிருக்கின்றார்கள். எனக்கு வருமான வரி பாக்கியில்லை என்று சொல்கின்ற அளவிற்கு ஒரு நடிகை செய்ய முடிகிறது என்று சொன்னால், ஒரு ஆட்சி, அரசு, இந்த அளவுக்குத் தீர்மானத்தை நிறைவேற்றி, அதுவும் ஏகமனதாக நிறைவேற்றி, தமிழக மக்களுடைய ஒட்டு மொத்தமான உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற இந்தத் தீர்மானத்திற்கு மத்திய அரசு என்ன பதில் சொல்லியது என்பதை நாங்கள் அறிந்துகொள்ள வேண்டாமா? அல்லது இந்த மன்றத்திற்குத் தெரிவிக்கப்பட வேண்டாமா என்பதுதான் என்னுடைய கேள்வி. ஆனால் இந்த மன்றத்தில் இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றித் தந்தும், கட்சி மாச்சரியம் இருந்தாலுங்கூட, இது ஒரு தமிழகத்தின் ஒட்டு மொத்தமான தேவை என்று கருதி நிறைவேற்றித் தந்தும். திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கிடைத்த பரிசு அதன் சட்டமன்ற உறுப்பினர்களில் சிலர் இங்கேயிருந்து வெளியே அனுப்பப்பட்டிருக்கிறார்கள். எனவே இந்த நிலைமைகளை எல்லாம் நான் சொல்லாமல் இருக்கமுடியவில்லை. இந்த மன்றத்திலே நிறைவேற்றப்பட்ட தீர்மானம் நாடாளுமன்றத்திலே நிறைவேற்றப்பட வேண்டும். பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்தி பேசாத மக்களுக்கு வழங்கிய வாக்குறுதி நிறைவேற்றப்பட வேண்டும் என்ற அடிப்படையிலே நாங்கள் போராட்டம் நடத்தினால் உங்களுடைய தீர்மானத்திற்கு வலியூட்ட வேண்டுமென்று சொல்லி நாங்கள் வெளியிலே போராட்டம் நடத்தினால் அந்தப் போராட்டம் தேசிய விரோத போராட்டமாகப் படம் பிடித்துக் காட்டப்படுகிறது.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நம்மைப் பார்த்து இந்தி எதிர்ப்புத் தீர்மானத்திற்குப் பின்னர் என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள் என்று கேட்கிறார்கள். அருள்கூர்ந்து அவர்கள் மூலம் நான் தெரிந்துகொள்ள விரும்புவது அவர்கள் ஆண்ட காலத்தில் இந்தத் தீர்மானத்தை வலியுறுத்தி, அரசியல் சட்டத் திருத்தத்தை வலியுறுத்தி அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன என்பதை அறிவிப்பார்களா? அந்த நேரத்தில் இந்தப் போராட்ட உணர்வு எங்கே போய்விட்டது என்பதைத்தான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்,

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கட்சியின் சார்பாக ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் பேசி விட்டோம். (குறுக்கீடு) அவர்கள் பேசும்போதே நானே ஒரு கருத்தைச் சொல்லவேண்டும் என்று நினைத்தேன். அதாவது அவர்கள் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக கிடைத்த பரிசு என்று சொன்னார்கள். அது அதற்காகக் கிடைத்த பரிசு அல்ல. சட்டத்தை மீறியதற்காக, சட்டத்தை எரித்ததற்காகத்தான் அவர்கள் எடுத்த வாக்குறுதியை மீறியதற்காகத்தான் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லித்தான் ஆகவேண்டும்.

(முற்பகல் 11-40)

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடுதான் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் அனுமதியோடுதான் திரு. சின்னராசு அவர்களும் முன்னாள் அமைச்சர் திரு. அரங்கநாயகம் அவர்களும் குறுக்கிட்டு பேசினார்கள். தாங்களும் அவர்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். இந்த சபையில் ஏற்கனவே இந்தி எதிர்ப்பு குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மாநில சுயாட்சி தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது அதிலே இந்தி எதிர்ப்பு பற்றியும் சொல்லப்பட்டுள்ளது. இதை நன்கு படித்துள்ள மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இந்தி எதிர்ப்பில் நாங்கள் சட்டத்தை மீறினோமா அல்லது அரசியல் பிரமாணத்தை மீறினோமா என்பது கோர்ட்டிலே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குப் பதில் வேண்டாம், நீங்கள் சொன்னதற்காக அல்ல.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. வை. கோபால்சாமியைப் பொறுத்தவரை பாராளுமன்றத்தில் நடவடிக்கை ஒன்றும் இல்லை; கோர்ட்டிலே யும் அவர் குற்றவாளி அல்ல என்று சொல்லி விட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : It varies from individual to individual. அது தனி ஆளை பொறுத்தது.

திரு. அ. ரகுமான்கான் : கோர்ட்டில் குற்றவாளி அல்ல என்று சொல்லியிருக்கிறார்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது இந்த அவையைக் கட்டுப் படுத்தாது.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோர்ட்டிலே குற்றவாளி அல்ல என்று சொல்லியிருக் கிறார்கள் என்பதைத்தான் நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த மன்றம் மாபெரும் மன்றம். கோர்ட் என்பது சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்தான். சப் கோர்ட் எல்லாம் அதிலேதான் வருகின்றன. அதை மன்றத்தோடு இணைத்து பேசாதீர்கள்.

THIRU A RAHMANKHAN: It amounts to contempt of Court.

Mr. SPEAKER: Please go and study CRPC.

திரு. அ. ரகுமான்கான்: அப்படி என்றால் திரு. முத்துச்சாமி அவர்கள் கொடுத்தது என்ன தீர்ப்பு?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த மன்றத்தைப் பொறுத்த வரையில் இந்த மன்றத்தில் அது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளக் கூடியது. அது பற்றி மானியக் கோரிக்கையின்போது பேசலாம். இதை Administration of Justice என்கிற விவாதத்தின் போது எடுத்துக் கொள்ளலாம். It is Subordinate Judiciary என்கிற முறையில் வருகிறது. அந்தத் தீர்ப்பு. Upto Sessions Court விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம், பேசலாம்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் அனுமதித்தால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது எல்லாவற்றுக்கும் பொருந்தாது. உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு இது பொருந்தாது. இது கூட மரபுதான்.

திரு. அ. ரகுமான்கான்: என்ன சார். திரு. வடிவேலு அவர்கள் கேசிலே, கோர்ட்டிலே இருக்கிறது. பேசக் கூடாது என்று சொன்னீர்கள். ஆனால் இப்போது பேசலாம் என்கிறீர்கள். என்ன சார், ஒன்றுமே புரியவில்லை.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த நீதிமன்றத்தின் நடவடிக்கையும் நம்முடைய அவையின் நடவடிக்கையை முடக்கி வைக்க முடியாது.

திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் எடுத்துக்கொண்ட நேரத்தைக் கழித்துக் கொண்டு எனக்கு நேரத்தைக் கூட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் பேசுகிறபோது நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்டார்கள். அப்படி கேட்டதற்கு என் அன்புக்குரிய திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு பகுதி பதிலை சொன்னதால் நான் இன்னொரு பகுதியைச் சொல்கிறேன். முன்னாள் பாரதப் பிரதமர், மறைந்த எங்கள் மரியாதைக்குரிய இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இதே சென்னை மெரீனா கடற்கரையில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில், எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர். அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஒரு வாக்குறுதியைத் தமிழக மக்களுக்குத் தர வேண்டுமென்று கேட்டார்கள். மொழிப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் இந்தி மொழி என்றைக்கும் தமிழ்நாட்டிலே திணிக்கப்படக் கூடாது, அது தொடர்பாக தமிழக மக்களுக்கு வாக்குறுதி தர வேண்டும், அதற்குரிய நடவடிக்கையையும் எடுக்க வேண்டும் என்று அன்றையதினம் மேடையிலேயே தெரிவித்திருந்தார்கள். அதற்குப் பதிலளிக்கும் போது பாரதப் பிரதமர் மரியாதைக்குரிய மறைந்த திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் நிச்சயமாக பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் வாக்குறுதி நிறைவேற்றப்படும். அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அன்றைய தினம் மெரீனா கடற்கரையில் லட்சக்கணக்கான பொதுமக்கள் குழுமிய பொதுக் கூட்ட மேடையிலேயே வாக்குறுதி தந்தார்கள். இதுபோன்ற நடைமுறைகள் அன்றையதினம் பின்பற்றப்பட்டன என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் பேசும்போது கடற்கரையில் நடைபெற்ற சம்பவத்தைப் பற்றி சொன்னார்கள். இந்தியை இந்த நாட்டிலே திணிக்கக் கூடாது என்று உத்தரவாதம் வாங்கியதாகச் சொன்னார்கள். அவர்கள் அரசியல்-போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். அந்த வகையில் அவர்களிடமிருந்து ஒன்றைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். எங்கே இந்தியைத் திணித்தார்கள்? எதற்காகப் போராட்டம் நடத்தினீர்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அவரிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்பு கிறேன்.

திரு. கி. மனோகரன்: * *

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: * *

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

(பிற்பகல் 11-50)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கு முடிவே வராது. மாற்றி மாற்றிப் பேசிக் கொண்டிருந்தால் எப்பொழுது முடிவது!

திரு. இ. மனோகரன்: * *

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: * *

திரு. இ. மனோகரன்: * *

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: * *

திரு. இ. மனோகரன்: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது நடைபெறுவது ஆளுநர் உரைக்கு நன்றி நவிலும் தீர்மானத்தின் மீது விவாதம். நீங்கள் இருவரும் வெளியிலே பேச வேண்டியதை எல்லாம் இங்கே பேசிக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே நீங்கள் இருவர் பேசியதையும் முழுமையாக அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. ப. உ.ச. அவர்கள் இந்த அமைச்சரவையிலே நீண்டகால அனுபவம் பெற்றவர்கள். அவர்கள் இங்கே பதில் உரைக்கும்போது* *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். திரும்பத் திரும்ப ஏன் அதை ஏன் சொல்லுகிறீர்கள்? அதை விட்டு விட்டு, தொடர்ந்து பேசுங்கள்.

திரு. பொன் முத்துராமலிங்கம்: * * என்று கேட்டார்கள். நான் அவர்களுக்குப் பணிவாகத் தெரிவித்துக் கொள்வதெல்லாம் இந்த மன்றத்திலே சில மாதங்களுக்கு முன்னாலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினீர்கள். அந்தக் தீர்மானத்தில் இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஆங்கிலத்தை 8-வது அத்தியாயத்தில் சேர்த்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுகிற போது மாண்புமிகு அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் இங்கே விளக்கம் அளித்தார்கள். அந்த விளக்கத்தில் எப்படி எல்லாம் இந்தி திணிக்கப்படுகிறது என்பதற்கு ஒரு கடிதத்தை

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



எடுத்துக் காண்பித்து, ஆங்கிலத்தில் எழுதிய கடிதத்திற்கு இந்தியில் பதில் வந்திருக்கிறது என்று குறிப்பிட்டு எப்படி எல்லாம் இந்தி திணிக்கப்பட்டிருக்கிறது என்ற காரண காரியங்களை எடுத்து வைத்து நீண்ட நேரம் அன்றையதினம் உரையாற்றினார்கள். அந்த உரையை மாண்புமிகு அமைச்சர் திரு. ப. உ. ச. அவர்கள் ஒருமுறை படித்துப் பார்த்தால் தெரியும். உரிய விளக்கம் அதிலேயே தெளிவாக இருக்கிறது. இன்னொன்று இந்த ஆண்டு வெளிவந்திருக்கிற..........

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் மாண்புமிகு அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் கூறியதைத் தவறாகப் புரிந்து கொண்டு சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். (குறுக்கீடுகள்) கடற் கரையிலே, மறைந்த இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் வாக்குறுதி தந்தார்கள் இனிமேல் இந்தி புகுத்தப்பட மாட்டாது என்று. அந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டதா என்று சொல்கிற வகையில் சொன்னார்கள். அப்படி புகுத்தப்படவில்லை என்ற வகையில் வாக்குறுதி நிறைவேற்றப்பட்டிருக்குமேயானால் இப்போது புகுத்தப்பட்டு இருக்காது; எதிர்ப்பதற்கான அவசியமும் இல்லை என்ற வகையில் சொன்னார்களே தவிர இப்போது இந்தி புகுத்தப்படவே இல்லை என்ற கருத்தின் அடிப்படையில் அவர்கள் சொல்லவில்லை. நேரு வாக்குறுதி தந்தார்கள். அந்த வாக்குறுதியை இந்திரா காந்தி அம்மையாரும் தொடர்ந்து தந்தார்கள். அந்த வாக்குறுதியை லால்பகதூர் சாஸ்திரியும் தந்தார்கள். இப்போது ராஜீவ் காந்தியும் தருகிறார்கள். பிரச்சினைக்கு வருவோம். இடத்தைப் பற்றியோ ஆளைப் பற்றியோ பிரச்சினை இல்லை. அந்த வாக்குறுதியோடு இருக்கக் கூடாது என்பதுதான் கொள்கை. அது அரசமைப்புச் சட்டத்தில் இடம் பெற வேண்டும் என்ற தன்மையில் தான் 1968-லேயும், பிறகு மீண்டும் 1978-லேயும் அதன் பின்னர் இப்போதும் தீர்மானம் நிறைவேற்றி இந்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறோம். இந்திய அரசிடமிருந்து பதில் வரவில்லை. இதுதான் நிலைமை.

எனவே வாக்குறுதி அளவில் இருக்கிறதே தவிர, திணிக்கப் படுகிறது என்ற கொள்கை இருக்கிற காரணத்தால்தான் மீண்டும் இதிலே தீர்மானம் கொண்டு வந்தோம். அதில் ஒன்றும் சந்தேகம் இல்லை. ** திரு. ப. உ. ச. அவர்கள் சொல்லவில்லை. எனவே அதற்கு ஆதாரம் தேட வேண்டிய அவசியமும் இல்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திரா காந்தி வாக்குறுதி தந்துவிட்டுப்போய் இருக்கிறார்கள். எனவே இந்தி திணிக்கப் படவே இல்லை என்ற முடிவுக்கு வராதீர்கள்................ (குறுக்கீடுகள்) அவர் உங்கள் கருத்துப்படத்தான் சொன்னார். (குறுக்கீடுகள்)

(* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.)

[1987 மார்ச் 5

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியைத் திணிக்கக் கூடாது என்று டாக்டர்கலைஞர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அதற்குப் பதிலளிக்கிற முறையில் இந்தி திணிக்கப்பட மாட்டாது என்று வாக்குறுதி தந்து விட்டார்கள். அதை நிறைவேற்றிவிட்டால் ** (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் தன்னுடைய பேச்சை சீக்கிரம் முடிக்க வேண்டும். இன்னும் 20 பேர் பேச வேண்டி இருக்கிறது. (குறுக்கீடுகள்) மேலும், மேலும் விளக்க வேண்டாம்.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தின் தலைவர் அவர்களே நாவலர் அவர்களுடைய பேச்சில் குறுக்கிடுவதற்கு அருள்கூர்ந்து மன்னிக்க வேண்டும். நம்முடைய அமைச்சர் திரு. ப. உ. ச. அவர்கள் ** அதற்கு முதல் பதிலை நாங்கள் சொல்கிறோம். இந்தித் திணிப்பு இன்றைக்கு டி.வி.யில் இருக்கிறது; ரேடியோவில் இருக்கிறது; இரயில்வே ஸ்டேஷனில் இருக்கிறது; அனைத்துத் துறைகளிலும் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் ஆவடி தொழிற் சாலையில்.. .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது இதுவா விவாதத்தின் பொருள்? (குறுக்கீடுகள்) சென்னை பல்கலைக் கழகத்திற்குச் சென்றால் அங்கே ஃப்ரெஞ்ச் மொழி இருக்கிறது; ஜப்பானிய மொழி இருக்கிறது; அரேபிய மொழி இருக்கிறது; ரஷ்ய மொழி இருக்கிறது. அவற்றை எல்லாம் ஒழித்துவிட்டு வந்து பேசுங்கள். (குறுக்கீடுகள்) மொழி இருக்கிறது என்றால் மொழி இருக்கத் தான் செய்யும். (குறுக்கீடுகள்) யார் வந்து திணிக்கிறார்கள்? வயற்காட்டிலே இருக்கிற ஆடு, மாடு மேய்ப்பவர்களிடமா திணிக்கிறார்கள்? யாரோ ஒன்றிரண்டு ஐ. ஏ. எஸ். ஆஃபீஸர்கள் படிப்பார்கள். (குறுக்கீடுகள்) (Talk about the commonman) சாதாரண ஏழை, எளிய மக்களுக்குரிய விஷயங்களைப் பற்றி விவாதியுங்கள். சாதாரண ஏழை, எளிய மக்களைப் பற்றிப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ப. உ. ச. அவர்கள் பேசியதை எடுத்தாகிவிட்டது. எனவே மேலும், மேலும் விளக்க வேண்டியதில்லை. அதற்கு நேரமில்லை. இந்தப் பிரச்சினையில் முழு முயற்சியோடும், உண்மையாகவும் எல்லோரும் இருப்பார்களே யானால் நிச்சயமாக இந்த விவாதம் முடிந்துவிடும். இதிலே அரசியல் பிரச்சினையைக் கலக்கிற காரணத்தால்தான் பிரச்சினை உருவாகிக் கொண்டே இருக்கிறது. (குறுக்கீடுகள்) சென்னைப் பல்கலைக் கழகத்தில் 4 மொழிகள் இருக்கின்றன. 'ஃபாரின் லாங்வேஜஸ்'. முதலில் அவற்றை வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) அதைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். (குறுக்கீடுகள்) திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் சீக்கிரம் பேச்சை முடித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதிக நேரம் ஆகி விட்டது. இன்னும் 20 உறுப்பினர்கள் பேச வேண்டி இருக்கிறது.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1987 மார்ச் 5]

(நண்பகல் 12-00)

திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தித் திணிப்பு என்பது டி.வியிலே இருக்கிறது. மத்திய சர்க்காரின் பல்வேறு அலுவலகங்களில் இருக்கின்றன. இரயில்வேயில் வார விழாவே கொண்டாடப்படுகிறது. ரயில்வே பாரங்களில் இந்தியிலே அச்சடித்துக் கொடுக்கப்படுகிறது. அது மட்டும் அல்ல, அனைத்திந்திய அ.தி.மு.க.வின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. குழந்தைவேலு அவர்களே டெல்லியிலே, நாடாளுமன்றத்திலே 'எனக்கு இந்தியிலே அனுப்பப்பட்டிருக்கிறது' என்று கிழித்துப் போட்டிருக்கிறார்கள். இவ்வளவு நிலைமைகளையும் வைத்துக் கொண்டு, இங்கு நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ** என்று கேட்பது விவரங்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாத நிலைமை என்று தான் நினைக்கத் தோன்றுகிறது......

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நான் விவரங்களைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் சொன்னார்கள். அவர் சொன்ன அவ்வளவு கருத்துக்களையும் நான் ஒத்துக்கொள்கிறேன், இல்லை என்று சொல்லவில்லை. இவை எல்லாம் அன்றாடம் நடந்து கொண்டிருக்கிறது. நாமும் அவ்வப்போது எதிர்த்துக் கொண்டிருக்கிறோம். இந்தச் சம்பவம் திரு. மனோகரன் அவர்கள் நாடாளு மன்றத்திலே இருந்தபோது கூட நடந்தது....(கூச்சல் குழப்பம்) ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இந்தி எதிர்ப்பு உணர்ச்சி இல்லை என்று தவறாகப் புரிந்துக் கொண்டு பேசுவது தப்பு. எங்களுக்கு இருக்கிற இந்தி எதிர்ப்பு உணர்ச்சி, மற்றவர்களுக்கு இருப்பதை விட அதிகம் என்று சொல்லா விட்டாலும் அதற்குக் குறையாமலாவது இருக்கிறது; அதையாவது ஒத்துக் கொள்ளுங்கள். நான் கேட்க விரும்புவது, இந்தித் திணிப்பு இருக்சிறது என்று சொன்னவர் யார்? எப்போதும் ரேடியோவிலே இருக்கிறது; டி.வி.யிலே இருக்கிறது; கடிதம் எழுதுகிறார்கள் இந்தியிலே. நாடாளுமன்றத்திலேயும் அடிக்கடி கிழித்துப் போடுகிறார்கள். இவை எல்லாம் அடிக்கடி நடப்பது தானே. அதை நாம் அவ்வப்போது கண்டித்துக்கொண்டு வருகிறோம். ஆகவே ஏற்கெனவே இருப்பது தானே தவிர புதுமையாக இருப்பது இல்லை. அரசியல் சட்டத்தைக் கிழிக்கின்ற அளவுக்கு இந்தித் திணிப்பு இல்லை என்பது தானே தவிர வேறு ஒன்றும் கிடையாது. என்னைப் பொறுத்த வரையில் ஒரு கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். நான் இந்தி எதிர்ப்பு உணர்ச்சியில் யாருக்கும் சளைத்தவன் அல்ல. இளைத்தவனும் அல்ல (குறுக்கீடுகள், கூச்சல் குழப்பம்)

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திருமதி டி. யசோதா: பேரவைத் தலைவர் அவர்களே, 20 பேர்கள் பேச வேண்டும் என்கிறீர்கள்? இந்த இரண்டு களுக்கே இவ்வளவு நேரம் அனுமதித்தால் எங்களுக்கும் கொடுக்க வேண்டும். (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசுவதனால் மட்டும் ஒன்றும் தீர்ந்து விடாது (குறுக்கீடுகள்) நீங்கள் பேசினால் அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டி வரும். இந்த விவாதம் நீண்டு கொண்டே போகும் முடிவில்லாமல். திரு. பொன். முத்துராமலிங்கம் முடித்து விடுங்கள்.

திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே வீர வசனம் பேச வரவில்லை. இளைத்தவன் அல்ல; சளைத்தவன் அல்ல கொழுத்தவன் அல்ல; பெருத்தவன் அல்ல என்று நான் பேச வரவில்லை. திரு. ப. உ. ச. அவர்கள் தெளிவாக்க வேண்டும் என்று கேட்டார்கள். அதற்கு வழக்கம் போல எப்படிப் பாதுகாப்புத் தரவேண்டுமோ அந்தப் பாதுகாப்பை, அவர்களுக்கே உரிய மொழியில் நாவலர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். திரு. ப. உ. ச. தெளிவாகக் கேட்டது வேறு. அவருடைய இந்தி ஆதிக்க எதிர்ப்பு உணர்வை நான் கேள்வி கேட்கவே இல்லை. அவர் அதிலே ஊறி உழன்றவர் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் தெரிந்தோ தெரியாமலோ, புரிந்தோ புரியாமலோ என்றுகூட நான் பேசுவதற்கு விரும்பவில்லை ஆனால் அவர் கேள்வி கேட்டிருக்கிறார் * * * என்றார்கள். அதற்குத்தான் நமது நண்பர்கள் அத்தனை பேரும் டி.வி.யிலே இல்லையா, வானொலியிலே இல்லையா என்றெல்லாம் கேட்டார்கள். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்குத்தான் சொன்னேன். தேவையில்லாத விவாதங்கள் வேண்டாம் என்று (குறுக்கீடு). இந்திய யூனியனில் உள்ள எந்த மாநிலத்திலும் இது நிச்சயமாக நடந்துக் கொண்டுதான் இருக்கும். திரு. பொன். முத்துராமலிங்கம் சீக்கிரம் முடியுங்கள். மற்றவர்கள் உட்காருங்கள்.

திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மொழிப் பிரச்சினைகளையெல்லாம், இந்த நிலைமைகளை எல்லாம் ஆட்சியிலே இருப்பவர்கள் எல்லாம் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நில உச்சவரம்பு பொறுத்த மட்டில் நேற்றைய தினம் கூட ஒரு விவாதம் நடைபெற்றது. ஏற்கனவே அது சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்டு பினாமி நில ஒழிப்பு சம்பந்தமாக நிலச் சீர்திருத்தச் சட்டத்திலே சீர்திருத்தம் செய்து மத்திய அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டதே அது என்ன ஆயிற்று?

(* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது .)



இந்த அரசு உள்ளபடியே பினாமி நிலங்களை ஒழிக்க வேண்டுமென்று கருதுமானால் என்ன நடவடிக்கை அதற்காக இது வரையில் எடுத்து இருக்கிறார்கள் என்பதை மட்டும் நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது) தலைவர் அவர்களே, என்னுடைய நேரத்தில் தாங்கள்தான் மற்ற உறுப்பினர்களை பேச அனுமதித்தீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்து நிமிடங்கள் தான் உங்களுக்கு அளிக்கப்பட்டது. இப்போது ஒரு மணி நேரம் பேசி இருக்கிறீர்கள். Because of the interruptions you are in an advantageous position

திரு. பொன் முத்துராமலிங்கம்: தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடுதான் மற்ற உறுப்பினர்கள் பேசினார்கள். ஆகவே விரைவில் முடித்து விடுகிறேன். இந்த பினாமி நிலங்களை ஒழிப்பதைப் பொறுத்தவரையில் இந்த அரசு என்ன தொடர் நடவடிக்கையெடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் விவரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த ஆளுநர் உரையில் மிக மகிழ்ச்சிக்குரிய ஒன்றாக தெரிவிக்கப்பட்டிருக்கிற விவரம், கள், சாராயக் கடைகளை எல்லாம் இந்த ஆண்டு ஒழித்துவிட்டோம் என்பதாகும். மகிழ்ச்சிகரமான செய்தியாக அது வெளியிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அருமை நண்பர் திரு. செம்மலை அவர்கள் கருத்து தெரிவிக்கிறபோது, இதை ஒரு அரசியல் பிரச்னையாக ஆக்காதீர்கள், அரசியல் பிரச்னையாக ஆக்காமல், அரசியலுக்கு அப்பால் சென்று கருத்துக்களைக் கூற வேண்டுமென்ற ஒரு நல்ல ஆலோசனையைச் சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அரசியலுக்கு அப்பால் சென்று கருத்துக்களைக் கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் இன்றைய தினம் இருக்கிற யதார்த்த நிலைமையையும் ஒப்புக்கொள்ள வேண்டும். என்ன யதார்த்த நிலைமை என்றால் கள், சாராயம் காய்ச்சுவது, இறக்குவது ஒழிக்கப்பட்டுவிட்டது. குடிப்பது ஒழிக்கப்பட்டு விட்டது. ஆனால் பிராந்திக் கடைகள், ஒயின் கடைகள் இன்றைக்கு இருக்கின்றன. இந்தக் கடைகளில் எப்படி வியாபாரம் செய்யலாம் என்று ஒரு முறை இருக்கிறது. ஒவ்வொருவரும் பெர்மிட் பெற்று, அனுமதி வாங்கி குடிக்க வேண்டுமென்று முறை இருக்கிறது. நான் இந்த மன்றத்தில் பேரவைத் தலைவர் மூலமாக தொடர்புடையவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் தமிழ் நாட்டில் எத்தனை பேர் அனுமதி வாங்கியிருக்கிறார்கள்? ஒரு நாளைக்கு எவ்வளவு பிராந்தி, விஸ்கி ஒயின் விற்பனையாகிறது? நீங்கள் கொடுத்திருக்கிற அந்த அனுமதிக்கும் விற்கப்படுகிற பாட்டில்களுக்கும் ஏதாவது

தொடர்பு இருக்கிறதா என்பதை அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். நான் இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த மன்றத்தில் தெரிவிக்க விரும்புவதெல்லாம் ஒரு அரசாங்கத்தினுடைய ஒழுங்குமுறை விதிகளே இந்தக் கடைக்காரர்கள் கள்ளக் கணக்கு எழுதுவதற்கு வழிவகுத்துக் கொடுக்குமானால் அரசாங்கம் நல்ல நோக்கத்தோடு இந்த விதிகளை அமைத்திருக்கிறதா? இந்தத் திட்டம் நல்ல நோக்கோடு கொண்டு வரப்பட்டதா என்பதைத்தான் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்து, என்னுடைய மரியாதைக்குரிய நாவலர் அவர்கள் திண்டுக்கல்லில் ஒரு பத்திரிகைக்குப் பேட்டி அளித்திருக்கிறார்கள். இந்தக் கள, சாராயக் கடைகள் ஒழிக்கப்படுவதன் காரணமாக கள்ளச் சாராயம் பெருகுமே என்று பத்திரிகை நிருபர்கள் கேட்டபோது, நம்முடைய நாவலர் அவர்கள் இதைத்தான் நான் 2½ மணி நேரம் மந்திரி சபைக் கூட்டத்தில் பேசினேன் என்று தகவல் சொல்லி இருக்கிறார்கள். பொதுவாக மந்திரி சபைக் கூட்டத்தில் பேசிய பேச்சை வெளியே சொல்வது என்பது மரபாகாது. ஆனால் 2½ மணி நேரம் பேசிய பேச்சை நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்கள் பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டியிலே தந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மந்திரி சபைக் கூட்டத்தில் பேசினேன் என்று நான் சொல்லவில்லை. ஏற்கனவே இந்தக் கள், சாராயக் கடைகளை கொண்டு வரவேண்டுமென்று நாம் வாதிட்டபோது, அவையில் 2½ மணி நேரம் பேசினேன். ஏன் மீண்டும் கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது என்று சொல்கிறபோது, மதுவிலக்கு அமலில் இருந்தபோது என்னென்ன கேடுகள் ஏற்பட்டன என்று தெரிவித்தபோது விவரமாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அப்போதே இந்தக் கேடுபாடுகள் உண்டு. ஆகவே மதுவிலக்கு வந்தால் இந்தக் கேடுபாடுகள் ஏற்படத்தான் செய்யும். இது ஒரு இடத்திலிருந்து உற்பத்தியாவது அல்ல. எல்லா இடங்களிலும் உற்பத்தியாகிறது என்று அவையில் பேசினேன் என்று சொன்னேனே தவிர, அமைச்சரவை கூட்டத்தில் பேசினேன் என்று நான் சொல்லவில்லை.

**திரு. பொன் முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு இந்தப் பேட்டியைப் படிக்கிறேன்.

''கேள்வி: கள், சாராயக் கடைகளை மூடியதால் கள்ளச் சாராயம் பெருகியுள்ளது. இதனால் ஒருசில குடும்பங்கள் கள்ளச் சாராயத்திற்கு பலியாகியுள்ளனவே?

பதில்: கள், சாராயக் கடைகளை மூடினால் இப்படியெல்லாம் நடக்கும் என்று இந்த விளைவை சுமார் 2½ மணி நேரம் தான் மந்திரி சபைக் கூட்டத்தில் விவாதித்து இருக்கிறேன்.



எனவே இந்தக் கருத்துக்களை பார்க்கிறபோது மந்திரி சபையில் பேசியதாகத்தான்........

(பிற்பகல் 12-10)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் என்னை நம்புகிறாரா, அல்லது அந்தச் செய்தித்தாளை நம்புகிறாரா என்று தான் நான் கேட்கிறேன். நான் சொன்னதை அந்தச் செய்தித்தாள் சரியாகப் போடவில்லை, திருத்தி போட்டிருக்கிறது என்று சொன்னதற்குப் பிறகும், அதை ஆதாரமாகக் கொள்கிறார்களே தவிர, உயிரோடு நான் நின்று கொண்டு சொல்கிறேன், என்னை நம்புங்கள்.

**திரு. பொன். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் 1 மணி நேரம் பேசியிருக்கிறீர்கள். அதிகமான கருத்துக்களை வெளியிட்டு இருக்கிறீர்கள் எனவே இத்தோடு நிறுத்திக்கொள்ளுங்கள். அடுத்து மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் (குறுக்கீடு). உங்கள் கருத்துக்களை நாளைக்குப் பேசப் போகிற உங்கள் உறுப்பினரிடம் கொடுத்து பேசச் சொல்லுங்கள். நேரம் கொடுக்கிறேன். எவ்வளவு நேரம் கொடுத்தாலும் நீங்கள் சபாநாயகரைத் தவறாக நினைக்கக்கூடிய அளவிற்கு இருக்கிறது. அந்த எண்ணம் வேண்டாம். உங்களுக்கு 1 மணி நேரம் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு டாக்டர் சமரசம் அவர்கள் முன் மொழிந்து இருக்கிற, நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தை வழிமொழிந்து பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வருகின்ற ஆண்டுகளில் புரட்சித் தலைவருடைய ஆட்சி, இந்த மாநில மக்களுக்கு எப்படியெல்லாம் சமூகநலத் திட்டங்களை நிறைவேற்ற இருக்கிறது என்பதைக் கோடிட்டுக் காட்டுகிற வகையில், தீர்க்கதரிசனமாக இந்த ஆட்சி செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்ற வகையில், இந்த நாட்டிலே இருக்கிற ஏழை எளியவர்களுக்குப் புரட்சித் தலைவருடைய அரசு சமூக நீதி வழங்குகின்ற அரசு, ஏழைகளுக்காக திட்டங்களைப் போடுகிற அரசு, புறக்கணிக்கப் பட்டவர்களை எண்ணிப் பார்த்து, திட்டங்களைப் போடுகிற அரசு என்கிற வகையில், அரசினுடைய நடைமுறைகளை சுட்டிக்காட்டியிருக்கிற வகையில், இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது என்பதை எண்ணி, அதை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

[திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்] [1987 மார்ச் 5

ஏழை எளியவர்களுக்கு, நலிந்தவர்களுக்கு சமூக நீதி வழங்குவது மட்டுமல்ல, எதிர்காலத்தில் இந்த மாநிலத்தினுடைய வளர்ச்சியை எண்ணிப் பார்த்து பல்வேறு வகையில், தொழிற் துறையில், அதுவும் குறிப்பாக மின்சாரத் துறையில் மிகுந்த கவனத்தைச் செலுத்த வேண்டும் என்கிற அக்கறையிலே ஆளுநர் உரையில் பல திட்டங்களைச் சுட்டிக்காட்டியிருப்பதை எண்ணிப்பார்க்கும்போது, இந்த மாநிலத்தினுடைய வளர்ச்சியில் புரட்சித் தலைவருடைய அரசு எந்த அளவிற்கு அக்கறை கொண்டிருக்கிறது என்ற விவரங்களைப் பார்க்க முடிகிறது.

அதேபோல், சமுதாய நீதி வழங்கப்படாமல் புறக்கணிக்கப் பட்டவர்களை, ஏழை எளியவர்களை எண்ணிப் பார்க்கும் ஆட்சியாக, இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டுகிற ஆட்சியாக, திட்டங்களைத் தீட்டுவதிலே, இத்தனை ஆண்டுக் காலம் இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற மாநில அரசுகள் செய்கிற தவறுகளைத் திருத்தி, திட்டங்களைத் தீட்டுகின்ற அரசு என்பதை நிரூபிக்கின்ற வகையில் ஆளுநர் உரை அமைந்திருக்கிறது,

1969-70 ஆம் ஆண்டில். 3,600 மில்லியன் யூனிட்டுகள் தான் மின்சார உற்பத்தி என்ற நிலையில் இருந்தது. 1974-75 ஆம் ஆண்டு வரை, இந்த இடைப்பட்ட காலத்தில் அந்த உற்பத்தி 5 ஆயிரம் மில்லியன் யூனிட்டாக ஏறத்தாழ இந்த 7,8 ஆண்டுக் காலத்தில் 1,400 மில்லியன் யூனிட்டுகள்தான் மின்சார உற்பத்தியை—கடந்த காலத்திலே ஆண்டவர்கள் உபரியாக ஆக்க முடிந்தது. உற்பத்தியைப் பெருக்க முடிந்தது. ஆனால் இன்றைக்கு, 1985-86 ஆம் ஆண்டு வரை இந்த 10 ஆண்டுக் காலத்தில், 10 ஆயிரம் மில்லியன் யூனிட்டுகள் என்கிற நிலைக்கு உற்பத்தி போயிருக்கிறது. அத்துடன் அரசு திருப்தி யடையாத நிலையில் 150 மில்லியன் டாலர் ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் வட சென்னையில் ஒரு மின் திட்டம் என்றும், காற்றாலை மின் திட்டம் என்றும், இந்த மாநிலத்தினுடைய வளர்ச்சியை ஏழை எளியவர்களுக்காகச் செய்கிற அதே நேரத்தில், மாநில வளர்ச்சிக்காகவும், திட்டங்களைத் தீட்டியிருக்கிற காட்சியைப் பார்க்கிறோம்.

இந்த நாட்டிலே சமூக நீதியை வழங்குகிற அரசாக, இன்றைக்கு தமிழகத்திலே இருக்கிற அரசு, புரட்சித் தலைவர் அவர்கள் அரசு ஒன்று தான் என்பதை ஆணித்தரமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 1984-85 ஆம் ஆண்டு நம்முடைய தேசிய வருமானம் 2 லட்சம் கோடி ரூபாய். நாம் எல்லோரும் பேசுகிற சோசலிசம் இந்த நாட்டிலே அமுல்படுத்தப்படவேண்டுமானால், தனி நபர்கள் உருவாக்குகிற இந்த 2 லட்சம் கோடி ரூபாய் தேசிய வருமானத்தை, இந்த நாட்டினுடைய 70 கோடி பேர்களுக்குப் பகிர்ந்தளிக்கவேண்டும். அப்படிப் பகிர்ந்தளித்து இருக்கிறோமா? பகிர்ந்தளிக்கவில்லை. கடந்த ஆண்டுகளிலே



1987 மார்ச் 5] [திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

ஏற்பட்ட திட்டங்கள், தேசியச் செல்வங்கள் இந்த நாட்டிலே யிருக்கிற 70 கோடி பேர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட வில்லை. இப்படி சம்பாதிக்கிற 2 லட்சம் கோடி ரூபாயிலிருந்து அரசாங்கத்திற்கு 1979-80 ஆம் ஆண்டில் 1,340 கோடி ரூபாய் தான் வருமான வரியாக வந்திருக்கிறது. 9.9 சதவீதமாக இருந்த வருமான வரி ஆண்டுக்காண்டு குறைந்து 1979-80-ல் 8 சதவீதமாகவும், 1980-81-ல் 7 சதவீதமாகவும், 1981-82-ல் 5.9 சதவீதமாகவும் ஆகிறது. 1982-83-ல் அது 5.1 சதவீதமாக ஆகிறது. 1983-84-ல் அது 4½ சதவீதமாக ஆகிறது. 1984-85-ல் அது 4.3 சதவீதமாகக் குறைகிறது. 1985-86-ல் அது 3.3 சதவீதமாகக் குறைகிறது. அது இந்த பட்ஜெட்டிலே 4 சதவீதமாக குறைக்கப்பட்டு இருக்கிறது. ஆக தேசிய வருமானத்தைப் பகிர்ந்து அளிப்பதிலே சமூக நீதி கடந்த கால திட்டங்களில் தவிர்க்கப்பட்டு இருக்கிறது என்பதைப் பல்வேறு பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டி யிருக்கிறார்கள். தேசிய வருமானத்தை இந்த நாட்டு மக்களுக்குப் பகிர்ந்து அளிக்க முடியவில்லை. அரசு ஏறத்தாழ 50 ஆயிரம் கோடி ரூபாயை வருவாயாகப் பெறுகிறது. வரியாகப் பெறுகிற வாய்ப்பு இருக்கிறது. அதிலே இந்த 2 லட்சம் கோடி ரூபாய் சம்பாதிக்கிற தேசிய வருமானத்தை உருவாக்குகின்றவர்கள் கட்டுகின்ற வரி 4 சதவீதம்தான். மீதி இருக்கிற 96 சதவீதம் வரியை இந்த நாட்டில் இருக்கிற ஏழை எளியவன் இந்த நாட்டு மக்கள் எல்லோரும் கட்டுகிறோம்.

அப்படி வசூலிக்கிற 50 ஆயிரம் கோடி ரூபாய் வரியைப் பகிர்ந்து அளித்து சமூக நிதி கிடைத்து இருக்கிறதா என்றால் நிச்சயமாக 7-வது ஐந்தாண்டுத் திட்டங்களில் அது இல்லை என்பதைப் பொருளாதார நிபுணர் மால்கம் ஆதிசேசய்யா அவர்கள் மிகத்தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். இவ்வாறாக வாங்குகிற வரியில் மீண்டும் வருமானம் சம்பாதிக்கிற பிரிவினருக்கே 5 நட்சத்திர ஓட்டல்கள், டெலிபோன் வசதிகள், டி.வி. வசதிகள், சாலை வசதிகள் இப்படிப்பட்ட வசதிகளை அளித்து வசதியானவன் மேலும் வசதி பெறுகிற வகையில் வரியிலிருந்து செலவழிக்கப்படுகின்ற திட்டங்களாக இருக்கிற காட்சியைப் பார்க்கிறோம். இவ்வாறாக உயர் வருமானப் பிரிவினரின் வாழ்க்கைத் தரத்தைப் பாதுகாப்பதற்கும் அதை மேலும் உயர்த்துவதற்கும் தேவையான உற்பத்தி நடவடிக்கைகளுக்கு ஆதரவாக சாதனங்கள் பெரிதும் ஈடுபடுத்தப்பட்டது. இந்தச் சிறிது நேர பகட்டான உபயோகங்களுக்கு நேரடியான பொருள்கள் உற்பத்தி மட்டும் இன்றி இவர்கள் உயர்ந்த வாழ்க்கைத் தரத்திற்கு வேண்டிய உயர் ரக வீட்டு அமைப்புகள், நகர்ப்புற வசதிகள், விமானப் போக்குவரத்து வசதிகள் முதலிய உயர்தரப் போக்குவரத்து வசதிகள், டெலிபோன் சேவைகள், 5 நட்சத்திர ஓட்டல்களில் தங்குகிற வாழ்க்கை முறை ஆகியவைகளுக்கான உற்பத்தியில் நம்முடைய தொழில் துறையின் பெரும் பகுதி ஈடுபட்டு இருக்கிறது.

பெரும்பான்மையான ஏழை மக்களின் வாழ்க்கைக்கு வேண்டிய உணவு, உடை, வீடு என்ற அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஊதியப் பொருள்களுக்கு மார்க்கெட் சுருங்கி இருக்கிறது. 1978-லிருந்து 1983 வரை போட்ட திட்டங்கள் இந்த வருமானப் பிடியை உடைப்பதற்கு புதிய கண்ணோட்டத்துடன் கூடிய வழிமுறைகளைச் சுட்டிக்காட்டி பொருளாதார வளங்களை மறு விநியோகம் செய்வதற்குப் பல்வேறு துறைகள் இந்தத்திட்டங்களைப் பின்பற்றவேண்டும் என்று சொல்லப்பட்டது அந்த வகையில்தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், சொல்வதுபோல் தேசிய வருமானத்தை இந்த நாட்டு மக்களுக்குப் பகிர்ந்து அளிப்பதற்குத் தவறி இருக்கிறோம், மக்களிடமிருந்து பெறுகிற வரிப் பணம் மீண்டும் அவர்களுக்குச் செலவு செய்யப் படுகிறதா என்றால் வசதியானவர்கள்தான் மீண்டும் வசதி பெறுவதற்கு வேண்டிய திட்டங்கள் தீட்டப்பட்டு இருப்பதை மற்ற எல்லா மாநிலங்களிலும நாம் பார்க்கிறோம். மத்திய அரசின் பட்ஜெட்டில் கூட நேற்று பிரதமர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் 8 சதவீதம் தான் அந்த வரவு-செலவுத் திட்டத்தில் மானியம் என்ற அடிப்படையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தொழில் அதிபர்கள், ஏழை எளியவர்கள், போன்றவர்களுக்கு ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.இ.பி. என்று இப்படி ஒட்டுமொத்தமாக மானியமே 8 சதவீதம்தான் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆகவே இதை உணர்ந்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தேசிய வருமானத்தைப் பகிர்ந்து அளிப்பதில் சமூக நீதி மறுத்து இருக்கிறோம். அந்தச் சமூக நீதி கிடைக்கவேண்டும் என்ற அடிப்படையில்தான் 200 கோடி ரூபாய்க்கு இலவச சத்துணவுத் திட்டம் நேரடியாகப் போகவேண்டும், அவர்களுக்கு ஆடைகள் நேரடியாகப் போக வேண்டும், அவர்களுக்குப் பள்ளிப் பாடப் புத்தகங்கள் நேரடியாகப் போக வேண்டும், 2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் நேரடியாகப் போக வேண்டும், 9½ லட்சம் குடிசைகளுக்கு இலவச மின்சாரம் நேரடியாகப் போக வேண்டும், அந்த அடிப்படையில்தான் ஏறத்தாழ 1 கோடிக்கு மேல் பள்ளி செல்கிற சிறார்களுக்கும், கிராமங்களிலுள்ள ஏழைத் தாய்மார்களுக்கும் இலவசமாகக் காலணிகளைக் கொடுக்கவேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறார்கள். இதுவும் நேரடியாகப் போக வேண்டும் என்ற அடிப்படையில்தான் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்படிப் பார்க்கிறபோது இந்த மாநில அரசினுடைய 20 சதவீத வருவாய் நேரடியாக ஏழை எளிய மக்களுக்கு, சமூக நீதி மறுக்கப்பட்டவர்களுக்குப் போய்ச் சேருகிற வகையில் சமூக நீதி புறக்கணிக்கப்பட்டவர்களுக்குப் போய்ச் சேருகிற வகையில் இந்த ஆட்சி திட்டமிட்டு இருக்கிறது.

நம்முடைய தமிழக அரசு ஒன்றுதான் இந்தியாவில் இருக்கிற எந்த மாநில அரசும் வழங்காத சமூக நீதியை, ஏன் இதுவரையில் இருந்த ஆட்சியாளர்கள் எவரும் வழங்காத சமூக நீதியை ஏழை எளியவர்களுக்கு வழங்கவேண்டும் என்ற சமூக ஞானம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு இருந்த காரணத்தால்தான் மற்ற மாநிலங்கள் செய்யத் தவறியதை



செய்ய, இன்றையதினம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் திட்டத்தைத் தீட்டியிருப்பதைப் பார்க்கிறோம். இப்படி இலவசமாக ஏழைகளுக்குக் கொடுக்கிறபோது அதைக்கூட கேலி செய்தவர்களைப் பார்க்கிறோம். விலா நோக சிரிக்கிற திட்டம் என்று சொல்லுவதைப் பார்க்கிறோம். அவர்களுக்குள்ளேயே கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. திரு. நாஞ்சிலார் அவர்கள் சொல்லுகிறபோது விலா நோக சிரிக்கிற திட்டம் என்று சொல்லுகிறார், அடுத்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் கொடுப்பதை நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை என்று சொல்லுகிறார். முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகிறார்கள்.

(பிற்பகல் 12—20)

எனக்கு முன்னால் பேசிய அருமை நண்பர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள், இல்லாததை எல்லாம் சொல்லுகிறீர்களே என்று எல்லாம் சொன்னார்கள். வீடுகள் கட்டுவதற்குப் பொருள்கள் எப்படி, நிதி ஆதாரங்களை எப்படி பெருக்கப் போகிறீர்கள் என்ற விவரங்களை எல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஏமாற்றுவதற்காக அதைச் சொல்லியிருக்கிறோம், மாயாஜால திட்டம் என்று எல்லாம் சொன்னார்கள். எப்படி நிதி ஆதாரங்களைப் பெருக்கப் போகிறோம், எப்படி வீடுகளை கட்டப் போகிறோம், மத்திய அரசிடமிருந்து நிதியை எதிர் பார்க்கிறோம், மத்திய அரசிடம் நிதியைக் கேட்டு இருக்கிறோம் என்று எல்லாம் சொல்லியிருக்கிறோம். இதைப் போய் ஏமாற்று திட்டம் என்று சொல்லுகிறார்கள். புதிர் திட்டம் என்று எல்லாம் சொல்லுகிறார்கள். இப்படி எல்லாம் சொல்லுகிறவர்களைப் பார்த்து கேட்கிறோம் 88 லட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவு போடுகிற திட்டம் வந்தபோது கூட எவ்வளவு கேலி பேசினார்கள். நடக்காத திட்டம் என்று சொன்னார்கள், ஏமாற்றுகிற திட்டம் என்று சொன்னார்கள். ஆனால் நடைபெற்றது என்ன? இந்த வீடு கட்டுகின்ற திட்டத்தை, மாயாஜாலத் திட்டம், நடக்காததைச் சொல்கிறார்கள் என்று சொல்லிய திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களுக்கு நான் ஒரு கேள்வியைக் கேட்கிறேன். 1984 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்றபோது, நீங்கள் விமர்சித்த சத்துணவுத் திட்டத்தை, நடைமுறைப்படுத்த முடியாது என்று சொன்னதை, ஏமாற்றுகிற திட்டம் என்று சொன்னதைப் பற்றி என்ன சொன்னீர்கள்? நாங்கள் ஆட்சிக்கு வந்தால் முட்டையுடன் சத்துணவு போடுவோம் என்று சொன்னீர்கள். அருமை திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களே, அருள்கூர்ந்து உங்கள் சிந்தனைக்கு ஒரு கருத்தை வைக்கிறேன். 1986 ஆம் ஆண்டு புள்ளிவிவரப் புத்தகத்தின்படி தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற மொத்த முட்டை ஆண்டுக்கு 12 கோடி முட்டைகள். அகில இந்திய அளவில் இந்தியா முழுவதும் உருவாக்கப்படுகின்ற முட்டை 102 கோடி

(திரு வேடசந்தூர் வி.பி. பாலசுப்ரமணியன்) [1987 மார்ச் 5

கிறார்கள். ஆனால் நீங்கள் அறிவித்த அறிவிப்புகள், எதற்காக
அறிவித்தீர்கள்? அத்தனையையும் அறிவித்து, மௌனம்
சாதித்தீர்களே, அத்தனையையும் செய்வோம் என்று அன்றைக்குச்
சட்டமன்றத்தில் அறிவித்துவிட்டு, மௌனம் சாதித்தீர்களே,
அந்த மௌனத்திலுடைய பொருள் என்ன? அதற்கு வழங்கப்
பட்ட விளைவு என்ன என்ற கேள்வியைத்தான் நான் கேட்க
விரும்புகிறேன். அப்படியா இந்த புரட்சித் தலைவர் அவர்கள்
அரசு திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கிறது. எது எப்படி
என்றாலும் ஏழை எளியவர்களைப் பற்றி எண்ணிப் பார்க்க
வேண்டும்.

கவர்னர் உரையிலே கள் சாராயக் கடைகளை மூடியிருக்
கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் உண்மையிலேயே
தெளிவாகச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். மது விலக்கை
அமுல்படுத்துவதில் புரட்சித் தலைவர் அவர்களை விட வேறு
யாருக்கும் இந்த மாநிலத்தில் நிச்சயமாக அக்கறை இருக்க
முடியாது. இங்கே பேசுகின்றபோது காங்கிரஸ் கட்சியைச்
சார்ந்த நண்பர்கள்கூட கள், சாராயத்தைப் பற்றி பேசினார்கள்.
நாவலர் அவர்களும் அதற்குப் பதில் அளித்தார்கள். இதைப்
பொறுத்தமட்டில் மிகத் தெளிவாக அமல்படுத்த வேண்டும்
என்பதுதான். இதிலே கூட கொஞ்சம் கடுமையாக விமர்சனம்
செய்தார்கள். இரட்டை நிலை என்றார்கள். இரட்டை
வேடம் என்றார்கள். அப்படியெல்லாம் அருள் கூர்ந்து பேசக்
கூடாது. ஏனென்றால் கொஞ்சம் அருள்கூர்ந்து திரும்பிப் பார்க்க
வேண்டும். 1959 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் ஒரு
தீர்மானம் போட்டிருக்கிறீர்கள். திட்டக் குழு மூலம் இந்தியா
முழுவதிலும் மதுவிலக்கு அமுல்படுத்துவதற்கு வேகமாக
நடவடிக்கை எடுப்பது என்று இந்த மன்றம் முடிவு எடுக்கிறது
என்று. அன்றைக்கு அந்தத் தீர்மானத்தை வைத்த பிறகு,
அன்றைக்குப் பல மாநிலங்களில் மதுக் கடைகளை திறந்து
விட்டது காங்கிரஸ் ஆட்சிதான் என்பதை நீங்கள் மறுக்க
முடியாது.

கள் சாராயம் என்பது ஒரு சமுதாயப் பிரச்சனை. சமுதாய
நிர்ப்பந்தத்தின் மூலம்தான் அதனைத் தவிர்க்க முடியுமே தவிர
வேறு அல்ல. 1963 ஆம் ஆண்டு திட்டக் குழு தமிழகத்திலே
சுற்றுப்பயணம் செய்கிறது. சுற்றுப்பயணம் செய்கிறபோது
அந்த கமிட்டி சொல்கிறது. காவேரிக் கரையோரங்கள் கள்,
சாராயம் காய்ச்சுகின்றவர்களுடைய சொர்க்கமாக இருக்கிறது.
நாங்கள் பாராட்டுகிறோம். முழுமையாக மது விலக்கு அமுல்
படுத்த வேண்டும் என்பதிலே சளைத்தவர் அல்ல முதலமைச்சர்
அவர்கள். ஆனால் சமுதாய நிலைமைகளைப் பார்க்கவேண்டும்.
அன்றைக்குப் பொறுப்பிலே இருந்தவர், முதலமைச்சராக
இருந்தவர், மறைந்த திரு. பக்தவத்சலம் அவர்கள் அந்த
கமிட்டியிலே சொல்கிறார்கள். அவர்களே சொல்கிறார்கள்.



1987 மார்ச் 5] (திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்)

கள், சாராயத்தை ஒழிக்க முடியவில்லை. நாம் சாராயத்தையே,
கொடுத்து விடலாம் வேறு வழியில்லை என்று சொல்கிறார்கள்.
நான் அருள்கூர்ந்து தவறாக சொல்வதாக நினைக்க வேண்டாம்.
அந்தக் கமிட்டி 27–11–1963-லும் 3–12–1963-லும் தமிழகத்திலே
விசாரணைக்கு வருகிறது. அன்றைய துவத்தில்
முதலமைச்சராக மறைந்த பெரியவர் திரு. பக்தவத்சலம்
அவர்கள் சொல்வதாக அந்த கமிட்டி சொல்லி இருக்கிறது.
Tek Chand Committee Report Vol. II Page 54. According to the
Chief Minister, there have been a few addicts in each village and
if a permit system could be devised for distribution of arrack to
them at a cost of low price plus excise duty, illicit distillation
could be brought under control. இந்த நிலைமைகளைத்தானே
சொல்கிறோம். மறைந்த அம்மையார் இந்திரா அவர்களே
குறிப்பிட்டிருக்கிறார்கள். Consolidation of National Gains
என்ற புத்தகத்தில் எழுதுகின்றபோது சட்டம் போட்டு திருத்த
முடியாது. பல்வேறு கலாச்சாரங்கள், பழக்க வழக்கங்கள்,
பிராந்திய முரண்பாடுகள் அமைந்த இந்த நாட்டில் மதுவிலக்கைச்
சட்டம் போட்டு அமுல் நடத்துவது அநேகமாக தோற்றே
விட்டது. மது விலக்கின் தீமையைப்பற்றி பிரச்சாரம்
செய்வதோடு ஆட்சி நின்றுவிட வேண்டும். சட்டம் போட்டு
மதுவிலக்கை அமுல் நடத்த முனைவது நோயைவிட நோய்
தீர்க்கும் மருந்து மோசமானது என்பதையே காட்டுகிறது என்ற
உண்மையைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் புரட்சித்
தலைவர் அவர்கள் ஆளுநர் உரையில் இதை உருவாக்கி
யிருக்கின்ற காட்சியைப் பார்க்கிறோம். அந்த வகையில் முதல்
முயற்சியாக இதை அமுல் நடத்த வேண்டும் என்ற
முயற்சியை அருள் கூர்ந்து காங்கிரஸ் கட்சி நண்பர்கள் பாராட்ட
வேண்டும். இதற்காக 1959-லே தீர்மானம் போட்டீர்கள்.
கடைகளையும் திறந்தீர்கள். இதற்காக நீங்கள் இரட்டை
வேஷம் போட்டீர்களே என்று நான் கேட்பது நியாயமாக
இருக்காதா? இது ஒரு சமுதாயப் பிரச்சினை. சமுதாய
நிர்ப்பந்தம் ஒன்றுதான் அந்தக் கொள்கையை வெற்றிபெறச்
செய்ய முடியும். அந்த வகையிலே மனிதாபிமான அடிப்படையில்
இந்த ஆட்சி செய்து வருகிறது.

இங்கே பேசுகின்றபோது ஏராளமாகச் சொன்னார்கள்.
எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சியில் காவேரி பிரச்சினை
பற்றியெல்லாம் சொன்னார்கள். அருமை நண்பர் திரு.
ரகுமான்கான் அவர்கள் பேசும்போதும் சொன்னார்கள். மத்திய
சர்க்கார்தான் இதைத் தீர்த்து வைக்க வேண்டும். இதிலே
மாற்றுக் கருத்து இருக்க முடியாது என்று நினைக்கின்றேன்.
அன்றைக்கு 1970 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை நடுவர்
மன்றத்திற்கு விடவேண்டுமென்று தெளிவாக இந்த அரசு
வற்புறுத்திக் கொண்டிருக்கிறது. கர்நாடக அரசு அது
கூடாது என்று இருக்கிறது. அருமை நண்பர்கள்
இரட்டை நிலை, முரண்பாடு என்கிறார்கள். காவேரி நீரைப்

பெறவேண்டும். அதற்கு மத்திய அரசு உதவ வேண்டும்.
வேறு வழி இல்லை. மத்திய சர்க்காரிடம் கோரிக்கை
வைத்திருக்கிறோம். நடுவர் மன்றத்திற்கு விடவேண்டும் என்று
வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். இந்தச் சூழ்நிலையில்
எங்களைப் பார்த்து மத்திய சர்க்காருக்குப் பயந்தவர்கள் என்று
தி.மு.க. நண்பர்கள் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட உறவோ,
நடவடிக்கையோ புரட்சித் தலைவர் ஆட்சிக்கு என்றைக்கும்
கிடையாது. எதிர்க்கட்சி என்கின்றபோதும் கூட்டுக்கட்சி
என்கின்றபோதும், கூட்டு இல்லையென்றாலும் தொடர்ந்து
இந்த மாநிலத்தினுடைய முன்னேற்றத்திற்காக மக்களின்
உரிமைக்காக குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால்
திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை என்ன? பல்வேறு கால
கட்டங்களில் பச்சோந்தித் தனமாக கொள்கைகளை நீங்கள்
எடுத்து இருக்கிறீர்களா, இல்லையா? 15–10–1982 ஆம் ஆண்டு
இந்த மாநிலத்திலே புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு 'பந்தை'
அறிவித்தார்கள். காவேரி பிரச்சினையில் மத்திய அரசு
விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். 1970 ஆம் ஆண்டு
உருவாக்கப்பட்ட நடுவர் மன்றத்திற்கு அனுப்பப்பட்டிருந்த
தீர்மானம் இடப்பிலே கிடக்கிறது. அதை அமுல்படுத்த
வேண்டும் என்று புரட்சித் தலைவர் அரசு 'பந்த்' அறிவித்தது.

(பிற்பகல் 12-30)

15–10–1982 ஆம் தேதி பந்தை அறிவித்திருக்கிறார்
புரட்சித் தலைவர் அவர்கள். மத்திய அரசினுடைய கவனத்தைக்
கவர வேண்டும், காவிரிப் பிரச்சினையிலே மத்திய அரசை
விரைவுபடுத்தவேண்டும் என்ற புனிதமான நோக்கத்தில் தமிழ்
மாநிலத்தின் நலன்கள் காக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில்
அன்றைக்கு 15-10-1982 ஆம் தேதியிலே பந்தை அறிவிக்கிறது
சர்க்கார். ஆனால், பந்தை அறிவித்த அதே தினத்தில்,
அருமை திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களே, அந்த பந்த்
தேச விரோதமானது என்று திராவிட முன்னேற்றக் கழகத்தி
னுடைய நாடாளுமன்ற உறுப்பினர், நாடாளுமன்றத்திலே
பேசுகிற காட்சியைப் பார்க்கிறோம்.

தமிழகத்தை, தமிழர் நலத்தை காட்டிக் கொடுக்கிற
அந்தப் போக்கு திராவிட முன்னேற்றக் கழகத்திடம் இருந்திருக்
கிறது, அதற்கு என்ன சொல்லப் போகிறீர்கள்? 15-10–1982-லே
பந்த்-ஐ அரசாங்கம் அறிவித்திருக்கிறது. 14-10–1982 அன்று
தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் மாயத்தேவர் அங்கே
பேசுகிறார். இதை அருள்கூர்ந்து நீங்கள் சிந்திக்கவேண்டும்
என்பதற்காகச் சொல்கிறோம். இந்த மாநிலத்தினுடைய
உரிமையை எப்படியெல்லாம் அடகு வைக்கப் பார்க்கிறீர்கள்?
இந்த மாநிலத்து மக்களுடைய உரிமையை எப்படியெல்லாம்
காட்டிக் கொடுக்க துடிக்கிறீர்கள் என்பதை நீங்கள் அருள்
கூர்ந்து எண்ணிப் பார்க்கவேண்டும்.



Lok Sabha Debate—
14-10–1982 அன்று பேசுகிறார்,
பக்கம் 334—335.

"It is learnt that a bandh is being organised on the 15th
October 1982 by the Tamil Nadu Government against the Central
Government, alleging that the Central Government have failed to
solve the Cauvery waters problem. The said bandh is purely
politically motivated and attempts to shift the burden on the Centre,
without the State authorities taking any steps, either to get water
from Karnataka or to solve the problem by taking initiative".
அதற்கு அடுத்த
மாநில சர்க்கார் வாங்க முடியும். அதற்கு அடுத்த
படி மாநில சர்க்கார் வாங்க முடியும்:
பாராவை, அருள்கூர்ந்து இங்கே இருக்கிற திராவிட முன்னேற்றக்
கழக நண்பர்களை மன்றாடிக் கேட்கிறேன், நீங்கள் கொஞ்சம்
பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். "At the same
time, charges and allegations are being made against the Centre
without any justification, by the Government of Tamil Nadu. The
said bandh by the Tamil Nadu Government is neither legal nor
Constitutional and the Central Government should declare the said
bandh unlawful, un-Constitutional, unwarranted, unnecessary and
undemocratic".

இந்த மாநில மக்களுக்காக, ஒரு அரசாங்கமே மத்திய
சர்க்காரை விரைவுபடுத்தவேண்டும் என்று பந்தை அறிவித்தால்
அங்கே போய் 'சட்டவிரோதமான பந்த், தடை செய்ய
வேண்டும், மக்கள் விரோதமானது, என்றால், அருமை
நண்பர்களே, அருள்கூர்ந்து உங்கள் இதயத் தராசில் எடை
போட்டுப் பாருங்கள். தமிழ்நாட்டின் உரிமையை காட்டிக்
கொடுக்கிறீர்களா, இல்லையா? தமிழ்நாட்டு உரிமைக்கு
விரோதமாகச் செயல்படுகிறீர்களா, இல்லையா என்பதை அருள்
கூர்ந்து எண்ணிப் பார்க்கவேண்டும் தொடர்ந்து பாராளு
மன்றத்திலே வற்புறுத்திக் கொண்டு இருக்கிறோம். இந்த
நிலையிலேகூட, அங்கே மைய அரசை வேகப்படுத்தவேண்டும்
என்பதற்காக இந்த நிலை என்றால், இது எந்தவகையான
கொள்கை என்பதை அருள் கூர்ந்து நீங்கள் இங்கே சொல்ல
வேண்டும்.

அதேபோல்தான், எந்தப் பிரச்சினையென்றாலும்-புரட்சித்
தலைவருடைய ராஜதந்திர நடவடிக்கை இன்று இலங்கைப்
பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று காண்கின்ற சூழ்நிலையை
ஏற்படுத்தியிருக்கிறது என்பது நாம் எல்லாம் மகிழ்கிற வகையிலே
இருக்கிறது. இன்றைக்குக்கூட, மாண்புமிகு பிரதமர்
திரு. ராஜீவ் அவர்கள், இந்திய சர்க்கார், இலங்கை சர்க்கார்
மீது நடவடிக்கை எடுக்கும் என்ற நிலைக்கு மாநிலங்களவையில்
அறிவித்திருக்கிறார். அங்கே போராடுகிறோம், மறுக்கவில்லை
தி.மு.க. கழக உறுப்பினர்களும், அண்ணா தி.மு.கழக உறுப்
பினர்களும், இரண்டு பேரும் சண்டை போட்டு அந்த உறுதி
மொழியை வாங்குகிற காட்சியை அங்கே பார்க்கிறோம்.

(திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்) [1987 மார்ச் 5

ஆனால், நீங்கள் இந்த அரசாங்கத்தை, இந்த மக்களைக் காட்டிக் கொடுக்கிற காட்சியை 14-10-1982-லே பார்க்கிறோம். இன்றைக்குத் தோள் கொடுத்து தமிழருக்காக, இலங்கைத் தமிழருக்காக பிரதமரே நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழனுக்காக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் போர்க்குரல் கொடுக்கிறது அங்கே. பிரதமர் அவர்கள், இந்திய அரசாங்கம் இலங்கை மீது நடவடிக்கை எடுக்கும் என்று அறிவித்தது மட்டும் அல்ல; அறிவித்த ஒரு மணி நேரத்தில் உயர் அதிகாரிகளைக் கூப்பிட்டு, என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சிந்திக்கிறார் என்கிற செய்தியைப் பத்திரிகை யிலே பார்க்கிறபோது, நம் இதயம் எல்லாம் பெருமைப் படுகிறது.

நாம் இலங்கைத் தமிழருடைய பிரச்சினையில், சுதந்திரம் பெற்ற 1948 ஆம் ஆண்டிலிருந்து இன்றைய வரைக்கும் அடி பட்டுக் கொண்டிருக்கிற தமிழனுக்கு விடிவுகாலம் ஏற்படுகிற காலம் வந்திருக்கிறது என்கிற நிலைமையை உணர்கிறோம். அந்த வகையிலே சொல்கிறோம். ஆனால், உங்களைப் பொறுத்தமட்டில் அந்த நிலை உண்டா? இலங்கைத் தமிழருக்காக புரட்சித் தலைவர் அவர்கள் எத்தனை உதவிகளைச் செய்திருக்கிறார்கள். இன நாயகத்தின் அடிப்படையில், அவர் வகிக்கின்ற பதவியின் கூப்பணமாக ராஜதந்திரத்தின் அடிப்படையில் பல்வேறு வகை யான பிரச்சினைகளைச் சொல்லமுடியாது என்று இலங்கைத் தமிழர்களே பாராட்டியிருக்கிற காட்சியைப் பார்க்கிறோம். இலங்கைத் தமிழர்களே இந்த அரசினைப் பாராட்டி இருக்கிற காட்சியைப் பார்க்கிறோம்.

இதில் மத்திய அரசுதான் உதவவேண்டும். மத்திய அரசைத் தான் நாம் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். அந்த நேரத்தில் கூட சொன்னார்கள்: இந்த இலங்கைப் போராளி களே, 'எங்களுக்கு வெளிநாட்டுப் படை வேண்டாம்' என்று உமா மகேஸ்வரன் சொல்லியிருக்கிறார், பாலகுமாரன் சொல்லியிருக்கிறார்.

'வெளிநாட்டுப் படை என்றால் எங்கள் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும். நீங்கள் தார்மீக ஆதரவு மட்டும் கொடுங்கள்' என்று அவர்கள் சொல்லியிருக்கிற காட்சியை நாம் பார்க்கிறோம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்து டைய நிலை என்ன? * * * நான் சொல்வதிலே தவறு இருந்தால், சொல்லுங்கள்.

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1987 மார்ச் 5]

திரு. கி. மனோகரன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே,
* *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படிப் பேசுவது முறை யல்ல, எல்லோரும் மறுப்பது கிடையாது சிலபேர் பேப்பரை பார்ப்பது இல்லை. ஆகவே அதை வைத்துச் சொல்லாதீர்கள். (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்) அதனாலே தவறு என்று சொல்ல முடியாது. (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): ** இது தேவைதானா? இல்லை. அங்கே இருக்கின்ற போராளிகள் என்ன சொல் கிறார்கள்? சிங்களவர் சிலரும் சிங்களத் தொழிலாளர்களும் அங்கே போராட்டத்தை.. (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒருவிவாதத்திற்காகச் சொல் கிறாரே தவிர, இப்படி (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்): இப்படி கொச்சை படுத்தக் கூடாது. கொச்சை அரசியல் நடத்தக்கூடாது என்பதற்காகத் தான். நியாயமான, நிதர்சனமான அரசியல் நடத்த வேண்டும். (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்) நான் சொல்வது வெளியே பேசுவது; நாடாளுமன்றத்திலே பேசியது அல்ல. அது மட்டும் அல்லாமல்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது முறை அல்ல. நீங்கள் அமருங்கள் (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்)

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்ற நிகழ்ச்சியினைப்பற்றி இங்கே சுட்டிக்காட்டி பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. இந்த அவையிலே சம்பந்தப்படாத ஒருவரைப்பற்றி, அங்கே பேசிய பேச்சை மறுப்பதற்கு, ** இங்கே நாம் விவாதம் செய்து நடவடிக்கைக் குறிப்பிலே இருக்குமேயானால் அது ஒரு தவறான முன் மாதிரியாக அமையும் என்பதால் அருள்கூர்ந்து நீங்கள் இதை நீக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** சம்பந்தப்பட்ட அந்த ரெஃபரன்ஸை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடு கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): இப்படி சில விஷயங்களை நான் சொல்கிறபோது என்னுடைய குற்றச்சாட்டு (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்) சொல்கிறபோது, நான் இவற்றைச் சொல்கிறபோது, இதய சுத்தியுடன் நீங்கள் இலங்கைத் தமிழருக்காகவும் போராடவில்லை, தமிழ்நாட்டு தமிழனுக்காகவும் போராடவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச் சாட்டு. நாஞ்சிலார் அவர்கள் பேசும்போது இதற்குப் பதில் அளிப்பார் என்று எதிர்பார்த்தே இவற்றைப் பேசுகிறேன். அங்கே இலங்கையிலே இருக்கிற நிலைமை என்ன? சிங்களத் தொழிலாளர்கள்...... (குறுக்கீடு) (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திடீர் திடீரென்று இப்படி எழுந்து நிற்கக் கூடாது. உட்காருங்கள். கொஞ்சம் விதிகளையெல்லாம் படித்துவிட்டு வாருங்கள். ஒரு உறுப்பினர் பேசும் போது இன்னொரு உறுப்பினர் எழுந்து நின்று பேசக்கூடாது. அவர் முடித்தால்தான் நீங்கள் பேச முடியும், அமருங்கள்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): அதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. இலங்கையில் இருக்கிற தமிழர்களுடைய நிலைமை என்ன? இலங்கையிலே இருக்கிற சில சிங்கள தொழிலாளர்களும் அவர்களை ஆதரிக்கிறார்கள் என்பதுதான் என்னுடைய வாதம். இதைப் பார்த்த ஜெயவர்த்தனே அறிக்கை விடுகிறார். சோழர் காலத்து படையெடுப்பைப் போல இந்த இந்திய நாட்டு அரசினுடைய ஆதரவைப் பெற்று இந்த மண்ணைப் பிடிக்கிற அபாயம் இருக்கிறதென்று, போராளிகளிடமிருந்து அந்த சிங்களத் தொழிலாளர்களை வேறுபடுத்த ஜெயவர்த்தனே அறிக்கை விடுகிறார். விடுதலைக்காக போராடுகின்ற பிரபாகரன், தமிழ்ச் சமுதாயம் அங்கே அடிபட்டுக்கொண்டிருக்கிறதே அதை நீக்கவேண்டுமென்று போர்க்கொடி உயர்த்திக் கொண்டிருக்கிற பிரபாகரன், அந்த நாட்டு மக்களுடைய, தொழிலாளர்களுடைய ஆதரவு போய்விடக்கூடாதே என்பதற்காக அந்த நாட்டு சிங்கள மக்களுடைய ஆதரவு வேண்டுமென்பதற்காக அந்தத் தலைவன் ஒரு அறிக்கை விடுகிறார்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



(பிற்பகல் 12-40)

''நான் தமிழகத்தில் திரு எம்.ஜி.ஆர். அவர்களை இது வரையில் சந்தித்ததில்லை. திரு. கருணாநிதியையும் இது வரையிலும் சந்தித்தது கிடையாது'' என்று அறிக்கை விடுகிறார். அதாவது போராடுகிற அவர், தமிழர்களுக்கு உரிமையைப் பெற்றுத் தர வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக ஒரு பொய்யைச் சொல்கிறார். அந்தப் பிரபாகரன் ''நான் எம்.ஜி.ஆர். அவர்களையும் இதுவரை சந்தித்தது கிடையாது. திரு. கருணாநிதியையும் பார்த்தது இல்லை'' என்று சொல்லி அறிக்கை விடுகிறார். அடுத்த நாளே ''தினகரன்'' பத்திரிகை ஒரு புகைப்படத்தை வெளியிடுகிறது. இதோ பாருங்கள் ''பிரபாகரனும் எம்.ஜி.ஆர்.-ம்'' என்று. இப்படி இலங்கைத் தமிழர்களையும் போராளிகளையும் காட்டிக் கொடுக்கிறீர்களே, இது நியாயமா? இது தர்மமா? இதற்கு என்ன பதில்? பேசுகிறபோது மதிப்பிற்குரிய நாஞ்சிலார் அவர்கள் பதில் சொல்லட்டும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னொரு உறுப்பினர் பேசும்போது அதற்குப் பதில் சொல்லலாம். கடைசியாகப் பேசும்போது பதில் சொல்லலாம். இப்போது உட்காருங்கள்.

திரு. அ. ரகுமான்கான்: * * (குறுக்கீடுகள்)

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: * * [குறுக்கீடுகள்]

திரு. அ. ரகுமான்கான்: * * [குறுக்கீடுகள்]

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): நான் போராளிகளைத் தவறு என்று சொல்லவில்லை. இந்த நிலை ஏன் என்றுதான் கேட்கிறேன்....

திரு. அ. ரகுமான்கான்: * *

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, போராளிகளே அறிக்கை விட்டிருக்கிறார்கள். என்ன தெரியுமா? ''நாளை ஒரு நாள் ஈழத்தில் பிரச்சினை முடிவடையுமானால், ஈழத்திற்குச் சுதந்திரம் கிடைக்கும் என்றால் அந்தச் சுதந்திரத்திற்குச் சொந்தக்காரர் தமிழ்நாட்டில் உள்ள தமிழக முதல்வர் அவர்கள்தான்'' என்று அறிக்கை விட்டிருக்கிறார்கள். இராஜதந்திரத்தின் அடிப்படையில் சி

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

வற்றைப் புரட்சித் தலைவர் அவர்களால் சொல்லமுடியவில்லை என்று போராடுகிற போராளிகளின் குழுவே அறிக்கை விட்டிருக்கிறது. எனவே அதற்கு மேலே சொல்ல முடியாது. இது வெளிநாட்டு விவகாரம். அதற்கு மேலே சொல்ல முடியாது.

அடுத்து மொழிப் பிரச்சினை. [குறுக்கீடுகள்]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய அனுமதி' யில்லாமல் எழுந்து பேசிய அத்தனை பேச்சுக்களும் நீக்கப் படுகின்றன. முறையோடு கேளுங்கள், அனுமதிக்கிறேன். ஒரே நேரத்தில் எல்லா உறுப்பினர்களும் எழுந்து நின்றால் நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடுகள்)

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே போராளிகளிடமிருந்து ஆயுதங்களைக் கைப்பற்றி அவர்களைக் கைது செய்தது யார் என்ற கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரே நேரத்தில் எல்லா உறுப்பினர்களும் எழுந்து பேசினால் என்ன செய்வது?

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆயுதங்களைக் கைப்பற்றியது யார்? மத்திய சர்க்காரும் மறுக்கிறது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதில் கேட்பதற்கு அல்ல, Point of order. ஏதாவது பிரச்சினை இருந்தால்தான் Point of order கேட்கலாம்...

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு தலைவர் அவர்களே, போட்டோ போட்டு ஏன் காட்டிக் கொடுத்தீர்கள் என்றுதான் கேட்கிறேன். (குறுக்கீடுகள்) போராளிகளின் ஆயுதங்களை இந்த நாட்டில் உள்ள தீய சக்திகள் பயன்படுத்திவிடக் கூடாது என்று அரசு நடவடிக்கை எடுத்திருக்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து இந்திப் பிரச்சினையைப் பொறுத்த மட்டில், புரட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்த வரையில் அவர் ஆளுகிற கட்சி என்றாலும் எதிர்க்கட்சி என்றாலும் இந்தித் திணிப்பதை எதிர்த்தார்கள். மத்திய அரசோடு கூட்டு என்றாலும் எதிர்த்திருக்கிறார். உறவு இல்லை என்றாலும் எதிர்த்திருக்கிறார். ஆனால் இன்றைக்கும் சொல்லுகிறோம். இந்தித் திணிப்பு இருக்கிறது. அந்த இந்தித் திணிப்பைக் கடுமையாக எதிர்க்க முடியும். அதை எதிர்த்துத் தடுத்து



நிறுத்துகிற சக்தி இன்றைக்குத் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவரின் பின்னால்தான் இருக்கிறதே ஒழிய நீங்கள் நினைப்பதுபோல் உங்கள் பின்னாலே இல்லை. இந்த நேரத்தில் இந்திப் பிரச்சினையில் தி.மு.க. எடுத்த நிலையை நான் இங்கே படித்துக் காட்ட விரும்புகிறேன். அருமை தி.மு.க. நண்பர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகப் படிக்கிறேன்.

''நேரு நாணயமான மனிதர். அவர் காலத்தில் — அவர் இருந்தவரை அவர் உறுதிமொழி காப்பாற்றப்பட்டது. அடுத்து வந்த இந்திரா காந்தி அம்மையார் அவர்களும் அவருக்கு ஏற்பட்ட நெருக்கடி காரணமாக அந்த உறுதிமொழியைத் தொடர்ந்து காப்பாற்றினார்கள்.'' இது நான் சொல்வதில்லை. திரு. கருணாநிதி அவர்கள் பேசி 4–10–1986 அன்றைய முரசொலியில் வந்திருக்கிறது. 4-10–1986 தேதி — பக்கம் 3 — பத்தி 2.

அருமை திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். 1969 ஆம் ஆண்டு 169 பிரிவு அலுவலகங்களில் இருந்த இந்தி 1982 ஆம் ஆண்டு 680 பிரிவு அலுவலகங்களில் புகுத்தப்பட்டது. ''நேரு காலத்திலும் இந்திரா காந்தி காலத்திலும் திணிப்பு இல்லை'' என்று சொல்கிறார் உங்கள் கட்சித் தலைவர். ஏன் இந்த இரட்டை வேடம்? மதிப்பிற்குரிய நாஞ்சிலார் அவர்கள் நாடாளு மன்றத்திலே இருந்தவர்கள். 1978 ஆம் ஆண்டில் மதிப்பிற்குரிய முன்னாள் அமைச்சர் திரு. எஸ். டி. எஸ். அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு தீர்மானம் கொண்டு வருகிறார். ''அரசியல் அமைப்புச் சட்டத்திலே நேருவினுடைய உறுதிமொழியைச் சேர்க்க வேண்டுமென்று''. அந்த நேரத்திலே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த குடந்தை இராமலிங்கம் அவர்கள் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும், நேருவின் உறுதிமொழியைச் சேர்க்க வேண்டுமென்று பேசியிருக்கிறார்கள். திண்டிவனம் இராமமூர்த்தி அரசியல் சட்டத்தைத் திருத்தியாக வேண்டும். நேருவின் உறுதிமொழியை அதிலே இணைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். 4 நாட்கள் நடைபெறுகிறது விவாதம். நாஞ்சிலார் அவர்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அந்த நடவடிக்கைப் புத்தகங்களை படித்துப் பாருங்கள். ஒரு இந்தி வெறியர், நாடாளுமன்ற உறுப்பினர், ''நீங்கள்தானே எதிர்க்கிறீர்கள், மற்றைய கட்சிகள் அமைதியாக இருக்கிறார்களே'' என்று கேட்கிறார். அப்போது எங்கள் இயக்கத்தில் இருந்த திரு. பாலாபழனூர் அவர்கள் எழுந்து சொல்கிறார், ''இல்லை, இல்லை, அவர்களும் எதிர்ப்பார்கள், பொறுங்கள்'' என்று சொன்னார். விவாதம் தொடர்ந்து 3 நாட்கள் நடைபெற்றது. திராவிட முன்னேற்றக் கழகம் அந்த விவாதத்திலே கலந்து கொண்டே பேசவில்லையே! இது எப்படி நியாயம், இது எப்படி தர்மம்?

[திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்] [1987 மார்ச் 5

1967 ஆம் ஆண்டு ஆட்சி மொழி சட்டத் திருத்தம் வருகிற போது அண்ணா அவர்களைப் பார்த்தார்கள். அன்றைக்கு தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த திரு. சி. சுப்ர மணியம் அவர்களைப் பார்த்தார்கள். திரு. ஏ. கே. கோபாலனைப் பார்த்தார்கள். திரு. கல்யாணசுந்தரத்தைப் பார்த்தார்கள். நான் சொல்கிற விவரங்கள் அத்தனையும் முரசொலிப் பத்திரிகையில் வந்த செய்திகள்தான். அன்று கருத்து தெரிவித்த திரு. கல்யாணசுந்தரம் அவர்களும், திரு. ஏ. கே. கோபாலன் அவர்களும் ஒன்றைச் சொன்னார்கள். ''இந்தி வெறியர்கள் கடுமையாக இருக்கிறார்கள், வேறு வழியில்லை, தென் மாநிலங்களின் முதல்வர்களைக் கூட்டி, முதல்வர்கள் மாநாடு மூலம் மத்திய அரசை நாம் வற்புறுத்த வேண்டும், அதைவிட வேறு வழியில்லை'' என்று சொன் னார்கள். அண்ணா அவர்கள், 'நான் இந்த ஆட்சி மொழிச் சட்டத்திலே திருப்தி அடையவில்லை, காலம் வரும்போது போராடுவேன், போராட்டத்திற்குத் தயார் செய்வேன்' என்று சொன்னார்கள். 'இது ஆலோசிக்கப்பட வேண்டிய கருத்து, இதை நடைமுறைப்படுத்துவேன்' என்று சொன்னார்கள். அண்ணாவை இயற்கை காவு கொண்டுவிட்டது. பிறகு 8 ஆண்டுக் காலம் ஆட்சியில் இருந்த நீங்கள் முதலமைச்சர்கள் மாநாட்டைக் கூட்டினீர்களா? கூட்டாவிட்டாலும் பரவா யில்லை. 1978 ஆம் ஆண்டு அண்ணாவினுடைய கனவு நினைவாகிறது. தமிழகத்தினுடைய மூத்த தலைவர்கள் எண்ணியதை எல்லாம் நிறைவேற்றுகிற வகையிலே, தென் மாநில முதல்வர்கள் மாநாட்டை புரட்சித் தலைவர் அவர்கள் கூட்டினார்கள். 'இந்தியைத் திணிக்கக் கூடாது, இந்தியைத் திணித்தால் நாங்கள் எதிர்ப்போம்' என்று ஒரு போர் பிரகடனம் செய்யும் வகையிலே புரட்சித் தலைவர் அவர்கள் சென்னையிலே தென் மாநில முதல்வர்கள் மாநாட்டைக் கூட்டுகிறார்கள். 17–7–1978 அன்று தென் மாநில முதல்வர்களுடைய மாநாட்டை புரட்சித் தலைவர் அவர்கள் கூட்டுகிறார்கள். 16-7-1978 அன்று, அதாவது முந்தைய நாள், முரசொலிப் பத்திரிகையில் திரு. கருணாநிதி அவர்கள் எழுதுகிறார்கள். 'இந்திக்கு லாலி பாடுபவர்கள் அண்ணா தி.மு.க.வினர். இருமொழித் திட்டத்தை எதிர்ப்பவர்கள் மற்ற மாநில முதல்வர்கள். இந்தியை எதிர்க்க தென் மாநில முதல்வர்கள் மாநாடு என்ற கூற்றினை நம்பத்தான் முடியுமா? இப்படிப்பட்டவர்கள் இந்தியை எதிர்ப்பார்கள் என்று நம்பி, அவர்கள் பின்னாலே போனால் மண் குதிரையை நம்பி ஆற்றிலே இறங்கிய கதைதான். தமிழ் மொழி பாதிக்கப் படாது' என்று எழுதுகிறார்கள். அருமை நண்பர்களே, சிரிக்க வேண்டாம், சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1978 ஆம் ஆண்டு, இதே உங்கள் தலைவர், ''மும்மொழித் திட்டத்தை வைத்திருக்கிற முதல் அமைச்சர்களை வைத்து மாநாட்டை நடத்தினால், முடியுமா? இது ஏமாற்று வேலை' என்கிறார். ஆனால் 1986 ஆம் ஆண்டு இதே முதல் அமைச்சர் களுக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறாரே, இந்த முரண்பாடு



1987 மார்ச் 5] [திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

ஏன்? உண்மையிலேயே இந்தியை எதிர்க்க வேண்டுமென்ற உணர்வு இருந்தால், அண்ணா நினைத்ததை, 1967 ஆம் ஆண்டு தமிழகத்திலுள்ள அரசியல் தலைவர்கள் சொல்லிய கருத்தை நடைமுறைப்படுத்துகிற வகையில் 10 ஆண்டுகளுக்குப் பின்னால் தென் மாநில முதல்வர்கள் மாநாட்டைக் கூட்டிய புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்ட வேண்டாம், அவரை வக்கணை பேசலாமா? உண்மையிலேயே மொழிப் பற்று உங்களுக்கு இருக்கிறதா? உண்மையிலேயே இந்தி மொழித் திணிப்பைத் தடுக்க வேண்டுமென்ற உணர்வு உங்களுக்கு இருக்கிறதா? இது நியாயம்தானா என்று அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான் பேசப் போகிறாரே, அப்போது பேசலாம். (குறுக்கீடு) உங்களுக்குத்தான் அதிக நேரம் கொடுத்திருக்கிறேன்.

திரு. ரகுமான்கானுக்கு 40 நிமிட நேரம் கொடுத்தேன். இன்றைக்கு திரு. பொன் முத்துராமலிங்கத்தின் விவாதம் முடிய ஒரு மணி நேரமாயிற்று.

திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவரவர்களே, 1978 ஆம் ஆண்டு தமிழகத்தின் முதல்வரவர்கள் தென் மாநில முதலமைச்சர்களைக் கூட்டி மாநாடு நடத்திய நேரத்தில், அந்த மாநாட்டிலே கலந்துகொண்டவன் நான். அதிலே கர்நாடக மாநில முதலமைச்சரவர்கள் இருந்தார்கள். திரு. சென்னா ரெட்டி அவர்கள் இருந்தார்கள். அவர்கள் அத்தனைபேரும் சொல்லியதெல்லாம், இந்தித் திணிப்பை நாங்கள் எதிர்க் கிறோமே தவிர, மும்மொழித் திட்டத்தை எந்தக் காரணம் கொண்டும் கைவிடத் தயாராக இல்லை என்பதுதான். இதை உங்களுடைய நினைவுக்கு வைக்கிறேன்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): உங்களுடைய தலைவர் கேட்டிருப்பது, இந்தியை இவர்களை வைத்தா எதிர்க்க முடியும் என்பதுதான். இன்றைக்கும் அதே நிலையில் உள்ள கேரள முதலமைச்சருக்கும், கர்நாடக முதலமைச்சருக்கும், திரு. பரூக் அப்துல்லாவுக்கும் கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஏன் இந்த முரண்பட்ட நிலை?

(பிற்பகல் 12-50)

1978-லே அண்ணாவினுடைய, தமிழக அரசியல் தலைவர் களுடைய கனவை 11 ஆண்டுகளுக்குப் பிறகு நினைவாக்கிய புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்த நடவடிக்கைகளைப் பற்றி வக்கணை பேசுகிறீர்கள், கொச்சைப்படுத்துகின்றீர்கள். நீங்கள் 1986–லே எழுதியிருக்கிறீர்களே, மும்மொழி திட்டம் வைத்திருக்கிற அந்த முதலமைச்சர் அவர்களுக்கு. அந்த

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் [1987 மார்ச் 5
அடிப்படையிலேதான் இதுவும். எனவே இந்தித் திணிப்பைப்
பொறுத்தமட்டில், புரட்சித் தலைவர் அவர்கள் எதிர்க்கட்சி
யிலேயிருந்து 1978-லே எதிர்த்திருக்கின்றார்கள், 1983-லே
எதிர்த்தார்கள்; 1985-லே டி.வி.யிலே, சுற்றறிக்கை வருகின்ற
போது. உடல்நலத்தைப் பரிசோதிக்கச் சென்ற அந்தத் தலைவர்,
அமெரிக்காவின் மண்ணிலே இருந்து இப்படிப்பட்ட அறிக்கை
களைத் தமிழகம் தாங்காது என்று குரல் கொடுத்திருக்கிறார்கள்.
பிரதமரே, நீங்கள் அதை வாபஸ் பெறவேண்டும். ஒரு
வாக்குறுதியும் அளிக்க வேண்டும், உங்களுடைய பாட்டனுடைய
வாக்குறுதி காப்பாற்றப் பெறவேண்டும் என்ற நிலையை
வைத்திருக்கின்றார்கள். அதை வைத்துக்கொண்டுதான் இந்த
அரசாங்கம் போராடிக்கொண்டிருக்கின்றது. மறைந்த இந்திரா
காந்தி அம்மையார் அவர்களே, 1965 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம்
இந்த நாட்டிலே ஏற்பட்ட போராட்டத்தினுடைய விளைவு
களைப் பார்வையிட வந்தபோது நிருபர்களிடம் சொல்கிறார்கள்.
இந்திய நாட்டினுடைய ஒருமைப்பாட்டை காப்பாற்றவேண்டும்
என்றுதான் இந்தியை ஆட்சி மொழியாக்கினோம். அது
முடியாது என்று ஆகிவிட்ட பிறகு We must rethink about it
என்று இந்திரா காந்தி அம்மையார் அவர்களே சொல்லியிருக்
கிறார்கள். 1978 ஆம் ஆண்டிலே பேசியிருக்கின்றார்கள்.
நாடாளுமன்றத்தில் அரசியல் சட்டத்திலே சேர்க்கவேண்டும்
என்று பேசியிருக்கின்றார்கள். அன்று கல்வி அமைச்சராக
இருந்த டாக்டர் திரிகுண சென் அவர்கள் சொல்லியிருக்
கிறார்கள். நேருவினுடைய உறுதிமொழியை அரசியல்
அமைப்புச் சட்டத்திலே சேர்க்க வேண்டும் என்று சொல்லி
யிருக்கின்றார்கள். எத்தகைய நீதியான்? அரசியல் அமைப்புச்
சட்டத்திலே சேர்க்கவேண்டுமென்று வாதாடுகிறார்கள்.
எல்லோரையும் அரவணைத்துச் சென்று அதை அடைய
வேண்டும். இராஜதந்திர அடிப்படையிலே இந்த ஆட்சி
அதற்கான நடவடிக்கையை எடுத்துக்கொண்டு இருக்கின்றபோது
தான், எத்தனையோ முரண்பாடான போராட்டத்தை நடத்தி
யிருக்கிறார்கள். போராட்டம் தேவையற்றது என்று
சொன்னார்கள். போராட்டம் தேவையில்லை என்ற கருத்தைச்
சொன்னார்கள்.

அன்றைக்கு அண்ணா அவர்கள் சொன்னார்கள். இந்தியை
எதிர்க்கின்ற ஆட்சி இங்கே இருக்கின்றது. மாணவ சமுதாயமே
'நீ போராட வேண்டியதில்லை. இந்திக்கு எதிர்ப்பு தெரிவிக்க
ஆட்சி இங்கே வலுவாக இருக்கின்றது' என்று சொன்
னார்கள். என்ன செய்யத் தவறி இருக்கின்றார்கள்?
இங்கே. சட்டமன்றத்திலே, தீர்மானத்தையே போட்டிருக்
கின்றார்களே! வேறு எதையும் அவர்கள் செய்யவில்லை.
அதைத்தான் சொன்னார்கள். நீங்கள் யாரும் எதிர்க்க
வேண்டியதில்லை. அது தேவையற்றது. அதற்கு அரசாங்கமே





இருக்கின்றது என்று சொன்னார்கள். ஆனால் இதிலே
போராட்டத்தை உருவாக்கி இருக்கின்றார்கள். நான் அந்தப்
போராட்டத்திற்குள்ளே செல்ல விரும்பவில்லை. போராட்டம்
எங்கோ ஆரம்பித்து எங்கோ வந்தது. அண்ணா அவர்கள்
உருவாக்கி வைத்திருந்த இந்தி ஆதிக்க எதிர்ப்பு உணர்வினை
ஒரு தனிப்பட்டவருடைய அரசியலுக்காக, சுயலாப அரசியலால்,
அண்ணா அவர்கள் 30 ஆண்டுக்காலம் இந்த மண்ணிலே
உருவாக்கி வைத்திருந்த இந்தி எதிர்ப்பு உணர்வினை, மூன்று
மாத காலத்திலே திட்டமிட்டு குலைத்துவிட்டார்கள். அன்று
அண்ணா அவர்கள் சொன்னார்கள். காங்கிரஸ்காரர்களின்
ஆட்சி இருக்கும் வரையில் போராட முடியாது. நீங்கள்
பின்னாலே இருந்து உதவுங்கள் என்று சொன்னார்கள்.
தொழிலாளர்களே பின்னாலே உதவுங்கள். மாணவர்களுக்குப்
பின்னாலே உதவுங்கள். இன்றைக்கு கொச்சைப்படுத்துகின்ற
அரசியலாக இருக்கிறது. தவறாக நினைத்துக்கொள்ள
வேண்டாம். பத்திரிகைக்காரர்கள் எழுதுகிறார்கள். 'காங்கிரஸ்
காரர்களுக்கு தாய்மொழி உணர்வே கிடையாது, சூடே
கிடையாது, சுரணையே கிடையாது' என்று போராட்டத்தின்
போது எழுதியிருக்கின்றார்கள் இன்று இருக்கின்ற நிலைமையில்
போராட்டம் என்று உருவாக்கி, இந்தத் தமிழ்நாட்டிலே
சட்டத்தையும் ஒழுங்கையும் கெடுக்கின்ற நிலைமைகளை
உருவாக்கியிருக்கின்றார்கள். நாடு முழுவதும் வெடிகுண்டு
சம்பவங்கள் (குறுக்கீடுகள்).

இன்றைக்கு இது தொடர்பான நிகழ்ச்சிகளால், கடுமையான
வறட்சி ஏற்பட்டிருக்கிறது. நாம் எல்லோரும் அதைப்பற்றி
எடுத்துப்பேசுகிறோம். தமிழகத்திலே எந்த விவசாயியும் காசு
இருந்தால்கூட கிணற்றை ஆழப்படுத்த முடியவில்லை.
இருக்கின்ற சூழ்நிலைகளில் தோட்டாக்கள் விநியோகத்தையும்
அரசு தடுத்து தடை விதித்திருக்கிறது. நாம் மதுரையிலே
நடைபெற்ற சம்பவம் பற்றி பேசுகிறோம். வெடிகுண்டு
சம்பவத்தில் திரு. மணிமாறன் தலைமைத் தபால் நிலையத்
திற்குப் போகிறார்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, வெடிகுண்டு சம்பவத்தைப் பற்றி இங்கே பேசலாமா
என்று அறிய விரும்புகிறேன். பேசும்போது objection பண்ணி
னார்கள். கேஸ் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேச்சைக் கேளுங்கள்.
நான் பிறகு சொல்கிறேன். (குறுக்கீடு) எந்த கோர்ட்டிலே?

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, புலன் ஆய்வுத் துறையிலே கேஸ் நடக்கிறது. பல
கோர்ட்டுகளிலே கேஸ் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சப் மாஜிஸ்ட்ரேட்,
டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிலேதானே?

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசலாமா வேண்டாமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசுவது பற்றி தவறு இல்லை. பேசலாம்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. மணிமாறன் என்பவர் மதுரை தபால் நிலையத்திற்குப் போகிறார். அவர் படம் போட்டு எல்லா நடுநிலை பத்திரிகைகளிலும் செய்தி வந்திருக்கிறது. தினமலர் பத்திரிகையில் அவர் உடலைப் படம் பிடித்து போட்டிருக்கிறார்கள். கை வேறு, உடல் வேறு சிதறி கோரமாக அவர் செத்துப்போனது குறித்து செய்தி போட்டிருந்தார்கள். திரு. மணிமாறன் தி.மு.க.வைச் சார்ந்தவா, உறுப்பினர் எண் 2434 என்று தினமலர் பத்திரிகையில் செய்தி போட்டிருந்தார்கள். அதை இதுவரையில்.... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படிக் குறுக்கிடுவது. முறையல்ல. நீங்கள் பேசும்போது அதுகுறித்துப்பதில் செல்லலாம்

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெடி குண்டு சம்பவத்திற்குக் காரணம் தி.மு.க. என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால் நாங்கள் அதுகுறித்து திருப்பி சொல்லக்கூடாதா? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படிச் செய்வது முறையல்ல. நீங்கள் பேசும்போது அதுபற்றி பேசலாம்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் தி.மு.க.வைச் சார்ந்தவர் என்று பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. அவருடைய உறுப்பினர் எண் 2434 என்று செய்தி வந்திருக்கிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்குகளைப் பொறுத்தவரையில் facts can be brought here. Opinions சரியா தப்பா என்று நாம் கேட்கக் கூடாது. நடந்த சம்பவங்களை இங்கே சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாட்டிலே வெடிகுண்டு சம்பவம் நடைபெற்றது உண்மை. ஒருவர் இறந்ததும் உண்மை. அது பத்திரிகைகளில் வந்ததும் உண்மை. அதனால் அவர் பேசுகிறார். நானும் அனுமதித்தேன்.



மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : இது ஒரு கட்சியின் பத்திரிகை யில் வந்ததல்ல. தினமலர் போன்ற நடுநிலைப் பத்திரிகைகளில் வந்திருக்கிறது. அவர் தி.மு.க.வைச் சார்ந்தவர். 22வது வட்டாரத்தைக் சார்ந்தவர். உறுப்பினர் எண் 2434 என்று வெளியிடப்பட்டிருக்கிறது. இதுபற்றி இதுவரையில் முரசொலியில் ஏதாவது மறுப்பு செய்தி வெளியிட்டிருக்கிறார்களா? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒருவர் இறந்தது பற்றி தான் பேசிக்கொண்டிருக்கிறார். அதை நான் தடுக்க முடியாது.

திரு. அ. ரகுமான்கான் : பத்திரிகையில் வந்த செய்தியைப் பற்றி இங்கே பேசலாமா?

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : அதை மட்டும் வைத்து நான் பேசவில்லை. (குறுக்கீடு) அப்படி என்றால் பத்திரிகையில் வந்த செய்தியை வைத்து முதலமைச்சர் பேசினார் என்று அதே முரசொலியில் செய்தி வந்திருக்கிறதே, அது எந்த வகையில் நியாயம்?

திரு. அ. ரகுமான்கான் : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்களுக்குள் பேசிக்கொள்ளக் கூடாது. தமிழ்நாட்டிலே வெடிகுண்டு சம்பவம் நடைபெற்றிருக்கிறது. ஒருவர் இறந்திருக்கிறார். அதைக்கூட இந்த அவையிலே உறுப்பினர்கள் சொல்லவில்லையென்றால் வேறு எங்கே போய் சொல்வது? (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : அவர் செத்ததற்கு ஆதாரம் பத்திரிகையில் வந்திருக்கிறது. நேற்றைய தினம் அதுகுறித்து பத்திரிகையில் வந்ததை வைத்துத்தான் பேசுகிறேன். அவர் எந்தக் கட்சியைச் சார்ந்தவர் என்றும் வந்திருக்கிறது. (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்றவர்கள் பேச்சு அவை நடவடிக்கைகள் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அவை நடவடிக்கைகள் குறிப்பில் ஏறாது. வேண்டுமானால் உறுப் பினர்கள் பதில் சொல்லும்போது அதுபற்றி பேசலாம். திரு. நடராசன் உங்கள் இடத்தில் போய் அமருங்கள். நடந்த நிகழ்ச்சியைப் பற்றிதான் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) ஏன் இப்படி பதட்டப்படுகிறீர்கள்? உறுப்பினர்கள் எல்லோரும் உட்காருங்கள். இது முறையல்ல, வேண்டாம். (குறுக்கீடு)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1987 மார்ச் 5

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றை இந்த நேரத்தில் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அவையிலுள்ள ஒரு கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களை நீக்கி வைத்த நேரத்தில், அதுபற்றி விரிவாக கட்டுரை எழுதப்பட்டதே, ஆனால் அதே நேரத்தில் வெடிகுண்டு சம்பவத்தைப் பொறுத்தவரையில் உறுப் பினர் எண் 2434 எண்ணுள்ள தி.மு.க. தொண்டன் என்று எல்லா நடுநிலைப் பத்திரிகையிலும் செய்தி வந்திருக்கிறதே, முரசொலி பத்திரிகையில் இதுவரையில் ஒரு மறுப்பு செய்தி கூட இல்லையே, அது ஏன்? நாட்டின் பல்வேறு இடங்களில் வெடிகுண்டு சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. தமிழ்நாட்டிலே நடைபெற்ற எந்த ஒரு வெடிகுண்டு சம்பவத்தைப் பற்றியாவது இவர்கள் ஒரு செய்தியாவது வெளியிட்டிருக்கிறார்களா? செய்தியை வெளி யிடுங்கள் என்று நாம் யாரையும் கட்டுப்படுத்த முடியாது, ஆனாலும் நோக்கங்களைப் பாருங்கள். பல இடங்களில் நடை பெற்ற சம்பவங்களில் தி.மு.க. வைச் சார்ந்தவர்கள் சம்பந்தப் பட்டிருக்கிறார்கள். ஒருவர் ஒப்புதல் கூட கொடுத்திருக்கிறார். மாண்புமிகு தலைவரிடத்தில் ஆதாரத்தோடு அதை கொடுத்திருக் கிறேன். (குறுக்கீடு)

திரு. அ. ரகுமான்கான் : அப்படி என்றால் திரு. மலர்மன்னன், திரு. எல். கணேசன் போன்றவர்களை எல்லாம் கைது செய்திருக் கிறீர்களே, அவர்கள் குற்றவாளிகள் என்பதற்கான ஆதாரம் உங்களிடம் இருக்கிறதா? (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் முடிக்கட்டும். (குறுக்கீடு)

திரு. அ. ரகுமான்கான் : நாங்கள் பேசும்போது ஏன் சந்தர்ப்பம் கொடுக்கவில்லை? (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதே விவகாரம் குறித்தா? (குறுக்கீடு) (கூச்சல்—குழப்பம்)

(பிற்பகல் 1-00)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள், திரு. எல். கணேசனோ மற்றவர்களோ கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லலாம். That is a fact. அவர்கள் குற்றவாளியா இல்லையா என்றுதான் நாம் சொல்ல முடியாதே தவிர, கைது செய்யப் பட்டிருக்கிறார்கள் என்று சொல்லலாம். (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : நான் ஆதாரத்தைக் கொடுத் திருக்கிறேன்; பேரவைத் தலைவர் அவர்களிடத்தில் மாண்புமிகு இருக்கிறேன். (கூச்சல்-குழப்பம்) கோர்ட்டிலே வழக்கு இல்லை. (கூச்சல்-குழப்பம்).



1987 மார்ச் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சார்ஜ் ஷீட்டே போட வில்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. ப. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எம். ரவி என்கிறவர் தொண்டர் அணியைச் சார்ந்தவர் எண் 155 விஜயவாடாவிலிருந்து ஒரு கடிதம் எழுதுகிறார். அந்தக் கடிதத்திலே அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொண்டர் அணி எண். 155 என்று சொல்கிறார். அவரே, வெடிகுண்டு வைத்ததை ஒத்துக்கொண்டு, அவர் எழுதிய கடிதத்தைத் தங்கள் பார்வைக்குச் சமர்ப்பித்து, அதை இங்கே நான் படிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். விஜயவாடாவிலே இருக்கின்ற அவர், மாநிலங்களவை உறுப்பினர் திரு. பாலு அவர்களுக்குக் கடிதம் எழுதுகிறார். அதிலே தவறாக ஒன்றும் எழுதவில்லை. "நான் விஜயவாடாவிலே இருக்கிறேன்; எனக்கு நீதிமன்றத்தினுடைய பெயில் வாங்கித்தாருங்கள்" என்றுதான் எழுதுகிறார். அந்த ஆதாரத்தைக் கொடுத்தேன். தொண்டர் அணி எண். 155 என்று இருக்கிறது. 'நான் விஜயவாடாவிலே தங்கியிருக்கிறேன், எனக்கு ஆண்டிசிபேட்டரி பெயில் வாங்கித் தாருங்கள்' என்று எழுதுகிறான். வழக்கு போடவில்லை, இன்னும் சார்ஜ் ஷீட் போடப்படவில்லை.

திரு. அ. ரகுமான்கான் : அதற்குப் பதில் சொல்வதற்கு எங்களை அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கடிதத்தை என்னிடம் கொடுத்தார். கடிதத்தைப் பார்த்துவிட்டுத்தான் நான் அனு மதித்தேன். (குறுக்கீடு) கடிதத்தைப் பார்த்தேன்; கடிதத்தைப் பார்த்துவிட்டு அனுமதித்திருக்கிறேன்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : தொண்டர் அணியைச் சார்ந்தவர், 155 என்ற எண்ணை உடையவர் திரு. டி. ஆர். பாலு எம். பி.க்கு விஜயவாடாவிலே தங்கியிருக்கிறவர் எழுதுகிறார். தனக்கு நீதிமன்றத்திலே ஆண்டிசிபேட்டரி பெயில் பெற வேண்டு மென்று எழுதுகிறார். விஜயவாடாவிலேயிருந்து ஒன்றைச் சொல்லியிருக்கிறார். அந்தக் கடிதத்தைக் கொடுத்திருக்கிறேன். அதே திரு. ரவி என்கிறவர், தொண்டர் அணியைச் சார்ந்த 155 என்ற எண் உடையவர், அவருடைய நண்பருக்கு திரு. கன்னி யப்பன் என்பவருக்கு எழுதி, எனக்குக் கிடைக்கப்பெற்ற கடிதத்தை உங்களிடம் கொடுத்திருக்கிறேன். அதிலே அவர் ஒத்துக்கொள்கிறார். அந்த 155 எண் உடைய தொண்டர் அணியின் தலைவராக இருக்கிற அவர், விஜயவாடாவிலிருந்து எழுதுகிறார். குமார் ரவியும் நானும் சேர்ந்துதான் வேட்டு வைத்தோம், இதை அங்கே இருக்கிறவர்களிடம் சொல்லுங்கள் என்று எழுதிய கடிதத்தில், நானும் குமார் ரவியும்தான் வேட்டு வைத்தோம் என்று காவல் நிலையத்தில் தட்சிணாமூர்த்தி மூலம் கூறவும் என சொல்கிறார்.

[1987 மார்ச் 5

**திரு. அ. ரகுமான்கான் :** அந்தக் கடிதத்தைக் காட்டச் சொல்லுங்கள்; அதைப் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் பார்த்து விட்டேன். வேண்டுமென்றால் என்னுடைய அறையிலே வந்து பார்த்துக் கொள்ளுங்கள். (குறுக்கீடு) வேறு யார் பார்ப்பது? அறையிலே வந்து பார்த்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, வேண்டுமானால் அவரும் கேட்கின்ற வகையிலே தாங்களே படித்து விடுங்களேன் அந்தக் கடிதத்தை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை நானா படிக்க வேண்டும்? அவரே படிக்கட்டும்.

**திரு. அ. ரகுமான்கான் :** திரு. பாலசுப்பிரமணியம்தான் ஒரு வெடிகுண்டு வைத்தார் என்று எழுதி வைத்துக்கொண்டால் சரியாக ஆகிவிடுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** யார் மீதும் திடீரென்று குற்றச்சாட்டைச் சொல்லிவிட முடியாது. யாரோ ஒரு உறுப்பினர் மீது திடீரென்று யாரோ ஒரு லெட்டரை எழுத முடியாது. ஆகவேதான் அந்த ப்ராபபிளிட்டியை பார்த்துத்தான் நான் அனுமதித்தேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** சபையிலே இல்லாத திரு. பாலுவைப் பற்றிப் பேச முடியுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சபையிலே இல்லாதவரைப் பற்றிப் பேச முடியாது என்றால் 234 பேரும் நம்மைப்பற்றித்தான் பேசிக்கொண்டே இருக்க வேண்டும். சபைக்கு வெளியிலே இருக்கக் கூடியவர்களைப் பாதுகாப்பதற்கும், சபைக்கு வெளியிலே இருக்கக் கூடிய விவகாரங்களைப் பேசுவதற்கும், அவர்களுடைய குறைபாடுகளைப்பற்றிப் பேசுவதற்கும்தான் இந்த மன்றம். ஆகவே, இந்த அவைக்கு வெளியிலே எது நடந்தாலும் அதைப்பற்றி நாம் விவாதிக்கலாம்.

**திரு. அ. ரகுமான்கான் :** அந்தக் கடிதம் எப்படிக் கிடைத்தது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நாட்டிலே இறந்து போன குடும்பத்தைப்பற்றி யாருமே பேசவில்லை. இறந்துபோனவர்களைப்பற்றி சிந்தனையே இல்லை. நம்முடைய கட்சிக்காரர்களைப்பற்றித்தான் பேசுவோம். (குறுக்கீடு)

வெடிகுண்டு வைக்கப்பட்டு, ஒருவர் சாகடிக்கப்பட்டிருக்கிறார். அவர் மீது உங்களுக்குக் கரிசனம் கிடையாது; அவர் மீது எண்ணமே கிடையாது. கட்சி அரசியலைப் பாதுகாக்க முயற்சி செய்கிறீர்களே தவிர, பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்பு வேண்டாமா? (குறுக்கீடுகள்).



1987 மார்ச் 5]

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்; (பேரவைத் துணைத் தலைவர்):** பேரவைத் தலைவர் அவர்களே, தங்களிடம் கடிதத்தைக் காண்பித்திருக்கிறேன். இப்படிக் கடிதத்தை சட்டமன்றத்தில் ஆதாரமாக வைப்பது புதுமை இல்லை. (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முழுமையாகக் கேட்டுவிட்டு, பதில் சொல்லுங்கள்.

**திரு. இ. மனோகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருமை நண்பர், மாண்புமிகு உறுப்பினர், பேரவைத் துணைத்தலைவராக இருக்கிற திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் இங்கே பேசும்போது தன்னிடம் கடிதம் இருக்கிறது என்றும் அதை உங்களிடம் காட்டினார் என்றும் கூறினார்கள். அப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் எழுந்து உங்களிடம் மட்டும் அந்த கடிதத்தைக் காட்டினால் போதுமா, எங்களுக்குத் தெரிய வேண்டாமா என்று கேட்டார்கள். இடையிலே அருமை நண்பர் மாண்புமிகு திரு. இராமச்சந்திரன் அவர்கள் கேள்வி ஒன்றை எழுப்பி, நீங்களே அந்தக் கடிதத்தைப் படித்துவிடுவதுதானே என்று சொன்னார்கள். அதைப் படியுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் துணைத் தலைவரே படிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: (பேரவைத்துணைத் தலைவர்):** பேரவைத் துணைத் தலைவரவர்களே, விஜயவாடாவில் தங்கியிருப்பவர் நாடாளுமன்ற உறுப்பினருக்குத் தெரிவிக்கிறார். விஜயவாடாவிலிருந்து எழுதிய கடிதத்தில், 'குமார் ரவியும் நானும்தான் வெடி வைத்தோம்; இதை காவல் நிலையத்தில் தட்சிணாமூர்த்தியிடம் தெரிவியுங்கள்; அவரைப் பிடித்த மறுநாளே நான் வந்து ஆஜராகி விடுகிறேன்' என்று எழுதியிருக்கிறார். ஆக, இந்த வகையில் மதுரை உயிர்ச் சேதம்.......

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவரவர்களே, அந்தக் கடிதத்தை முழுமையாக வாசிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்):** தலைவரவர்களே, அந்தக் கடிதத்தை நான் தங்களிடம் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) கடிதத்தை உங்களிடம் கொடுக்க முடியாது, தலைவரிடம் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்)

[1987 மார்ச் 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** படிக்கச் சொல்கிறேன்.
என்னிடம் காட்டி, அனுமதி பெற்றிருக்கிறார். நான் அந்தக்
கடிதத்தைப் பார்த்திருக்கிறேன். வேண்டுமானால் ஜெராக்ஸ்
பண்ணி எல்லோருக்கும் கொடுக்கிறேன். (குறுக்கீடுகள்) இப்
போது கொடுக்க முடியாது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** (பேர
துணைத் தலைவர்); நாங்கள்தான் வெடிகுண்டு வைத்தோம்
என்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருக்கிறபோது (குறுக்
கீடுகள்) நான் படித்ததுபோக மீதி எல்லாம் குடும்ப விவ
காரங்கள்; அது இங்கே தேவையில்லை. ஆக, நடைபெற்ற
மதுரை சம்பவத்திற்கு விஜயவாடாவிலிருந்து குமார் ரவியும்
நானும்தான் வெடிகுண்டு வைத்தோம் என்று ஒப்புதல் வாக்கு
மூலம் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, மதுரையிலே வெடி
குண்டு சம்பவத்தினால் சின்னாபின்னமாகி இருக்கிற சூழ்நிலை
ஏற்பட்டிருக்கிறது.

**டாக்டர் கே. சௌரிராஜன்:** ஸ்பீக்கர் சார், அந்தக் கடிதத்தை
இங்கே படிப்பது இன்வெஸ்டிகேஷனை அஃபக்ட் பண்ணுவதா
காதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெடிகுண்டு வைத்த சம்பவம்
நாமெல்லாம் அறிந்ததுதான். குண்டு வெடித்தவர்களை நாம்
தெரிந்து கொள்ள வேண்டாமா? குண்டு வெடித்தவர்களைப்
பிடித்துக் கொடுப்பதில் நமக்கு அக்கறை வேண்டாமா? (குறுக்
கீடுகள்) தமிழ்நாட்டுக்காரனுக்கு வெடிக்கவே தெரியாது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் (பேரவை
துணைத் தலைவர்):** மதுரையிலே தபால் நிலையத்தில் வெடி
குண்டு பார்சல் செய்யப் போனவர் திராவிட முன்னேற்றக்
கழகத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லி, அவருடைய உறுப்பினர்
எண் எல்லாம் போட்ட பிறகும்கூட இதுவரைக்கு வரையில்
கட்சி ரீதியில் அதற்கு மறுப்புத் தெரிவித்தார்களா
இல்லை. அதைப்போன்றுதான் விஜயவாடாவிலிருந்து என்றால்
ரவியும் நானும் வெடிகுண்டு வைத்தோம் குமார்
அளித்திருக்கிற சூழ்நிலையில் இதை எல்லாம் என்று ஒப்புதல்
தமிழ்நாட்டிலே வெடிகுண்டு சம்பவம் பார்க்கிறபோது
பட்டது என்று தெரிகிறது. இந்த மாநிலத்திலே இந்தி திட்டமிட்டு நடத்தப்
திணிப்பு என்று சொல்லிக்கொண்டு, இந்தி மொழித்
எதிர்ப்பதை விட்டுவிட்டு தமிழ்மொழியைக் மொழி ஆதிக்கத்தை
போர்வையிலே இந்த நாட்டிலே இப்படிச் காப்போம் என்ற
கெடுக்கின்ற சூழ்நிலையை உருவாக்கி, சட்டம் ஒழுங்கை
ஈடுபட்டிருக்கிறார்களே, இது அராஜக நடவடிக்கைகளில்
தன்மை பயக்கும்? எந்த வகையில் தமிழ்நாட்டுக்கு





இப்படிப்பட்ட வெடிகுண்டு சம்பவங்களினால் இன்றைக்கு
இந்த நாட்டிலே விவசாயிகளைத் தெருவிலே நிற்க வைத்திருக்
கிறார்கள். வெடிகுண்டு சம்பவங்கள் காரணமாக அரசாங்கம்
கிணறு வெட்டப் பயன்படுத்தும் தோட்டாக்களைத் தடை
செய்து வைத்திருக்கிறது. விவசாயிகள் கிணறு வெட்டப் பயன்
படுத்துகின்ற தோட்டாக்கள் தடை செய்யப்படுவதற்குக் காரண
மாக இந்த வெடிகுண்டுப் போராட்டம் அமைந்திருக்கிறது.
இப்படிப்பட்ட நடவடிக்கைகளால், இந்த மாநிலத்திலே இருக்
கின்ற விவசாயிகளைக் காட்டிக்கொடுப்பதாக, இந்த மாநிலத்து
மொழியைக் காட்டிக்கொடுப்பதாக, இலங்கையிலே இருக்கிற
தமிழர்களைக் காட்டிக்கொடுப்பதாக உங்களுடைய போராட்டம்
அமைந்திருக்கிறதே ஒழிய, தமிழ்நாட்டுத் தமிழனுக்கும் நீங்கள்
பாடுபடவில்லை; இலங்கையிலே இருக்கிற தமிழனுக்கும்
விரோதமாக உங்கள் போராட்டம் அமைந்திருக்கிறது என்பதை
தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, இந்தப் போராட்டத்தை அருள்கூர்ந்து நீங்கள்
மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதை ஒரு வேண்டுகோளாக
விடுக்கிறேன். நியாயமாக, நேர்மையாக, நிதர்சனமாக, இந்த
மாநில மக்களின் நலனுக்காக, தமிழ் மொழியின் நலனுக்காக
இதய சுத்தியோடு நீங்கள் எந்தப் போராட்டத்தையும்
தொடங்கவில்லை. தனிப்பட்ட காரணங்களுக்காக, உங்களை
ஒருமுனைப்படுத்திக்கொள்ள, விளம்பரம் வேண்டும் என்பதற்
காக போராட்டங்களை நடத்தி, அராஜக நடவடிக்கைகளில்
ஈடுபட்டு, வெடிகுண்டு நிகழ்ச்சிகளை உருவாக்கிக் கொண்
டிருக்கிறீர்கள். இதிலிருந்து நீங்கள் விடுபட வேண்டும் என்பதற்
காக வேண்டுகோள் விடுக்கிறேன்.

இறுதியாக, இந்த ஆளுநர் உரையைப் பொறுத்தவரையில்,
இந்த மாநில மக்களுக்கு சமூக நீதி வழங்குகின்ற உரையாக
இது அமைந்திருக்கிறது; நலிந்த மக்களுக்கு கை கொடுக்கிற
உரையாக இருக்கிறது. இந்தியாவிலே இருக்கிற மற்ற மாநிலங்
களிலே அந்த மாநில அரசுகள் செய்யத் தவறிய சமூக நீதியை
வழங்குகிற உரையாக இருக்கிறது. அந்த வகையிலே மாண்பு
மிகு புரட்சித் தலைவர் அரசு செயல்படுகிறது என்று சொல்லி,
ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து,எனக்குப்பேச வாய்ப்பளித்த
தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி, முடிக்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 1-10)

**திரு. அ. ரகுமான்கான்:** கடிதத்தை இந்த அவைக்கு வாசித்து
விட்டு எங்கள் பார்வைக்குத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய அறையில்
வந்து பேசிக்கொள்ளலாம்.

**திரு. அ. ரகுமான்கான்:** இது சபைக்குத் தெரிய வேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திடீரென்று புது முறைகளைக் கண்டுபிடிக்காதீர்கள். இந்த அவையிலே இதே வழி பின்பற்றப் பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: சட்டமன்றத்திலே காண்பிக்கும் கடிதத்தையோ அல்லது பத்திரிக்கை செய்தியையோ உறுப்பினர் தானாகவே எழுந்து படிக்கக் கூடாது. பேரவைத் தலைவரிடத்திலே காட்டி அனுமதி பெற வேண்டுமே தவிர, எல்லா உறுப்பினர்களுக்கும் படித்துச்சாட்டி அனுமதி பெற வேண்டியதில்லை. நீங்கள் பார்த்து திருப்தி அடைந்தாலே போதுமானது. உறுப்பினர்களுக்குத் தெரிய வேண்டுமென்றால் தங்களுடைய அறையில் வந்துதான் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யார் வேண்டுமானாலும் என்னுடைய அறையில் வந்து பார்க்கலாம்.

திரு. அ. ரகுமான்கான்: அதை இந்தச் சபையில் வாசிக்கலாமே!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என் வாயால் நான் படிக்க வேண்டாம் என்று கருதுகிறேன். ஏனென்றால் சிங்குலரில் எழுதியிருக்கிறான்.

திரு. அ. ரகுமான்கான்: அவைக்குத் தெரியட்டுமே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசும்போது பதில் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கடிதத்தை உங்களிடம் காட்டி அனுமதி பெற்றிருக்கிறார்கள். அந்தக் கடிதத்திலே 'Family matters' எல்லாம் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. In that particular portion family-க்கு என்று privacy, secrecy இருக்கிறது. இதையெல்லாம் இங்கே படிக்க முடியாது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெனூயினாக (திரு. அ. ரகுமான்கான் குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏன் இவ்வளவு பதட்டம்? வேகம் எதற்காக? ஒரு கடிதத்தில் சில allegation சொல்லியிருக்கிறார்கள். ஒரு உறுப்பினர் அதைப் பேசுகிறார். உங்களுக்குப் பதில் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. நீங்கள் பேசும் போது அதைச் சொல்லலாம். அந்தக் கடிதத்திற்கு உடனே என்ன வந்தது?

திரு. அ. ரகுமான்கான்: அந்தக் கடிதம் ஒரு evidence.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நீங்கள் அனுமதித்தாலே போதுமானது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; நான் பார்த்துவிட்டுத்தான் அனுமதித்தேன்.



திரு. அ. ரகுமான்கான்: யார் வேண்டுமானாலும் கடிதம் எழுதினால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொறுப்புள்ள உறுப்பினர்கள் பொறுப்புள்ளவர்களாகத்தான் நடந்து கொள்ள வேண்டும். கடிதத்திலே தவறு இருக்குமானால் நடவடிக்கை எடுப்போம். அது என்னுடைய பொறுப்பு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்தக் கடிதத்தை மாண்புமிகு துணைத் தலைவர் படித்திருக்கிறார். அதைப் பற்றி அறையில் வந்து பார்க்கலாம் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். திராவிட அவைத் தலைவர், நீங்கள் துணைத் தலைவர் திரு. மனோகரன் முன்னேற்றக் கழகத்தின் துணைத் தலைவர் திரு. மனோகரன் அவர்கள் இந்தக் கடிதத்தையும் பார்க்கலாம். கையெழுத்து மற்றவற்றை வெரிஃபை பண்ணுவதில் தவறில்லை. இந்த முறையைத்தான் எப்போதும் வைத்திருக்கிறோம். கடிதம், தஸ்தாவேஜ் போன்றவற்றைத் தலைவர் அறையில் வந்து பார்க்கலாம். தலைவர் என்ற முறையில் முழுவதையும் பார்த்துச் செல்லலாம். அந்தக் கட்சியின் சார்பாக ஒருவர் பார்க்கலாம். தலைவர் என்ற முறையில் அவரே பார்க்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது மட்டுமல்ல, தானாகவே முழுவதும் கையால் எழுதப்பட்டது. இது ஒரு monograph.

திரு. கி. மனோகரன்: சபாநாயகர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் மிக அருமையாக தனது கருத்தை இங்கே வெளிப்படுத்தியிருக்கிறார்கள். உங்களுடைய அறையிலே வந்து பார்க்கலாம் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதற்கு முன்பு பேசிய, ஆரம்பத்தில் பேசிய நமது திரு. இராமச்சந்திரன் அவர்கள், "அந்தக் கடிதத்தை உங்கள் கையில் தரலாம், நீங்கள் அதை அவைக்குப் படிக்கலாம்" என்று குறிப்பிட்டதற்குப் பிறகு திருப்பி....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறிப்பிட்டதற்குப் பிறகு அல்ல. அது என்னுடைய இசைவைப் பெற்றதுதான். கையால் எழுதப்பட்ட கடிதம். முழுவதுமாக 4 பக்கம் கையால் எழுதப்பட்டிருக்கிறது.

திரு. கி. மனோகரன்: 4 பக்கம் அல்லது 10 பக்கம்....

(குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நீங்கள் எப்போதும் படிக்கலாம். நீங்கள் படிக்கச் சொல்லி an relevent portion-ஐ துணைத் தலைவர் படித்தார்கள். நீங்கள் படிப்பதற்குப் பதிலாக துணைத் தலைவர் அவர்களைப் படிக்கச் சொல்லி, அவரே படித்தார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பாவகரமான செயலை நான் படிக்கக் கூடாது என்றுதான் அவரைப் படிக்க வைத்தேன். எனக்கு இது வேண்டாம். இது தமிழ்நாட்டு வெடிகுண்டு விஷயம்.

திரு. அ. ரகுமான்கான் : அப்படியென்றால் நீங்கள் படிக்கவில்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ரூமில் படிப்பது என்பது வேறு, எல்லோருக்கும் தெரிய அவையில் படிப்பது என்பது வேறு. மௌனமாக படிப்பது என்பது வேறு. இதைச் செய்தவர்களைக் கண்டு பிடித்தாக வேண்டும். கண்டுபிடிக்கவில்லையென்றால்தான் பாவம். வெளியே இது வந்துவிட்டது. கண்டுபிடித்துவிடுவோம்.

திரு. கி. மனோகரன் : சபாநாயகர் அவர்களே, அடுத்தாற்போல் தொடர்ந்து பேசிய திரு. இராமச்சந்திரன் சொன்னார்கள், அதிலே குடும்ப விஷயம் இருக்கிறது என்று. குடும்ப விஷயங்கள் இருக்கின்றன என்று தெரிந்ததற்குப் பிறகு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றித்தான் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். (குறுக்கீடுகள்) ஏன் ஒரு கிரிமினலுக்கு இவ்வளவு சப்போர்ட் பண்ணுகிறீர்கள்? Why do you want to shield a crimin l? That fellow deserves to be hanged. (குறுக்கீடுகள்) நான் நேம் பண்ணவில்லை. Why do you want to seield a criminal? That fellow has thrown bomb and killed people. (குறுக்கீடுகள்)

THIRU A. RAHMANKHAN : Not a criminal. He is only accused.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு வெடிகுண்டை வைத்தவரைப் பற்றி நான் சொல்கிறேன். தமிழ்நாட்டில் இந்த வெடிகுண்டை வைத்தவரைப் பாதுகாக்க யாரும் முன்வரக் கூடாது. இவன் ஒரு சமூக விரோதி. அவனை யாரும் ஏத்துக்கொள்ளாதீர்கள்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே போடவேண்டிய..... (குறுக்கீடுகள்) ....அவசியம் இல்லை. அப்படிப்பட்ட சமுதாய விரோதத்தில் ஈடுபட்ட ஒருவரைப்பற்றிய ஆதாரத்தை இங்கே நான் சமர்ப்பித்து இருக்கிறேன். சமூக விரோதி தண்டிக்கப்படவேண்டும், சமுதாயத்தில் சட்டம், ஒழுங்கு காப்பாற்றப்படவேண்டும் என்ற நோக்கத்தில்தான் நான் கொடுத்திருக்கிறேனே தவிர வேறல்ல. அவ்வாறு இருக்கிற ஆதாரத்தைக் கொடுக்கிறபோது இவர்கள் இவ்வளவு அலறுவதைப் பார்த்தால் எனக்கு இன்னும் கொஞ்சம் கூடுதலாக சந்தேகம் வருகிறது. (குறுக்கீடுகள்)



மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் சமத் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் பேசுகிற போது குடந்தை இராமலிங்கம், திண்டிவனம் இராமமூர்த்தி என்று பேசி இருக்கிறார்கள். திண்டிவனம் இராமமூர்த்தி அவர்கள் அப்போது பாராளுமன்றத்தில் இருந்ததில்லை. அப்போது இருந்தவர் திரு. கே. இராமமூர்த்தி. This is only a correction.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: It is not material alternation.

திரு ஆ. கா. அ. அப்துல் சமத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) நான் உரக்கப் பேச முடியாதவன். எப்படியோ நான் பேசுவதற்கு முன்னாலே ஒரு உஷ்ணம் பரவிவிடுகிறது. நான் ஒரு ஆலோசனையை ஆரம்பத்தில் சொல்ல விரும்புகிறேன். எந்தக் குற்றவாளியானாலும் அவன் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டு தண்டிக்கப்படவேண்டும் என்ற ஆர்வம் எனக்கும் உண்டு. இதுவரையில் ஒரு கடிதத்தைப் பற்றி நாம் கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டு விவாதித்தோம். இந்தக் கடிதம் எழுதப்பட்ட கடிதமாகக் கொடுக்கப்பட்டதா என்பதில் அல்லது அதனுடைய பிரதி கொடுக்கப்பட்டதா தெளிவு இல்லை. இந்தக் கடிதம், நடக்கக்கூடிய ஒரு வழக்கிலே ஒரு முக்கிய ஆதாரமாக எடுத்துக்கொள்ளப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே அந்தக் கடிதத்தைப் பற்றிய விவாதம் இந்த அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப்படுவதுதான் நீதிக்குத் துணை செய்யும் என்று நான் நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாரோ ஒருவர் வெடிகுண்டு வைத்திருக்கிறார். யாரோ ஒருவர் என்று கூடச் சொல்லத் தோன்றவில்லை. யாரோ ஒருவன் தமிழ்ச் சமுதாயத்தை அழிக்க வேண்டும், பயமுறுத்தவேண்டும் என்று அதாவது ஒரு சமூக விரோதி இந்தச் செயலைச் செய்திருக்கிறான். அவன் மீது யாரும் தயவுகாட்டக்கூடாது. அவனுக்கு யாரும் தயவு காட்டத் தேவையில்லை. சொல்லப்போனால் உண்மையிலேயே பெரிய தண்டனை வழங்கவேண்டும்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : தலைவர் அவர்களே, அதை நான் வலியுறுத்தி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஆனால் இந்தக் கடிதம் யாரிடத்தில் இருந்து பெறப்பட்டது என்பது ஒரு கேள்வி. இந்த நாட்டிலே ஏற்கெனவே ஒரு சட்டமாக பாராளுமன்றத்திலே நிறைவேற்றப் பட்டு அது ஜனாதிபதியின் கையொப்பத்திற்காகச் சென்றபோது அவர் கூட மறுத்து, மீண்டும் ஆலோசனை செய்யவேண்டுமென்று சொல்லி அந்த வகையில் பாராளுமன்றத்தில் மீண்டும் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய ஒரு செய்தியினுடைய, ஒரு கருத்தினுடைய அடிப்படையில் கூட இந்தக் கடிதத்தைப் பற்றி விவாதம் எதிர்காலத்திலே.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றவாளியைக் கண்டுபிடிக்க
எந்த யுக்தியையும் யாரும் பின்பற்றலாம். குற்றவாளி
குற்றத்தைச் செய்யும்போது எந்தவகையில் சட்டத்திற்குட்பட்டு
செய்யவேண்டும் என்றா செய்கிறார்? எனவே ஒரு உண்மையைக்
கண்டுபிடிக்க எந்த வழியையும் பின்பற்றலாம். அப்படிப்
பட்டவர்களுக்காகப் பரிந்து யாரும் பேசாதீர்கள். தயவுசெய்து
கருணை காட்டாதீர்கள்.

(பிற்பகல் 1-20)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : இரண்டாவதாக, அது
எங்கேயிருந்து கிடைத்தது என்ற அதன் சோர்ஸைப் பற்றி
சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லவேண்டிய அவசியம் இல்லை
என்று நான் கருதுகிறேன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குண்டு எங்கே வாங்கினேன்
என்று சொல்லிக் கொண்டா வைத்தான்? இதை அரசியலாக்கிப்
பேச வேண்டாம்

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : தலைவர் அவர்களே, எதிர்
காலத்திலே சில சட்டப் பிரச்னைகள் ஏற்படாமல் தவிர்க்கப்பட
வேண்டும் என்பதற்காகச் சொன்னேன். அதைக் காப்பாற்றிக்
கொள்ள முடியும் என்ற உறுதி உங்களுக்கு இருக்குமேயானால்
நான் என்னுடைய பேச்சை தொடர்கிறேன்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது சில
கருத்துக்களைச் சொல்ல வாய்ப்புக் கிடைத்தமைக்கு மகிழ்ச்சி
யடைகிறேன். ஆரம்பமாக இந்த அரசுக்கு என் நன்றியைத்
தெரிவிக்க விரும்புகிறேன். தமிழகத்தில் மதுக்கடைகளை
முற்றாகத் தடை செய்து மது விலக்கை அமல்படுத்த வேண்டு
மென்று இந்த அவையில் நெடுகிலும் நான் வற்புறுத்தி
வந்திருக்கிறேன்.

இந்த ஆண்டு தொடக்கத்திலிருந்து கள், சாராயம்
ஆகியனவற்றைத் தயாரிப்பதையும் விற்பனை செய்வதையும்
அருந்துவதையும் தடை செய்திருப்பதை நான் மனமாற
வரவேற்கிறேன்; உளமாறப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில்
விலை ஏறிய மது வகைகள் ஆடம்பரமாக அலங்கரிக்கப்பட்ட
கடைகளில் விற்கப்படுவதையும், இளைஞர்கள் கூட அந்தக்
கடைகளுக்குச் சென்று பாட்டில்களை வாங்கிச் செல்வதையும்
காணும்போது என் மனம் வேதனைப்படுகிறது.

மதுவிலக்கு என்றால் மதியைப் போக்கி நிலை தடுமாறச்
செய்யும். எல்லாவிதமான மது வகைகளையும் விலக்குவது என்று
தான் நான் புரிந்து வைத்திருக்கிறேன். கள்ளச் சாராயம்
காய்ச்சப்படுவது பற்றியும் அது காவிரி நீரை விட மலிவாகக்
கிடைப்பது பற்றியும் இங்கே பலர் குற்றம் சாட்டினார்கள்



நான் அதைப்பற்றி அதிகமாகக் கவலைப்படவில்லை.
ஏனென்றால் ஏற்கனவே இருக்கும் சட்டங்களின் துணை
கொண்டு சமுதாயத்தின் மத்தியில் இவ்வாறு கள்ளச் சாராயம்
காய்ச்சுவதும் அருந்துவதும் குற்றம் என்ற உணர்வை காலப்
போக்கிலே ஏற்படுத்துவோமானால் அந்தக் கயமைத்தனத்தை
நம்மாலே களைந்தெறிய முடியும். இந்தத் தீமையைத் தடுப்பதற்
காக மேலும் 1,500 போலீசார் நியமிக்கப்பட இருப்பதாக
அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.
ஆனால், அந்தப் போலீசார் குடியைத் தடுத்து நிறுத்துவது ஒரு
புறமிருக்க எந்த நிலையிலும் குடியின் தீமைக்கு ஆட்படாதவராக
இருக்க வேண்டும்.

எவ்வாறாயினும், உயர் ரக மது வகைகள் உற்பத்தி செய்யப்
படுவதும் விற்பதும் அருந்துவதும் முற்றாகத் தடை செய்யப்பட
வேண்டும். அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இல்லையேனில் மது
விலக்கு என்பது பாதி கிணறு தாண்டிய கதையாக அமைந்து
விடுமோ என்று நான் அஞ்சுகின்றேன்.

இன்னொன்று, மதுவிலக்கு பிரச்சாரத்துக்காக ஆண்டு
ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதே, அந்தத்
தொகையில் எவ்வளவு செலவிடப்பட்டது; எவ்வளவு
மீதமிருக்கிறது. இதற்கென அரசு சார்பாக ஒரு கூட்டமாவது
நடந்ததுண்டா? இந்தக் குழுவில் மாண்புமிகு அமைச்சர்
திரு. இராமச்சந்திரன் உறுப்பினர் என அறிவிக்கப்பட்டதே,
இந்தத் துறையில் அவர் செய்த பணிகளையாவது அறிய
விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

மதுவைப்போல் மகத்தான தீமை விளைவிக்கக்கூடிய
ஒன்றாக புகை பிடித்தலும் இன்று கருதப்படுகிறது. இந்தத்
தீமையைத் தடுக்க உலகளாவிய முறையில் பிரச்சாரம் நடந்து
வருவதை நாம் அறிவோம். குறிப்பாக புகை பிடிப்பதும்
நாகரீகத்தின் ஓர் அம்சம் என்ற தவறான எண்ணத்தில் பள்ளி
மாணவர்களும், கல்லூரி மாணவர்களும் இந்தத் தீமைக்கு
ஆளாவதை விதத்தில் சில வரைமுறைகளை விதிக்க அரசு முன்வர
வேண்டும் என விரும்புகிறேன். இது சம்பந்தமாக சிங்கப்பூர்
பிரதமர் எடுத்துக்கொண்டுள்ள முயற்சிகளை நம் அரசு முன்
உதாரணமாகக் கொள்ள முடியுமா என்பதை ஆராய வேண்டு
கிறேன்.

ஆளுநர் உரையில் கோடிட்டுக் காட்டியுள்ள அரசின்
திட்டங்களில் என்னைக் கவர்ந்த மற்றொரு அம்சம் பள்ளி
செல்லும் சிறார்களுக்கும், கிராமங்களிலுள்ள ஏழைத்தாய்மார்
களுக்கும், காலணிகளை-நடையன்களை இலவசமாக வழங்கும்
திட்டமாகும். கல்லோ, முள்ளோ காலில் தைக்காமல் நம்

இளஞ்சிறார்களின் பிஞ்சுப் பாதங்களைப் பாதுகாப்பதோடு, கொதிக்கும் மணலிலிருந்தும், தகிக்கும் தார் ரோடுகளின் அனலிலிருந்தும் வியாதிகளை உண்டாக்கும் எத்தனையோ விதமான கழிவுகளிலிருந்தும் கால்களைக் காப்பாற்ற அறிவித்துள்ள இந்தத் திட்டம் மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

நடையன்களின் துணையின்றி நடப்பதனால் உடல்நலம் பெரிதும் பாதிக்கப்படும் என்பதை இன்றைய மருத்துவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். வெறுங்கால்களுடன் நடமாடுபவர்களுக்கு பூமியிலுள்ள ஆகர்ஷண சக்தியால் நினைவாற்றல் குறைகிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. எனவேதான் நபிகள் நாயகம் அவர்கள், காலில் செருப்பு அணியாதவர்களின் சாட்சியத்தை நம்புவதற்கு இல்லை என்று கூறியிருக்கிறார்கள். எனவே, ஏறத்தாழ ஒரு கோடி பேர் நலம் பெற இருக்கும் இத்திட்டத்தை நான் வரவேற்கிறேன்.

இந்த நடையன்களைத் தோலால் செய்ய அரசு கருதியிருப்பதாக அறிகிறேன். இதை பிளாஸ்டிக் அடிப்பாகத்தோடு தயாரித்தால் அடக்கச் செலவு பாதியாகக் குறையும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அண்மையில் பாரதப் பிரதமர் சமர்ப்பித்துள்ள பட்ஜெட்டிலே கூட, செருப்புக்குப் பயன்படும் பிளாஸ்டிக் இறக்குமதி செய்வதற்கு பெரிய சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டுகிறேன்.

அடுத்து, உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல்கள் நடந்து முடிந்தது பற்றி ஆளுநர் தம் உரையில் பெருமிதத்தோடு குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் ஜனநாயகத்தின் அடிநிலையாக விளங்கக்கூடிய இந்த உள்ளாட்சி மன்ற அதிகாரங்கள் சன்னஞ்சன்னமாகக் குறைக்கப்பட்டு விடுவதாகப் பரவலாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. அதிலும் அண்டை மாநிலங்களில் குறிப்பாக கர்நாடகத்திலும், ஆந்திராவிலும் உள்ளாட்சி மன்றங்களுக்கான அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டு, ஏறத்தாழ எல்லா அபிவிருத்தித் திட்டங்களும் உள்ளாட்சி, ஊராட்சி மன்றங்கள் மூலமே செலவிட விதிகள் வகுக்கப்பட்டுள்ள நிலையில் நம் தமிழ் நாட்டில் அவர்களுடைய அதிகாரங்களைக் குறைக்க முயற்சிப்பது ஜனநாயக மரபுகளுக்கு வலிமை சேர்ப்பதாக அமையாது.

உள்ளாட்சி, நகர மன்றங்களுக்கான தேர்தல்களோடு மாநகராட்சி மன்றங்களுக்கும் தேர்தல் நடந்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு நடத்தப்படாதது மட்டுமல்ல, அந்தத் தேர்தல்கள் நடந்து ஓராண்டு ஆகிவிட்ட போதும் அதுபற்றி ஒரு சிறு சமிக்ஞைகூட ஆளுநர் உரையில் இல்லாதது பெரும் ஏமாற்றத்தை அளிக்கிறது. இந்த ஆண்டு கூட மாநகராட்சிகளுக்கு தேர்தல் நடக்காதோ என்று அச்ச உணர்வு ஏற்படுகிறது.

1987 மார்ச் 5] [திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

நகராட்சி மன்றத்திற்குள்ள அதிகாரம் எப்படியெல்லாம் சிதைக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு நான் ஒரு சிறிய உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். சமீபத்தில் சேலம் நகரத்தில் ஏற்பட்டிருக்கிற குடிநீர் பற்றாக்குறையைப் போக்குவதற்காக நகராட்சி 126 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க வேண்டுமென்று நகராட்சித் தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக குடிநீர்-வடிகால் வாரியத் தலைவர் அவர்களுக்குக் கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள். குடிநீர்-வடிகால் வாரியம் மூலம் இவற்றை அமைத்துத்தர சேலம் மாவட்ட குடிநீர் வடிகால் துறைக்கு முதல் தவணையாக நான்கு லட்சம் கொடுத்து பணியை உடனே துவக்க வேண்டுமென்றும் சேலம் நகராட்சி கேட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், சம்பந்தப்பட்ட பொறியாளரிடமிருந்து மேற்படி பணம் நகராட்சிக்குத் திருப்பியனுப்பப்பட்டு, தற்போது தங்களிடம் Geologists, நிலத்தடி நீர் ஆய்வாளர்கள் இல்லையென்றும், போர்வெல் இயந்திரம் இல்லையென்றும், கிராமப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு விட்டன என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே சேலம் நகரசபைக்கு போர்வெல்போட Geologists இல்லையென்றும், Rig இல்லையென்றும் தெரிவித்து இருக்கிறார்கள். குடி தண்ணீர் பஞ்சத்தைப் போக்குவதற்காக போர்க்கால அடிப்படையில் நடவடிக்கையெடுக்கப்பட வேண்டுமென்று இந்த அரசுக்கு எண்ணம் இருக்கிறது என்பதை நான் அறிவேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட இரண்டு நாட்களுக்கு முன்னால் இது பற்றி ஒரு நல்ல அறிவிப்பைத் தந்தார்கள். தனது நிதியிலிருந்து செலவு செய்து தனியார்கள் மூலம் ஆழ்துளைக் கிணறுகளை சேலம் நகரில் அமைத்துக்கொள்ள அனுமதி கேட்டு நகராட்சி இப்போது தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது. அரசு மூலமாக இந்தப் பணியை செய்ய முடியாததற்கு ஏதாவது காரணம் இருந்தாலும், தனியார் மூலமாக நகராட்சி தன்னுடைய சொந்தப் பணத்திலிருந்து செலவழித்து இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்கு உடனடியாக அரசு அனுமதி வழங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். மாநகராட்சி மன்றத்திற்கு தேர்தல் நடக்காத காரணத்தால் மிகவும் பாதிக்கப்பட்டு இருப்பவர்கள் அப்படிப்பட்ட மாநகரங்களில் வாழக்கூடிய. . . . . . . . .

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, சேலம் நகரத்தைப் பொறுத்தவரையில் மேட்டூரிலிருந்து குடிதண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆழ்துளைக் கிணறுகள் எங்கே போடவேண்டுமென்று விரும்புகிறார் என்று தெரியவில்லை. அதுபற்றி நான் விசாரித்து தங்களுக்கு தகவல் தெரிவிக்கிறேன்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: தலைவர் அவர்களே, நகராட்சியில் அந்த இடங்களை எல்லாம் குறிப்பிட்டு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறார்கள்.

1987 மார்ச் 5

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, சேலம் நகரில் எங்கே வேண்டுமானாலும் பைப் இழுக்கலாம்; ஒரு குழாய்க் கிணறு போட 20 ஆயிரம் ரூபாய் செலவாகிறது, பைப் இழுத்தால் இரண்டாயிரம் ரூபாய்தான் செலவாகும். எது தேவையென்று பார்த்துத்தான் செய்யவேண்டும்.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** தலைவர் அவர்களே, ஆழ் துளைக் கிணறுகள் தந்தோ அல்லது மேட்டூரிலிருந்து கொண்டு வந்தோ செய்ய வேண்டும். மேட்டூரில் நீர் இருக்கிறதா என்பது வேறு கேள்வி. எப்படியாவது நகரத்தினுடைய குடிதண்ணீர்ப் பிரச்சினையை அமைச்சர் அவர்கள் தீர்ப்பார்களானால் அவர்களும் மெத்த நன்றியுடையவர்களாக இருப்பார்கள், நானும் இருப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-30)

இன்னொன்று, மாநகராட்சி மன்றத்தேர்தல் நடக்க வேண்டுமென்று வற்புறுத்துவதற்கு எங்களுக்குத் தனிப்பட்ட சில காரணங்களும் உண்டு. உதாரணமாக தொகுதிகளைப் பொறுத்தவரையில், இன்று பல நூற்றுக்கணக்கான பிரச்சனைகள் இருக்கின்றன. விளக்குப் பிரச்சனை, கொசுப் பிரச்சனை அல்லது சுகாதாரப் பிரச்சனை என்று பல இருக்கின்றன. இவற்றைப் பற்றிச்சொல்ல, மாநகராட்சி உறுப்பினர்கள் இருந்தால், அவர்களிடத்திலே மக்கள் சொல்லி, இவற்றிற்குத் தீர்வைக் காண்பார்கள். ஆனால் அவர்கள் இல்லாத காரணத்தால் சட்டமன்றப் பிரதிநிதிகளை அவர்கள் அணுகவேண்டியதாக இருப்பதும், நாங்களும் எங்களுடைய நேரத்திலே பெரும் பகுதியை அதற்காகச் செலவிட வேண்டியதாக இருக்கக்கூடிய இந்த அவல நிலையைப் போக்குவதற்காக, மாநகராட்சித் தேர்தல்களை அரசு விரைவாக நடத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டங்களைப் பிரிப்பதைப் பற்றி, அரசு இந்த ஆண்டும் ஆளுநர் உரையில்—வட ஆர்க்காடு மாவட்டத்தைப் இரண்டாகப் பிரிப்பது பற்றி—அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். ஏற்கனவே அரசு, தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, கீழத் தஞ்சை மாவட்டத்திற்கு நாகப் பட்டணத்தை தலைநகராகக் கொண்டு கண்ணியமிக்க காயிதே மில்லத் அவர்கள் பெயரை வைத்து, அந்த மாவட்டத்தை அமைப்பதாக அறிவித்திருந்தது. இது சமுதாயத்திலே பெரும் அளவிற்கு வரவேற்கப்பட்டு இருக்கிறது. ஆனால், 2, 3 ஆண்டுக் காலம் ஆகியும்கூட, அதற்கான காரியங்கள் இன்னும் நடக்காதது எங்களுக்கு வேதனையைத் தருகிறது. ஆகவே அருள் கூர்ந்து அந்த மாவட்டத்தை விரைவாக அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.





ஆளுநர் உரையில், தமிழகத்தைப் பொறுத்தவரையில் சர்க்கரை ஆலைகள் தொடங்கப்படுவது பற்றியும் குறிப்பிடப் பட்டு இருக்கிறது. சென்ற ஆண்டு நம்முடைய அமைச்சர் அவர்கள்கூட தமிழகத்திலே 30 சர்க்கரை ஆலைகள் தொடங்கப் படும் என்று எண்ணிக்கையைக் கூட குறிப்பிட்டுச் சொல்லியிருந்தார்கள். கடந்த ஓர் ஆண்டுக் காலத்திலே எத்தனை சர்க்கரை ஆலைகள் தொடங்கப்படுவதற்கு அனுமதி தரப்பட்டு இருக்கிறது, அல்லது தொடங்கப்பட்டிருக்கிறது என்று அந்தக் குறிப்பிருந்தால், எங்களுக்கு விவரம் அறிவதற்கு அது ஏதுவாக இருக்கும். இந்த ஆண்டு ஆளுநர் உரையிலே என் அந்த எண்ணிக்கை குறிப்பிடப்படவில்லை என்பதை எண்ணும் போது, அந்த எண்ணிக்கையுள்ள சர்க்கரை ஆலைகளை தமிழகத்திலே தொடங்க முடியாத அளவிற்கு ஏதாவது இடர்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றனவா என்ற சந்தேகம் எங்களுக்கு ஏற்படுகிறது. ஏன் என்றால், இது நாள் வரையிலும், ஒரு நாளைக்கு 1250 டன் கரும்பை அரைப்பதற்குரிய சக்தியைப் பெற்றிருக்கிற ஆலைகளுக்கு அரசு அனுமதி அளித்து வந்திருக்கிறது. அந்த அடிப்படையில், உத்திரப்பிரதேசத்திலும், மகாராஷ்டிராவிலும் நூற்றுக்கணக்கான சர்க்கரை ஆலைகள் துவங்க உத்தரவு வழங்கப்பட்டு, அவை எல்லாம் தொடங்கி நடந்து கொண்டு வந்திருக்கக்கூடிய நிலையில், 10 கோடி ரூபாய் முதலீட்டில் இப்படிப்பட்ட சர்க்கரை ஆலைகளைத் தொடங்க முடியும் என்ற நம்பிக்கை நம்முடைய நாட்டினுடைய விவசாயப் பெருமக்களுக்கும், அல்லது பெருந்தனவக்காரர்களுக்கும் வந்து, அந்தத் துறையிலே அவர்கள் முயன்று கொண்டிருக்கும்போது, இப்போது புதிதாக மத்திய அரசு ஒரு கொள்கையை அறிவித்திருக்கிறது. ஒரு நாளைக்கு 2500 டன் அரைக்கக் கூடிய சர்க்கரை ஆலைகளுக்குத்தான் அனுமதி வழங்க முடியும் என்று வந்திருக்கிற அறிவிப்பு, இன்று தமிழகத்தில் ஏற்பட்டு வரக்கூடிய அந்தத் தொழில் முயற்சிக்கு, வளர்ச்சிக்கு குந்தகம் விளைவிப்பதாக இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசினுடைய இந்த அறிவிப்பு, ஏற்கனவே சர்க்கரை ஆலைகளை அமைத்திருக்கக்கூடிய, அதிலும் நூற்றுக் கணக்கான ஆலைகளை அமைத்து இந்தியாவினுடைய பெரும் பகுதிக்கு சர்க்கரையை வழங்குவதற்கு வாய்ப்புப் பெற்றிருக்கிற மாநிலங்களிலே இருக்கக்கூடிய சர்க்கரை ஆலை அதிபர் களுடைய நோக்கத்திற்கு இது உடன்பட்டதாக இருக்குமே தவிர, நாட்டினுடைய மொத்த வளர்ச்சிக்கு, உதவி செய்வதாக இருக்க முடியாது. எனவே நம்முடைய அமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு இதைப் பற்றி வேண்டிய முறையில் எடுத்துரைத்து, அதிகமான ஆலைகளை அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, 1250 டன் கொள் அளவு உள்ள சர்க்கரை ஆலைகளைத் துவங்க அனுமதி அளிக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு ஏற்கனவே

நாம் வேண்டுகோள் விடுத்து வலியுறுத்திக் கேட்டு இருக்கிறோம்.
மத்திய அரசினுடைய பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்
கிறோம்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: மற்றொரு பிரச்சனை, நம்மை
எல்லாம் வாட்டி வதைக்கிற பிரச்சனை, குடிநீர்ப் பிரச்சனை.
இந்தப் பிரச்சனையைப் பற்றி ஒவ்வொரு ஆண்டும் நாம்
விவாதிக்கிறோம். அதற்காக பல 100 கோடி ரூபாய் ஒதுக்கப்
படுகிறது. ஆனாலும்கூட பருவ மழை தப்பிவிட்டால்,
எவ்வளவுதான் ஆழ்துளைக் கிணறுகளைத் தோண்டினாலும்,
அதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் எல்லாம் விரயமாகி
விடுகின்றன. ஆகையினாலே அரசிடத்திலே நான் ஒன்று கேட்க
விரும்புகிறேன். இது நாள் வரையிலும் இந்தப் பிரச்சனையைத்
தீர்க்க ஒரு தீவிரமான முயற்சி, ஒரு ஆய்வு நம்முடைய அரசால்
செய்யப்படவில்லை என்று நான் கருதுகிறேன். தமிழகத்தி
லிருந்து ஏறக்குறைய 600 மைல் தள்ளி இருக்கக்கூடிய அந்தப்
பெரும் கடலிலுள்ள கடல் நீரை, உவர் நீரை, குடிநீராக
மாற்றக்கூடிய ஒரு பெரிய அளவிலான திட்டத்தைப் பற்றி
ஏன் நம்முடைய அரசு ஆய்வு செய்யக் கூடாது என்று நான்
கேட்க விரும்புகிறேன். ஒரு காலம் இருந்தது. பணப்
பெருக்கத்திலே, செல்வத்திலே மிகுந்து இருப்பவர்கள்தான்
இந்த முயற்சியை மேற்கொள்ளலாம் என்று இருந்தது. ஆனால்
இந்தக் காலத்திலே தண்ணீர் தட்டுப்பாடு உள்ள பல சின்ன
சின்ன நாடுகள் கூட இந்தத் துறையிலே முயற்சித்து அவர்
களுடைய தேவைகளை உலகத்தில் உள்ள பல்வேறு பகுதிகளில்
நீக்கி இருப்பதை நாம் காணமுடிகிறது.

அதிலும் குறிப்பாக இந்த கடல் நீரை குடிநீராக மாற்றக்
கூடிய இந்த ஆய்வுத் துறையில் நம்முடைய தமிழ்நாட்டில்
சிறந்த இளைஞர்கள் பல பேர் மிகுந்த பயிற்சி பெற்றவர்களாக
இருக்கிறார்கள். நான் சௌதி அரேபிய நாட்டுக்குச் சென்று
இருந்தபோது அந்த பாலைவனத்தையே இன்று சோலை
வனமாக மாற்றக்கூடிய அளவுக்கு பெரிய அளவுக்கு இந்த
உவரை நீக்கிவிட்டு குடிநீராக மாற்றக் கூடிய இந்தத் திட்டத்தை
ஏற்று நடத்தக்கூடிய அத்தனை பொறியியல் வல்லுநர்களும்
தமிழகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். இதற்கு
காண்டிராக்ட்டை அமெரிக்கா நாட்டினுடைய பெரிய கம்பெனி
எடுத்து இருந்தாலும் அந்த அமெரிக்க கம்பெனியினுடைய
பிரதிநிதியாக இங்கே சௌதி நாட்டிலிருந்து மேலாளராக
வேலை செய்யக் கூடியவர் நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த
அதிலும் குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த
ஆரணியை சேர்ந்த ஒரு இளைஞர் எவ்வளவு செம்மையாக
அந்த ஜில்லாவில் இருந்து கொண்டு இந்த திட்டங்களை
எல்லாம் நடத்திக் கொண்டு இருக்கிறார் என்பது மட்டும்
அல்ல, 30 வயது நிறைந்த அந்த இளைஞர் அவர் தமிழகத்
தினுடைய இந்தக் குடிநீர் தேவையை தீர்ப்பதற்கு குறிப்பாக



சென்னை மாநகர் குடிநீர் தேவையை தீர்ப்பதற்கு ஒரு
திட்டத்தை தானே தயாரித்து அண்ணா பல்கலைக்
கழகத்தினுடைய துணை வேந்தர் மூலமாக நம்முடைய
முதலமைச்சர் இடத்திலே நான் 3 ஆண்டுக்கு முன்பாக
சமர்ப்பித்து இருக்கிறேன். இப்படி சமர்ப்பித்த பிறகு அந்த
ஆய்வை நாங்கள் ஆய்ந்து கொண்டு இருக்கிறோம். அதைப்
பற்றி நாங்கள் கருதுகிறோம் என்று கூட எனக்கு கடிதம்
வந்ததில்லை. ஆனால் அதைப்பற்றி இதுவரையில் முயற்சி
நடக்காமல் இருக்கிறது. எனக்கு வரக்கூடிய ஆயிரக்கணக்கான
ரூபாய் வருமானத்தைவிட என்னுடைய தமிழகத்திலே இருந்து
என்னுடைய அறிவை நான் அதற்கு வழங்குவதற்கு தயாராக
இருக்கிறேன் என்று மெத்த வேதனையோடு சொன்னார்.
அவருடைய பெயர் இப்போது உடனடியாக நினைவுக்கு வர
வில்லை. நான் அதைப் பெற்றுத் தருகிறேன். அப்படிப்பட்ட
அறிவாளர்களை எல்லாம் நம்முடைய தமிழகம் பெற்று இருக்கும்
போது, தமிழகத்தில் 600 மைல் கடற்கரையைப் பெற்று
இருக்கும்போது, வங்காள விரிகுடா கடலும், இந்து மகா
சமுத்திரமும் நம்மிடம் இருக்கும் போது, அந்த நீரை ஏன்
பயன்படுத்தக்கூடாது என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவை
தலைவர் அவர்களே, அந்த கடல் நீரை குடிநீராக
மாற்றும் ஆராய்ச்சி பல ஆண்டு காலமாக நடைபெற்று
வருகின்ற அரபு நாடுகளிலே, மற்ற நாடுகளிலே இதை
வருகிறது. அந்த அவர்களுக்கு
வைத்து இருக்கிறார்கள், அதற்குக் காரணம் நிதி ஆதாரம்
நிதி ஆதாரம் நிறைய இருக்கிறது. நம்மிடத்திலே
குறைவாக இருக்கிறது என்பது ஒன்று. அடுத்து கடல்நீரை நல்ல
குடிநீராக மாற்றுகிறபோது ஒரு காலன் நீருக்கு அதிக விலை
தரவேண்டியிருக்கிறது, அந்த விலையையும் நாம் தாங்கி ஆக
வேண்டும். அடுத்து மத்திய அரசின் அனுமதி வேண்டும்.
இந்த மூன்றும் கிடைத்த பிறகுதான் கடல் நீரை குடிநீராக
மாற்றுகிற வேலையை நம்மால் தொடங்க முடியும். நான்
சிறப்புப் பிரதிநிதியாக டெல்லியில் இருந்தபோது இந்த
முயற்சியில் ஈடுபட்டபோது அதிக தொகை ஆகிறது என்று
மத்திய அரசு அப்போது சொல்லியது. வேண்டுமானால் அதை
குறைந்த விலையில் செய்யக்கூடிய காரியமாக இருந்தால் அதை
பரிசீலித்து செய்ய இந்த அரசு தயாராக இருக்கிறது.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : மாண்புமிகு பேரவை
தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்
களுக்கு நான் மெத்த பணிவன்போடு ஒன்றை நினைவுபடுத்த
விரும்புகிறேன். அண்மையில் மத்திய அரசு இதற்கான ஆய்வை
நடத்தி மிக குறைந்த செலவில் கடல்நீரை அதனுடைய உப்பு
சத்தை நீக்கி குடிநீராக மாற்ற முடியும் என்று அவர்கள் கண்டு
பிடித்து அதனுடைய அதிகாரிகள் நம்முடைய
தமிழகத்தின் ஒரு பகுதியான ராமேஸ்வரத்திற்கு வந்து அதை
டெமான்ஸ்டிரேட் செய்து காட்டியிருக்கிறார்கள். அது மட்டும்
அல்ல, பல நூறு கோடி ரூபாய்களை போட்டு ஒரே இடத்திலே

இதை அமைப்பதை விட மொபைல் யூனிட்டாக உதாரணமாக சென்னை நகரத்தில் குடிநீர் பற்றாக்குறை இருக்கிறது என்று சொன்னால் அங்கே 10 கோடி ரூபாய் திட்டத்திலே இந்த தொழிற்சாலையை நாம் உருவாக்குகிறோம் என்றால் இந்த குடிநீர் பற்றாக்குறை இங்கே நீங்கி, நல்ல மழை பொழிந்து செம்பரம்பாக்கம் ஏரி நிறைந்து நமக்கு போதுமான அளவுக்கு தண்ணீர் இருக்கிறது என்று சொல்லும்போது இதே தொழிற் சாலையை மற்றொரு இடத்திற்கு மாற்றக்கூடிய முறையில் மொபைல் யூனிட்டாக வைக்க முடியும் என்று இந்திய அரசின் ஆய்வுத்துறை எடுத்து வெளியிட்டு இருக்கிறது. ஒரு காலம் இருந்தது, பணம், செல்வாக்கு இருப்பவர்கள் தான் அதிக நிதி ஆதாரத்தோடு இதை எல்லாம் செய்ய முடியும் என்ற நிலை இருந்தது. அந்த நிலை மாறி குறைந்த செலவிலே இதை செய்ய முடியும் என்று இப்போது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் இந்திய அரசே அதனுடைய ஆய்வுத் துறையே அதைக் கண்டுபிடித்து இருக்கும்போது, இந்த சென்னையை எதிர் நோக்கி இருக்கிற குடிதண்ணீர் பிரச்சனையையாவது மத்திய அரசோடு உடனடியாக தொடர்பு கொண்டு அதனைப் போக்குவதிலே தேவைப்பட்ட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1–40)

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவை மாற்று சபாநாயகர் அவர்களே, நமது மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதை, சவுதி அரேபியாவிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறதை, இங்கே எடுத்துச் சொன்ன மாண்புமிகு அமைச்சர் பெருமகனார், அவர்கள் ஏற்கெனவே முயன்று இந்த முயற்சியிலே ஈடுபட்டிருப்பதையும், அதனுடைய செலவு அதிகமாகும் என்பதையும் இங்கே எடுத்துக் காட்டினார். நான் சிகாகோவிலே இருந்தபோது திருச்சியைச் சார்ந்த சேவியர் என்ற ஒரு தோழர் எனக்குச் சொன்ன தகவல் தொடர்புடையதாக இருக்கிற காரணத்தால், நமக்கு உதவியாக இருக்கிற காரணத்தால் சொல்கிறேன். இப்போது latest development என்று சொல்லி Reverse Osmosis என்று சொல்லுகின்ற அடிப்படையில் ஒரு மெம்பரேன் தயாரிக்கிறார்கள். ஒரு அங்குலத்தில் 150 இலட்சம் துண்டுகள் ஆக்கினால் எவ்வளவு நுண் துளைகள் வருமோ, அதைவிட ஒரு சிறு துளையை உடைய மெம்பரேன் தயாரிக் கிறார்கள். அந்த மெம்பரேனைத் தயாரித்துவிட்டு இந்தப் பக்கத்தில் கடல் தண்ணீரை செலுத்தினால், மறுபக்கத்தில் தூய தண்ணீர் வருகிறது. என்ன காரணம் என்று சொன்னால், உலகத்திலே இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிக நுண்ணிய கிருமியை விட இது 20 மடங்கு சிறியதாக இருக்கிறது. அப்படி சிறியதாக இருக்கிற காரணத்தால் எந்தக் கிருமியும், உப்பும் உள்ளே போக முடியாது. எந்த உலோகச் சத்தும் உள்ளே போக முடியாது, இந்த மெம்பரேனை நான் செய்து தருகிறேன்



சென்னை-600 008

என்று சேவியர் சொன்னார். எனவே இப்படிப்பட்ட முயற்சியிலே அரசு ஈடுபடுவது நல்லது. அமைச்சர் பெரு மகனார் விரும்பினால் அவருடைய முகவரியையும் தரத்தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. மா. சின்ன ராசு): விஞ்ஞானக் கருத்தரங்கு நடத்த முடியாது. இதற்கு மேலே போக வேண்டாம்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : இந்த அவையிலே மத்திய-மாநில உறவு மெத்த சுமுகமாக இருக்கிறதென்ற நல்ல செய்தியைப் பல உறுப்பினர்கள் சொன்னார்கள். நான் கேட்டுக் கொள்வதெல்லாம் அந்தச் சுமுகம் கெட்டுவிடக் கூடிய எந்தக் காரியத்தையும் யாரும் செய்யக் கூடாது என்பது தான். அந்தச் சுமுகம் எந்த அளவிற்கு நமக்குத் துணை செய்திருக்கிறது என்று நான் ஒரு கண்ணோட்டத்தில் பார்க்கிறேன். சென்ற ஆண்டு வறட்சியைப் போக்க கிட்டத்தட்ட ரூ.310 கோடியை நம்முடைய அரசு கேட்டிருந்தது. ஆனால் நம்முடைய மத்திய அரசு ரூ. 31.77 கோடியைத்தான் தந்திருக்கிறது என்று பார்த்தால், அந்த உறவு என்ன 10 சதவீதம் தான் உறவு வலிமையாக இருக்கிறதோ என்று கூட நாம் கேட்க வேண்டியதாக இருக்கிறது. இங்கே அவையிலே இருக்கிற நம்முடைய காங்கிரஸ் கட்சி நண்பர்கள் மத்திய அரசோடு எப்படி அதிகமாக பெறமுடியும் என்பதற்குரிய முயற்சிகளில் ஈடுபடவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதை எதிர்பார்க்காமல் அந்த ரூ. 31 கோடியைத்தான் அவர்கள் தந்தார்கள் என்று வறட்சிப் பணிகளையெல்லாம் நிறுத்த விடாமல், மேலும் ரூ. 105 கோடியை தமிழக அரசு சென்ற ஆண்டு செலவழித்திருப்பது ஏற்றுக் கொள்ளத்தக்கது தான்.

அடுத்து இந்த ஆண்டு வறட்சி. அது வெறும் வறட்சியாக நம்மை வாட்டி விட்டுப் போய் விடும் என்றால் சகித்துக் கொள்ளலாம். ஏனென்றால் அதிலே கொஞ்சம் நாம் பழக்கப் பட்டு விட்டோம். ஆனால் அது பஞ்சமாகி விடுமோ என்கிற பயங்கர சூழ்நிலை இருப்பதை நாம் மறந்து விடக்கூடாது. பல்வேறு மாவட்டங்களிலிருந்து இன்று வரும் கடிதங்களைத் திறந்து பார்க்கும்போது, பெருகுளத்தூர் வட்டத்தில் மாத்திரம் கிட்டத்தட்ட 6,000 பேர் வறட்சி காரணமாக பல்வேறு ஊர் களுக்குச் சென்று இருக்கிறார்கள் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மதுரை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்த போது அங்குள்ள வறட்சி நிலைமையை நான் நேரில் பார்த்திருக் கிறேன். ஆக மொத்தம் தமிழகமே இன்று வறட்சிப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டு, அதற்கான உதவியை மத்தியஅரசிடத்திலேயிருந்து, எவ்வளவு பெற முடியுமோ, அதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று ஆளுநர் உரையில் மிகப் பெருமையாக பேசப்பட்ட ஒன்று இப்போது காணப்படவில்லை. எம். ஆர். டி. நம்முடைய துரித ரயில் போக்குவரத்துத் திட்டம். சென்னையிலே ஆரம்பிக்கப்பட்ட அது நிறைவேறுமா, அல்லது அது நீளுமா என்ற சந்தேகத்திற்கெல்லாம் இடம் இல்லாமல் மத்திய அரசு ரயில்வே பட்ஜெட்டை சமர்ப்பித்த ரயில்வே அமைச்சர் அவர்கள் அதற்கான பணத்தை மத்திய அரசிடமிருந்து கொடுக்க முடியாது என்று திட்டவட்டமாக தெரிவித்து விட்டார்கள். அதற்கு இந்த அரசினுடைய பதில் என்ன? இந்தத் துறையிலே அரசு அதற்காக எடுத்துக் கொண்ட நடவடிக்கை, முயற்சிகள் என்ன என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அது மாத்திரமல்லாமல் கல்கத்தாவிலே இந்த திட்டத்தை நிறைவேற்ற ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலே மத்திய அரசு செலவிடுகிறது. ஆசிய நாடுகளுடைய விளையாட்டு போட்டி நடக்கிறது என்று அவசர அவசரமாக டெல்லியிலே 1,200 கோடி ரூபாய் செலவிட்டு சர்குலர் ரெயில்வே என்று போட்டார்கள். ஆனால் அந்த ரெயிலில் ஏறிச்செல்வதற்குக்கூட ஆள் இல்லை என்ற நிலையை டெல்லிக்கு சென்றவர்கள் காணமுடியும். அப்படியெல்லாம், டெல்லிக்கு ஆயிரம் கோடி ரூபாயும் கல்கத்தாவிற்கு ஆயிரம் கோடி ரூபாயும் செலவழிக்கப்படடிருக்கும்போது நூறு கோடி ரூபாய் சென்னைக்கு செலவழிக்க முடியாது என்று மத்திய அரசு சொல்லுமேயானால், மத்திய மாநில உறவு எவ்வளவு வலிமையாக இருக்கிறது என்பதைப் பற்றி மற்றவர்கள் எடுத்து விமர்சிக்க மாட்டார்களா என்று நான் வேதனைப் படுகிறேன். இதைப் பற்றி அரசு திட்டவட்டமாகத் தெரிவித்து, தொடங்கப்பட்ட திட்டம் எத்தனை கோடியானாலும் நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படி முடியவில்லையென்றால் தமிழக அரசே இதை மேற்கொண்டு செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

*திரு. மு. ஜான் வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது மாண்புமிகு சமரசம் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தின் மீது நான் வழிமொழிந்து பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டகள், சாராயத்தை 1-ந் தேதி முதல் ஒழித்த மாண்புமிக்க இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு மக்கள் மிகவும் நன்றி சொல்ல கடமைப்பட்டவர்களாக இருக்கிறார்கள். கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றி தமிழகத்தில் நலிந்த ஏழை மக்கள் பாதித்து விடாத நிலையில் மேற்படி திட்டத்தை அமுல்படுத்தி நடத்திய புரட்சித் தலைவர் அவர்கள் ஏழை மக்கள் பால் கொண்ட அன்பை இன்று நாட்டு மக்கள் அறிவார்கள். ஆனாலும் கூட தமிழகத்தின் சில பகுதிகளில் கள் சாராயத்தை





வடித்து விற்று பிழைக்கின்றவர்கள் பல இடங்களிலே இருப்பதை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தீவிர நடவடிக்கை எடுத்து கள்ளச் சாராயத்தை ஒழித்துக் கட்ட வேண்டுமென்பதைமெத்தப் பணிவன்புடன் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். காரணம் கள்ளச் சாராயக் குடிப்பதில் பாதிக்கப்படுகின்ற எத்தனையோ ஏழைக் குடும்ப மக்கள் மீது அக்கறை கொண்டு புரட்சித் தலைவர் அவர்கள் அப்படிப்பட்ட கள்ளச் சாராயம் வடிப்பவர்களை கடுமையாக நடவடிக்கை எடுப்பதன் மூலம் சமுதாயத்திலே நலிந்த மக்களை காப்பாற்ற முடியும் என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டிலே பனை ஏறும் தொழிலாளிகள், ஏழைத் தொழிலாளிகள் அப்படிப் பட்ட கள் இறக்கி தங்களது குடும்பத்தை காப்பாற்றி வந்த 30,000 பேர்களுக்கு இன்று தமிழக அரசு தலா 2,000 ரூபாய் கொடுத்து அவர்களுடைய குடும்பத்தைக் காப்பாற்றிவருகிறது. வேறு எந்த மாநிலமும் செய்யாத செயற்கரிய திட்டத்தை செய்து வரும் மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் அரசை மக்கள் பாராட்டுகிறார்கள். அதே போல செய்கின்ற ஒவ்வொரு திட்டமாக இருந்தாலும், முன்னால் வாக்குறுதி கொடுக்காத அடிப்படையிலே செய்து கொடுக்கின்ற ஒரே ஒரு முதலமைச்சர் நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். குறிப்பாக தமிழகத்தில் வறட்சியின் காரணத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட மக்கள், ஒரு புறத்திலே விவசாயிகள், மறுபுறத்திலே பொது மக்கள் குடிநீருக்காக மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் மத்திய அரசிடத்தில் அதிகமான நிதி உதவி பெற்று, நமது தமிழக மக்கள் குறிப்பாக விவசாயிகள் பாதித்து விடாதபடி திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தற்காலிகமாக குடிநீருக்காக ஆழ் குழாய் கிணறுகள் போடப் படுகின்றன.

(பிற்பகல் 1–50)

அதை தற்காலிகம் என்று மட்டும் எண்ணாமல், நிரந்தரமாக ஒவ்வொரு ஊராட்சிமன்றப் பகுதியிலேயும், ஒவ்வொரு ஊராட்சி மன்றத்தின் ஒவ்வொரு கிராமத்திலேயும், வெளிப் பகுதியிலே உள்ள நல்ல தண்ணீரைத் தேர்ந்தெடுத்து மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளின் மூலமாக தண்ணீர் வழங்க, அதிகாரிகள் தீவிரமான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்று சமுதாயத்தில் ஒரு போர் வெல்லைப் போடுகின்ற நேரத்தில், குறிப்பிட்ட இந்த நேரத்தில் தண்ணீர் கிடைக்கின்றது. ஆனால், காலம் செல்லச் செல்ல மீண்டும் இதே வறட்சி நீடிக்குமேயானால், அந்தத் தண்ணீருக்கும் தட்டுப்பாடு ஏற்படுகிறது. ஆகவே, மீண்டும் போர்க்கால நடவடிக்கைகள் எடுத்து, பல கோடி ரூபாய் செலவு செய்வதைவிட,

நிரந்தரமாக, பக்கத்து கிராமப் பகுதியில் நல்ல குடிதண்ணீர் கிடைக்கின்ற இடங்களில் தண்ணீரை எடுத்து மேல்நிலை நீர்த் தேக்கந் தொட்டிகள் மூலமாக ஒவ்வொரு ஊராட்சிமன்றத் திற்கும் இரண்டோ, இல்லையென்றால் ஒன்றோ இருந்தாலும் கூட, அதன்மூலமாக தண்ணீரை வழங்குவதற்கு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, இந்த வறட்சியான நேரத்தில், விவசாயிகளுக் காக நல்ல திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிற இந்த அரசு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்ட நேரத்திலும், இங்கே தூத்துக்குடி அனல் மின்சார நிலையமும் அதுபோல் இன்னும் பல பகுதிகளிலே மேட்டூரிலே இரண்டாம் கட்டப் பிரிவில் 420 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்கின்ற அளவில் அந்த விவசாயிகளுக்கும், தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பாக, நல்ல திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிற முதலமைச்சர் அவர்கள் ஏழைத் தொழிலாளிகளின் வர்க்கத்தைக் காப்பாற்றுவதற்காக, ஏழை விவசாயிகளைக் காப்பாற்றுவதற்காக மின்சாரத்தைக் கொண்டு வந்து கொடுக்கின்ற நிலைமையில் பிற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக உள்ளது தமிழக அரசு என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

அதே நேரத்தில், ஒரு புறத்தில் அப்படிப்பட்ட வறட்சியைக் கருதி பல அணைக்கட்டுகளை கட்டுவதற்கு கடந்த ஆண்டிலே நம் திட்டமிட்டு மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் நெல்லையிலே அடிக்கல் நாட்டினார்கள்.

மக்கள் மத்தியில் மிக முக்கியமான திட்டமான—நாங்குநேரி ராதாபுரம் பகுதிகள் மிக வறட்சியான பகுதிகள், குறிப்பாக தமிழகத்தின் தென் பகுதியில் உள்ள அந்த இரண்டு தொகுதிகள் மிகவும் வறட்சியான தொகுதிகள். அப்பகுதி விவசாயிகள் பயன் அடையும் பெரிய திட்டமாக தமிழகத்தில் புரட்சித் தலைவர் அவர்கள் 'கொடுமுடியாற்று' திட்டத்திற்கு அடிக்கால் நாட்டினார்கள். கடந்த ஜனவரி மாதத்திலிருந்து அங்கே செயல்பட்ட பொறியாளர்கள் அகற்றப்பட்டுவிட்டார்கள். அங்கேயிருந்த இயந்திரங்கள் அகற்றப்பட்டுவிட்டன. அங்கே இருந்த தளவாடச் சாமான்கள் அத்தனையும் அகற்றப்பட்டு விட்டன. அதற்கு பொறியாளர்கள், மக்கள் மத்தியில் ஒவ்வொருவிதமான கருத்துக்களைச் சொல்கிறார்கள். இத் திட்டம் நிறைவேறும் என்றும் சில பொறியாளர்கள் சொல் கிறார்கள். நாங்கள் வேறு திட்டத்தை முடித்துவிட்டு, இந்தத் திட்டத்தை தொடங்குவோம் என்று சில பொறியாளர்கள் சொல்கிறார்கள். திட்டம் நிறைவேறுமா, நிறைவேறாதா என்றால், எங்களுக்கே புரியவில்லை என்றும் சில பொறியாளர்கள் அங்கே சொல்கிறார்கள்.



ஆக, உண்மை நிலை என்ன என்பதை தயவுசெய்து
தெரிவிக்க வேண்டும் அருள்கூர்ந்து மாண்புமிகு இதய தெய்வம்
புரட்சித் தலைவர் அவர்கள், ராதாபுரம், நாங்குநேரி
தொகுதிகள் வறட்சிப் பகுதியாக, மிகவும் பின்தங்கிய பகுதி
களாக உள்ளதால், அந்த ஏழை விவசாய மக்களை காப்பாற்றும்
வகையாக அடிக்கல் நாட்டப்பட்ட அந்தத் திட்டத்தை உடனடி
யாக செய்து முடிக்கவேண்டும் என்று மெத்தப் பணிவன்போடு
சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்,

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதேபோல், நம்பியாற்றின் குறுக்கே அணை கட்டி, அதன்
மூலமாக அப்பகுதி மக்கள் வாழ்வதற்கு வழிவகை காண
வேண்டும். 1980-81-ஆம் ஆண்டிலே சட்டமன்றத்திலே அன்று
இருந்த நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் வாக்குறுதி
கொடுத்து இருந்தார்கள். அதற்காக ஒரு தொகை குறிப்பிடப்
பட்டு ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொன்னார்கள். அந்த
அடிப்படையில் உடனடியாக நம்பியாற்றின் குறுக்கே அணை
கட்டி, அதன் மூலம் விவசாயிகள் பயனடைவது மட்டுமல்ல,
குடிதண்ணீர் பிரச்சினையும் நீக்கப்படும் என்று சொல்லிக்
கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

களக்காடு பகுதியில் பச்சையாறு திட்டம். பச்சையாறு
திட்டம் 1976-ஆம் ஆண்டில், அன்றைய முதலமைச்சர்
திரு. கருணாநிதி அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட திட்டம்.
அது நிறைவேற்றப்படவில்லை. பொறியாளர்களிடத்திலே
கேட்கின்ற நேரத்திலே சொன்னார்கள். அதற்கான எந்தக்
கோப்பும் இல்லை; தற்காலிகமாக அது ஏற்படுத்தப்பட்டது
என்று. ஆனால் அந்தத் திட்டத்தின் மூலமாக கிட்டத்
தட்ட 170 கண்மாய்கள், குளங்கள் பாசனப் பகுதியாக
மாற்றப்படும். பச்சையாறு திட்டத்தில் 170 குளங்கள் பாசனம்
அடையுமேயானால், மணிமுத்தாறு பாசனத்திலுள்ள 350
குளங்கள். அவைகளும் சேர்த்து 520 குளங்கள் பயன் அடையும்.
ஆகையால் பச்சையாறு திட்டத்தை கொண்டுவருகிற நேரத்தில்
அங்கே மத்திய திட்டக் கமிஷன் ஒரு அறிக்கையை வெளி
யிட்டது. சிங்கவால் குரங்கு இருக்கின்ற காரணத்தினாலே
திட்டத்தைச் செயல்படுத்தமுடியவில்லை என்று சொன்னார்கள்.
ஒருசில சிங்கவால் குரங்குகளுக்காக லட்சோபலட்ச ஏழைஎளிய
விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். மூன்றாயிரம் அடிக்கு மேலே
உள்ள சிங்கவால் குரங்குகளுக்காக ஒரு திட்டத்தை கைவிடாத
நிலையில் வன இலாக்காவினரை மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் அழைத்து, பேசி பொதுப்பணித் துறையோடு அதை
இணைத்து செயல்படுத்தி, உடனடியாக பச்சையாறு திட்டத்தை
நிறைவேற்றித் தருமாறு மிக பணிவன்போடு கேட்டுக் கொள்
கிறேன்.

அதேபோல. விவசாயிகளுக்கு நிரந்தரமான திட்டம்.
பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கொண்டு வந்த மணி
முத்தாறு திட்டம். அந்த மணிமுத்தாறு அணையில் இன்று 350
குளங்கள் உள்ள விவசாயிகள் பிழைக்கின்ற ஒரு அருமையான

திட்டம். கடந்த காலத்தில் மணிமுத்தாறு வாய்க்காலில் தனிக்கால் திட்டத்தை வலியுறுத்தி சொல்லுகின்ற நேரத்திலே உடனடியாகக் கொடுக்கப்படும் என்று சொல்லப் பட்டது. நான் கேட்டுக்கொள்வது, மணிமுத்தாறு பாசனத்தில் தனிக்கால் திட்டம் இல்லாத காரணத்தால் ஏராளமான தண்ணீர் அங்கே தேவையற்ற நிலையிலே வீணாகிறது. மணி முத்தாறு கால்வாயில் சிமெண்ட் லைனிங் போடப்படாத காரணத்தால் கிட்டத்தட்ட வருகின்ற தண்ணீரிலே 25 கன அடி தண்ணீர் வீணாக்கப்படுகின்றது. ஆகையால் மணிமுத்தாறு பாசனத்தைப் பொறுத்தமட்டில் மணிமுத்தாறு கால்வாயில் சிமெண்ட் லைனிங் போட்டுக் கொடுக்கவேண்டும். சிமெண்ட் லைனிங் போட்டு கொடுக்கின்ற நேரத்தில் தண்ணீர் மிகவும் அதிகமான குளங்களுக்குப் பாய்ச்சுவதற்கு வாய்ப்பு அளிக்கப் படுகிறது. அதுமட்டுமல்லாமல் தனிக்கால் திட்டத்தை வலியுறுத்துகின்ற நேரத்தில் தனிக்கால் திட்டம் இல்லாமல் ஒவ்வொரு குளத்தையும் நிரப்பிச் செல்லுகின்ற நேரத்தில் விவசாயிகளுக்குள் கலவரங்களும் பிரச்சினைகளும் உண்டா கின்றன. ஆகவே அப்படிப்பட்ட பிரச்சினைகள் வராத நிலையில் ஒவ்வொரு குளத்திற்கும் தனிக்கால் திட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகையால் விவசாயிகள் நலிந்துவிடாத நிலையில், விவசாயிகளை பாதுகாக்க வேண்டிய நிலையில் கொடுமுடியாறு திட்டத்தை கைவிடாமல் உடனே செய்து கொடுக்க வேண்டுமென்று மெத்தப் பணிவன் போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல. மிக முக்கியமான திட்டமான பச்சையாறு திட்டத்தை கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே விவசாயிகள் மீது அக்கறை கொண்டுள்ள இந்த அரசு மரியாதைக்குரிய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஏழைஎளிய மக்களுக்காக, ஏழைஎளிய பள்ளி குழந்தைகளுக்காக முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தோடு காலணி கொடுக் கின்ற திட்டத்தையும் கொண்டு வந்தார்கள். மாற்றுக்கட்சியைச் சேர்ந்தவர்கள் மேடையிலே கேலியும் கிண்டலும் பேசினாலும் கூட, மக்கள் வெகுவாகப் பாராட்டுகிறார்கள். யாரும் இதற்கு முன்னால் செய்யாத மாபெரும் திட்டமாக, இனிமேல்கூட யாராலும் செய்யமுடியாத திட்டமாக, ஏழைமக்கள் மீது அன்பு கொண்டு செய்கின்ற முதலமைச்சர் அவர்களுக்கு, எனது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன். ஆகவே இப்படிப்பட்ட ஏழை எளியவர்களுக்கான அரசை, ஏழை எளிய மக்களுக்காகச் செய்கின்ற அரசை மிகவும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் ஒரு கருத்தை எடுத்துவைக்க விரும்புகிறேன்.

ஆழ்குழாய் கிணறுகளைப் போடுகின்ற நேரத்தில் ஜனத் தொகை அடிப்படையைப் பாராமல், தூரம் 1½ கிலோ மீட்டர் என்று பாராமல் எங்கே தண்ணீர் இல்லையோ, எங்கு குடிநீர் வசதி இல்லையோ அப்படிப்பட்ட இடங்களுக்கு தண்ணீர் கிடைக்க வழிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக்



கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல், அரசினர் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. கேட்டகிரி-1லிருந்து 6 வரை அதிலே பிரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. சில பிரிவுகளுக்கு உப்புத் தண்ணீர், மாற்றுத் திட்டம் இல்லை. சில ஊர்களுக்கு தேக்கத்தின் அடிப்படையில் கொடுக்க முடியாத பிரச்சினைகள். ஆகையால், தேக்கத்தினை மனதிலே கொள்ளாது எல்லா கிராமங்களுக்கும் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு மாற்றுத் திட்டத்தை கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## 6. அறிவிப்பு.

### பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

பேரவைக் கூட்டங்களின் நிகழ்ச்சி நிரல் கீழ்க்கண்டவாறு திருத்தியவாறு நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள் கின்றேன்:—

| | | |
|---|---|---|
| 6-3-1987 (வெள்ளிக்கிழமை) | .. | ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி |
| 7-3-1987 (சனிக்கிழமை) | — | விடுமுறை |
| 8-3-1987 (ஞாயிற்றுக்கிழமை) | — | விடுமுறை |
| 9-3-1987 (திங்கட்கிழமை) | .. | பேரவைக் கூட்டம் இல்லை |
| 10-3-1987 (செவ்வாய்க்கிழமை) | .. | ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத் திற்குப் பதிலுரை |
| 11-3-1987 (புதன்கிழமை) | .. | அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும் |

பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-00 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(மாலை 4-00.)

மாலை 4-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

### 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி).

*திரு. எஸ். பி. மணவாளன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் நல சத்துணவுத் திட்டம், காலணி வழங்கும் திட்டம், வீடு கட்டும் திட்டம் போன்ற நல்ல திட்டங்களை வரவேற்கிறேன். ஆனால், பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான பெரிய திட்டங்கள் எதுவும் எதிர்பார்த்தபடி ஆளுநர் உரையில் இல்லையென்றும் கூற விரும்புகிறேன். பருவ மழை பொய்த்ததன் காரணமாக வட ஆற்காடு மாவட்டத்தில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதால், அந்த மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து, வறட்சிப் பணிகளை உடனடியாக மேற்கொள்ளக் கோருகிறேன். அதே நேரத்தில் வறட்சியை முன்னிட்டு நில வரி தள்ளுபடி செய்யக் கோருகிறேன். கால்நடைகளுக்குத் தேவையான வைக்கோலை மலிவு விலையில் விவசாயிகளுக்கு வழங்க வேண்டுகிறேன். சென்னை, மதுரை, கோவை ஆகிய மாநகராட்சிகளுக்கு தேர்தல் நடத்துவது பற்றியோ, அதேபோல் கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல் நடத்துவது பற்றியோ ஆளுநர் அவர்கள் ஏதும் குறிப்பிடவில்லை. தேர்தல் நடத்துவதில் இந்த அண்ணாவின் அரசு ஏன் தயக்கம் காட்டுகிறது என்பதை அறிய விழைகிறேன். தேர்தலை உடனடியாக நடத்தக் கோருகிறேன். தொழில் துறையில் குறிப்பிடத்தக்க மேம்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்றும், அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலையை நவீனமாக்க வேண்டும், விரிவுபடுத்த வேண்டும் என்ற ஒரு திட்டம் பரிசீலனையில் உள்ளதாகவும் மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 100% ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட 'டாமின்ட்கிரேனைட்' என்கிற தமிழ்நாடு கனிம நிறுவன தொழிற்சாலை மணலியில் தொடங்கப் பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதை வரவேற்கிறேன்; பாராட்டுகிறேன்.

அதே நேரத்தில் தனியார் புதிய சிமெண்ட் தொழிற்சாலையை நிறுவ மைய அரசிடம் அனுமதி பெற்றும், சிமெண்ட் தொழிற்சாலைக்கு முக்கிய தேவைப் பொருளான சுண்ணாம்புக் கல்லுக்கு மைனிங் லைசன்சு கொடுப்பதிலே மாநில அரசு மிகவும் காலதாமதம் செய்து வருகிறது. அதேபோல், சிமெண்ட் தொழிலுக்குத் தேவையான ஜிப்சம் கல்லுக்கு உரிமம் கேட்டும், ஏற்கனவே உரிமம் கிடைத்தவர்கள் உரிமத்தைப்



புதுப்பிக்கக் கோரியும் விண்ணப்பித்து பல ஆண்டுகள் ஆகியும், அரசிடமிருந்து எந்தவிதமான பதிலும் இல்லை. தமிழகத்தின் தொழில் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு மைனிங் லைசன்சை விரைவில் கொடுத்து, பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்படி செய்ய தமிழக அரசைத் தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

குடும்ப நல திட்டத்தில் இந்தியாவில் தமிழகம் முதலிடம் வகிக்கின்றது என்பதுபோல், மாநில மின் உற்பத்திக்கு பல திட்டங்கள் தீட்டி, அதை நடைமுறைப்படுத்தி வருகின்ற அதே நேரத்தில் தமிழக மின் வாரியம் கடந்த ஆண்டில் சுமார் 227 கோடி ரூபாய் நஷ்டம் அடைந்து, இந்தியாவில் முதலிடம் வகிக்கின்றது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துச் சொல்ள விரும்புகிறேன்.

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைப் பற்றி ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் 'செகியூரிடி கார்ட்ஸ்' நீண்டகாலமாக காவல் பாதுகாவலர்கள் பணியாற்றுவதுபோல் பணியாற்றி துறை பணியில் பணியாற்றுவதுபோல் காவல் துறையில் உள்ளதுபோல், இவர்களுக்கும் வருகின்றார்கள். காவல் துறையில் உள்ளதுபோல், இவர்களுக்கும் 'பிசிகல் டெஸ்ட்' வைத்து 15 நாட்கள் பயிற்சி அளித்த பின்னர், அந்த பாதுகாவலர்கள் மெயின் கேட், யார்டு, அலுவலகம் பணிமனை உட்புறம், பேருந்து நிலையம் என ஒவ்வொரு நிலைக்குத் தக்கவாறு நியமிக்கப்படுகின்றனர். தற்போது எஸ்.எஸ்.எல்.சி. தேறிய பாதுகாவலர்களை நடத்துனர் பணிக்குச் செல்லுமாறு பல்லவன் போக்குவரத்துக் கழக நிர்வாகத்தினர் வற்புறுத்துகிறார்கள். தற்போது 10 ஆண்டுகள் பணி முடிந்து, எஸ்.எஸ்.எல்.சி. தேறியிருந்தால், அவர்களுக்கு பாதுகாவலர் மேற்பார்வை பதவிக்கு உயர்வு அளிக்கவேண்டுமென்பது பி.டி.சி.யின் நிலையான ஆணையாகும். சென்ற ஆண்டு 6 பாதுகாவலர்களுக்கு, காவல் மேற்பார்வையாளர் பதவி உயர்வு அளிக்கப்பட்டது.

எனவே, நார்ம்ஸ் அடிப்படையில் இல்லாமல் நிலைக்குத் தக்கவாறு 10 ஆண்டுகள் பணி முடித்து எஸ்.எஸ்.எல்.சி. தேறிய வர்களுக்கு பாதுகாவல் மேற்பார்வையாளர்கள் பதவி உயர்வு கொடுக்கவேண்டும், மற்றவர்களுக்கு தொடர்ந்து அவர்கள் பாதுகாவலர்களாக பணியாற்ற அனுமதிக்க வேண்டுமென்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களை நான் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் மலைவாழ் பழங்குடி மக்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கவேண்டுமென்ற நோக்கத்திலே பெரிய அளவில் பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள் 13-லிருந்து 17 ஆக உயர்த்தப் பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் சார்ந் திருக்கிற திருப்பத்தூர் தொகுதியில் ஏலகிரி மலை, ஜவ்வாது மலை, புதூர் நாடு ஆகிய இடங்களில் கூட்டுறவு சங்கம் இயங்கிக் கொண்டிருக்கிறது. புதூர் நாட்டிலே உள்ள சங்கத்திலே பல்வேறு

முறைகேடுகள் நடந்திருக்கின்றன. அங்கே உள்ள மலைவாழ் மக்களுக்கு அரசின் திட்டங்கள், கடன் வசதி, அத்தியாவசிய உணவுப்பொருட்கள் முறையாகக் கிடைப்பதில்லை, அங்கு இருந்து மக்களுக்கு எந்தவிதமான பயனும் கிடைப்பதில்லை. பல தவறுகள் அங்கே நடக்கின்றன. பல முறையீடுகள் இது குறித்து மேல் அதிகாரிகளுக்குச் செய்தும் நடவடிக்கை எடுக்கப் படவில்லை. இதுபோன்ற கூட்டுறவுச் சங்கங்களை முறையாகக் கண்காணித்து முறையாக அது செயல்படுவதற்கான நடவடிக் கையை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று முற்பகலிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் சமது அவர்கள் பேசியபோது சென்னை துரித ரயில் போக்கு வரத்திற்கு மத்திய அரசாங்கம் நிதி ஏதும் ஒதுக்கீடு செய்ய வில்லை என்று சொன்னார்கள். பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் இந்த ரயில்வே பட்ஜெட்டிலே அந்தத் திட்டத் திற்காக 4 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியத் திருநாட்டின் ஒருமைப்பாட்டிற்காக தன்னுடைய இரத்தத்தையே சிந்தி, இந்த நாட்டிற்குத் தியாகம் செய்த அன்னை இந்திரா காந்தியின் திருவுருவப் படத்தை இந்த மாமன்றத்திலே திறந்துவைப்போம் என்று சொன்னீர்கள். அப்படிச் சொல்லி இரண்டு வருடங்கள் ஆகின்றன. மேலும், கால தாமதம் செய்யாமல் இந்த மாமன்றத்திலே அவர்களுடைய திருவுருவப் படத்தை திறந்து வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த அன்னைக்குப் பெருமதிப்பு அளிக்கின்ற வகையில் சென்னை நகரின் மையப் பகுதியிலே அண்ணாசாலை யிலே ஸ்பென்ஸர்க்குப் பக்கத்திலே அன்னை இந்திரா காந்தி அவர்களின் முழு உருவச் சிலையொன்றை அமைத்து இந்த தமிழ் நாட்டிற்குப் பெருமைத் தேடித் தாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுக்கு சிலை வைப்பதில் காலந்தாழ்த்தி வருகிறீர்கள். அதற்கான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் இந்தியத் திருநாட்டின் சுதந்திரத் திற்காகப் பாடுபட்ட கொடிகாத்து தன் ரத்தத்தையே சிந்தி உயிர் நீத்த திருப்பூர் குமரன் நினைவாக திருப்பூரில் உள்ள அரசு தலைமை மருத்துவ மனைக்கு திருப்பூர் குமரன் அரசு தலைமை மருத்துவமனை என்று பெயர் சூட்டி சிறப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நல்ல நேரத்திலே திருப்பத்தூர் தொகுதியிலே நல்ல பல திட்டங்களை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருப்பத்தூரைச் சுற்றி 50 மைல் சுற்றளவிலே பெண்களுக்கென்று தனியாக ஒரு கல்லூரியோ, தொழில் பயிற்சி நிலையமோ இல்லை. தாய்க்குலத்தை நம்பியிருக்கும் இந்த அரசு பெண்களுக்காக ஒரு கலைக் கல்லூரியை, ஒரு தொழில் பயிற்சி நிலையத்தை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



வட ஆற்காடு மாவட்டம்தான் வெண்மைப் புரட்சியிலே இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கிறது. அந்த வகையில் பால் உற்பத்தி செய்ய தட்ப வெப்ப நிலை ஏற்ற முறையில் உள்ள ஏலகிரி மலை, ஜவ்வாது மலைப் பகுதி இருக்கிறது. ஏலகிரி மலையில் ஒரு பால் பண்ணையை ஏற்படுத்தி பால் பொருட் களைத் தயார் செய்யக் கூடிய தொழிற்சாலையை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மலைவாழ் பழங்குடி மக்கள் நன்மைக்காக ஜவ்வாது மலை புதூர் நாட்டிலே ஒரு புறக் காவல்நிலையம் அமைக்கவேண்டும். தேசிய வங்கியொன்றும் அமைக்க மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்திலே ஒரு விவசாயக் கல்லூரி துவக்குவதற்கு அரசுக்கு நோக்கம் இருக்கிறது. அந்த விவசாயக் கல்லூரியை திருப்பத்தூர் பகுதியிலே நிறுவி விவசாயத்தையே நம்பியிருக்கிற அந்தப் பகுதி பெருங்குடி மக்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

(மாலை 4-10)

மக்களுக்கு அத்தியாவசியமான உணவுப் பொருட்களை வழங்குகின்ற நியாயவிலைக் கடைகள் கிராமப் பகுதியிலே 500 குடும்பக் கார்டுகளுக்கு ஒரு கடை வீதமும், மலைவாழ் பழங்குடி மக்கள் வாழ்கின்ற மலைப் பகுதிகளிலே 250 குடும்பக் கார்டு களுக்கு ஒரு கடை வீதமும் அமைத்துத் தரவேண்டுமென்று, அதற்கேற்ப விதியைத் தளர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

அதே போல, வட ஆற்காடு மாவட்டத் தலைநகரம் வேலூர். அங்கு முக்கியமாக, பெயரும் புகழும் பெற்ற சி.எம்.சி. மருத்துவ மனை இருக்கிறது. தற்போது தமிழ்நாட்டிலே நடை முறைப்படுத்தும் வாயுதூத் விமான சர்வீசை சென்னைக்கும், வேலூருக்கும் விட மைய அரசிற்கு பரிந்துரை செய்ய வேண்டு மென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

கொடைக்கானல் தொலைக்காட்சி நிலையம் அமைக்கப்பட்ட பிறகு, வட ஆற்காடு மாவட்டத்திலும், தென் ஆற்காடு மாவட்டத்திலும் தொலைக் காட்சி ஒளிபரப்பு சரியாகக் கிடைப்ப தில்லை. எனவே, ஏலகிரி மலையிலே ஒரு தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் அமைத்து, மலைவாழ் மக்களுக்கு வசதி செய்து கொடுக்கின்ற வகையிலே, அங்கு தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் அமைக்க வேண்டுமென்று மைய அரசுக்கு நீங்கள் பரிந்துரை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜவ்வாது மலையிலே மலைவாழ் மக்கள் விவசாயத்திற்காக பம்ப் செட்டுகளை உபயோகப்படுத்தி வருகிறார்கள். ஆனால், பம்ப் செட்டுக்கு இணைப்புக் கொடுக்கக்கூடிய 3 பேஸ் லைன்

இல்லை. அந்த 3 பேஸ் லைன் அங்கே போட்டால், அங்கே நிறைவேற்ற இருக்கிற குடிநீர்த் திட்டங்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு, இந்த நல்ல நேரத்திலே இங்கே பேசுகின்ற வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன், வணக்கம்.

*திரு. க. நரசிம்மபல்லவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீது கருத்து வழங்க வாய்ப்பளித்தமைக்கு நான் முதலிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த உரையிலே பார்க்கின்றபொழுது முதலிலே கள், சாராயக் கடைகளை ஒழித்ததனுடைய நோக்கத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வரலாற்றிலே சோமபானம் ஒன்று இருந்ததாகக் கூறுவார்கள். ஆனால், இன்றைக்கு என்ன என்னமோ பானங்கள் வந்து உலவுகின்றன. இவை மனித சமுதாயத்தைச் சீரழிக்கும், அறிவைக் கெடுக்கும் சாதனங்களாக மாறி உள்ளன. ஏன், இந்நாட்டின் எதிர்கால மன்னர்கள் என்று கூறத்தக்க இன்றைய இளைய சமுதாயத்தினைத் தழுவி, பொட்டி வதைக்கும் கொடிய போதையாக, போதை மாத்திரைகள், பகிரங்கமாக, குறிப்பாக, கல்லூரிகளில் பாடம் படிப்பவர்களிடம் ஊன்றி உலா வருகின்றன. இதை ஆய்வு செய்து இதற்குண்டான கருவை அவசியம் விரைவில் தடை செய்ய வேண்டுமென்று நான் இங்கே வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மனித சமுதாய வளர்ச்சிக்கு நாம் அனைவரும் பாகுபாடின்றி துணை நின்றாக வேண்டும். பொதுத் தொண்டு செய்கிறோம் என்று சொல்லிக் கொண்டு இதில் சொந்த விருப்பு வெறுப்பு, கட்சி மனப்பான்மைகளைக் காட்டிக் கொண்டு இல்லாமல் இல்லாதார் ஏற்றம் பெற்றிட, மக்கள் விரோதப் போக்கை எதிர்த்து, ஒற்றுமையாய் அதை வெற்றி கொள்ள முனைய வேண்டும். நாம் விஞ்ஞானத்தில் ராக்கெட்டில் சென்று அங்கே நிஜச் சந்திரனைக் காணுகிறோம். கண்டார் விட்டு கண்டம் அழிக்கும் ஏவுகணைகளைக் கண்டு விட்டோம். அதிவேகமான நவீன கருவிகளை நாம் பெற்றிருக்கிறோம். அறிவு பூர்வமான மன வளர்ச்சியில் வளர்ந்துள்ளோமா என்றால் இல்லையென்று தான் சொல்ல முடியும். சாதிகள் உண்டு, உண்மையை மறைத்து சமுதாயத்தைச் சீரழிக்கும் பொய்ச் செய்திகள் நாளும் உண்டு; ஆண்டான் உண்டு, அடிமை உண்டு; ஆணவம், கயமைத் தன்மைகள் நாளும் உண்டு; சாராயக் கடைகளைத் திறக்கச் சொல்லும் நாக்கு உண்டு; அதுவே திறந்தால் நாடு அழியுமே என்று சொல்வதுமுண்டு; மீண்டும் மூடினால் மூச்சந்தி நாறுமே என உரைக்கும் நாவும் உண்டு, இதில் நான் என்ன சொல்கிறேன் என்றால், சமுதாயத்தைச் சீரழிக்கும் தீய சக்திகளை எதிர்க்க எந்த வித்தியாசமும், கௌரவமும் பாராமல் ஒன்றுபட்டு எதிர்ப் போம். இதில்தான் மனிதயினத்தை நவீனப்படுத்தும் நிலைவரும்,



இலங்கையில் மனித உரிமைக்காகப் போராடுகிற தமிழ் இனம் ஒரு பக்கம். நிற வெறியால் வேறுபடுத்தி அடிமைகளாக்கி ஆபிரிக்க நாட்டின் மக்கள் படுகிற பசியின் தொல்லை ஒருபக்கம். இவை எல்லாம் எதைக் காட்டுகின்றன? நவீன கருவிகள் வளர்ந்திருக்கலாம். ஆனால் மனிதனுடைய மனம் நவீன படுத்தப்படவில்லை. சிந்தனையில் வளமில்லை. அது சீராக இருக்க வேண்டும். ஒன்றுபட்ட மனித சமுதாயத்தை உருவாக்க இன்றைய தினம் நாம் போராடியாக வேண்டும் என்று இந்தத் தருணத்தில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இது வளர்ந்தால்தான் மனிதர்கள் மனிதர்களாக வாழ முடியும்.

பஞ்சாபில் இருப்பவர்களும் தமிழகத்தில் இருப்பவர்களும் இந்தியன் என்ற உணர்வோடு ஒன்றுபட்டு வாழ்வதே மனித வளர்ச்சிக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக இருக்கும். எனவே இது வளர்ந்தாக வேண்டும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

வளர்ந்து வரும் ஏழை நாடான நமக்கு இது தேவையில்லாத ஒன்று என்று முடிவுகட்டி கள், சாராயக் கடைகளை மூடியுள்ளதைப் பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டுள்ளேன். மேலும் கள் இறக்கும் தொழிலாளர்கள் 30,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கத் திட்டமிட்டுள்ள முயற்சியை நன்றியோடு பாராட்டி வரவேற்பதோடு, அவர்களுக்குத் தொழில் நடத்த ரூ. 2,000 உதவித் தொகை அளிக்க முன்வந்து நிவாரண உதவி அளிக்கும் கருணை உள்ளத்தை நன்றியோடு பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பார்த்தல், கேட்டல், படித்தல் என்ற மூன்று அத்தியாயங்கள் மனிதனுக்கு மிக முக்கியம். இதில் பார்த்தல், வேலையின் செய் முறையாக மனதில் மறுக்கவொண்ணாமல் உணரும் தன்மையாகும். இதை இன்றைய தினம் தொலைக்காட்சி நிலையங்கள் செய்து கொண்டு வருகின்றன. தொலைக்காட்சி நிலையம் மூலமாக நல்ல முறையில் கல்விக் கருத்துக்களையும் நல்ல சமுதாய மேம் பாட்டுக்குண்டான மக்களுக்குத் தேவையான நல்ல கருத்துக் களையும் ஒளிபரப்ப ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த வகையில் கொடைக்கானலில் தொலைக்காட்சி நிலையம் அமைத்து பல மாவட்டங்கள் பயனுறச் செய்தமைக்கு பாராட்டி அதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த 1 வருடத்திற்கு முன்பு அரசு மூலமாக தமிழக முதல்வர் அவர்கள் தொலைக்காட்சிப் பெட்டிகள் பலவற்றை தமிழகத்தில் உள்ள பல கிராமங்களுக்கு வழங்கியதை அறிவோம். அப்படிப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டிகள் இன்னும் வழங்கப் படாமல் மீதமுள்ள கிராமங்களுக்கும் வழங்குவதற்கான நடவடிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற் கொள்ள வேண்டுமென்றும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் இவ்வாறு வழங்கப்பட்ட தொலைக்காட்சிப்

பெட்டிகள் பழுதடைந்தால் அதைச் சரி செய்வதற்குப் பல மாதங்கள் ஆகின்றன. எனவே அந்தத் தொலைக் காட்சிப் பெட்டிகளைப் பழுதுபார்க்கும் மெக்கானிக்குகளை குறிப்பிட்ட ஒரு தொகுதி அல்லது இரண்டு தொகுதிகளுக்கு ஒரு நபர் என்ற அடிப்படையில் அமர்த்த வேண்டுமென்றும் இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, தமிழகத்தில் அடிக்கடி வெள்ளம், வறட்சி போன்ற சூழ்நிலைகளால் பாதிப்பு ஏற்பட்டு அரசுக்கு பெருத்த பொருளாதார இழப்பு ஏற்பட்டு வருகிறது. இதை மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசு திறம்பட சமாளித்துக் கொண்டு மக்களுக்கு ஆக்கப்பூர்வமான உதவிகளைச் செய்து கொண்டு வருகிறது. நியாயவிலைக் கடைகள் மூலம் குறைந்த விலையில் அரிசி, கோதுமை மற்றும் பாமாயிலும் கொடுத்து உதவியும், அரசு ஊழியர்களுக்கும் மத்திய அரசு ஊழியர்களுக்கு ஈடாக சம்பளமும் கூடுதலாகக் கொடுத்து வருகிறது. மேலும் மது விலக்குக் கொள்கை காரணமாக தமிழக அரசுக்குப் பொருளாதார இழப்பும் ஏற்பட்டு இருக்கிறது. எனவே இன்றைய சூழ்நிலையில் இதை சரிசெய்யும் நோக்கத்தோடு கவர்னர் அவர்களின் உரையில் மத்திய அரசு ரூ. 86 கோடி அளித்து உதவ வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருப்பதை வரவேற்று அவ்வாறு மத்திய அரசு உதவ வேண்டுமென்று என்னுடைய கோரிக்கையாகவும் இங்கே அதை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வாழ்வில் மனிதர்கள் அனைவருக்கும் வளர்ந்துவரும் சூழ்நிலைக்கு ஏற்ப சிக்கனம் அவசியம் தேவைப்படுகிறது. அது மின்சாரமாக இருந்தாலும் சரி, குடும்ப சம்சாரத்தில் இருக்கிற சந்ததிகளாக இருந்தாலும் சரி, குடிநீராக இருந்தாலும் சரி, குளிக்கும் நீராக இருந்தாலும் சரி இது பொருந்தும். இன்றைக்கு இதை உணர்த்துவது போலவோ என்னவோ சட்டமன்ற விடுதியில் கடந்த இரண்டு நாட்களாய் சிக்கனமாய் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. விவசாயத்தில் சொட்டுநீர் முறையில் திட்டம் தீட்டப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். அந்தச் சிக்கனத் திட்டத்தை வரவேற்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயம் என்றதும் எனக்கொரு நினைவு வருகிறது. கம்யூனிஸ்ட்கள் ஆளும் மேற்கு வங்கத்தில் 17 ஏக்கர் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் 15 ஏக்கர்தான் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று அறிவித்திருப்பதையும் நான் பாராட்டி ரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மேலும் ஏழை விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. மின்சாரப் பற்றாக்குறை இருந்தாலும்கூட, பெரிய நீர்வீழ்ச்சி களையெல்லாம் பெற்றிருக்கிற மாநிலங்கள் செய்ய முடியாத அளவில் உழைக்கின்ற அந்த உத்தமர், தோழனின் இல்லத்தில் ஒரு மின்விளக்கு இலவசமாக ஒளிவிடுகிறது. விவசாயக்



குடும்பத்தில் வயது முதிர்ந்த பெரியவர்களுக்கு முதியோர் ஓய்வூதியம், வேட்டி, சேலை ஒருவேளை சத்துணவு வழங்கப் படுகிறது. இவர்களுக்கு மட்டுமா! இல்லை. விவசாயக் கூலி வேலை செய்யும் உற்பத்தி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு நாளும் உழைக்கும் அந்த ஏழைபங்காளன் பெற்றெடுத்த குழந்தைகளுக்கு சத்துணவு....

(மாலை 4-20)

இலவச பாட புத்தகம், சீருடை, பற்பொடி, இன்றைக்கு புதிய அறிவிப்பாக பாதுகாப்பான காலணிகள் ஆகியவைகள் எல்லாம் யாருக்குக் கிடைக்கிறது என்றால், உழைக்கின்றவனுக்கு, உண்மை விவசாயிகளுக்கு, நமக்கு இக்கில்லை, கேட்பாரில்லை என்று நினைத்து வாழ்ந்து வந்த சமுதாயத்திற்குக் கிடைக்கிறது. இல்லாதார் ஏற்றம் பெற வகுத்துள்ள இப்பேர்ப்பட்ட திட்டங் களை கம்யூனிஸ்ட் ஆளும் மாநிலங்களில் உண்டா என்றால், இல்லை என்றுதான் சொல்லமுடியும். ஆனால் இதற்கு மாறாக மனிதனை மனிதன் இழுக்கும் கைவண்டி இன்னும் மேற்கு வங்காளத்தில், கல்கத்தாவில் ஓடிக்கொண்டிருக்கிறது. நமது புரட்சித் தலைவர் அதை எப்போதோ ஒழித்துவிட்டார். இவையெல்லாம் எண்ணி எண்ணி வியக்கும் அரிய திட்டங்கள் அல்லவா? நாட்டின் வளர்ச்சிக்குத் தொழிற்சாலையில் மட்டு மல்லாமல் எத்தொழில் செய்தாலும் ஏழை வர்க்கங்கள் நேரிடை யாக அனுபவிக்கும் திட்டங்கள் இவை.

நிர்வாகவசதி கிராமப்புற வசதி இவற்றை கருத்தில் கொண்டு பல மாவட்டங்களை அரசு இரண்டாகப் பிரித்துள்ளதை பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் எனது உத்திரமேரூர் தொகுதியை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதில் 74 ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. வாலாஜாபாத்தில் 64 ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. இதை இரண்டு இரண்டாகப் பிரித்திட வேண்டு மென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உத்திர மேரூர் தாலுகா ஆனதால் அங்கே அரசு பொது மருத்துவ மனையை அமைக்க ஏற்கெனவே அரசு வழங்கிய உத்தரவின் அடிப் படையில் விரைந்து மருத்துவமனையை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் அங்கு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். வாலாஜாபாத்து பேரூராட்சியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தையும் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.... (மணியடிக்கப்பெற்றது)

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும்
தீர்மானத்தின் மீது நான் சார்ந்துள்ள காந்தி-காமராஜ் தேசிய
காங்கிரஸ் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

கடந்த நான்கு நாட்களாக இந்த மாமன்றத்திலே பேசக்
கூடிய அனைத்து உறுப்பினர்களும் தமிழகத்திலே ஏற்பட்டுள்ள
வறட்சி நிலை குறித்து எடுத்து வைத்தார்கள். அதே நேரத்தில்
மழை இல்லாததன் காரணமாக அனைத்து மாவட்டங்களிலும்
வறட்சி ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. வ.உ.சி. மாவட்
டத்தில், சாத்தான்குளம் தொகுதியும், நெல்லை மாவட்டத்தில்
ராதாபுரம் தொகுதியும் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அங்கே
குடியிருக்கிற மக்கள் பக்கத்திலே இருக்கக்கூடிய நமது பேரவைத்
தலைவர் அவர்களுடைய தொகுதியான சேரன்மாதேவிக்கு ஆடு
மாடுகளைக் கொண்டு சென்று அங்கே போய் பிழைக்கக் கூடிய
வகையில் இங்கேயிருந்து வீடுகளைக் காலி செய்து கொண்டிருக்
கிறார்கள் இந்தச் சூழ்நிலையில் அந்தப் பகுதியில் உள்ள தென்னை
மரங்கள் கீழே விழக்கூடிய நிலையிலே இருக்கின்றன. ஆகவே
அந்தப் பகுதி மக்கள் விவசாயம் செய்ய வேண்டுமென்றாலும்,
பம்புசெட் வழியாகத்தான் விவசாயம் செய்ய வேண்டிய சூழ்
நிலையில் இருக்கிறார்கள். அரசு உடனடியாக அந்தப் பகுதிகளை
வறட்சிப் பகுதியாக அறிவிப்பதோடு அங்கே வரி வசூல்
செய்வதையும் நிறுத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த
நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 25-2-1987 அன்று திரு. வெங்கடசுப்பிரமணியம்,
ஐ.ஏ.எஸ். அவர்கள் அந்த வறட்சிப் பகுதிகளையெல்லாம் பார்வை
யிட்டு வந்திருக்கிறார்கள். அந்தப் பகுதிகளையெல்லாம் சுற்றி
வந்தார்கள். எல்லா இடங்களையும் பார்த்தார்கள். அவர்களும்
இந்த அரசுக்கு அறிக்கையை சமர்ப்பித்திருப்பார்கள் என்று
நினைக்கிறேன். ஆகவே ராதாபுரம் தொகுதியையும், சாத்தான்
குளம் தொகுதியையும் வறட்சிப் பகுதியாக மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் உடனடியாக அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

ஆழ்வார்திருநகரி, கருங்குளம் யூனியன் சேர்ந்த பகுதி.
கடப்பா பள்ளத்தாக்குப் பகுதியில் லேசாக வரக்கூடிய தண்ணீரை
வைத்து விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த
விவசாயிகள் விவசாயம் செய்ததை அறுவடை செய்ய வழிவகை
இல்லாமல் கடன் கொடுக்க வேண்டியிருக்கிறது. அவர்கள்
வாங்கிய பாங்கு கடன்களை அடைக்க வேண்டுமென்று சொல்லி,
அந்த கிராம மக்கள் அறுவடை செய்யக் கூடாது என்று சொல்லி
வி. ஏ. ஓ.-க்கள் வயல்களில் ஜண்டா கட்டி அறுவடை செய்ய
விடாமல் நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆகவே அவர்கள்
விவசாயம் செய்த வயலை அறுவடை செய்து, அந்த நெல்லை
வீட்டுக்குக் கொண்டு சென்றால்தான் கடனை அடைக்கமுடியும்.
எனவே வி. ஏ. ஓ. நிலத்தில் ஜண்டா கட்டும் நடவடிக்கையை
உடனடியாக நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, விவசாயிகள் மின்சாரத்தை உபயோகித்து வருகி
றார்கள். 28-2-1987-க்குள் பாக்கிப் பணத்தைக் கட்ட வேண்டும்
என்றும், அப்படிக் கட்டாதவர்கள் இணைப்பு துண்டிக்கப்படும்
என்றும் மோட்டார்கள் இயங்காத நிலை இருக்குமென்றும்
அறிவிக்கப்பட்டிருக்கிறது. அங்கே வறட்சி நிலை இருப்பதால்,
உடனடியாக அந்த மக்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச்
செய்வதோடு, 28-2-87க்குள் பாக்கிப் பணம் கட்ட வேண்டுமென்று
இருப்பதை நீட்டித்துக் கொடுக்க ஏற்பாடுகளை மாண்புமிகு
அமைச்சரவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வறட்சி நேரத்தில் நிலத்தடி நீரைப் பெருக்க,
அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய குளங்களை மராமத்து செய்வார்
களானால், தண்ணீர் வரக்கூடிய காலங்களில் நிலத்தடி நீர்மட்டம்
உயர வாய்ப்பு இருக்கும். அடுத்து, இப்போது வறட்சியால்
விவசாய மக்கள் அங்கே அவதியுறும் நிலை இருப்பதால், அந்த
மக்கள் கூட்டுறவு பேங்க் கடன்களை 28-2-88க்குள் கட்டவேண்டு
மென்று ஆணை பிறப்பித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.
பேங்க் கடன்கள் கட்ட அவர்களுக்கு மேலும் சிறிது கால நீட்டிப்பு
கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே இந்த மாமன்றத்திலே
சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, இப்போது மழை இல்லாததால் வரக்கூடிய காலங்
களில் வறட்சி அதிகமாக ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இந்த
மாமன்றத்திலே அனைத்து உறுப்பினர்களும் அனைத்து நதி
களையும் தேசிய மயமாக்கவேண்டுமென்றுகேட்டுக்கொண்டார்கள்.
நமது அரசு உடனடியாக மத்திய அரசுக்குத் தகவல்கள் கொடுத்து
அனைத்து நதிகளையும் தேசிய மயமாக்க வேண்டிய ஏற்பாடுகளை
செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வறட்சியால்
ஏற்பட்டுள்ள குடிநீர் பற்றாக்குறையைப் போக்க கடல்நீரை
குடிநீராகச் செய்யக்கூடிய திட்டத்தை மாநில அரசு உடனடியாக
செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன், இங்கே,
அருமைச் சகோதரர் மாண்புமிகு அப்துல் சமத் அவர்கள் பேசிய
நேரத்தில் கடல் நீரை குடி நீராக்கும் திட்டத்தை உடனடியாகச்
செயல்படுத்த வேண்டுமென்று கேட்டபோது, மாண்புமிகு அமைச்ச
ரவர்கள் அந்தத் திட்டத்திற்கு அதிகமாகச் செலவாகும் என்று
சொன்னார்கள். எங்களுடைய தலைவர் இலக்கியச் செல்வர்
அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அவர் லண்டன் சென்றிருந்த
நேரத்தில் 'மெம்பரே' என்ற சாதனம் அமைத்து, அதன்மூலம்
கடல் நீரை குடிநீராக்க முடியும் என்றும், அது சாதாரண வகையில்
முடியுமென்றும் சொன்னார்கள். உடனடியாக அந்தச் சாதனத்தை
அரசு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு அதிகமான விலைவாசி ஏற்பட்டு,
அத்தியாவசியமான பொருள்கள் வாங்க முடியாத நிலை ஏற்பட்
டிருக்கிறது. உடனடியாக விலை ஏற்றத்தைத் தடுத்து நிறுத்த
வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலுள்ள செய்துங்கநல்லூருக்கு தாமிர பரணியிலிருந்து குடிநீர் கொடுக்க ஒரு திட்டம் போடப்பட் டுள்ளது. ஆனால் கடந்த 5 ஆண்டுகளாக அந்தத் திட்டம் நிறை வேற்றப்படாமல் இருக்கிறது. உடனடியாக அந்தத் திட்டத்தை முடித்து, செய்துங்கநல்லூருக்கு தாமிரபரணி ஆற்றிலிருந்து குடி நீர் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

தமிழக அரசு மதுக் கடைகளை எடுத்துவிட்டதாக அறிவித் துள்ளது பாராட்டத்தக்க விஷயம். இருந்தாலும் மதுக் கடைகள் பூரணமாக எடுக்கப்படவில்லை. கிராமங்களிலே பல்வேறு வகை யான மதுக்கள் இருந்து வருகின்றன என்பதை சொல்வதோடு, உடனடியாக பூரண மது விலக்கை அமுல்படுத்த இந்த நேரத்திலே தக்க நடவடிக்கைகளை அமைச்சரவர்கள் எடுக்க வேண்டும்.

என்னுடைய தொகுதிக்கு கூட்டுக் குடிநீர் திட்டம் என்ற முறையில் தாமிரபரணி ஆற்றிலிருந்து ஒரு குடிநீர் திட்டத்தை நிறைவேற்றினால்தான் வறட்சியான நேரத்தில் சாத்தான்குளம் தொகுதி மக்கள் குடிநீர் பெற வாய்ப்பாக இருக்கும். அங்கிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள தாமிரபரணி ஆற்றிலிருந்து குடிநீர் கொண்டுவர ஒரு திட்டம் அமைத்து, சாத்தான்குளம் மக்களுக்குக் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மணிமுத்தாறு பாசன வாய்க்காலை ஆழப்படுத்தாமல் அகலப்படுத்தாமல் இருப்பதால் பாசனத்திற்கு தண்ணீர் சரியான முறையில் கிடைக்காமல் இருக்கிறது. அந்தப் பாசனத்தைச் சேர்ந்த 12 குளங்கள், ரிசர்வ் டாங்க், ஸ்பெஷல் டாங்க் என்று இருப்பதால், அந்தப் பகுதிகளில் விவசாயம் செய்ய முடியாமல் இருக்கிறது. ஆகவே உடனடியாக அந்த மணிமுத்தாறுபாசனத்தை சேர்ந்த அந்த 12 குளங்களை ரெகுலர் குளங்களாக ஆக்கித் தரும் படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 4-30)

குடிநீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளில் வாழ்கின்ற கிராம மக்களுக்கு லாரிகள் மூலமாக குடிநீர் வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதி வறட்சி தொகுதியாக இருக்கின்ற காரணத்தினால் அங்கு எந்தவிதமான பாசன வசதியும் இல்லாத காரணத்தினால் அந்த தொகுதியிலே உள்ள மக்கள் மிகவும் அவதிக்குள்ளாவதன் காரணமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறுசிறு தொழிற்சாலைகளை சாத்தான்குளம் தொகுதியிலே அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த பகுதி வறட்சியால் பாதிக்கப்பட்டு இருப்பதால் அங்கே இருக்கின்ற மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கின்றார்கள். ஆகவே அந்த





பகுதிகளை வறட்சிப் பகுதிகளாக அறிவிப்பு செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன். எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியை தெரிவித்து கொண்டு அமைகிறேன். வணக்கம்.

* திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த ஆளுநர் உரைக்கு நன்றி கூறி என்னுடைய தொகுதியின் சார்பாக பல்வேறு குறைகளைப் பற்றி நான் பேச இருக்கிறேன். நெல்லை மவட்டத்திலே சங்கரன்கோயில் தாலுக்கா, சிவகிரி தாலுக்கா ஆகியவை கடுமையான வறட்சிக் குள்ளாகியிருக்கின்றன. அங்கே வறட்சி ஏற்பட்டு அங்கே இருக்கக் கூடிய கால்நடைகள் எல்லாவற்றையுமே விவசாயிகள் காப்பாற்ற முடியாத நிலையிலே இருக்கின்றார்கள். இந்த நிலைமைகளில் அவர்கள் கால்நடைகளையெல்லாம் விற்பனை செய்துகொண்டிருக் கின்றார்கள்.

அதேமாதிரி குடிப்பதற்கும் தண்ணீர் இல்லாமல் இருக்கின்றது. நீர் இல்லாத காரணத்தினால் விவசாயம் முழுமையாகப் பாதிக்கப் பட்டு இருக்கின்றது. இப்படி முழுமையாக விவசாயம் பாதிக்கப் பட்டு இருக்கின்ற காரணத்தினால், சங்கரன்கோயில் தாலுக்கா, சிவகிரி தாலுக்கா ஆகிய இரண்டு தாலுக்காக்களையும் வறட்சித் தாலுக்காக்களாக அறிவிக்கவேண்டும் என்று மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அங்கே இப்போது விவசாய மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கின்ற காரணத்தினாலே கடன் வசூல் அத்தனையையும் நிறுத்தி வைக்க வேண்டும் என்று மிக்க அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வு காண மேற்குத் தொடர்ச்சி மலை அருகாமையில் பல புறம்போக்கு இடங்கள் இருக்கின்றன. அங்கே கிணறு வெட்டி தண்ணீர் எடுத்து குடிநீர் இல்லாத கிராமங் களுக்குக் குடிநீர் கொண்டுவர ஏற்பாடு செய்யும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

சிவகிரி தாலுக்கா அலுவலகம் ஒரு தனியாருடைய இடத்திலே இருக்கின்றது. அவர் தாலுக்கா அலுவலகத்தை அப்புறப்படுத்த வேண்டும் என்று கோர்ட்டு மூலம் நோட்டீஸ் விட்டிருக்கிறார்கள். ஆகவே அங்கே ஒரு தாலுக்கா கட்டடம் கட்ட இந்த நிதி ஆண்டிலேயே சேர்ந்த அதற்குரிய நிலத்தை தேர்வு செய்து காரியங்களை நிறைவு செய்யும்படியாக மாண்புமிகு நிதிஅமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சிவகிரி தாலுக்கவில் உள்ள அரசு மருத்துவ மனையில் தேவையான எல்லா மருத்துவ பிரிவுகளும் இல்லை. ஒன்றரை லட்சம் மக்கள் இருக்கக்கூடிய சிவகிரி தாலுக்காவில் அனைத்து அரசு மருத்துவமனைப் பிரிவுகளும் இருப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் விவசாயத்திற்காக மின் இணைப்புக் கொடுக்கும்படி மனுச் செய்து இருக்கின்றார்கள். அவர்கள் மனு செய்து 10 ஆண்டுக்காலம் ஆகிறது. அவர்கள் பத்து ஆண்டுக் காலமாக மின் இணைப்பு கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது. உத்திரபிரதேசம், பீகார் மாநிலங்களில் விவசாயத்திற்கு மனு செய்தால் சுமார் ஆறு மாத காலத்தில் மின் இணைப்புக் கொடுக்கப்படுகிறது. ஆனால் தமிழகத்தில் 10 ஆண்டுகளாக பிரையாரிட்டியிலே இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே விவசாயிகளுக்கு மின் இணைப்பு இல்லாத காரணத்தினாலே ஆயில் மெசின்கள் வைத்து விவசாயம் செய்வதால் மாதம் ரூ. 1500/- அளவுக்கு டீசல் செலவு ஏற்படுகிறது. ஆகவே இந்த நிலையை மாற்றி துரிதமாக நடவடிக்கை எடுத்து விவசாயிகளுக்கு முன் உரிமைக் கொடுத்து மின் இணைப்பு 6 மாத காலத்திற்குள் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வாசுதேவநல்லூரில் பெண்களுக்கு என்று ஒரு உயர்நிலைப் பள்ளி வேண்டும். அந்த பகுதியில் பத்து கிலோமீட்டர் சுற்றளவில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி இல்லை. எனவே வாசுதேவநல்லூரில் பெண்களுக்கு என்று உயர்நிலைப் பள்ளி அமைத்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை மிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்தில் சிவகிரி தாலுக்காவில் சர்க்கரை ஆலை ஆரம்பிக்கவேண்டும் என்று சுமார் 7, 8 தொழிலதிபர்கள் மனு செய்திருக்கின்றார்கள். இப்போது ஒரு நபரை மட்டும் டெல்லிக்கு தேர்வு செய்து அனுப்புவதாக அறிகிறேன். இந்த சிவகிரி தாலுக்காவிலே மனு செய்த அனைவரது மனுவுமே டில்லிக்கு அனுப்பவேண்டும். மத்திய அரசுக்கு அந்த தொழிலதிபர்களை எல்லாம் அனுப்பினால் அங்கே மத்திய அரசு தேர்வு செய்து தகுதி உடையவர்களுக்கு தொழில் நடத்த அனுமதி வழங்க வாய்ப்பாக இருக்கும் என்று மிக்க அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, யூனியன் சம்பந்தப்பட்ட பள்ளிக்கூடங்கள் எல்லாமே நிதியில்லாத காரணத்தால், ஆசிரியர்கள் எல்லோருமே அரசு ஊழியர்கள் என்று ஆக்கப்பட்டுவிட்ட காரணத்தால், அந்தக் கல்விக் கூடங்களையும் அரசே ஏற்றுக் கொள்ள வேண்டும். என்னுடைய தொகுதியிலுள்ள பல பள்ளிக்கூடங்கள் பழுதடைந்திருக்கின்றன. மோசமாக இருக்கின்ற பள்ளிக் கூடங்களை செப்பனிட நிதி வேண்டுமென்று கேட்கிறபோது நிதி பற்றாக்குறை என்று சொல்கிறார்கள். மேலும் இதற்காக தமிழகம் முழுவதற்கும் 1 கோடி ரூபாய் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதனால் பழுதடைந்த பள்ளிக் கூடங்களை சீர் செய்ய முடியாத நிலை இருக்கிறது. ஆகவே யூனியன் பள்ளிக்கூடங்கள் அனைத்தையும் அரசே எடுத்து பழுது பார்த்தால் நன்றாக இருக்கும் என்று இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அடுத்து, தமிழகத்திலுள்ள விவசாயிகள் எல்லோருமே வெல்லம் வத்தல், புளி போன்ற அத்தியாவசியப் பொருள்களை உற்பத்தி செய்கின்ற தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் இந்தப் பொருட்கள் எல்லாம் அரசாங்கத்தின் அத்தியாவசிய பொருட்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவைகளை விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டு உற்பத்தி செய்கிறார்கள். அவர்களின் நலன் கருதி அத்தியாவசியப் பொருள்கள் பட்டியலிலிருந்து இவற்றை நீக்கவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வாசுதேவநல்லூரிலிருந்து ராஜபாளையத்திற்கு ஒரு டவுன் பஸ் விட வேண்டுமென்றும், புளியங்குடியிலிருந்து ராஜபாளையத்திற்கு இராமசாமியாபுரம், முருகசாமியாபுரம், பந்தமொழி ரெட்டியாபட்டி, செந்தட்டியாபுரம், சோலைசேரி வழியாக ஒரு பஸ் விடவேண்டுமென்றும் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களை மிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மேற்கண்ட இடங்களில் இரண்டு யூனியன்கள் இருக்கின்றன. ஒன்று சங்கரன்கோயில், மற்றொன்று வாசுதேவநல்லூர். இரண்டு யூனியன்களிலும் முறையே நான்கு, நான்கு கிராமங்களுக்கு பஸ்கள் போக முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, இரண்டு யூனியன்களுக்கும் எப்படியாவது அவசியம் போக்குவரத்துத் துறை கட்டபொம்மன் வாகனங்களை விடுவதற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டுமென்று மிக்க அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, போர்வெல்லைப் பொறுத்தவரையில் ஒரு சில இடங்களைத் தவிர, பெரும்பாலும், 50 சதவிகிதத்திற்கு மேல் பழுதடைந்திருக்கின்றன. இவற்றை தனியார் போடுவதற்கு சுமாராக 5 ஆயிரம் ரூபாயிலிருந்து 7 ஆயிரம் ரூபாய் வரை செலவு ஆகிறது. ஆனால் அரசு போடுகிறபோது 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் ரூபாய் வரை ஆகிறது என்று நான் அறிகிறேன். அப்படி இருந்தும் இவைகள் சரிவர இயங்கவில்லை. 100 அடி, 200 அடி ஆழத்திற்கு போட்டும், 3 மாதங்கள், ஆறு மாதங்கள் கூட சரிவர இயங்கவில்லை. பழுதடைந்துள்ளதை மறுபடியும் சரிசெய்ய சொன்னால் அவர்கள் தண்ணீர் கிடைக்கவில்லையென்றும், இன்னும் பல்வேறு காரணங்களை சொல்கிறார்கள். ஆகவே, இவற்றை போடுவதற்கு பதிலாக, தண்ணீர் கஷ்டம் இருக்கும் இடங்களில் எல்லாம் கிணறுகளை வெட்டி ஆழப்படுத்தினால் அது நிரந்தரமாகவும் இருக்கும். ஆகவே, அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது) இன்னும் ஒன்றை சொல்லி முடித்துவிடுகிறேன். மதுவிலக்கு பற்றி இங்கே எனக்கு முன்னால் பேசிய பல உறுப்பினர்கள் பேசினார்கள். இதில் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், எந்தப் பகுதியை எடுத்துக்கொண்டாலும், முன்பு எப்படி ஒரு கடை இருந்ததோ, அதற்கு மாறாக அந்த இடங்களில் எல்லாம் இரண்டு கடைகள் இருக்கும் அளவுக்கு கிராமங்கள் தோறும் நிலைமை இருக்கிறது.

அரசு ஒரு லட்சம் ரூபாய்க்கு ஏலம் விட்டது என்றால், காவல்
துறையினர் இப்பொழுது 75 ஆயிரம் ரூபாய் வீதம் ஏலம்
விடுகிறார்கள் என்பதை நான்இங்கே வருத்தத்துடன் தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாலை 4-40)

அரசின் முந்திய ஏலத்தொகையில் 75 சதவீதம் அளவிற்கு
காவல்துறையினரே ஏலம் விடுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு
அமைச்சரவர்கள் அதற்கு வேண்டிய துரிதமான நடவடிக்கையை
எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எந்தப் பகுதியை
எடுத்தாலும் இந்த மாதிரி நிலைதான் இருக்கிறது. ஆகவே,
இதில் முழுக் கவனம் செலுத்தி, துரிதமான நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி
அமைகிறேன், நன்றி. வணக்கம்.

திரு. கூடலூர் இ. வி. வேலு: மாண்புமிகு பேரவையினுடைய
துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய ஆளுநர்
அவர்கள் ஆற்றிய உரைக்கு மரியாதைக்குரிய சட்டப் பேரவை
உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் முன்மொழிந்த இந்தத்
தீர்மானத்தின்மீது நான் வழிமொழிந்து சில கருத்துக்களை
எடுத்து வைப்பது என்னுடைய கடமை என்று கருதி எடுத்து
வைக்கிறேன்.

கவர்னர் உரையிலே 30,000 கள் இறக்கும் தொழிலாளர்
களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் தலா 2,000 ரூபாய்
கொடுத்து அந்தக் குடும்பங்களில் ஒளி விளக்கு ஏற்றும் வகையில்
இன்றைக்குப் புரட்சித் தலைவர் அவர்களின் அரசாங்கம் இந்த
உரையிலே திட்டங்களைத் தீட்டி இருக்கிறது.

அதோடு மட்டுமில்லாமல், வட சென்னையில் ஆசியா
வளர்ச்சி வங்கியின் உதவியுடன் 150 மில்லியன் டாலர் நிதி
உதவியைப் பெற்று அனல் மின் நிலையம் ஒன்றை உருவாக்க
வேண்டுமென்பதில் கண்ணுங்கருத்துமாக இருந்து இன்றைக்குத்
திட்டங்கள் ஆளுநர் உரையிலே தீட்டப்பட்டு உருவாக்கப்
பட்டிருக்கிறது.

'டாமின்' என்ற நிறுவனம்—கருப்புக் கல் சம்பந்தப்பட்ட
பொது நிறுவனத்தின் மூலமாக நூற்றுக்கு நூறு சதவீதம்
ஏற்றுமதி செய்யும் வகையில் பல கோடி ரூபாய்களைக் கொண்ட
தமிழக சர்க்காரின் பெருந்திட்டத்தைப்பற்றி இந்த உரையிலே
குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமில்லாமல், மத்திய மாநில சர்க்கார்களின்
உறவைப்பற்றி வர்ணிக்கும்பொழுது சட்டப்பேரவை உறுப்பினர்
டாக்டர் சமரசம் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள்.
கணவன்—மனைவியாக இருக்கிறது என்று குறிப்பிட்டதை பற்றிச்
சிறப்பாகவும் சில சட்டப் பேரவை உறுப்பினர்கள் பேசினார்கள்;



சிலர் எள்ளி நகையாடினார்கள். ஒன்றைக் குறிப்பாகச் சொல்லி
யாக வேண்டும். இந்த ஆண்டில் 170 கோடி ரூபாய் செலவில்
உதகமண்டலத்தில் எக்ஸ் கதிர் படச் சுருள் தயாரிப்புத்
தொழிற்சாலையை உருவாக்குவதற்காக நம்முடைய மாநில
அரசாங்கம் பெரும் முயற்சி எடுத்துக்கொண்டு மத்திய சர்க்
காரைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்த ஆண்டு துவங்கப்
படும் என்று மத்திய அரசாங்கம் சொல்லியிருக்கிறது. இப்படி
170 கோடி ரூபாய்க்கான திட்டத்திற்கு அனுமதி அளித்திருக்
கிறது என்றால் இந்த உறவுக்கு என்ன பொருள் என்று நான்
கேட்க விரும்புகிறேன். ஆகவேதான், நமது சட்டப் பேரவை
உறுப்பினர் அவர்கள், இந்த உறவு குடும்ப உறவாக இருந்து,
இந்த மாநிலத்தைச் செம்மைப்படுத்தும் வகையில் மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்கள் கண்ணுங்கருத்துமாக இருக்கின்றார்
என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகவே அப்படிச் சொன்னார்கள்.
ஆனால் அவர் சொன்ன இந்த உறவு முறையைப்பற்றிப்
புரியாத சில சட்டப் பேரவை உறுப்பினர்கள் இதைத் தெரிந்து
கொள்ள வேண்டுமென்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட
விரும்புகிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர்களில் பலர் வறட்சியைப் பற்றிச்
சொன்னார்கள். இந்த பஞ்ச நிலையைப் போக்குவதற்கு இந்த
அரசாங்கம் என்ன முயற்சிகளையெல்லாம் எடுத்துக்கொண்டு
இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். அன்றாடம்
மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் உறுப்பினர்கள் செல்
கிறார்கள். எங்கள் பகுதியில் கிணறு வறண்டு வறட்சியாக
இருக்கிறது; கிணற்றை ஆழப்படுத்த வேண்டும், கை இறைப்பான்
களைப் பொருத்த வேண்டும் என்று அனைத்து சட்டமன்ற
உறுப்பினர்களும் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் கேட்டுக்
கொண்டு இருக்கிறார்கள். அதேமாதிரி இங்கே உள்ள அமைச்சர்
களிடம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். 100 சதவீதம் கேட்
டிருந்தால் அதில் 75 சதவீதம் அளவிற்குக் கை இறைப்பான்கள்
போடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த ஆளுநர் உரையில்
கூட, 30 கோடி ரூபாயை ஒதுக்கி, அவசரப் பிரகடனத்தைப்
போல, இராணுவ நடவடிக்கையைப் போன்று அதற்கு
முன்னுரிமை கொடுத்து 30 கோடி ரூபாயை குடிநீர்ப் பிரச்னைக்
காக இந்த அரசாங்கம் ஒதுக்குவதாக அறிவித்திருக்கிறது. இது
நிவாரணப் பணி இல்லையா? இந்தச் சட்டமன்றப் பேரவைக்
கூட்டம் கூடுவதற்கு முன்னால் அனைத்துச் செயலாளர்
களையும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அனுப்பி அங்கெல்லாம்
நிவாரணம் இருக்கிறதா, எந்தெந்த வகையில் தண்ணீர் பஞ்சம்
இருக்கிறது, எந்தெந்த பகுதிகளில் பயிர்கள் வாடி இருக்கின்றன
என்பதைக் கண்காணித்து அதற்காகக் கோப்பு தயார் செய்து
கொண்டிருக்கிறார்கள் என்றால் இது நிவாரணப் பணி
இல்லையா? அமைச்சர்கள் ஒவ்வொருவரும் மாவட்ட ஆட்சித்
தலைவர்களுடன் தொடர்பு கொண்டு தண்ணீர்ப் பிரச்சி
னையைத் தீர்ப்பதற்குத் துரித நடவடிக்கையை எடுத்துக்
கொண்டு இருக்கிறார்களே, இது நிவாரணப் பணி இல்லையா?
ஆகவே நான் கேட்கிறேன், நிவாரணப் பணி என்றால் உங்கள்

இலக்கணத்தில் என்ன இருக்கிறது என்று புரியவில்லை.
தண்ணீர்ப் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்பதில் கண்ணுங்
கருத்துமாக இருந்து பல முன் நடவடிக்கைகளை எடுத்துக்
கொண்டிருக்கிறதே அவைகள் நிவாரணப் பணிகள் இல்லையா?
நிவாரணம் கிடைக்க வேண்டுமென்பதற்காக பல முன்னோடி
நடவடிக்கைகளை எடுப்பதற்காகத் திட்டங்கள் தீட்டப்பட்டு
நிவாரணப் பணிகள் நடக்கின்றனவே, அவைகள் நிவாரணப்
பணிகள் இல்லையா? நிவாரணப் பணிகள் நடக்கவில்லை என்று
சொல்கிறீர்களே, அப்படியென்றால் நிவாரணம் என்றால்
நீங்கள் என்ன பொருளைக் கொண்டிருக்கிறீர்கள், நிவாரணப்
பணி என்பதற்கு உங்கள் இலக்கணத்தில் என்ன சொல்லியிருக்
கிறது என்று எனக்குப் புரியவில்லை.

அதுமட்டுமல்ல, இங்கே பல நண்பர்கள் பேசினார்கள்
தொழிற்சாலை தமிழ்நாட்டிற்கு வரவில்லையே, தொழில்
துறையில் மூன்றாவது இடத்தில் இருந்த தமிழ்நாடு இன்றைக்கு
13-வது இடத்திற்குப் போய்விட்டதே என்று அங்கலாய்த்தார்கள்.
நான் கேட்கிறேன், 3 ஆண்டு காலமாக தமிழ்நாட்டில்
தொடர்ந்து பல சர்க்கரை ஆலைகளை தமிழக அரசு ஏற்படுத்தி
வருகிறது. அதற்காக டெல்லியோடு பலமுறை பேசி வந்திருக்
கிறார்கள். நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் பலமுறை
டெல்லிக்குச் சென்று மத்திய அரசோடு பேசியிருக்கிறார்கள்.
அதன் காரணமாக பல சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி
தருவதாகச் சொல்லி, நடப்பாண்டில் கூட 23 சர்க்கரை ஆலை
களுக்கு அனுமதி அளித்து, அதன் காரணமாக 23 கோப்புகளை
சர்க்கரை ஆலைகளுக்கு பரிந்துரை செய்து நம்முடைய அரசு
டெல்லிக்கு அனுப்பியிருக்கிறது. இப்படிப்பட்ட பல்வேறு
கோரிக்கைகளை நம்முடைய தமிழக அரசு டெல்லிப் பேரரசுக்கு
அனுப்பி வந்தாலும் பலவற்றுக்கு இசைவு கிடைக்கவில்லை,
அனுமதி வந்து சேரவில்லை. அவைகளுக்கு எல்லாம்
அனுமதியைப் பெற நம்முடைய அரசு பெருமுயற்சி செய்து
வருகிறது. இங்கே இருக்கின்ற காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த
சட்டமன்ற உறுப்பினர்களும் எங்களுக்கு உறுதுணையாக
இருந்து, கணவன்—மனைவி உறவாக இருந்து, வேண்டிய
முயற்சிகளை எடுக்க வேண்டுமே தவிர, 3 லிருந்து 13-க்குக்
போய்விட்டது என்று குறை சொல்வது பொருத்தமாக இருக்
காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர்
அவர்கள் நம்முடைய மாநிலத்தில் பல தாலுக்காக்களைப்
பின்தங்கியப் பகுதியாக அறிவித்து, அதற்கு வேண்டிய சலுகை
களையும் தந்திருக்கிறார்கள். ஆனாலும் கர்நாடகத்தைப்போல
ஆந்திராவைப் போல விற்பனை வரியிலிருந்து முன்பணம், கடன்
நம்முடைய மாநிலத்தில் கொடுக்கப்படவில்லை. சுமார்
நான்காண்டு காலமாக அங்கெல்லாம் இந்த வசதியை செய்து
கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலும் அதைப்
போன்று கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நம்முடைய
மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களைக்
கேட்டுக் கொள்கிறேன்.





இந்த ஆளுநர் உரையில் பல திட்டங்களை நம்முடைய
அரசு குறிப்பிட்டிருக்கிறது. ஆனால் இங்கே முதல் நாள்
பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள்
ஒரு கருத்தைச் சொன்னார்கள். நான் பார்த்தேன், நன்றாகப்
படித்தேன், ஒன்றும் தெரியவில்லை, கண்ணாடி போல் இருக்க
வேண்டுமென்று சொன்னார்கள். நான் கூடப் படித்துப் பார்த்
தேன். கவர்னர் உரையில் கண்ணாடி இருக்கிறதா என்று
பார்த்தேன்; இல்லை. ஓகோ. புரட்சித் தலைவர் ஆட்சியில்
கவர்னர் உரையில் கண்ணாடி இருக்காது என்று நினைத்து,
அவர்கள் ஆண்டபோது கவர்னர் உரையில் கண்ணாடி
இருக்குமோ என்று எண்ணி, கவர்னர் உரைகளைப் புரட்டி,
புரட்டி பார்த்தேன். எங்கே கண்ணாடி இருக்கிறதா என்று
பார்த்தால் இல்லை என்பதைத் தெரிந்துக் கொண்டேன்; காகிதம்
தான் இருந்தது. கண்ணாடி போல் இல்லை என்பதைத் ஒரு
வாதத்திற்காக எடுத்துக்கொண்டாலும்கூட, கண்ணாடி இருக்
கிறதே அது எப்படி இருக்கும் தெரியுமா? உருவத்தை எப்படி
பிரதிபலிக்கும் தெரியுமா? கண்ணாடியை எப்படி உற்று நோக்கு
கிறார்களோ அப்படியே பிரதிபலிக்கும். முகத்தை நேராக
வைத்து, ஒழுங்காகப் பார்த்தால் முகம் நன்றாகத் தெரியும்.
மூஞ்சியைக் கோணலாக வைத்து, கண்ணைச் சுழித்துப் பார்த்
தால் கண்ணாடியும் அப்படியேதான் பிரதிபலிக்கும். கண்ணாடியை
எந்தச் சாயலில் பார்க்கிறோமோ அந்தச் சாயலைத்தான்
காட்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஆளுநர்
உரை கண்ணாடிபோல் இல்லை என்று சொன்னார்கள். அவருடைய
கண்ணுக்கு அப்படி தோன்றுகிறது. காரணம் அவருடைய கண்ணிலே
கோளாறே தவிர ஆளுநர் உரையில் கோளாறு இல்லை. ஒழுங்காகப்
பார்த்திருந்தால் நன்றாகத் தெரிந்திருக்கும். கண்ணிலே கோளாறு
இருந்தால் கண்ணாடியிலும் கோளாராகத்தான் தெரியும். ஆகவே,
கண்ணிலே கோளாறே தவிர கண்ணாடியில் கோளாறு இல்லை
என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்த
அரசு பல திட்டங்களை அறிவித்தது. ஆனால் அறிவித்தபடி
நிறைவேற்றவில்லை, கொள்கையை நிறைவேற்றவில்லை. திட்டங்—
களை நிறைவேற்றவில்லை என்று இங்கே சிலர் பேசினார்கள்.
தமயந்தியை கைவிட்ட நளன் போல இந்த அரசு இருக்கிறது
என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்
களைக் கேட்டுக் கொள்கிறேன், தமயந்தி-நளன் கதை உங்களுக்கு
நன்றாகத் தெரியுமா? தெரிந்திருந்தால் அப்படி சொல்லியிருக்க
மாட்டீர்கள். தமயந்தியும் நளனும் பிரிந்திருந்தாலும் கடைசியில்
இருவரும் ஒன்றாகச் சேர்ந்து விட்டார்கள்; கைவிடவில்லை.
நீங்கள் குறை சொல்ல வேண்டும் என்பதற்காக எதை எதையோ
சொல்கிறீர்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய இந்த அரசு
சத்துணவுத் திட்டத்தை அறிவித்தது. அப்போது நீங்கள் எப்படி
யெல்லாம் எக்களித்தீர்கள், எள்ளி நகையாடினீர்கள்? ஆனால்
என்ன நடந்தது? மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்
பட்டினிக் கிடந்தாவது இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவேன்
என்று சொன்னார்கள். இந்நிலையில் இந்த நாட்டிலே அரிசிப்
பஞ்சம் வந்தது. அரிசிப் பஞ்சத்தைப்பற்றி பத்திரிகைகளில்
எல்லாம் எழுதினார்கள். அரசியல் கட்சிக்காரர்கள் எல்லாம்
மேடைகளிலே பேசினார்கள். இந்த நிலையில் 85 இலட்சம் பிஞ்சுக்
குழந்தைகளுக்கு சத்துணவு அளித்திட வேண்டும்; அதை
நிறுத்தக்கூடாது என்று பெரும் பாடுபட்டார்கள். பிஞ்சு
குழந்தைகள் உணவு உண்ண வேண்டும்; ஏழை மக்கள் வயிராற
உண்ண வேண்டும் என்ற சிறந்த நோக்கத்தோடு புரட்சித்
தலைவர் அவர்கள் மத்திய அரசிடம் அரிசி கேட்டார்கள்.
பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியிலே நின்று கேட்டார்கள்.
காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையில் ஒரு கிளாஸ்
பச்சைத் தண்ணீர்கூட குடிக்காமல் இருந்து, தமிழ்நாட்டில் 85
இலட்சம் பிஞ்சு குழந்தைகளுக்கு சத்துணவு போட வேண்டும்;
அவர்கள் வயிராற உண்ண வேண்டும் என்று மத்திய அரசுக்குச்
சொல்லி, மறுநாள் பல ஆயிரம் டன் அரிசியை புரட்சித்
தலைவர் அவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதை இந்த நாடே
அறியும். எனவே, கொள்கைகளைக் காப்பாற்ற, போட்ட
திட்டங்களைக் காப்பாற்றுவதிலிருந்து எப்போதுமே பின்வாங்க
மாட்டார்கள் புரட்சித் தலைவர் அவர்கள். பட்டினி கிடந்
தாவது தன்னுடைய திட்டங்களை நிறைவேற்றுகின்ற ஒப்பற்ற
தலைவர், சரித்திர நாயகர்தான் எங்களுடைய புரட்சித்தலைவர்
என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

(மாலை 4-50)

இன்னொரு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் வயதிலே
பெரியவர், அரசியலிலே முதிர்ந்தவர். நான் எல்லாம் சாதாரண
பையன். அவர்கள் இந்தக் கவர்னர் உரையைப் பார்த்து
அன்றைக்கு ஒன்றைச் சொன்னார்கள். உரையைப் பற்றி அவர்
குறிப்பிடும்போது 'எனக்கு விலா எலும்பு நோக சிரிப்புத்தான்
வருகிறது' என்று சொல்லியிருக்கிறார். அப்படி விலா எலும்பு
நோக சிரிப்பு வருகிறது என்று அவர் குறிப்பிட்டபோது நான்
கூட யோசித்தேன்; ஆனால் அவருக்கு ஏழையினுடைய கஷ்டம்
தெரியாது. காரணம், மாலைப் பொழுதில் வாசனையைப்
போட்டுக் கொண்டு மைக்கைப் பிடிப்பவர்களுக்கெல்லாம் அந்தக்
கஷ்டம் தெரியாது. அதாவது செருப்பு அளிக்கிறேன் என்று
புரட்சித் தலைவர் சொன்னதற்காகத்தான் அந்தக் கிண்டல்
பேச்சு. இவருக்கு அந்தக் கஷ்டம் எல்லாம் தெரியாது. ஆனால்
நாங்கள் கிராமப் புறத்தில் இருந்து வந்தவர்கள் என்பதால்
எங்களுக்குத் தெரியும். பிஞ்சுக் குழந்தைகள் எல்லாம் ரோட்டிலே
போகிறபோது அந்தச் சூட்டைத் தாங்கமுடியாமல் இருப்பதைப்
பார்த்த புரட்சித் தலைவர் அவர்கள் வருங்காலத்தில் ஒரு நல்ல
சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்று எண்ணினார்கள்.



அதற்காகத்தான், அதிலே கண்ணும் கருத்துமாக இருந்த
காரணத்தால்தான் சத்துணவு போட்டார்கள். செருப்பைத்
தந்தார்கள்.

அதுமட்டுமல்லாமல் இலவசமாக பாடப் புத்தகம் தந்தார்கள்.
மருத்துவ வல்லுநர்கள் ஒரு குழந்தைக்கு இரண்டு வழிகளில் நோய்
வருகிறது என்று கண்டுபிடித்து இருக்கிறார்கள். ஒன்று, மூக்கினால்
சுவாசிக்கும்போது உடலுக்கு நோய் வரும்; இன்னொன்று கால்
பகுதியிலே வியர்ப்பதன் காரணமாக உடனடியாக நோய் வரும்.
இவ்வாறு ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்து இருக்கிறார்கள்.
எனவேதான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் வருங்
காலத்தில் ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டும்
என்பதற்காகத்தான் இந்தப் பிஞ்சு உள்ளங்களுக்கு காலணி
அளிக்கவேண்டும் என்ற உணர்வோடு இந்தத் திட்டத்தை
அறிவித்து இருக்கிறார்கள். இந்தக் காலணியைப் பொறுத்த
வரையில் ஏழை, எளிய மக்களுக்குத்தான் தெரியும். மாலையிலே
வாசனையைப் போட்டுக்கொண்டு மைக்கைப் பிடிப்பவர்களுக்கு
இதுபற்றித் தெரிவதற்கு வாய்ப்பு இல்லை என்று நான் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன்.

காலணி வழங்கும் திட்டம் என்பது சாதாரண திட்டமா?
நான் இலக்கியங்களை எல்லாம் படித்துப் பார்த்தேன். கடை
ஏழு வள்ளல்களைப் பார்த்திருக்கிறேன், பாரியைப் பார்த்திருக்
கிறேன். ஓரியைப் பார்த்திருக்கிறேன். ஆரியைப் பார்த்திருக்
கிறேன். கடை ஏழு வள்ளல்களில் யாராவது ஒருவர் உயிருள்ள
குழந்தைகளுக்கு ஏதாவது நன்மை செய்தார்களா என்றால்
எந்தப் பாரியும், எந்த ஓரியும், எந்த ஆரியும் செய்யவில்லை.
ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள்தான் பிஞ்சு உள்ளங்களுக்கு
கிராமத்தில் இருக்கிற ஏழை, எளிய குழந்தைகளுக்கு, தாய்மார்
களுக்கு, அவர்கள் சுடுமணலில் போகக்கூடாது, பாதுகாப்பாக
இருக்கவேண்டும் என்பதற்காக காலணி அளித்திருக்கிறார்கள்.
வருங்காலத்தில் புரட்சிகரமான ஒரு சமுதாயம் இருக்கவேண்டும்
என்பதற்காக, 20 ஆம் நூற்றாண்டின்எட்டாவது வள்ளலாகத்
திகழும் புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் திட்டத்தை
இன்றைக்கு உருவாக்கி இருக்கிறார்கள் என்பதை என்னால்
பெருமையோடு சொல்லமுடியும்.

அண்ணாவைப் பற்றி நீங்கள் எல்லாம் பேசிக்கொண்டு
இன்றைக்கு வெடிகுண்டிலே இருந்து தப்பிக்கலாம் என்று கருது
கிறீர்கள். இன்றைக்கு காலையில் சட்டப் பேரவைத் துணைத்
தலைவர் பேசியபோது இங்கே சத்தம் போட்டார்கள். நான்
ஒன்று சொல்ல விரும்புகிறேன். விவரமாக சட்டமன்ற உறுப்
பினர்கள் புரிந்துகொள்ளவேண்டும். வெடி குண்டு வைக்கப்
படுவதற்கு முன்னால் தி.மு.க. தான் வெடி குண்டு வைத்தது
என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக
அமைச்சர் யாராவது மேடையில் பேசினார்களா? அல்லது
புரட்சித் தலைவர் சொன்னாரா? இங்கே இருக்கிற சட்டமன்ற
உறுப்பினர்கள் யாராவது சொன்னார்களா? வெடி வெடித்தது.
அதைக் கண்டு பிடிப்பதற்கு காவல் துறை இருக்கிறது. அந்தக்
காவல் துறை ஆராய்கிறது. அப்படி ஆராய்கிறபோது மணிமாறன்
கிடைக்கிறார். நாங்கள் என்ன செய்யமுடியும்? மணிமாறன்

வேறொரு கட்சியில் இருந்திருக்கக்கூடாதா? தோழமைக் கட்சியில் அதாவது இந்திரா காங்கிரஸில் இருந்திருக்கக் கூடாதா? எங்கள் கட்சிக்காரராக இருந்திருக்கக்கூடாதா? அல்லது வேறு எந்தக் கட்சியிலேயாவது இருந்திருக்கக்கூடாதா மணிமாறன் கிடைக்கிறார். பிடித்த பின்பு ஆராய்ந்த பின்பு அவர் தி.மு.க. என்று தெரிகிறது. மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் கேட்கிறார் காவல் துறையினரிடம் வெடி குண்டை யார் வைத்தது என்று. அவர்கள் சொல்கிறார்கள் மணிமாறன் தி.மு.க. என்று. நாங்கள் என்ன செய்ய முடியும்? ஒரு பத்திரிகை— அதாவது தினமலரிலே வந்தது. அந்தப் பத்திரிகை வேண்டாம் என்று போராட்டம் நடத்தினார்களா? அல்லது பத்திரிகையைக் கிழிக்கவேண்டும் என்று சொன்னார்களா? தயவு செய்து நம்முடைய தினமலர் பத்திரிகையைச் சேர்ந்தவர்கள் தவறாக எண்ணக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேறு பக்கங்களில் பார்த்துக் கொண்டு பேசக்கூடாது. தலைவரைப் பார்த்துத்தான் பேச வேண்டும்.

திரு. கூடலூர் இ. வி. வேலு: பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குப் பின்னால் எங்களைப் பார்த்து என்ன சொன்னார்கள்? பொய் வழக்கு போடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள்? அவர்கள் பரம்பரையைப் பற்றியா எங்களுக்குத் தெரியாதா? கொலை செய்துவிட்டு......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது தலைவரைப் பார்த்துப் பேச வேண்டும்.

திரு. கூடலூர் இ. வி. வேலு: பேரவைத் தலைவர் அவர்களே, கொலை செய்தவரையே மாவீரன் என்று பாராட்டுகிற பரம்பரை அது. சிதம்பரத்தில் பட்டப்பகலில் பாலசுந்தரம் வெட்டிவீழ்த்தப்பட்டான். வெட்டி வீழ்த்தியது யார்? மாசிலாமணி என்பவர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் முடித்து விடுங்கள்.

திரு. கூடலூர் இ. வி. வேலு: பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பரோலில் வருகிறபோது அவருக்குத் திருமணம் நடக்கிறது. அந்தத் திருமணத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கலைஞர் கருணாநிதி தலைமை தாங்குகிறார். சிதம்பரம் பாலசுந்தரத்தை பட்டப்பகலிலே படுகொலை செய்துவிட்டு கைதாக்கப்பட்டு சிறையிலே இருந்த மாசிலாமணி என்பவர் பரோலில் வருகிறார். பரோலிலே வந்த மாசிலாமணியின் திருமணத்திற்குத் தலைமை தாங்கியவர் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள். அவர் அங்கே என்ன பேசினார்? 'மாவீரா நீ சிறை சென்றிருக்கிறாய் எதற்காக, அண்ணா தி.மு.க. தொண்டர் பாலசுந்தரத்தை வெட்டி வீழ்த்தி விட்டு சிறைக்குப்போனாய். என்றார். நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். கொலை செய்பவர்களுக்கு மாவீரன் பட்டம் தருகிற பரம்பரையைச் சேர்ந்த நீங்கள் தான் இன்றைக்கு நாங்கள் உண்மைக்கு புறம்பான வழக்கைப்போட்டிருக்கிறோம் என்று சொல்லுகிறீர்கள்.



அதோடு மட்டுமல்ல பேரறிஞர் அண்ணா சொன்னது எங்களுக்கு நினைவுக்கு வருகிறது. இந்த திட்டுகிறவர்கள் எல்லாம் எப்போதும் திட்டுவதால் திட்டு வாங்கப்படுபவர்கள் தேவையே இல்லையே என்று சொன்னார்கள். ஆனால் திட்டுபவர்கள் எல்லாம் வளர்ந்ததாகவும் சரித்திரம் இல்லை. இது பேரறிஞர் அண்ணாவிடைய கூற்று....

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, அருமை நண்பர் சட்டமன்ற உறுப்பினர் வேலு அவர்கள் அவருடைய கருத்தை எடுத்துச் சொல்வது குறித்து எந்த விதமான கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால் மாசிலாமணியினுடைய திருமணத்திற்கு நானும் சென்று கலந்து கொண்டேன். எங்கள் தலைவர் அப்படிப் பேசவில்லை. இன்னொன்று நமது முதல்வர் அவர்கள் குற்றச்சாட்டை இதற்கு முன்பு சொன்னாரா இப்போதுதானே சொல்கிறார் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். நமது மரியாதைக்குரிய அமைச்சர் ப.உ.ச. மீதும் இந்திராகாந்தி அம்மையாரை கொலை செய்ய முயற்சித்ததாக வழக்குப்போட்டதும்அவர்தான். இப்போது வழக்கும் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேலு முடித்து விடலாம்.

திரு. கூடலூர் இ. வி. வேலு: பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஒன்றை சொல்லியிருக்கிறீர்கள். வழக்கு மன்றத்திலே ஒரு வழக்கு இருக்கிறது என்று சொன்னால் அதை விமர்சனம் செய்யக் கூடாது என்று சொல்லியிருக்கிறீர்கள். மாசிலாமணி அவர்களைப் பொறுத்த வரையில் வழக்கு முடிந்து கடும் சிறை சென்றிருப்பவர். ஆனால் ப.உ.ச. மீது வழக்கு நீதிமன்றத்தில் முடியாமல் இருக்கிறது. அதை அவர்கள் தான் முடிவு செய்ய வேண்டுமே தவிர..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காலையிலேதான் ரூலிங் கொடுத்தேன், வழக்கு இருந்தாலும் பேசலாம் என்று.

திரு. கூடலூர் இ. வி. வேலு: ப.உ.ச. வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது என்றால் அதிலே முடிவு செய்ய வேண்டியது அவர்கள் தானே ஒழிய....(குறுக்கீடுகள், கூச்சல்—குழப்பம்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் என்ன சொல்கிறேன் என்றால், இப்படி நீங்கள் கேட்டுக்கொண்டே வந்தால் அவர் பதில் சொல்லவேண்டிய நிலையில் தான் விவாதம் போய்க் கொண்டே இருக்கும். அதனால் தான் வேண்டாம் என்றேன். (குறுக்கீடு)ஏற்கெனவே கேட்டிருக்கிறீர்கள். போதாதா,(குறுக்கீடு) சரி வேண்டுமென்றால் கேளுங்கள் அவர் பதில் சொல்லட்டும். எனக்கு ஆட்சேபணை இல்லை.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ப.உ.ச. அவர்கள் மீது இந்த அரசாங்கமும், முதலமைச்சரும் இந்திராகாந்தி அம்மையாரை கொலை செய்ய முயற்சித்தார் என்று ஒரு வழக்கு போடப்பட்டிருக்கிறது. அப்படியானால் அவர் கொலை செய்ய முயற்சித்தார் என்பது உண்மையா? (குறுக்கீடுகள், கூச்சல்—குழப்பம்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்; கிரிமினல் கேஸ், மர்டர் கேஸ், அட்டெம்ட் டு மர்டர் போன்ற வழக்குகளை எல்லாம் அரசாங்கம் தான் போட வேண்டும். அது வேண்டாம். (கூச்சல், குழப்பம்).

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்கு கிடைக்கக் கூடிய தகவல்களை வைத்து வழக்கு போடுவது அரசாங்கத்தின் வேலை. அவர்கள் குற்றவாளியா நிரபராதியா என்று தீர்மானிக்க வேண்டியது நீதிமன்றத்தினுடைய வேலை. அதைப்பற்றி நாம் அதிகமாகப் பேச வேண்டிய அவசியம் இல்லை. அந்த நேரத்தில் அவர் எங்கு இருந்தாலும் அதை வைத்து துப்பு கண்டு பிடித்து வழக்கு போடுவது அரசாங்கத்தின் கடமை. நீதிபதி அவர்கள் விசாரித்துப் பார்த்த பிறகு குற்றவாளி என்றும் சொல்லலாம், நிரபராதி என்றும் சொல்லலாம். அதைப்பற்றி இங்கே விமர்சனம் செய்ய அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை இதோடு நிறுத்திக் கொள்ளுங்கள். வேலு அவர்கள் தொடர்ந்து ஆளுநர் உரை மீது பேசுங்கள் இந்த விவாதம் வேண்டாம்.

திரு. கூடலூர் இ. வி. வேலு: திரு. ராஜீவ் காந்தியைப் பொறுத்த அளவிலே—பொதுத்துறை மூலமாக தமிழகத்தில் இருக்கிற பல்வேறு துறைகளில் போக்குவரத்துத் துறை மிகவும் வெற்றிகரமாக இருக்கிறது என்று பாராட்டியிருக்கிறார்கள். நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த அளவிலே அண்டர்டேக்கிங் மூலமாக, அதாவது பொதுத்துறை மூலமாக பல நிறுவனங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மின்சார வாரியம், குடிநீர் வடிகால் வாரியம், டிரான்ஸ்போர்ட் போன்றவை இருக்கின்றன. ஆனால் இவைகளில் எல்லாம் அதிகாரிகள் தாம் டைரக்டர்களாக இருக்கிறார்களே தவிர மக்கள் பிரதிநிதிகள் என்று இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் யாரும் இல்லை. எனவே இந்த பொதுத்துறைகளில், அது போக்குவரத்துத் துறையாக இருந்தாலும், குடி தண்ணீர் வடிகால் வாரியமாக இருந்தாலும், மின்சார வாரியமாக இருந்தாலும், அவைகளிலே பொது மக்களுடைய பிரதிநிதிகளாக இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்தாக வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 5-00)

அடுத்து என்னுடைய தொகுதி பற்றி சிலவற்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். வடாற்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப் பட்டு புதிய மாவட்டம் திருவண்ணாமலையைத் தலைநகராகக் கொண்டு இயங்கும் என்று சென்ற ஆண்டில் அறிவிக்கப்பட்டது. இவ்வாண்டில் இம்மாவட்டம் பிரிக்கப்படுமென்று தெரிவித் தார்கள். ஆகவே விரைவில் புதிய மாவட்டத்தைத் துவங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) என்னுடைய தொகுதி பற்றிய ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லி முடித்து விடுகிறேன்.



என்னுடைய தண்டராம்பட்டு தொகுதி வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதால் இந்தப் பகுதியை வறட்சிப் பகுதியாக அரசு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் நடப்பாண்டில் நூற்பாலை ஒன்று துவங்கும் யோசனை இருப்பதாக மாண்புமிகு கைத்தறி அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதனை இந்த ஆண்டில் தண்டராம்பட்டில் துவங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து புதிய மாவட்டம் பிரிக்கப்படும் நேரத்தில் தண்டராம் பட்டினைத் தலைநகராகக் கொண்டு இயங்கும் வகையில் புதிய வட்டாட்சி அலுவலகம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும். அதைப் போல தண்டராம்பட்டியில் பொது மருத்துவமனை ஒன்றினையும் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கும் திட்டங்கள் நாட்டு மக்கள் அனைவரும் பாராட்டும் வகையில் அமைந்துள்ளன. சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாம் இத்திட்டங்களைப் பாராட்டு கிறோம் என்றால் நாட்டு மக்கள் அனைவரும் பாராட்டுவதை ஒத்தது ஆகும். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் புகழ் என்றென்றும் ஓங்குக என்று தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வாழ்க அண்ணா நாமம்.

*திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பிறகு ஆண்டு தோறும் நிகழ்த்துகிற ஆளுநர் உரைகளில் ஏழை மக்களின் வாழ்வின் முன்னேற்றத்திற்கு பல திட்டங்களைக் கொண்டு வந்து அவற்றை நிறைவேற்றி வருவதை இந்த நாடறியும். அதைப் போல இந்த ஆண்டிலும் மேதகு ஆளுநர் உரையில் ஏழை, எளிய மக்களின் நலம் காக்கிற, அவர்களின் வாழ்க்கையினை உயர்த்துகிற பல நல்ல திட்டங்களைக் கொண்டு வந்துள்ளார்கள். 1986—87 ஆம் ஆண்டில் அரசு 100 உயர்நிலைப் பள்ளிகளையும், 79 மேல்நிலைப் பள்ளிகளையும் திறந்துள்ளது. பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் ஏழை எளிய ஆதிதிராவிட மக்களை அங்கத்தினர்களாக்கி, அரசே மானியம் கொடுத்து 1987-ஆம் ஆண்டில் அதிக அளவில் சங்கங்களை ஏற்படுத்தியிருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல அரசு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு கடனை தள்ளுபடி செய்துள்ளது. 1986-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் நிலவரப்படி வட்டி, அபராத வட்டி, காலம் கடந்த கடன் நிலுவைகள் குறித்த வட்டி ஆகியவற்றை தள்ளுபடி செய்து விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வாழ்வு அளித்திருப்பதை பெரிதும் பாராட்டுகிறேன்.

அதைப்போல மாநிலத்தில் இயங்கி வரும் 5.56 லட்சம் கைத்தறி களில் 3.84 லட்சம் கைத்தறிகள் 1986 ஆம் ஆண்டு நவம்பர் திங்களுக்குள் கூட்டுறவு ஏற்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இதனால் 60 சதவீத தறிகளைக் கூட்டுறவு இயக்கத்தில் கே

கொண்டுவர வேண்டுமென்று மத்திய அரசு வரையறுத்த தேசிய இலக்கினையும் தமிழகம் மிஞ்சியிருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல பெரிய தொழிற்சாலைகளை, மத்திய சர்க்கார் அனுமதித்த தொழிற்சாலைகளை நல்லமுறையில் தொடங்கவும், தொடங்கி நடத்தவும் இந்த அரசு முன்வந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஏழை எளிய மக்களுக்காக, பழங்குடி மக்களுக்காக, ஆதி திராவிட பெருங்குடி மக்களுக்காக, பிற்பட்ட மக்களுக்காக அவர்களுடைய நலம் கருதி நல்ல பல திட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றி, அவர்களுடைய வாழ்வு உயர இந்த அரசு பாடுபட்டு வருகிறது. அந்த வகையில் இந்த ஆண்டு ஏழை எளிய தாழ்த்தப்பட்ட பெண்களுக்கும், பள்ளி செல்லும் சிறார்களுக்கும் இலவச காலணிகள் வழங்கும் திட்டம் சிறப்பாகக் கொண்டு வரப் பட்டிருப்பதை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

எனக்கு முன்பு பேசிய பல சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் குழந்தைகள், அந்த வெய்யிலிலே சூடு தாங்குவதைப் பற்றியும், தாய்மார்கள் தார் ரோட்டிலே சூடு தாங்குவதற்காகவும் இங்கே காலணிகள் கொடுத்திருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். இந்த வெய்யில் சூட்டைத் தாங்குவதைக் காட்டிலும் சமுதாயத்திலே இந்தக் காலணி போடக்கூடாது என்ற சூடு இருப்பதை சில நேரங்களில், தமிழகத்தில் உள்ள மூலை முடுக்கு களிலே உள்ள கிராமப்புறங்களில் உள்ள ஆதி திராவிட மக்கள் பிற்படுத்தப்பட்ட மக்கள் காலணி அணிய முடியாத நிலை இருந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. அப்படிப்பட்ட குழந்தைகள் எல்லாம், தாய்மார்கள் எல்லாம் காலணி அணிந்து ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்கவும், உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற உணர்வின்றி எல்லோரும் சமம் என்ற நிலையை உருவாக்குவதற்கு எங்களுடைய இதயதெய்வம் புரட்சித்தலைவர் அவர்கள் எப்படிச் சத்துணவுத் திட்டம் கொண்டுவந்து நிறை வேற்றினார்களோ, அதன்மூலம் ஏழை எளிய குழந்தைகளும், தாழ்த்தப்பட்ட குழந்தைகளும், உயர்ந்த வகுப்புக் குழந்தைகளும் ஒன்றாக அமர்ந்து எந்தவிதமான சாதி பேதமின்றி, ஏற்றத்தாழ்வு இன்றி, வேறுபாடுகள் இன்றி, ஒன்றாக அமர்ந்து உணவு அருந்தவும், உயர்ந்த ஜாதி என்ற உணர்வைப் போக்கக்கூடிய ஒரு மிகப் பெரிய அற்புதமான திட்டத்தைக் கொண்டு நிறை வேற்றினார்களோ, அதைப்போலவே இந்தக் காலணி கொடுக்கும் திட்டமும் ஒரு சிறந்த திட்டமாகும். ஏன் என்றால் நம்முடைய பாரதியார் அவர்கள் கூட சாதிகளைப் பற்றிச் சொல்லும்போது பெரியவர்களைப் பார்த்து, மனிதர்களைப் பார்த்து, வயது வந்தவர்களைப் பார்த்து அவர்கள் சொல்லவில்லை. அவர்கள் சொன்னார்கள், 'ஜாதிகள் இல்லையடி பாப்பா' என்று. ஒன்றும் தெரியாத பாப்பாவைப் பார்த்து ஜாதிகள் இல்லை என்று சொன்னதற்குக் காரணம், ஏற்கனவே வயது வந்தவர்களுடைய உள்ளத்திலே அந்த ஜாதி உணர்வு வந்துவிட்டது. அவர்கள் என்னதான் அதை மறந்திருந்தாலும், அவர்கள் திருத்திக்



கொண்டாலும் கூட தவிர்க்க முடியாத நேரத்திலே அவர்கள், அந்த உணர்வுகளுக்கு ஆட்பட முடியும். ஆனால் குழந்தைகள் உள்ளத்திலே, குழந்தைகளாக இருக்கக்கூடியவர்கள் இடத்திலே, அந்த இளமைப் பருவத்திலே ஜாதி இல்லை என்ற உணர்வு வந்து விட்டால்—அவர்கள் இறக்கும் வரைக்கும்—அந்தக் குழந்தைகள் பெற்றோர்களாகி, குழந்தைகளைப் பெற்று, இந்தச் சமுதாயத்தை உருவாக்குகின்ற நேரத்திலும் கூட. அந்தக் குழந்தைகளுக்கு, அந்தப் பெரியவர்களுக்கு, வயது வந்தவர்களுக்கு, அந்த உணர்வு வராது. எப்படிப்பட்ட ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்கவேண்டும் என்று பாரதியார் அவர்கள் விரும்பினார் களோ, அந்த ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை ஏற்கனவே உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள் எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள். ஆகவே இந்தச் சத்துணவுத் திட்டமும், இந்தக் காலணி வழங்கும் திட்டமும் ஒரு அற்புதமான திட்டமாகும். ஏன் என்றால், புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே தாழ்ந்தப்பட்ட மக்களுக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் பல நல்ல காரியங்களைச் செய்து வருவதை நாடு அறியும்.

அதேபோல் திருவள்ளுவர் பெயரால் மாவட்டம் அமைக்க இருக்கிறார்கள். அதைப்போல வ.உ.சி. அவர்கள் பெயரிலே ஒரு மாவட்டத்தை அமைத்திருக்கிறார்கள். அதேநேரத்தில் வரலாற்றுப் புழுதியிலே எங்கேயோ மறைந்து கிடந்த தில்லையாடி வள்ளியம்மை அவர்கள் பெயராலே, ஆதி திராவிட சமுதாயத்தை பாராட்டுவதற்காக, பெருமைப்படுத்துவதற்காக, ஒரு மாவட்டத்தை அமைக்க இருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது,

. . . . . . . . . .

திரு. குமரி அனந்தன்: மாற்றுத் தலைவர் அவர்களே, தில்லையாடி வள்ளியம்மை அவர்கள் நெசவுத் தொழிலிலே ஈடுபட்டு இருந்த கைக்கோள சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் பரவலாக அவர்கள் அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று பேசப்படுகிறது, நம்பப்படுகிறது. ஆனால் உண்மை யிலேயே அவர்கள் கைக்கோள வம்சத்தைச் சேர்ந்தவர்கள். ஜாதி பேதத்தைப் பார்த்து இங்கே நான் சொல்லவில்லை. தில்லையாடி அம்மையாருடைய தியாகத்தை நாம் மதிக்கவேண்டும். நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரிசன ஜாதியைச் சேர்ந்தவர் என்று கூறினார்கள். அவர்கள் சரியாகச் சொல்லவேண்டும் என்பதற்காக நான் இடையிலே சொன்னேன். அதைப் பொறுத்துக்கொள்ள வேண்டுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா. சின்னராசு): வெறும் தில்லையாடி அம்மை என்று இருந்தாலே போதும்.

திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதிலே, அது உண்மையா பொய்யா என்று எனக்குத் தெரியாது. ஏன் என்றால், தமிழகத்தில் இதுவரை தில்லையாடி வள்ளியம்மை அவர்கள் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்றுதான் பெரும்பாலும் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். காந்தியைச்

சுட வந்த நேரத்திலே கூட, காந்தி அண்ணலுக்கு முன்னால்
வந்து நின்று, சுட்டுப் பார் என்று வீரத்தோடு போராடிய, அல்லது
பேசிய மங்கை என்றும், அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச்
சேர்ந்தவர்கள் என்றும் தான் நான் சொல்லக் கேட்டு
இருக்கிறேன். எனவே இதைப்பற்றி இங்கே இருக்கின்ற
மன்றத்தின் முடிவிற்கே விட்டுவிடுகிறேன். ஆனால் நாங்கள்
எல்லாம் எண்ணியிருப்பது—அவர்கள் எந்த ஜாதியாக இருந்தாலும்
எந்த மதத்தினராக இருந்தாலும், இப்படிப்பட்ட தியாகத்தைச்
செய்ததை யாரும் எண்ணிப்பார்க்கவில்லை, கடந்தகாலங்களிலே.
அப்படிப்பட்டவர்களைப் பெருமைப்படுத்துவதற்காக அவர்கள்
பெயராலே ஒரு மாவட்டம் அமைக்க முன்வந்தபோது, அவர்கள்
தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்று சொன்னதாலே, அதற்காக
நாங்கள் பெருமைப்பட்டோம். ஆனால் அவர்கள் எந்த
வகுப்பினராக இருந்தாலும் நாங்கள் பெருமைப்படுகிறோம்.
ஏன் என்றால், ஒரு பெண்ணின் பெயரால் இதய தெய்வம்
புரட்சித்தலைவர் அவர்கள் ஒரு மாவட்டம் அமைக்க அனுமதி
அளித்திருக்கிறார்கள் என்றால், அது பாராட்டுக்குரிய செயல்
என்று கூறிக்கொண்டு, என்னுடைய தொகுதியைப் பற்றி சில
வார்த்தைகள் கூற விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது.)
இப்போதுதான் ஆரம்பித்து இருக்கிறேன். எனக்கு 2 வருடமாக
பேச அனுமதி கொடுக்கவில்லை. இன்னும் 2 நிமிடங்கள்
கொடுங்கள்.

(மாலை 5-10)

மண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா [illegible]):
10 நிமிடங்களுக்கு மேல் பேசியிருக்கிறீர்கள். இன்னும் நிறைய
பேர் பேசவேண்டும். சிக்கிரம் முடியுங்கள்.

திரு. த. மாரிமுத்து: முதலில் என்னுடைய தொகுதியைப்
பற்றி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பின்னால் பேச
அனுமதி கொடுக்க மாட்டார்கள். புதுக்கோட்டை மாவட்டம்
மிகவும் பின்தங்கிய மாவட்டம். என்னுடைய தொகுதியில்
காவேரி நூற்பாலை ஒன்று இருக்கிறது. அதை பரிசீலனை
செய்து இந்த அரசு மேலும் அதை எடுத்து அந்த நூற்பாலையை
இயக்க ஒரு வாய்ப்பை செய்து தாருங்கள் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதேபோல் இலுப்பூர் குடிநீர் திட்டம் ஒன்று துவங்க
இருக்கிறது. அதை விரைவில் செயல்படுத்தித் தாருங்கள் என்று
பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். கீரனூரில் உலக வங்கி
உதவியுடன் ஒரு குடிநீர் திட்டம் துவக்குவதாக இருக்கிறார்கள்.
அதை விரைவில் செய்து தர வேண்டும் என்று பணிவன்புடன்
கேட்டுக்கொள்கிறேன். குளத்தூர் தாலுக்காவை இரண்டாகப்
பிரித்து இலுப்பூரை தலைமையிடமாகக் கொண்டு ஒரு வட்டாட்
சியர் அலுவலகம் அமைப்பதற்கு செயற்குறிப்பு இருக்கிறது.
அதையும் விரைந்து செய்து தருமாறு பணிவன்புடன் கேட்டுக்
கொள்கிறேன். விராலிமலை ஒன்றியம் மிகப்பெரிய ஒன்றியம்.
அதையும் இரண்டாக பிரித்து விராலிமலை ஒன்றியம் என்றும்,



நீர்ப்பள்ளி ஒன்றியம் என்றும் பிரித்து யூனியன்கள் அமைத்துத்
தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே
புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அறந்தாங்கி ஒன்றியம்
மிகப்பெரிய ஒன்றியமாக இருக்கிறது. அதையும் இரண்டாகப்
பிரித்து புதிய யூனியன்கள் அமைத்துத் தரவேண்டும் என்று
பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில்
உள்ள காவேரிநகர், பரம்பூர், உப்பிலிகுடி ஆகிய இடங்களில்
உள்ள அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு விடுதி
அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விராலி
மலைப்பகுதி ஒரு பின்தங்கிய பகுதி ஆகும். அங்கே படித்தவர்கள்
மிகவும் குறைவு. அதிலும் பெண்கள் படிப்பது இல்லை. ஆகவே,
விராலிமலைப் பகுதியில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்றை
அமைத்துத் தரவேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்
கிறேன்.

குடுமியான்மலைப் பகுதியில் பேரறிஞர் அண்ணா அவர்கள்
பெயரால் ஒரு விவசாயப் பண்ணை இருக்கிறது. தமிழகத்தில்
உள்ள விவசாயப் பண்ணைகளில் லாபகரமாக நடந்து வருவது
அது ஒன்றுதான். எனவே அண்ணா அவர்கள் பெயரைத் தாங்கி
இருக்கிற அந்த விவசாயப் பண்ணையில் ஒரு விவசாயக் கல்லூரி
அமைத்துத் தரவேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்
கிறேன். (மணியடிக்கப்பட்டது). சீக்கிரம் முடித்துவிடுகிறேன்.
குளத்தூர் தொகுதியில் உள்ள பொதுப்பணித் துறை கண்மாய்கள்
மேடு இட்டு இருக்கின்றன. அவைகள் எல்லாவற்றையும் மற்றும்
குளங்களையும் சீர் செய்து தரவேண்டும் என்று பணிவன்புடன்
கேட்டுக்கொள்கிறேன். களமாவூர் விராலிமலை சாலையிலிருந்து
வெள்ளாரு உடை, மதையானைப்பட்டி, சோழியக்குடி,
துளிமங்கலம்வரை உள்ள சாலைகளை சீர் அமைத்தால் அனேகமாக
என்னுடைய தொகுதியிலிருந்து திருச்சிக்குச் செல்வதற்கு மிகுந்த
வசதியாக இருக்கும். எனவே அந்தச் சாலையை சீர் செய்து
தரவேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.
விராலிமலையில் உள்ள சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு தங்கத்
தேர் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
ஏற்கனவே தங்கத் தேர் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
அதை விரைவாக அமைத்துத் தர வேண்டும் என்று பணிவன்
புடன் கேட்டுக்கொள்கிறேன், விராலிமலையில் மயில் சரணாலயம்
விரைவாக அமைத்துத் தர வேண்டும் என்று வேண்டி விரும்பிக்
கேட்டுக்கொள்கிறேன். வெள்ளானூர், சத்தியமங்கலம்.
கீரனூரில் உள்ள சிவாலயங்கள் எல்லாம் சோழர் காலத்தில்
கட்டப்பட்ட பெரிய கோயில்கள். அவைகள் எல்லாம் மிகவும்
மோசமான நிலையில் இருக்கின்றன. அவைகளுக்கு எல்லாம்
நல்ல முறையில் திருப்பணி செய்து தர வேண்டும் என்று பணி
வன்புடன் கேட்டுக்கொள்கிறேன். சித்தன்னவாசல் உலகப் புகழ்
பெற்ற குகைக்கோயில். அங்கே அற்புதமான சித்திரங்கள் இருக்
கின்றன. அதைப்போலவே குன்னண்டார் கோவிலிலே நல்ல
சிலைகள் இருக்கின்றன, நார்த்தாமலை ஆகிய இடங்கள் எல்லாம்
அற்புதமான இடங்களாக இருக்கின்றன. அவைகளை எல்லாம்

ஒன்று சேர்த்து சுற்றுலா மையம் ஒன்றை அமைத்துத் தர
வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மணி
யடிக்கப்பெற்றது).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா. சின்னராசு):
பட்ஜெட்டில் பேசும்போது விரிவாகப் பேசுங்கள். மொத்தம் 12
பேர்கள் பேச இருக்கிறார்கள். உங்களுக்கு ஏற்கனவே 5
நிமிடங்கள் அதிகமாக கொடுக்கப்பட்டு இருக்கிறது.

திரு. த. மாரிமுத்து: விராலிமலையில் உள்ள மருத்துவமனை
சிறியதாக இருக்கிறது. அதை விரிவுப்படுத்தி அதில் எக்ஸ்ரே
தியேட்டர், ஆப்பரேஷன் தியேட்டர், மகப்பேறு வசதி
ஆகியவைகளை செய்து தரவேண்டும் என்று பணிவன்புடன்
கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் நாடகத்தில் ஆனாலும் சரி,
சினிமாவில் ஆனாலும் சரி அவர்கள் நாட்டு மக்களுக்கு நல்ல
அறிவுரைகளை சொல்லி வந்திருக்கிறார்கள். அப்படி நல்ல
அறிவுரைகளை சொன்னதினாலேயே இந்த நாட்டு மக்களும்
அவரை பின்பற்றி அவருடைய கொள்கைக்கு கட்டுப்பட்டு நடந்து
வருகிறார்கள் என்பதை இந்த நாடு அறியும். ஆனால் சில பேர்
கதை வசனம் எழுதுகிறபோது பாம்பு தவளையை விழுங்காது
இருந்தால், கொக்கு மீனை கொத்தாது இருந்தால், புலி ஆட்டை
கொல்லாது இருந்தால், நானும் கொள்ளை அடிக்காமல்
இருப்பேன், கொள்ளை அடிப்பது ஒருகலை அப்பா கலை என்று
இந்த நாட்டு மக்களுக்கு சொல்லி இந்த நாட்டை கொள்ளைக்
காடாக ஆக்கியவர்கள் எல்லாம் இன்று இந்த ஆட்சியின் மீது
தேவையில்லாத புகார்களை சொல்லி, தேவையில்லாத
குற்றங்களைச் சொல்லி ஏதோ இந்தி மொழிக்காக அவர்கள்
தான் போராடுபவர்களைப் போல சொல்லிக் கொண்டு வரு
கிறார்கள். இந்தி மொழிக்காக செத்தவர்கள் எனது தொகுதியில்
இரண்டு பேர் இருக்கிறார்கள். விராலிமலை சண்முகம் என்று
ஒருவரும் முத்து என்று ஒருவரும் ஆக இரண்டு பேர் இந்தி
மொழிக்காக செத்து இருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா. சின்னராசு):
பெயர்களை எல்லாம் சொல்லிப்பேச வேண்டாம் சீக்கிரம்
முடியுங்கள்.

திரு. த. மாரிமுத்து: இப்படி செத்த இரண்டு மொழி வீரர்
களின் குடும்பத்திற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்
ஆட்சியில்தான் 20 ஆயிரம் ரூபாய் கொடுத்து அந்தக் குடும்பங்
களைக் காப்பாற்றினார்கள். இப்படி மொழிக்காக, மொழியைக்
காத்தவர்களுக்காக இந்த நாட்டு மக்களுக்காக நல்லது செய்து,
எல்லா வகையிலேயும் இந்த தமிழ்ச் சமுதாயத்தை உயர்த்த
வேண்டுமென்று போராடி வருகின்ற, பாடுபட்டு வருகின்ற,
புரட்சித் தலைவர் அவர்களுக்கு எங்களுடைய வணக்கத்தைச்
சொல்லி, என்னுடைய தொகுதி மக்கள் சார்பில், பேசுவதற்கு
வாய்ப்பு தந்ததற்காக, உங்களுக்கு, நன்றி கூறி, விடை
பெறுகிறேன். வணக்கம்.



திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாகவும், என் சார்பாகவும் ஒரு சில கருத்துக்களை இந்த அவையின் முன் வைக்க ஆசைப்படுகிறேன்.

இந்த ஆளுநர் உரையைப் பார்க்கும்போது காகிதப் பூ மணக்காது, கவர்னர் உரை இனிக்காது என்றுதான் என்னால் கூறத் தோன்றுகிறது. ஏனென்றால் நீண்ட நெடு நாளைய பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய திட்டங்கள் எதுவும் இதிலே இல்லையென்றுதான் என்னால் கூறமுடியும்.

முதலாவதாக எடுத்துக்கொண்டால், ஆரம்பத்திலேயே இந்த ஆண்டு நல்லமுறையிலே தொடங்கியிருக்கிறது என்றும், கள், சாராயம் ஆகியவற்றைத் தயாரிப்பதையும், விற்பனையையும் தடை செய்திருக்கின்றது என்று அறிவித்திருக்கிறீர்கள். கள், சாராயம் கடைகளை எல்லாம் மூடுவது தான் தாய்க்குலத்தின் கோரிக்கையா? விஸ்கி, பிராந்தி கடைகளை மூடவேண்டுமென்பது அவசியமில்லையா என்றுதான் எங்களுடைய அருமை நண்பர் தங்கமணி அவர்கள் குறிப்பிட்டார்கள். அரசு இரட்டை வேடம் போடுகின்றது என்று குறிப்பிட்டதற்கு நம்முடைய மதிப்பிற்குரிய நண்பர் டாக்டர் இராமலிங்கம் அவர்கள் சினிமாவிற்குச் சென்று விட்டால், அங்கே அழகான முகம் இருந்தால்தான் இரட்டை வேடம் போட முடியும். ஆதலால்தான் புரட்சித் தலைவர் அவர்கள் இரட்டை வேடம் போடுகிறார் என்றார். ஆனால் டாக்டர் இராமலிங்கம் அவர்கள் ஒன்றை மறந்து விட்டார். நாகேஷ், கவுண்டமணி கூட இன்றைக்கு இரட்டை வேடம் போட்டு நடிக்கும் காலம் இது. இப்படி எதற்காகச் சொல்கிறேன் என்றால், முகம் அல்ல முக்கியம், மனப்பான்மைதான் முக்கியம் இரட்டை வேடம் போடுவதற்கு.

நான் கூறுவதெல்லாம் கள், சாராயக் கடைகளை மூடுவதன் மூலம் நீங்கள் எண்ணிய குறிக்கோள் நிறைவேற்றப்பட்டு விட்டதா? மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை, தாய்க்குலத்தின் நீண்ட நாளையக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு விட்டதா என்பதைத்தான் நான் கேட்க ஆசைப்படுகிறேன். என்ன ஆயிற்று? விஸ்கி பிராந்திக் கடைகளில் சமாளிக்க முடியாத அளவிற்கு இப்போது கூட்டம். டாஸ்மாக்தான் விற்பனை செய்கிறது. இது நிச்சயமாகத் தெரியும். ஜனவரி மாதம் 1-ஆம் தேதிக்குப் பிறகு, இந்த விஸ்கி, பிராந்திக் கடைகளால் கூட்டத்தை சமாளிக்க முடியவில்லை. முந்திய ஆண்டை விட இப்போது 3 மடங்கு வியாபாரம் நடைபெறுகின்றது. எனவே தயவு செய்து எண்ணிய நோக்கம் நல்ல நோக்கம். ஆனால் அந்த நோக்கம் பாதியில் நிற்பதாலே நமக்குப் பயன் இல்லை. மக்களுக்கும் பயன் இல்லை. தயவு செய்து பரிபூரண மதுவிலக்கைக் கொண்டுவருவதற்கு அரசு முன் வரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அனல் மின். நிலையங்கள் மின் உற்பத்தியைப்
பெருக்குவது பற்றி குறிப்பிட்டு இருக்கிறீர்கள். அதே நேரத்தில்
புனல் மின் உற்பத்தியின் மூலம் மின் உற்பத்தியைப் பெருக்க
அரசு முன் வரவேண்டும். சாத்தனூர் போன்ற இடங்களில
புனல் மின் நிலையத்தை அமைப்பதற்கு அரசு எடுத்த நடவடிக்
கைகள் ஏட்டளவிலே இருக்கின்றன. அவற்றை விரைந்து
செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே பாராளுமன்றத்திலே குறிப்பிட்டிருப்பதைப்
போல் இந்தியாவிலேயே தமிழக மின் துறைதான் அதிக
நஷ்டத்திலே இயங்கி வருகிறது. அதை சீரமைக்க வேண்டுமென்று
இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அரசு நிறுவனங்களைப் பற்றி ஆளுநர் மிக நிறை
வாகவும், சிறப்பாகவும் பேசியிருக்கிறார். ஆனால் இந்த
நேரத்திலே நான் ஒன்றை மட்டும் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.
அரசு நிறுவனங்கள் நன்றாக செயல்படுகின்றன என்று கூறிக்
கொண்டு அதே நேரத்திலே நன்றாக நடைபெற்று லாபத்துடன்
நடைபெறுகின்ற தமிழ்நாடு கெமிக்கல்ஸ், காரைக்குடி, தனி
நபர் ஒருவருக்கு தாரை வார்த்து கொடுக்கப்பட்டிருக்கிறது.
இது நியாயம் தானா? இப்படிச் செய்வதன் மூலம் நமது ஆளுநர்
உரைக்கும் நடைமுறைக்கும் வேறுபாடு இல்லையா என்று நான்
கேட்க ஆசைப்படுகிறேன்,

அதே நேரத்திலே தமிழ்நாடு மொபட் என்று ஒரு நிறுவனம்
இருக்கிறது. இதுவும் இந்த அரசால் நிறுவப்பட்டது. மற்ற
எல்லா மொபெட் நிறுவனங்களும் நல்ல லாபத்துடன் நடை
பெற்று வருகின்ற நேரத்திலே, இது நஷ்டத்திலே நடைபெற்று
வருகிறது. இந்த நிறுவனத்தை என்ஃபீல்டு இந்தியாதான் ஏற்று
நடத்த முன்வருகின்றது. ஆனால் அரசு கொடுக்கத் தயாராக
இல்லை. ஆகவே இந்த நிலை மாறவேண்டும். அரசு நிறுவனங்கள்
சிறப்பாக நடைபெறுகின்ற நேரத்திலே இவற்றையெல்லாம்
ஊக்குவிக்கவேண்டுமேயன்றி, தனி நபர் ஒருவருக்கு விற்பது
முறையானதோ, நெறியானதோ அல்ல என்று குறிப்பிட ஆசைப்
படுகிறேன்.

(மாலை 5-20)

அடுத்து சென்னை குடிநீர் பற்றி குறிப்பிடும்போது
தெலுங்கு-கங்கை பற்றி யாதொரு பேச்சும் கிடையாது.
சென்ற ஆண்டு ஆளுநர் உரையின்போது குறிப்பிட்டேன்.
ஏறக்குறைய 117 கோடி ரூபாயை நாம் முதலீடு செய்திருக்
கிறோம். இதுவரையில் பலன் இல்லை இந்த ஆண்டு
ஆளுநர் உரையிலே அதைப்பற்றி பேச்சே இல்லாதபோது
இந்து பத்திரிகையில் போட்டிருப்பதுபோல் இது நடைபெறுமா,
நடைபெறாதா என்ற சந்தேக நிலைமைக்கு மக்கள் தள்ளப்



பட்டிருக்கிறார்கள். எனவே, அரசு உடனடியாக தெலுங்கு
கங்கை திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். இது ஒரு வீணான
திட்டமாகி விடக்கூடாது என்பதைப் பணிவோடு தெரி
வித்துக் கொள்கிறேன். அடுத்து விவசாயிகள் கடனைப் பற்றி
குறிப்பிட்டிருக்கிறார்கள். நாவலர் அவர்கள் என்னுடைய
ஊரில் ஒரு விழாவிலே கூட மிகக் கடுமையாகச் சாடினார்.
வசதி படைத்த விவசாயிகள் கடனை வாங்கிவிட்டு ஏமாற்று
கிறார்கள் என்று அந்த விவசாயிகள் பக்கம் நான் போகத் தயாராக
இல்லை. உள்ளபடியே ஏழையாக இருக்கிற விவசாயிகளுக்கு
6 மாத காலமாவது இந்தக் கடனை ஒத்தி வைக்க வேண்டும்.
இந்த அறிக்கையிலே வறட்சி என்று அரசு ஒப்புக்கொண்டிருக்
கிறது. வரியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று இந்த
நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். வட்டியோடு அசலையும்
சேர்த்து செலுத்துங்கள் என்று கட்டாயப்படுத்துவது முறை
யாகாது. இங்கு நான் ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன்.
வட்டி தள்ளுபடி என்று சொல்லுகிறார்களே தவிர 1980 வரை
நிலுவையிலிருந்த வட்டி அனைத்தும் அசலில் சேர்க்கப்பட்டிருக்
கிறது. ஆகவே வட்டி தள்ளுபடி என்பது அபராத வட்டி அசலில்
சேர்க்கப்பட்டிருந்தாலும் அதையும் தள்ளிவிட்டு அசல் என்பது
ஆரம்பகால அசல் என்று அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து மாவட்ட பிரிவினை என்பது பற்றி ஆறுமுகம்
அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவருடைய மகன்
ஒரு மருத்துவ அதிகாரி. மாண்புமிகு அமைச்சர் ப. உ. சண்முகம்
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் என்ற காரணத்தினால்
அதிக ஈடுபாடு கொண்டு ஒரு கோரிக்கை விடுத்தார். ஆனால்
அமைச்சர் அவர்களை திரு. ஆறுமுகத்தைக் காட்டிலும் ஏறத்
தாழ 40 ஆண்டுகள் தனிப்பட்ட முறையிலே நான் அறிந்தவன்,
அவரே தன்னுடைய பெயரை மாவட்டத்திற்கு வைக்க விரும்ப
மாட்டார். பிரிக்கப்படும் வட ஆற்காடு மாவட்டத்திற்கு
அண்ணாமலை மாவட்டம் என்று வைக்க வேண்டும். அங்கு
அண்ணாமலை கோவில் இருக்கிறது. மறைந்த தியாகி
அண்ணாமலைப் பிள்ளை பெருமை தேடித்தந்த ஊர் அது.
அண்ணாமலை மாவட்டம் அல்லது கடமைக்காக தன் உயிர்
நீத்த அன்னை இந்திரா மாவட்டம் என்று வைக்க வேண்டும்.
இதுவரை வைத்த தலைவர்கள் பெயர் எல்லாம் இருந்த
தலைவர்கள் பெயர்களை வைக்கவில்லை. எனவே தயவு செய்து
இதை முன் உதாரணமாக எடுத்துக் கொண்டு மறைந்த அன்னை
இந்திரா அவர்கள் பெயரையாவது புதிதாக அமைக்கப்
படவிருக்கும் திருவண்ணாமலை மாவட்டத்திற்கு வைக்க
வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அதே நேரத்திலே அந்த
மாவட்ட பிரிவினையை உடனடியாக செயல்படுத்த வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பொதுமக்களின் குறைகளைத் தீர்ப்பது பொறுப்
புள்ள நிருவாகத்தினரின் முக்கியப் பணியாகும். பொதுமக்கள்
குறை தீர்க்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

இதில் நான் குறிப்பிடுவதெல்லாம் இந்த பொதுமக்கள் வரிசையிலே வழக்கறிஞர்கள் வருகிறார்கள். வணிகர்கள் வருகிறார்கள். மருத்துவர்கள் வருகிறார்கள். ஆசிரியர்கள் வருகிறார்கள். ஆலய பணியாளர்கள் வருகிறார்கள். சுதந்திர போராட்ட வீரர்கள் வருகிறார்கள். இவர்களுடைய கோரிக்கைகளையும் இந்த அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வழக்கறிஞர் போராட்டத்தை எடுத்துக் கொண்டால் வழக்கறிஞர் செய்கின்ற போராட்டம், நடத்துகின்ற போராட்டம் நியாயமான போராட்டம்** (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சனை காலையிலே விவாதிக்கப் பட்டு அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறது. எனவே, நீதிமன்றத்தில் இருக்கின்ற இந்தப் பிரச்சனை குறித்து மேலும் தொடர்ந்து பேசுகிறார். அதைக் சபைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: திரு. மா. சின்னராசு காலையிலே பேசப்பட்டு, நீக்கியது குறித்து மேலும் பேசுவதில் அர்த்தம் இல்லை. மற்ற சப்ஜெக்ட்டுக்கு போகலாம்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இதில் நீதிமன்றப் பிரச்சனை பல்வேறு பிரச்சனைகள் வருகின்றன வழக்கைப் பற்றி ஏதாவது மேலெழுந்த வாரியாக சொல்வது தவறு.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: மாற்றுத் தலைவர் அவர்களே, நான் மேலெழுந்தவாரியாக சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாற்றுத் தலைவர் அவர்களே, இது கான்ஸ்டிடியூஷனல் பிராப்ளம். நீதிமன்றத்தில் இருக்கிறது. அதைப்பற்றி மேற்கொண்டு பேசுவது நல்லதல்ல.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: மாற்றுத் தலைவர் அவர்களே, நீதிமன்ற வழக்கிற்கு போகவில்லை. தெளிவாகச் சொல்கிறேன்.**

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இதெல்லாம் சபைக் குறிப்பிலே இருப்பது நியாயமில்லை. எனவே, நீக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர்: (திரு. மா. சின்னராசு): ஏற்கனவே இது தேவையில்லை என்று சொல்லி நீக்கப்பட்டிருக்கிறது. அதைப் பேசுவதில் அர்த்தம் இல்லை. சபாநாயகரே நீக்கி இருக்கிறார், (குறுக்கீடு) அது முடிந்து போன விஷயம். (குறுக்கீடு). தயவு செய்து, நீங்கள் அதை விட்டுவிட்டு, மற்றவற்றைப் பேசுங்கள். (குறுக்கீடு) ஏற்கெனவே, இதே ஃபேக்ட்ஸலே சொல்லப்பட்ட தீர்ப்பை நான் நினைவு கூறுகிறேன். தயவு செய்து அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போங்கள் (குறுக்கீடு). அதை விட்டு அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போங்கள் (குறுக்கீடு).

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: **

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர்: (திரு. மா. சின்னராசு) மாண்புமிகு உறுப்பினர், இன்றைக்கு இங்கே பேசும்போது, ஒரு ஆஸ்பிரேஷனை கிரியேட் பண்ணிப் பேசுகிறீர்கள். வெறும் ஃபேக்ட்ஸ்—ஐ பேசவில்லை. நீங்கள் (குறுக்கீடு)** எனவே, அது தேவையில்லை. அதை சபை குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு மன்றத் திருடைய மாற்றுத் தலைவர் அவர்களே, இரண்டாவது எல்லாப் பிரச்சனைகள் மீதும் முடிவு எடுக்கிற அதிகாரம் சபையை நடத்துகிறவருக்கு உண்டு. அது எந்தெந்தப் பிரச்சினை என்பதைப் பொறுத்துத் தான் முடிவு எடுக்கிறார்கள். பொதுப்படையாக எல்லாவற்றுக்கும் ஒரே விதியைச் சொல்ல முடியாது. எனவே, ஒரே தீர்ப்பினைச் சொல்ல முடியாது. ..........(குறுக்கீடு).

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: சரி, இருக்கட்டும். அடுத்து ஒரு துறை அதிகாரியை மற்ற துறைக்கு மாற்றுவதைப் பற்றிய பிரச்சினை. இதற்கு அனுமதி உண்டு என்று கருதுகிறேன். அதே நிலைதான் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலே இருக்கிறது. கண்காணிப்பாளராகப் பணியாற்றுகின்றவர்களை மேற்கொண்டு செயலாளராகப் பதவி உயர்வு கிடைக்காமல் தடுத்து, அதற்குப் பதிலாக விவசாயத் துறையிலே இருப்பவர்களை அந்தப் பதவிக்கு அமர்த்துகிறார்கள். இது கண்டிக்கத் தக்கது. ஒரு பதவியிலே இருப்பவர் மேற்கொண்டு பதவி உயர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையிலேதான் நாணயமாகவும், ஒழுங்காகவும் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு இத்தகைய பதவி உயர்வு புறக்கணிக்கப்படுகிற நிலையில் அவர்கள் தவறு செய்வதற்கு வாய்ப்புண்டு. எனவே, அரசு அதை இனிமேலாவது கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வணிகர்களைப் பொறுத்தவரை, எவர்சில்வர் வியாபாரிகளுக்கு 10 சதவீதம் விற்பனை வரியை 6 சதவீதம் என்று பிரித்து, இரு கட்ட விற்பனை வரியாக, 6, 4 என்று போட்டிருக்கிறது. இதனால் சிறு வியாபாரிகளுக்குக் கிடைக்கக்கூடிய 'ஒரு இலட்சம்' எக்ஸெம்ப்ஷன் மறுக்கப்படுகிறது. எனவே,

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

முன்புபோல், ஒரு முனை விற்பனை வரியாக உற்பத்தி இடத் திலேயே 10 சதவீதம் வரி விதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் 'ஸ்குவாட்' என்ற பெயரிலே விற்பனை வரித் துறை அதிகாரிகள் நடத்துகின்ற கொடுமை களுக்கு அளவில்லாமல் இருக்கிறது. நான் உறுதியாக இந்த மன்றத்திலே தெளிவாகச் சொல்ல முடியும். ஒரு 'ஸ்குவாட்' ஒரு ஊருக்கு வந்து விட்டுச் செல்கிறது என்றால், அந்த ஸ்குவாட் ரெய்டு செய்தால் நிச்சயமாக பல இலட்சங்கள் வசூலிக்க முடியும். எனவே, வசூலுக்கு ஒரு வழியாக ரெய்டை அந்தஸ்குவாடுகள் செய்கிறார்கள். அதையும் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, உதவி மருத்துவர்கள் கோரிக்கை. நான் கேட்பது எல்லாம், உதவி மருத்துவர்கள் ஏழு அம்சக் கோரிகைகையை மூன் வைத்தார்கள். போராட்டம் நடத்த முன் வந்தார்கள. முதலமைச்சர் அவர்களைப் பார்க்க முன் வந்தபோது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்களுக்கு சந்திக்க நேரம் கிடையாது. சந்திக்க முடியாது. உங்கள் கோரிக்கையை ஏற்க முடியாது என்று சொல்லிவிட்டார்.

அதே நேரத்தில், அதே கோரிக்கையை செவிலியர்-நர்சுகள் கேட்டபோது, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், ஊர்வலம் புறப்படுகிற இடத்திற்குப் போய் சமாதானம் செய்கிறார். முதலமைச்சரைச் சந்தித்து ஒரு மணி நேரம் பேசுகிறார்கள். அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்கப்படுகிறது. எனவே, அரசு இத்தகைய இரட்டை அணுகு முறையை தவிர்த்து, அரசு ஊழியர்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான அணுகுமுறையைக் கடைபிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து. (மணியடிக்கப் பெற்றது)........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: காங்கிரஸ் கட்சி யிலேயே 9 பேர் பேசுவதற்கு பெயர் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) நீங்கள் 15 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு) சரி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: அடுத்து, மருத்துவ வசதி போன்ற வசதிகள், சலுகைகள் அரசு ஊழியர்களுக்கு மட்டு மல்லாது அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் மட்டுமல்லாது, தனியார் பள்ளிகளிலும், நகராட்சிப் பள்ளிகளிலும் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சுதந்திரப் போராட்ட வீரர்களைப் பொறுத்தமட்டில், மாநில அரசு ஊழியர்கள், தங்களது துணைவியார் புகைப் படத்துடன் விண்ணப்பித்துவிட்டால், பின்னால் அந்த ஊழியர் இறந்து விட்டால் அந்த புகைப்படத்தைக் காட்டி, இறந்த சான்றாவணம் காட்டி, உடனே ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.



(மாலை 5-30.)

ஆனால் சுதந்திரப் போராட்ட வீரர்கள் இதே கோரிக்கையை வலியுறுத்தி நீண்ட நெடுங்காலமாக தங்களது விண்ணப்பத்துடன் தங்கள் துணைவியார் புகைப் படத்தையும் இணைத்து வந்தார்கள். அதன்மூலம் உடனடியாக கிடைக்க வேண்டுமென்று கோரி வருகிறார்கள். அதையும் தயவு செய்து அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஆசிரியர்கள் பிரச்சினையை எடுத்துக்கொண்டால் தியாகராய கல்லூரியை அரசே ஏற்றுக்கொண்டு நடத்தும் என்று இந்த அரசே அறிவித்து இருக்கிறது. ஏற்கனவே உயர்நீதி மன்றத்திலே இரண்டு முறை தடைகள் வாங்கிவிட்ட காரணத்தால் அவ்வாறு நடத்த முடியாமல் போய்விட்டது. ஆனால் 4-2-87—லும், 28-2-87—லும் அந்தத் தடைகள் உயர்நீதி மன்றத்தால் நீக்கப்பட்டுவிட்டன. மேலும் இனி இந்த வழக்கில் தடையே கொடுப்பதில் பயனில்லை என்றும் உயர்நீதி மன்ற நீதிபதிகள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். எனவே உடனடியாக தியாகராய கல்லூரியை அரசு ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, திருவண்ணாமலைப் பகுதியிலே ஒரு பாலிடெக்னிக் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று, மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்களை பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். திருவண்ணாமலையிலிருந்து மீனந்தாங்கல், ஜமீன்போரூர் போன்ற கிராமங்களுக்கு டவுன் பஸ் விடவேண்டுமென்று கோரிக்கை விடுத்து ஒருநாள் சாலை மறியலும் நடத்தினோம். ஆனால் அதிகாரிகள் உடனடியாக விடுகிறேன். என்று சொல்லிவிட்டு ஒரே ஒரு ஊருக்கு நேராக ஓடிக்கொண்டிருந்த ஒரு வண்டியை மாற்றி விட்டார்கள். தயவு செய்து மறுபடியும் இந்த மன்றத்தின் மூலமாக அவர்களை பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். அரசு நிறுவனங்களிலேயே சிறப்பாக நடைபெறுகின்ற வகையில் போக்குவரத்துத் துறையைச் செய்தவர் என்ற முறையிலே நான் ஐஸ வைக்கவில்லை. உண்மையாக மனப்பூர்வமாகச் சொல்கிறேன், மற்ற மாநிலங் களோடு ஒப்பிடுகையில் போக்குவரத்துத் துறை நம் மாநிலத்தில் தான் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது; அந்தக் காரணத்தால் சொல்கிறேன். திருவண்ணாமலையிலிருந்து செல்லங்குப்பம், நடுமங்கலம், வயலூர் போன்ற கிராமங்களுக்கு ஒரே ஒரு டவுன் பஸ் தான் உள்ளது. தயவுசெய்து மேலும் பஸ்களைவிட வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

ராஜந்தாங்கல் உயர்நிலைப் பள்ளியை தயவுசெய்து மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தித் தர வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். இறுதியாக ஒன்றை மட்டும் கூறி விடைபெற ஆசைப்படுகிறேன்,

குடும்பக் கட்டுப்பாடு, இதிலே சாதனை பெற்றுவிட்டோம் என்று சொல்லி கேடயங்களை வாங்கிக் கொண்டிருக்கிறோம்.** நாமும் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கிறோம். தயவுசெய்து இதை கண்காணிக்க ஒரு குழுவைப் போட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்படியெல்லாம் சொல்லக் கூடாது. ஒரு ஆஸ்பத்திரியைக் குறிப்பிட்டுச் சொன்னீர்களேயானால் சம்பந்தப்பட்ட அமைச்சர் விசாரிப்பதற்கு வசதியாக இருக்கும். சொல்ல வேண்டியதை ஸ்வீப்பிங்காக சொல்லக் கூடாது. எந்தெந்த ஆஸ்பத்திரியில் இப்படிச் செய்தார்கள் என்று சொன்னால் விசாரிப்பதற்குச் சரியாக இருக்கும். ஆகவே அதை நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: வட ஆற்காடு மாவட்டத்திலே இத்தகைய புகார்கள் வந்து மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே புதிதாக வந்திருக்கிற கலெக்டர் அவர்களிடமும் சொல்லியிருக்கிறேன். ஏனென்றால் முன்பு இருந்த கலெக்டர் ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி பட்டயத்தைப் பெற்றுக் கொண்டு சென்று விட்டார். தயவுசெய்து பொது மக்கள் வரிப் பணத்தை அதிகாரிகள் சாப்பிட்டு அவர்கள் நம்மை ஏமாற்றுவதற்கு நாம் இடம் தரக்கூடாது என்று சொல்லி எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். 1986-87 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் கடுமையான வறட்சியை நாம் சந்தித்தோம். அந்த நேரத்தில் தமிழ்நாடு அரசு கேட்டதோ 310 கோடி. ஆனால் மத்திய அரசு கொடுத்ததோ 31 கோடியே 77 லட்சம் ரூபாய்தான். ஆனால் ஒரு மாநிலத்தில் கடுமையான வறட்சியை சந்திக்கிற பொழுது மாநில நிதியைப் பாராமல் மத்திய அரசு முழுப் பொறுப்பையும் எடுத்துக் கொள்ள வேண்டும். இப்போது சமீபத்தில் கூட 1987-88 ஆம் ஆண்டு தமிழ்நாடு முழுமையும் வறட்சி நிலைமை என்பது இன்றைக்கு ஆயிரம் கொடுமையைத் தாண்டும் நிலைக்கு வந்திருக்கிறது. பாராளுமன்ற உறுப்பினர் திரு ஏ. சி. சண்முகம் அவர்கள் பாராளுமன்றத்திலே பேசுகிறபோது 500 கோடி ரூபாய் தமிழ்நாட்டிற்கு வறட்சி நிவாரணமாக கேட்டிருக்கிறார்கள். குறிப்பாக சமீபத்தில் மதுரை மாவட்ட கலெக்டர் 54 கோடி ரூபாய் வறட்சி நிவாரணத்திற்குத் தேவையென்று அறிவித்தார்கள். சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவர் 150 கோடி ரூபாய் வேண்டுமென்று கேட்டிருக்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



கிறார். பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்ட ஆட்சித் தலைவர் 20 கோடி ரூபாய் கேட்டிருக்கிறார். இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் 22 கோடி கேட்டிருக்கிறார். நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் 99 கோடி கேட்டிருக்கிறார். திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் 16 கோடி கேட்டிருக்கிறார். தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் 50 கோடி வேண்டுமென்று கேட்டிருக்கிறார். இதெல்லாம் வறட்சியாலும், மழையின்மையாலும் பாதிக்கப்பட்டுள்ளதால் உதவி கோரி அறிவித்துள்ள கணக்கு ஆகும். அதுபோல் தர்மபுரி மாவட்டத்தில் இன்றைக்கு மலையில் வாழும் பழங்குடி மக்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டு, மலையில் வாழ முடியாமல் கீழே இறங்கி வந்து, பிழைப்புக்கு வழியில்லாமல் தவிக்கக்கூடிய அவலநிலை இருக்கிறது. இன்றைக்கு 16 மாவட்டங்களில் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல், கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டு கூட்டம் கூட்டமாக மக்கள் அங்கிருந்து வெளியேறக் கூடிய நிலைமையிருக்கிறது. தமிழகத்தில் பெய்யக்கூடிய மழைநீரை தேக்கி வைக்கக்கூடிய அளவுக்கு அதேபோல் காவேரியிலிருந்து வரக்கூடிய தண்ணீர் கடலில் விழுந்து வீணாகாமல் தடுக்கக்கூடிய முறையில் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய 37,000 ஏரிகளையும் ஆழப்படுத்தினால்தான், வரக்கூடிய காலங்களில் தண்ணீரைப் பாதுகாக்க முடியும். நீர் ஊற்றும் கீழே போகாமல் தடுக்க முடியும்.

இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் பெரும் பகுதிகளில் குளங்கள் ஏரிகள் குறைவாக இருக்கின்றன. தஞ்சை மாவட்டத்திலுள்ள குளங்கள் அத்தனையும் மேடிட்டு விட்டதால், தண்ணீரைத் தேக்கிவைக்கப் போதுமான ஆழமில்லை. எனவே, வறட்சி நிவாரணத்தைப் பயன்படுத்திக் கொண்டு, தமிழ்நாட்டிலுள்ள எல்லா ஏரிகளையும், தஞ்சை மாவட்டத்திலுள்ள எல்லா ஏரிகள், குளங்களையும் இந்த 1987-88 ஆம் ஆண்டில் ஆழப்படுத்தி, கரையை உயர்த்தி, வரக்கூடிய தண்ணீரைப் பாதுகாத்தால், தண்ணீர் ஊற்று மேலும் கீழே போகாமல், மேலே இருக்கக்கூடிய அளவுக்கு தண்ணீரைப் பாதுகாக்க முடியும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில முத்துப்பேட்டை யூனியன், கோட்டூர் யூனியன், திருத்துறைப்பூண்டி யூனியன் மற்றும் தலைஞாயிறு, வேதாரண்யம் ஆகிய இடங்களில் குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாமல், இன்று வறட்சியால் கஷ்டப்படுகிறார்கள். சில இடங்களில் தண்ணீரே கிடையாது. இதைப் போக்குவதற்கு கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலமாக, பட்டுக்கோட்டை தாலுகாவில் இராஜாமடத்திலிருந்து 12 கோடி ரூபாய் செலவில், பைப் மூலம் தண்ணீர் விடுவதாக அறிவித்தார்கள். இந்த 1987-88 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றி அந்தப் பகுதி மக்களுக்கு தண்ணீர் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பொ. உத்திராபதி] [1987 மார்ச் 5

அடுத்து, இன்றைக்கு காவிரி படுகையிலிருந்து எண்ணெய்
எடுப்பதற்கு ஆராய்ந்து கொண்டு வருகிறார்கள். நரிமணத்தில்
எடுக்கக்கூடிய எண்ணெயை சென்னை மணலி சுத்திகரிப்பு
ஆலைக்குக் கொண்டு வருகிறார்கள். மேலும் காவிரி படுகை
யில் எண்ணெய் எடுப்பதற்கு தீவிர ஆராய்ச்சி செய்யவேண்டும்.
அதேபோல், இன்றைக்கு நரிமணத்தில் எடுக்கக்கூடிய
எண்ணெயை அங்கே சுத்திகரிப்பு செய்வதற்கு தஞ்சை மாவட்டத்
தில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஒன்றை ஏற்படுத்திக்
கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

வேதாரண்யத்திலுள்ள உப்புத் தொழிற்சாலை ஆரம்பிக்க
கல்நாட்டு விழா நடைபெற்றது. அந்த உப்புத் தொழிற்
சாலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மை கல்லூரி
ஆரம்பிக்கப் போவதாக இரண்டு தடவை அறிவிக்கப்பட்டும்,
இன்னும் ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே,
1987-88 ஆம் ஆண்டில் அரசு அங்கே வேளாண்மைக்
கல்லூரியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

(மாலை 5-40)

தஞ்சை மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் பருவ மழை
தவறி தண்ணீர் இல்லாமல் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது.
ஆனால் இந்த ஆண்டு இயற்கையின் உதவியினால், நெல்
கொஞ்சம் அதிகமாக விளைந்திருக்கிறது. காவிரி ஒப்பந்தம்
என்பது 1924-லே இருந்து வருகிறது. 1974-லே புதுப்பித்திருக்க
வேண்டும். இன்றைக்கு 1986 ஆம் ஆண்டு முடிந்தும், 10
ஆண்டுகளுக்கு மேலாகியும், இப்பிரச்சினை தீர்க்கப்படாமல்
இருக்கிறது. ஆனால் தமிழக அரசின் பத்தாண்டு சாதனை
களை விளக்கி பிரச்சாரம் நடத்தியிருக்கிறீர்கள். காவேரி
பிரச்சினை தீர்க்க முடியவில்லை. மத்திய அரசு கர்நாடக
அரசையும், தமிழக அரசையும் அழைத்துப் பேசி, பேச்சு
வார்த்தையின் மூலமாக காவிரிப் பிரச்னையைத் தீர்க்காமல்
விட்டிருப்பது உண்மையிலேயே மத்திய அரசைக் கண்டிக்காமல்
இருக்கமுடியாது. மத்திய அரசு என்பது இந்தியாவில்
இருக்கக்கூடிய அனைத்து மாநிலங்களையும் பாதுகாக்கக்கூடியது.
எதிர்காலத்தில் இந்த காவிரிப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு
தமிழக மக்களை ஒன்று திரட்டி, ஒரு போராட்டத்தின் மூலம்
மத்திய சர்க்காரை வற்புறுத்துவதற்கு தமிழக அரசு முன்வர
வேண்டும். அப்படி வந்தால்தான் தமிழகத்திலுடைய உணவு
நிலைமையும் தஞ்சை மாவட்ட விவசாயிகள் நிலைமையும் பாது
காக்கப்படும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



1987 மார்ச் 5] [திரு. பொ. உத்திராபதி]

அடுத்து தெலுங்கு கங்கை திட்டம் பற்றி ஆளுநர் அவர்
களின் உரையில் ஏதும் குறிப்பிடப்படவில்லை. அது ஒரு
முக்கியமான திட்டம்' இந்தத் திட்டத்திற்கு இன்னமும் மத்திய
அரசு அனுமதி அளிக்காமல் இருக்கிறதென்றால் உங்களிடையே
''கணவன்-மனைவி'' உறவு இருக்கிறது என்று சொல்லுவது
எந்த அளவுக்கு பொருத்தமாக இருக்கும் என்று கேட்க விரும்பு
கிறேன். எனவே இதைக் குறித்து மத்திய சர்க்காரை மாநில
சர்க்கார் வற்புறுத்தியாக வேண்டும். அதன் மூலம் சென்னைக்
குக் கிடைக்கக் கூடிய தண்ணீரைப் பெற வேண்டும். தெலுங்கு
கங்கைத் திட்டத்தைப் பொறுத்த வரையில் நாம் ஏற்கெனவே
தமிழகத்தின் பணத்தை ஆந்திர மாநிலத்திற்குக் கொடுத்து
இருக்கிறோம். அந்த நிலையில் இன்னமும் தெலுங்கு கங்கைக்
கால்வாய்த் திட்டத்திற்கு மத்திய சர்க்கார் அனுமதி கொடுக்க
வில்லை என்றால் மத்திய சர்க்காரை நாம் வற்புறுத்தி அனுமதியை
வாங்க முயற்சிக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்ள
விரும்புகிறேன்.

அடுத்து தமிழகத்தில் இன்றைக்கு விவசாயத் தொழிலாளர்
களை மிகவும் பாதித்து வந்த கள் சாராயக் கடைகளை மூடி
யிருப்பதை நான் வரவேற்கிறேன். மதுவிலக்கைப் பூரணமாக
அமுல்படுத்த வேண்டும் என்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
சார்பாக நாங்கள் முழுமனதோடு வரவேற்று ஆதரிக்கிறோம்.
காரணம் கிராமங்களில் உள்ள ஏழை எளிய மக்கள்தான்
இதனால் மிகவும் பாதிக்கப்பட்டு வந்தார்கள். மதுக்கடைகள்
காரணமாக லட்சக் கணக்கான குடும்பங்கள் இன்றைக்குக்
கெட்டுப் போயிருக்கின்றன. ஆகவே இந்த வகையில் அரசு
எடுத்துள்ள நடவடிக்கையை நாங்கள் ஆதரிக்கிறோம்.
ஆனாலும் எரி சாராயம் என்பது இன்றைக்குக் கிராமப்புறத்தில்
சில முக்கியமான புள்ளிகளாலும் சில பெரிய மனிதர்களாலும்
பெரிய தொழிற்சாலையைப் போல் தயாரிக்கப்பட்டு விற்பனை
செய்யப்படுகிறது. கடந்த 2 தினங்களுக்கு முன்னாலே கூட
திண்டிவனத்திற்கு அருகாமையில் சுமார் 60,000 ரூபாய்
பெருமானமுள்ள எரி சாராயத்தைக் காவல் துறையினர்
கைப்பற்றினார்கள் என்ற செய்தியைப் பார்க்கிறோம். அப்படி
சில பெரிய புள்ளிகள் எரிசாராயத்தை உற்பத்தி செய்து,
கிராமப்புறத்தில் ஒரு சாராய சாம்ராஜ்யமே நடத்திக் கொண்
டிருக்கிறார்கள். இதனால் 100க்கு அதிகமான பேர் உயிர்
இழந்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட தீய சக்திகளை முழுமை
யாக அடக்குவதற்கு நடவடிக்கை எடுக்க அமைச்சரவை முன்
வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கள்ளுக்கடைகளை மூடி விட்டீர்கள் அதன் காரணமாக
30,000 பேருக்கு தலா 2,000 ரூபாய் வீதம் நிவாரணம் அளிக்கப்
படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாறு 30,000
பேருக்கு மட்டும்தான் மர பாஸ் பட்டா வழங்கப்பட்டிருக்
கிறது. ஆனால் தமிழகத்தின் மரமேறிய தொழிலாளர்கள்
10,00,000 பேர் இருக்கிறார்கள். ஏலம் எடுத்த கடைக்

காரர்கள் 15 பேர்களை வைத்து மரம் ஏறி இருந்தால் அதில் 5 பேருக்கு மட்டுமே மர பாஸ் பட்டா வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். மீதி 10 பேர்களுக்கு வாங்கி கொடுக்கப்படவில்லை. இவ்வாறு மூன்றில் இரண்டு பகுதி மக்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே இதற்கு என ஒரு கமிட்டி அமைத்து மரம் ஏறியவர்களைப் பற்றி பரிபூரணமாக கணக்கெடுத்து அவர்கள் அத்தனை பேருக்குமே அரசு நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து 1983-84 ஆம் ஆண்டில் கடுமையான வறட்சி ஏற்பட்டதையொட்டி 1985 ஆம் ஆண்டு வரை குத்தகை விவசாயிகள் கட்ட வேண்டிய குத்தகை பாக்கியை 30-9-1986, 31-3-1987 30-9-1987, 31-3-1988 மற்றும் 30-9-1988 வரை கட்டலாம் என்று அரசு அறிவித்திருக்கிறது. ஆனாலும் 1983 ஆம் ஆண்டிலிருந்தே இயற்கையால் பாதிக்கப்பட்ட குத்தகை தாரர்கள் நெல் அளக்க முடியாத அவல நிலை இருந்து வருகிறது. எனவே சென்ற ஆண்டு வரை உள்ள அவர்களின் குத்தகை பாக்கி முழுவதையுமாகத் தள்ளுபடி செய்து விட்டு இந்த ஆண்டு குத்தகையை முழுவதுமாக அளிக்க வேண்டும் என்று அரசு அறிவித்து குத்தகை விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அதைப் போலவே குத்தகை விவசாயிகளில் பலர் இன்று வரை குத்தகை விவசாயி கணக்கப் பதிவு பண்ணாத விவசாயிகளாகவே இருக்கிறார்கள். அப்படிப்பட்ட விவசாயிகளையும் பதிவு செய்வதற்கான முறையை அமுல்படுத்த அரசு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து தற்போது விவசாயிகளுக்கு நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 35 பெறுமானமுள்ள உரக் கூப்பன்கள் வழங்கப்படுகிறது. அதை நான் வரவேற்கிறேன். ஏனென்றாலும் இன்றைக்கு மத்திய சர்க்கார் நெல்லுக்கு அதிகமான விலை கொடுக்க மறுத்து வருகிறார்கள். அப்படி இருந்தும் மாநில சர்க்கார் குவிண்டால் ஒன்றுக்கு நெல்லுக்கு ரூ. 35 கொடுக்கிற முறையை வரவேற்கிறேன். அதே நேரத்தில் அரசை நான் ஒன்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். தற்போது ரூ. 35-க்கு வழங்கப்படும் உரக் கூப்பனுக்கு பதிலாக விவசாயிகளுக்குப் பணமாகக் கொடுத்தால் விவசாயிகளை நாம் மேலும் பாதுகாக்க முடியும். காரணம் இன்றைய தினம் விவசாயி அந்த உரக் கூப்பனை வாங்கிக் கொண்டு போய் ஒரு மூட்டைக்கு 20 ரூபாய்க்கும் குறைவாக விற்று விடுகிறார்கள். அந்த டோக்கன்களால் விவசாயிகளுக்கு நன்மையில்லை. எனவே டோக்கனுக்குப் பதிலாக விவசாயிகளுக்குப் பணமாகக் கொடுத்து விடுங்கள். இல்லையென்றால் அடுத்த விவசாயம் தொடங்கும் வரை கூப்பனை வைத்துக் கொண்டு அப்போது தேவையான உரத்தைக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்



விவசாயத் தொழிலாளர்கள் தமிழகத்தைப் பொறுத்த வரையில் 70 லட்சத்திற்கும் மேலாக இருக்கிறார்கள். காவிரிப் பாசனத்தை மட்டும் நம்பி வாழ்கிறவர்கள் 10 லட்சம் பேர் இருக்கிறார்கள். ஆளுநர் உரையில் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களைப் பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. எனவே நான் அமைச்சரவையைப் பார்த்து ஒன்றைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இன்றைய தினம் விவசாயத் தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு 140 நாட்கள் மட்டுமே வேலை கிடைக்கிறது. மீதி நாட்கள் அவர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். மீதி உள்ள நாட்களுக்கு அவர்களுக்கு வேலைக்கு உத்திரவாதம் கிடைக்க ஆளுநர் உரையில் குறிப்பிடாமல் இருப்பது மிகவும் வேதனைக்கு உள்ளான விஷயம் அடிமட்டத்தில் வாழ்கிற விவசாயக் குடும்பங்களின் குழந்தைகளுக்கு சோறு போடுவதன் மூலமும், அத்தகைய குழந்தைகளுக்கு செருப்பு கொடுப்பதன் மூலமும் அவர்களைக் காக்க முடியாது. விவசாயத் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு கூலி உயர்வு அளித்து 5 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. ஒரு கமிஷனை அமையுங்கள் என்று அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். அந்தக் கமிஷன் எல்லா மாவட்டங்களுக்கும் சென்று, விவசாயிகளுடைய, விவசாயத் தொழிலாளர்களுடைய குறைகளைக் கேட்டு எதிர்காலத்தில் அடிமட்டத்திலே வாழக் கூடிய விவசாயத் தொழிலாளர்கள் கூலி உயர்வும் நிரந்தர வேலை வாய்ப்பும் பெற திட்டத்தை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மழை பெய்யவில்லை என்று வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் காடுகளில் உள்ள மரங்களையும் அழித்துவிட்டார்கள். அப்படி அழித்தவர்கள் யார்? கடந்த பத்தாண்டுக் காலத்தில் தமிழகத்திலேயுள்ள எல்லா மரங்களையும், சந்தன மரங்கள் உட்பட வெட்டி வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்து விட்டார்கள். தமிழகக் காடுகளிலே உள்ள மரங்களை வெட்டிவிட்டு சமூகக் காடு என்ற பெயரால் விழாக்களைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இதற்காக கோடிக்கணக்கான ரூபாயை செலவு செய்கிறோமே தவிர அந்த சமூகக் காடுகளின் மூலமாக மரம் வளர்த்தது உண்டா என்றால், கிடையாது. எதிர்காலத்திலேயாவது இப்படிப்பட்ட காரியத்தை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது கங்கை—காவிரி திட்டத்தைப் பற்றி சொன்னார்கள். ஆனால் நமது மகாகவி பாரதி அவர்கள், ''வங்கத்தில் ஓடி வரும் நீரின் மிகையால் மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்'' என்று அறுபது ஆண்டுகளுக்கு முன்பே பாடியிருக்கிறார்.

இந்திய நாடு 60 ஆண்டுகளுக்குப் பிறகு முழுமையும் வறட்சியால் பாலைவனமாக மாறப் போகிறது என்று அன்றைக்கே பாரதியார் தன்னுடைய சிந்தனையால் பாடியிருக்கிறார்

[திரு. பொ. உத்திராபதி] [1987 மார்ச் 5

இந்தியாவிலும் தமிழகத்திலும் ஒரு சிலர், இன்று கங்கை—காவிரி
இணைப்பு சாத்தியமா, அதற்கு பணம் உண்டா என்ற
கேள்வியை எழுப்புகிறார்கள், 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த
பிரிட்டிஷ் பொறியாளர் ஆர்தர் காட்டன், சிறந்த பொறியாளர்
திரு விஸ்வேஸ்வரய்யா சி. ராமசாமி அய்யர் ஆகியவர்களும்,
மத்திய அரசின் முன்னாள் நீர்ப்பாசன மற்றும் மின்சாரத்
துறை அமைச்சராக இருந்த பொறியாளர் டாக்டர் கே.எல்.
ராவ், கேப்டன் தஸ்தூர் போன்ற அறிஞர்களும் கங்கை-காவிரி
இணைப்பு நாட்டின் வளர்ச்சிக்கு அவசியமானது என்று
வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். 1974 ஆம் ஆண்டில்
மொத்த திட்டச் செலவு ஏழாயிரம் கோடி ரூபாய்
ஆகும் என்று கேப்டன் தஸ்தூர் சொல்லியிருக்கிறார்.
இன்றைய நிலையில் இன்னும் ஏழாயிரம் கோடி ரூபாயைச்
சேர்த்தால் மொத்தம் 14 அல்லது 15 ஆயிரம் கோடி ரூபாய்
செலவாகும். அப்படிச் செலவு செய்தால் ஒரு மைலுக்கு
இரண்டாயிரம் தொழிலாளர்கள் வேலையில் ஈடுபடுவார்கள்.
அப்படியானால் ஒரு கோடியே 50 இலட்சம் தொழிலாளர்
களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க முடியும். கங்கை-காவிரி
இணைப்புத் திட்டத்தால் ஒரு பக்கம் வறுமைக் கோட்டிற்குக்
கீழேயுள்ள மக்களில் ஒன்றரை கோடி பேருக்கு வேலை வாய்ப்பு
கொடுக்க முடியும், மறு பக்கம் இந்தியா முழுமைக்கும் உள்ள
ஒரு பக்கம் வறட்சி, ஒரு பக்கம் வெள்ளம் என்பதை மாற்றி
இந்தியா முழுமையும் வளம் கொழிக்கும் நாடாக மாற்ற
முடியும் என்று வல்லுநர்களும், அறிஞர்களும் சொல்லியிருக்
கிறார்கள்.

இந்தக் கருத்தை காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள்
தங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர்களின் மூலமாக நடக்கக்
கூடிய பாராளுமன்றக் கூட்டத்தில் வலியுறுத்தி கங்கை-காவிரி
இணைப்புத் திட்டத்தை பத்தாண்டுக் காலத்திலாவது நிறை
வேற்ற வேண்டும். இங்குள்ள ஆளும் கட்சியின் பாராளுமன்ற
உறுப்பினர் திரு. ஏ.சி. சண்முகம் அவர்கள் நடந்து கொண்
டிருக்கின்ற பாராளுமன்றக் கூட்டத்தில் பேசியிருக்கிறார்கள்.
"கங்கை காவிரியை இணைத்தால் ராஜஸ்தான் போன்ற
மாநிலங்கள் வறட்சியிலிருந்து காப்பாற்றப்படும். இந்தியாவி
லுள்ள பெரும்பாலான மாநிலங்கள், தமிழகம் உட்பட
செழிக்கும். திட்டத்தை இப்போது துவக்கி ஆண்டுக்கு 200
கோடி ரூபாய் 300 கோடி ரூபாய் என்று ஒதுக்கி வேலையைத்
துவங்கினால் நிரந்தரமாக இந்தியாவில் வறட்சி, வெள்ளம்
ஆகியவற்றைத் தடுக்க முடியும். அதற்கு இதுவே சிறந்த
திட்டமானது" என்று ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்
திரு. ஏ.சி. சண்முகம் நீண்ட கண்ணோட்டத்தோடு சொல்லி
யிருக்கிறார்கள்.

(மாலை 5-50)

அந்தத் திட்டத்தைத்தான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும்
தொடர்ச்சியாகச் சொல்லி வருகிறது. கங்கை—காவிரி நதிகளை
இணைக்க வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை தமிழக அரசு



1987 மார்ச் 5] [திரு. பொ. உத்திராபதி]

கொண்டுவந்து, நிறைவேற்றி, அதை மத்திய அரசுக்கு அனுப்ப
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த
மாமன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு அரேபியா
நாட்டில் எண்ணெய் செல்வத்தினால் வளம் கொழிக்கும் நாடாக
உள்ளது. ஆனால் அரேபியா நாட்டு எண்ணெய் செல்வத்தினை
விட நம் நாட்டுத் தண்ணீரைக் கொண்டு அதிகமான
செல்வத்தைப் பெறமுடியும் என்று அறிஞர்களும், வல்லுநர்களும்
சொல்லி வருகிறார்கள். சோவியத்தில் நிறைவேற்றப்பட்ட
வால்கா முதல் டான் வரை நதிகள் இணைப்பால் அந்த நாடு
வளம் கொழிக்கும் நாடாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.
அப்படி ஒரு திட்டத்தை நம் நாட்டிலும் நிறைவேற்ற மத்திய
சர்க்கார் முன் வர வேண்டுமென்று இந்த மன்றத்தின்
மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மத்திய அரசின் 20 அம்சத் திட்டத்தில் 4—ஆம்
திட்டம் தீவிர நிலச் சீர்திருத்தத் திட்டமாகும். தமிழக சட்ட
மன்றத்தில் முன்னாள் ரெவின்யூ அமைச்சராக இருந்த
திரு. எஸ்.டி.எஸ். அவர்கள் 1958 முதல் 1961 ஆம்
ஆண்டு வரை எழுதி வைக்கப்பட்ட பினாமி நிலங்களை எடுக்க
வேண்டுமென்று 1980-ல் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து,
நிறைவேற்றினார்கள். அந்த 'பில்' கூட வைத்திருக்கிறேன்.

தமிழகத்தில் லட்சக் கணக்கான ஏக்கர் நிலம் இருக்கிறது.
அந்த நிலங்களை எடுத்தால்தான் வறுமைக் கோட்டுக்குக்கீழே
உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு அந்த நிலங்களைப்
பங்கிட்டுக் கொடுத்து, அவர்கள் வறுமையைப் போக்க முடியும்.
அப்போதுதான் தமிழகத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்க
முடியும் என்று அந்தச் சட்டத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு
அனுப்பினோம். அதற்குப் பிறகு என்னவாயிற்று? மத்திய அரசு
சில திருத்தங்களுடன் திருப்பி அனுப்புங்கள் என்று அதை
திருப்பி அனுப்பிவிட்டது. அதற்குப் பிறகு இந்த பினாமி
நிலங்களை எடுக்கும் சட்டத் திருத்தம் குறித்து தமிழக அரசு
பரிசீலித்து, அதை மீண்டும் திருப்பி அனுப்பாமல் ஏன்
வைத்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. அதைத் தடுத்து
நிறுத்தியிருக்கிறவர்கள் யார்? தமிழகத்திலே உள்ள ஒருசில
நிலப் பிரபுக்கள் பினாமியாக நிலம் வைத்துள்ளவர்கள் இந்தச்
சட்டம் நிறைவேறாமல் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள் என்று
சந்தேகப்படும் அளவுக்கு இருக்கிறது. இந்த நடப்புக் கூட்டத்
தொடரில் அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, பினாமி நிலச்
சட்டத்தை மீண்டும் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்
பினர்கள், டெல்லிக்குச் சென்று, ஏன் இதைத் திருப்பி அனுப்பி
னீர்கள், தமிழகத்தில் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் நிலத்தை
மறைத்து வைத்திருந்தாலும் அந்த நிலத்தை எடுத்து, மறைந்த
அன்னை இந்திராகாந்தி அவர்களின் கொள்கையை நிறைவேற்ற

வேண்டும் என்று சொல்ல வேண்டும். இந்தச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றி தமிழகத்தில் உள்ள பினாமி நிலங்களை எடுத்து, நிலமற்றவர்களுக்குக் கொடுக்க தமிழக அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பினாமி நிலத்தைக் கண்டுபிடிக்க ஓய்வு பெற்ற ஒரு நீதிபதியின் தலைமையில் கமிஷன் ஒன்று அமையுங்கள் என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அந்தக் கமிஷன் தஞ்சை, பெரியார் மற்ற மாவட்டங்களுக்கு வரட்டும். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் உள்ள நாங்கள் ஆதாரபூர்வமாக பினாமி நிலங்களைக் காட்டுகிறோம். பினாமி நிலங்கள் வைத்திருக்கிறவர்கள் பெயர்களைக் கொடுக்கிறோம். அந்தக் கமிஷன் ரிப்போர்ட் வந்த பிறகு தமிழக அரசு துரிதமாக அந்த நிலத்தை எடுத்தால்தான் இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கக்கூடிய உணவுப் பற்றாக் குறையைப் போக்க முடியும்.

இறுதியாக ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். தமிழக அரசு பல திட்டங்களை அறிவித்திருக்கிறது. குழந்தைகளுக்குக் காலணி பெரியோர்களுக்கு காலணி, சிறார்களுக்குத் துணி, இப்படி பல்வேறுவிதமான சலுகைகள் அளிக்கிறார்கள். அதை நான் மறுக்கவில்லை; வரவேற்கிறேன். ஆனால் அடிப்படை பிரச்சினையை மாற்றுவதற்கு, அடித்தளத்தில் வாழக்கூடிய மக்களுக்கு நிரந்தரமாக வேலை கொடுக்க திட்டங்கள் இருக்கிறதா என்றால் இல்லை. மூடிய ஆலைகள் மூடிய ஆலைகளாகவே இருக்கின்றன. 14,000 தொழிலாளர்கள் இன்றைக்கு வீதியில் இருந்துகொண்டிருக்கிறார்கள். டாக்டர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆளுநர் உரையில் உருப்படியான திட்டங்கள் ஒன்றும் இல்லை என்று வருத்தத்துடன் தெரிவிக்க விரும்புகிறேன். விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இன்றைக்கு கடனிலிருந்து விடுதலை பெற வேண்டிய நிலை இருக்கிறது. அபராத வட்டியையும், வட்டியையும் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். சென்ற மாதம் 28-ஆம் தேதி வரை அவர்களுக்கு டைம் கொடுத்தார்கள். நான் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். இந்த மாதம் 15-ஆம் தேதிவரை டைம் கொடுத்தால் பாக்கி இருக்கும் விவசாயிகளும் பயனடைவார்கள்.

அதே நேரத்தில் அடுத்த கட்டமாக ஜூன் மாதத்தில் கட்ட சொல்லியிருக்கின்றார்கள். ஜூன் மாதத்தில் தண்ணீர் வருகிறதோ இல்லையோ நமக்கு ஒன்றும் தெரியாது. ஜூன் மாதத்தில் விவசாயிகள் கட்ட முடியாது. அப்படி கட்டாவிட்டால் தமிழக அரசு எந்த ஒரு நல்ல நோக்கத்தோடு சலுகைகள் அளித்ததோ அந்தச் சலுகைகள் அவர்களுக்குப் போய் சேராமல் போய்விடும். இந்த கடன் வசூலை விவசாயிகளைப் பாதுகாக்கின்ற முறையில் இன்னும் இரண்டு ஆண்டுகள் காலத்தில் கட்டுவதற்கு அரசு மட்டத்திலே காலம் தள்ளிக் கொடுத்தால் நிச்சயமாக கட்டிவிடுவார்கள்



அந்த அடிப்படையிலே அவர்களைக் கடன் தொல்லையில் இருந்து பாதுகாக்க முடியும். எதிர்காலத்தில் தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்க தமிழக அரசு இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சிகளுக்குத் தேர்தல் நடத்தி முடித்துவிட்டோம். ஆனால் அந்த ஊராட்சிகளுக்கு, ஒன்றியங்களுக்கு எந்த அதிகாரமும் கிடையாது. வருகின்ற தபால்கூட ஆணையாளருக்குத்தான் வருகிறது. அவர் அந்த தபாலை உடைத்து பெருந்தலைவருக்கு அனுப்புகின்ற கட்டம்தான் இருக்கின்றது. அதுவும் அவரே வேண்டுமென்றால் அனுப்பலாம் இல்லையென்றால் வைத்துக்கொள்ளலாம். ஆணையாளர்களை பெருந்தலைவர்கள் கேட்கவேண்டிய அவசியத்தில் இருக்கின்றார்கள். ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள தமிழக அரசு, மக்கள் நம்பிக்கையுள்ள அரசு தமிழக அரசு. ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கவேண்டும். நாம் எப்படி மத்திய சர்க்கார் நமக்கு அதிக அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்று சண்டைப்போட்டுக்கொண்டிருக்கிறோமோ. அதுபோல ஊராட்சிக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அதிக அதிகாரத்தைக் கொடுத்தால் சத்துணவு மையங்களிலே உள்ள தவறுகளை ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர்கள் கேட்கக் கூடிய அளவுக்கு இருக்கும். அப்படி கேட்க முடியாத அளவுக்கு இன்றைக்கு நிலைமைகள் இருக்கின்றன. எதிர்காலத்தில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவுச் சட்ட விதிகளைத் திருத்த வேண்டும் என்று சொல்கின்றார்கள். கூட்டுறவுத் தேர்தல் நடத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத காரணத்தினால் இன்றைக்குக் கூட்டுறவுத் துறையில் பெரும் தவறுகள் நடக்கின்றபோது அந்தத் தவறுகளை கேட்க இடம் இல்லாமல் போய்விடும். ஆகவே எதிர்காலத்தில் சீக்கிரத்தில் கூட்டுறவுத் துறையில் தேர்தல்களை நடத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

*திரு. வி. கோ. செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் நான் சார்ந்த இந்திய தேசிய காங்கிரஸ் சார்பில் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

இன்றையதினம் ஆளுநர் அவர்கள் உரையில் முதல் கட்டமாக மதுவிலக்குத் திட்டத்தில் கள் சாராயக் கடைகள் மூடப்பட்டிருப்பதற்கு நான் காங்கிரஸ் கட்சியின் சார்பில் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆனால் கள் சாராயக் கடைகளை மூடியிருந்தாலும் பெரிய தனவந்தர்கள் சாப்பிடுவதற்கு என்று விஸ்கி பிராந்திக் கடைகள் இருக்கின்றன

விவாதம்—தொடர்ச்சி

(திரு. வி.கோ. செல்லப்பா) [1987 மார்ச் 5

அந்த கடைகளையும் மூடியிருக்க வேண்டும். அப்போது தான்
உண்மையிலேயே மதுவிலக்குத் திட்டத்தை முதலமைச்சர்
அவர்கள் கொடுத்தார்கள் என்று பாராட்டுக்குரியதாக இருக்க
முடியும். கள் சாராயக் கடைகளை மூடிவிட்டு அங்கே
பிராந்தி ஷாப்களை திறந்திருக்கின்ற நிலை இருக்கின்றது.
இந்த கடைகள் நடத்த விழுப்புரம் காந்தி சிலை அருகே
அனுமதி கொடுக்கக் கூடாது என்று விதிமுறைகள் இருக்கின்றன.
யாருக்கும் கொடுக்கக் கூடாது என்று இருக்குன்றது. விழுப்புரம்
காந்தி சிலையருகிலே ஷாப் வைக்க அனுமதி கொடுத்திருப்ப
தால் பிராந்தி ஷாப் இருக்கின்றது. அப்படி இருக்கின்ற
நேரத்திலே அங்கே செல்கின்றவர்கள், காந்தி சிலை அருகிலே
உள்ள மதுக் கடைகளுக்குச் சென்று வாங்கி வரச்சொல்லுகின்ற
போது இந்திய திருநாட்டிற்கு சுதந்திரம் வாங்கி கொடுத்த
அந்தக் உத்தமர் பெயர், மதுவிலக்கு கொள்கையிலே
நம்பிக்கை கொண்டிருந்த அந்த பெரியவர் பெயரை சொல்
கின்றார்கள். அந்த நிலைமைகள் ஏற்படுகின்றன என்பதால்
அந்தக் கடைகளை அங்கிருந்து அகற்ற வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பற்றி பேச வேண்டி
இருக்கிறது. என்னுடைய தொகுதியைப் பற்றி மட்டும்
இப்போது சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய
தொகுதி கடலூர் சட்டமன்றத் தொகுதி.
அது தென் ஆற்காடு மாவட்டத்தினுடைய தலை
நகரம். அங்கு சோடியம் விளக்குகள் கூட இல்லை. சாதாரண
குழாய் விளக்குகள் கூட இல்லாத நிலை இருக்கின்றது.
சாதாரண பல்புகளை போட்டிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட
நிலையில் ஒரு மாவட்டத்தின் தலைநகரம் இருந்துகொண்டிருக்
கிறது. இந்த நிலைமைகளை எல்லாம் மாற்றி, பல நன்மைகளை
செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 6-00)

இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற ஆளுநர் அவர்களின்
உரையிலே அனல் மின் நிலையம் கடலூருக்கு கொடுப்பதாக
சொல்லியிருக்கிறார்கள். அங்குள்ள துறைமுகத்தை விரிவு
படுத்துவது என்று சொல்லியிருக்கின்றார்கள். [illegible]
யர்கள் இந்திய திருநாட்டிலே வந்த நேரத்தில் கடலூர்
துறைமுகத்தைத் தான் நல்ல துறைமுகம் என்று தேர்ந்
தெடுத்து வந்தார்கள். ஏனென்றால் அங்குள்ள கடற்கரை
கப்பல்கள் நின்று சரக்கை ஏற்றி இறக்குவதற்கு
ஏற்ற விதத்தில், இயற்கை அமைப்போடு இருப்பதால்
அந்தத் துறைமுகத்தை விரிவுபடுத்துவதாக சொல்லியிருக்
கிறார்கள். அப்பணியை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து, பொழுது போகாமல் இருக்கின்ற தமிழக
மக்களுக்காக பாரதப் பிரதமர், பாரத இளம் தலைமுறை
யினரின் தன்னிகரற்ற தலைவர் அவர்கள் கொடைக்கானலில்
தொலைக்காட்சி நிலையம் ஏற்படுத்திக் கொடுத்திருப்பதற்காக



விவாதம்—தொடர்ச்சி

1987 மார்ச் 5] (திரு. வி.கோ. செல்லப்பா)

அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் பாராட்டினையும்
தெரிவித்துக்கொள்கிறேன். சென்னையிலிருந்து கடலூர் 140
மைல் தொலைவில் இருக்கிறது. இங்கிருந்து தொலைக்
காட்சிகள் ஒளிபரப்பப்படும்போது அங்குள்ள மக்களுக்கு
அந்தக் காட்சிகள் சரியாக, தெளிவாக பார்க்க முடியாத
நிலை இருப்பதால் கடலூரில் ஒரு தொலைக்காட்சி டவர்
ஏற்படுத்தித் தர வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சத்துணவு கொடுக்கிறார்கள். இதன் காரணமாக
தமிழ்நாட்டிலுள்ள பள்ளிகளுக்கு ஏராளமான பிள்ளைகள்
விரும்பி வருகிறார்கள் என்று இங்கே பேசிய அத்தனை
ஆளும் கட்சி உறுப்பினர்களும் குறிப்பிட்டு சொன்னதை
நானும் ஏற்றுக்கொள்கிறேன், பாராட்டுகிறேன், அது உண்மை
யும் கூட. காரணம் சத்துணவு கொடுக்க ஆரம்பித்ததற்குப்
பிறகுதான் பள்ளிகளுக்கு பெரும்பாலும் அதிக எண்ணிக்கை
யில் வர ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் படிக்க
வருகின்ற பள்ளிக்கூடங்கள் சரியில்லை. பள்ளிக்கூடங்களுக்கு
நல்ல கூரைகளை அமைத்து சிரமைக்க வேண்டும். என்னு
டைய தொகுதியில் பல இடங்களில் பள்ளிக்கூடங்கள் சரியாக
இல்லாத நிலை இருக்கிறது. உதாரணத்திற்கு சொல்ல
வேண்டுமென்றால் பெரியகாட்டுப்பாளையம் என்பது ஒரு
காலனி பகுதி. அந்தக் கிராமத்தைச் சார்ந்த, அந்தக் காலனியைச்
சார்ந்த பள்ளி நல்ல முறையில் கூரைகள் இல்லாமல் இருக்கிறது
என்பதை நான் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களின்
கவனத்திற்குக்கொண்டு வருகிறேன்.

அடுத்து, இந்திய நாடு சுதந்திரம் அடைந்து இவ்வளவு
ஆண்டுகள் ஆன பிறகும் கூட பிற பகுதிகளுடன் தொடர்பு
கொள்ளாத ஓர் இடம் இருக்கிறது. அந்தப் பகுதிக்கு நாம்
செல்ல வேண்டுமென்றால் போட்டில் செல்ல வேண்டும்.
அந்தப் பகுதிக்கு நடந்து செல்ல முடியாது. எந்த நேரத்தி
லும் சரி, வெயில் காலத்திலும் சரி, தண்ணீர் இல்லாமல்
வறட்சி நிலைமை இருக்கும்போதும் சரி, அங்கு செல்ல
வேண்டுமென்றால் போட்டில் தான் செல்ல முடியும். சிங்காரத்
தோப்பு, கோரி, சோளகுப்பம் போன்ற பகுதிகளுக்கு போக
வேண்டுமென்றால் பல காலமாக அந்த மக்கள் போட்டிலே
சென்று துன்பம் பல அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள்.
கடந்த தடவை நான் இதுபற்றி குறிப்பிட்ட போது மாண்புமிகு
போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே பாலங்கள்
கட்டித் தரப்படும் என்று உறுதி அளித்தார்கள். அதை
மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு அதிக
நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிங்காரத்தோப்பு போன்ற பகுதிகளில் லைட் கூட
இல்லாத நிலை இருக்கிறது. முன்பே லைன்கள் இழுக்கப்பட்
டிருந்தன. லைன்கள் பவர் இழந்து அங்குள்ள விளக்குகள்
எல்லாம் மங்கலாக எரிகின்ற நிலைமை இருக்கிறது. அங்கே

விவாதம்—தொடர்ச்சி

(திரு. வி. கோ. செல்லப்பா) [1987 மார்ச் 5

பெரும்பாலும் மீனவ மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், வாழ்க்கையிலே பிற்பட்ட நிலையிலே, தாழ்த்தப்பட்ட நிலையிலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்த மக்களை வளப்படுத்த ஆவன செய்ய வேண்டும். மேலும் மீனவ நண்பன் என்று எல்லோராலும் போற்றப்பட்டு கொண்டிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முக்கியமாக அந்த மீனவ மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க முன்வர வேண்டும். இந்த 3 கிராமங்களிலும் மிகவும் பின்தங்கிய மக்கள் வாழ்வதால் அவர்களுக்கிடையே பலவித போட்டி, பொறாமை காரணமாக சண்டை சச்சரவுகள் அடிக்கடி ஏற்படுகின்றன. அந்த இடத்தில் முன்பு ஓர் அவுட்—போஸ்ட் இருந்தது. இப்போது அதனை ஆற்றுக்கு வெளியே கொண்டு வந்துவிட்ட காரணத்தால் எப்போதும் அங்கு பதட்ட நிலை இருக்கிறது. முன்பு எந்த காரணத்திற்காக அதனை அங்கே வைத்திருந்தார்களோ அந்த நோக்கம் நிறைவேறுவதற்காக அவசியம் அங்கே அதனை மறுபடியும் ஏற்படுத்த வேண்டும். அதனை ஆற்றுக்கு வெளியே கொண்டு வந்து புதிய கட்டடம் அமைத்து அதில் இதனை ஏற்படுத்தி விட்டார்கள். இதனை நான் உடனடியாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தும் இதுவரை அது கவனிக்கப்படவில்லை, நிறைவேற்றப்படவில்லை. எனவே அந்தப் பகுதியில் உடனடியாக ஒரு அவுட் போலீஸ்-ஸ்டேஷன் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து. தாழாங்கொடாகுண்டு, உப்பளவாடி போன்ற பகுதிக்கு தண்ணீரில், போட்டிலேதான் செல்ல வேண்டும். அங்கு வாழ்கிற மக்களுக்கு ஒரு துன்பம், நோய் என்றால், உடல் நலம் சரியில்லை என்றால் உடனடியாக சிகிச்சை செய்ய முடியவில்லை, அவர்கள் போட்டிலே வந்து சிகிச்சை பெற வேண்டிய நிலை இருக்கிறது, அவர்களுக்காக வேண்டி தரைப் பாலம் கட்டி கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும்.

அடுத்து, எங்கள் கடலூரில் ஒரு ரெயில் நிலையம் இருக்கிறது. கடலூர் என்பது பெரிய டவுன், மாவட்ட தலைநகராகவும் கடலூர் இருந்து வருகிறது. அந்தப் பகுதியிலே ஒரு ரயில்வே கேட் இருக்கிறது. அந்த கேட் டவுனின் நடுப்பகுதியில் இருப்பதாலும், சாயங்காலம் 5 மணி முதல் 8 மணி வரை பல ரெயில்கள் வந்து போவதாலும் டிராபிக்கை பொறுத்த வரையில் கடுமையான நிலைமை ஏற்பட்டு மக்களுக்கு பெரிதும் இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே, அங்கே ஒரு ஓவர் பிரிட்ஜை கட்டித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். புதுக்குப்பம் பகுதியில் சந்திகுப்பம் என்ற இடத்தில் ஒரு ஆற்று ஓடை இருக்கிறது. அதில் உள்ள தண்ணீரில் இறங்கித் தான் செல்ல வேண்டும். தொடை அளவிற்குத் தண்ணீர் இருக்கும், இப்படி இருந்தால் அதில் தாய்மார்கள் எப்படிச் செல்ல முடியும்? எனவே, அங்கே ஒரு தரைப்பாலம் கட்டித் தரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.



விவாதம்—தொடர்ச்சி

[திரு. வி.கோ. செல்லப்பா]

1987 மார்ச் 5]

தென்னாற்காடு மாவட்டத்தில் எலக்ட்ரிசிட்டியைப் பொறுத்தவரையில் இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. சவுத் என்றும், நார்த் என்றும் இருக்கின்றன, சவுத் பிரிவு என்பது கடலூரைத் தலைமையிடமாகக் கொண்டது. அந்த எலக்ட்ரிசிட்டி போர்டு இன்னும் விழுப்புரத்தில்தான் இருக்கிறது. இப்படி இருப்பதால் எந்த இலட்சியத்திற்காக அது மாற்றப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை. அந்தப் பகுதியில் உள்ளவர்கள் பயன் பெற வேண்டும் என்பதற்காகத்தான் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, கடலூரைத் தலைமையிடமாகக் கொண்ட சவுத் பிரிவை எங்கள் கடலூருக்கு மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடலூர் ஓ.டி. என்று இருக்கிறது. அங்கே ஒரு மருத்துவமனை இருக்கிறது. ஆனால் அந்த மருத்துவமனையிலே டாக்டர்கள் இல்லை. பத்தாண்டுகளாக இந்த அவலநிலை இருக்கிறது. ஆகவே, அங்கே டாக்டர்களை அமர்த்தித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கடலூர் பஸ் நிலையத்தில் கடிகாரம்கூட இல்லை. நல்ல ஒரு கடிகாரம் பொருத்தப்படாத நிலை இருக்கிறது. ஆகவே, அந்த பஸ்ஸை எடுத்துச் செல்கின்ற டிரைவர்கள், கண்டக்டர்களுக்கும் மற்றவர்களுக்கும் சண்டை சச்சரவுகள் ஏற்படுவதற்கு வழிவகை ஏற்படுகிறது. இதைக்கூட சட்டமன்றத்தில் சொல்லிக் கேட்கக்கூடிய அவல நிலையில் எங்கள் நகரசபையின் நிதி நிலைமை சரி இல்லாமல் இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடலூர் தொகுதியைப் பொறுத்தவரையில் அங்கே ஹைவேஸ் ரோடுகளைத் தவிர மற்ற ரோடுகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. தாய்மார்கள் பிரசவத்திற்காகக் கடைசி நிமிஷத்திலே ஆஸ்பத்திரிக்கு வர வேண்டும் என்று சைக்கிள் ரிக்ஷாக்களில் அந்த ரோடுகள் வழியே வந்தால் ஆஸ்பத்திரிக்கு வருவதற்குள்ளாகவே அவர்களுடைய பிரசவத்தை முடித்துக் கொள்ளலாம் என்ற அளவிற்கு அவல நிலைமையில் மாவட்டத்தின் தலைநகரம் இருக்கிறது. எனவே அவற்றை சீர் செய்து தரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் மாவட்ட மருத்துவமனை இருக்கிறது. அந்த மருத்துவமனையிலே குழந்தைகளுக்கு என்று தனிப் பிரிவு இல்லை. அந்தப் பிரிவை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் நமது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் இங்கே இருக்கின்ற காரணத்தினால் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவந்து குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த 21 ஆம் தேதி எங்களுடைய

விவாதம்—தொடர்ச்சி



கடலூர் நகரத்திற்கு அவர்கள் வருகை தந்தார்கள். நல்ல நடைப் பராமரிப்புத் துறையின் சார்பாக அந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்கான அழைப்பிதழில் சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் இடம்பெறாமல் இருந்தது. அது ஏன் என்று அழைப்பிதழ் கொடுக்க வந்த ராமன் என்ற டாக்டரைக் கேட்ட நேரத்தில், அமைச்சர்தான் போட வேண்டாம் என்று சொன்னார் என்ற தகவலைச் சொன்னார்கள். ஆனால் அமைச்சரிடத்தில் என்னுடைய சகோதரர்கள் சொன்ன நேரத்தில் நான் ஒன்றும் அப்படிச் சொல்லவில்லை என்று தெரிவித்து அந்தக் கூட்டத்திலே வருத்தம் தெரிவித்து விட்டார்கள். ஆனால் இதுபோன்ற அதிகாரிகளை தெரிந்து கொண்டு அதற்குரிய நடவடிக்கை எடுத்தால்தான் அமைச்சர்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இடையே பெரிய போராட்டத்தை உருவாக்குகின்ற அதுபோன்ற நடவடிக்கைகளைத் தடுக்க முடியும். எனவே இதுபோன்ற நிர்வாகிகளைப்பற்றி உஷாராக இருந்து கண்டித்தாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அவர் இப்பொழுது பணியிலே இல்லை.

திரு. வி. கோ. செல்லப்பா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுத்ததைச் சொல்லிய நேரத்தில் நான் பெருமையோடு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் சொல்ல வந்ததும் அமைச்சரவர்கள் தவறு செய்தார்கள் என்று சொல்லவில்லை. நாங்கள் விளக்கிவிட்டோம். அமைச்சர் மீது விசாரணையின்றி அந்த அதிகாரி போட்டார்கள் என்பதை மாமன்றத்திற்குத் தெரிவித்து அவர் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறேன் என்று சொன்னதற்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

(இரவு 8-10)

திரு. க. இரா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக ஆளுநர் அவர்கள் வாசித்தளித்த அறிக்கைக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்ற வகையில் கருத்துத் தெரிவிக்க எனக்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் 3, 4 தினங்களாக மாண்புமிகு உறுப்பினர்கள் சிறப்பான முறையிலே பல்வேறு நிலைகளிலிருந்து கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் சொன்னதிலே பெரும்பகுதி இந்த ஆளுநர் உரையிலே என்ன



விவாதம்—தொடர்ச்சி



இருக்கிறது என்பதுதான். என்னைப் பொறுத்தவரையில் ஒரு கருத்தை இந்த மாமன்றத்தின் மூலமாகக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த ஆளுநர் உரையில் நெடுங்கால சமுதாயத்திற்கு வேண்டிய பல்வேறு சிறப்பான திட்டங்களை தமிழக அரசு ஆளுநர் மூலமாக அறிவித்திருக்கிறது என்பதைத் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் உரையிலே கூறப்பட்டிருக்கிற பல திட்டங்களில் முக்கியமானதாக கிராமப்புற வீட்டுவசதித் திட்டமும் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டமும் சிறப்பாக நடைபெற 425 கோடி ரூபாயை மத்திய அரசின் மூலமாக உலக வங்கியிடம் கோரியிருக்கிறார்கள். இதிலிருந்து இந்த அரசு கிராமப்புறமானாலும், நகர்ப்புறமானாலும் எந்த அளவுக்கு நாட்டு மக்கள் மீது அக்கறை கொண்டிருக்கிறது என்பதும், எவ்வளவு சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்துகிறது என்பதும் சிந்திக்கத்தக்கது; பாராட்டுக்குரியது; பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையில் மேலும் பல சிறப்பான அம்சங்களை இங்கே தந்திருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, பெரிதாக இருக்கின்ற மாவட்டங்களை, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு நிர்வாகச் சீர்திருத்தக் காரணத்தை முன்னிட்டு, இரண்டாகப் பிரித்து தனித் தனி மாவட்டமாக அமைப்பதன் மூலம், தமிழக அரசுக்கு செலவினம் கூடுவதாக இருந்தாலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும் மற்றுள்ள மாவட்ட அலுவலங்களிலும் நாட்டு மக்களுக்கு நன்மை மிக விரைவாகக் கிடைக்க வேண்டுமென்ற சீரிய அடிப்படையில் பிரித்து அமைப்பதை என்னால் பாராட்டாமல் இருக்க முடியாது.

அந்த அடிப்படையிலே இந்த ஆண்டில் வடாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்ட புதிய மாவட்டம் ஒன்றைத் தொடங்க இருக்கிறோம் என்று இந்த ஆளுநர் அறிக்கையிலே சொல்லியிருப்பதை பாராட்டாமல் இருக்க முடியாது.

அதைப்போன்று ஓய்வூதியம் பெறுவோர் குறைதீர்க்கும் பிரிவு ஒன்றை மாவட்ட அளவிலேயும் உருவாக்கி, அவர்களுக்கு இருக்கின்ற குறைகளை விரைவாகத் தீர்த்து வைக்கின்ற வகையிலும் அவர்களுக்கு விரைந்து சலுகைகள் கிடைக்கின்ற வகையிலும் மாவட்ட அளவிலே தனி அலுவலகத்தை ஏற்படுத்தி, சிறப்பாகச் செயல்பட செய்திருக்கின்ற காரியத்தையும் உண்மையிலேயே நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்தபடியாக, இந்த நாட்டுக்கு வறட்சி வருவதைக் கருத்தில் கொண்டு, வருமுன் காக்க வேண்டுமென்ற அடிப்படையில், 28 கோடி ரூபாயை முதலிலே தமிழக அரசு வழங்கி, அதன் மூலம் 8,625 ஆழ்க் குழாய்க் கிணறுகளை

தமிழ்நாடு முழுவதும் அமைத்து, மக்களுக்குக் குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்த்து வைக்க, தடடுப்பாடின்றி தண்ணீர் வழங்க, நாட்டு மக்கள் நலனைக் கருதி செய்திருக்கின்ற இந்த ஏற்பாட்டை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

அதைப்போன்றே சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக உடனடியாக 163 இலட்சம் ரூபாயை ஒதுக்கி, சிறப்பான நடவடிக்கைகளை எடுத்திருப்பதை நாம் பாராட்ட வேண்டும். அது மட்டுமல்லாமல் நிலத்தடி நீரைப் பெறுவதற்கு 15 கோடி ரூபாய் செலவில் 12 மில்லியன் கேலன் தண்ணீர் சென்னை மாநகருக்குக் கிடைக்கச் செய்திருக்கின்ற ஏற்பாட்டை யும் நாம் பாராட்ட வேண்டும்.

வறட்சி நிலையை எதிர்நோக்கி, பல வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற 2000 கோடி ரூபாய் செலவிலான ஒரு பெரியத் திட்டத்தைத் தீட்டி, அதற்கு மத்திய அரசின் அனுமதியைக் கோரியிருப்பதையும் நாம் பாராட்ட வேண்டும்.

அதைப்போன்றே சத்துணவு, சுகாதாரம், வீடு கட்டும் திட்டங்களுக்கு 800 கோடி ரூபாயை இந்த அரசு மத்திய அரசு மூலமாகக் கோரியிருக்கிறது. அதைப்போன்று பாசனத்தை நவீனமயமாக்குவதற்கு 400 கோடி ரூபாய்க்கானத் திட்டத்தைத் தீட்டியிருக்கிறது. அதைப்போன்று மாநகர குடிநீர், கழிவு நீர் வழிகளை மேம்படுத்துவதற்காக 140 கோடி ரூபாய்க்கான திட்டத்தையும் தீட்டியிருக்கிறது.

இதுபோன்று நெய்வேலி மூன்றாவது சுரங்கத் திட்டத்திற்கும், சேது சமுத்திரத் திட்டத்திற்கும், கடலூர் துறைமுக மேம்பாட்டுத் திட்டத்திற்கும் மத்திய அரசிடம் அதிக நிதி ஒதுக்கீடு கோரிப் பட்டுள்ளதை உண்மையிலேயே நாம் பாராட்ட வேண்டும். இதுபோன்று ஏழைத் தாய்மார்களுக்கும், ஏழைச் சிறார்களுக்கும் காலணி வழங்குகிற திட்டத்தைப் பற்றி பலரும் பல்வேறு விதமாக இங்கே பேசினார்கள். என்னைப் பொறுத்த வரையில் இது ஒரு சிறப்பான திட்டமாகும். ஏழை, எளிய குழந்தைகள் எல்லாம் பள்ளிக்குச் செல்கிறார்கள். சத்துணவுத் திட்டம் தந்ததற்குப் பிறகு எல்லா குழந்தைகளும் பள்ளிக்குச் செல்கின்றனர். அந்தக் குழந்தைகள் வெய்யிலில் நடந்து வருகிறபோது காலணி இல்லாமல் ஒதுங்கி வருகிற காட்சியினை நம்முடைய நாட்டிலே நாம் பார்த்திருக்கிறோம். அதேபோன்று ஏழைத் தாய்மார்களுக்கும் வழங்குவதாகச் சொல்லியிருக் கிறார்கள்.

ஆளும் கட்சியிலே இருப்பவர்கள் ஏதோ கொள்ளை அடிப்பதற்காக இந்தத் திட்டத்தைப் போட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்கிறவர்கள் எந்த நோக்கத்தில் இருந்துகொண்டு சொல்கிறார்கள் என்பதை நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இதுபோன்ற ஒரு சிறப்பான திட்டத்தை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.



அதுபோல் இந்த மாநிலத்தில் சர்க்கரை ஆலை அமைப்பது பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள் சென்ற ஆண்டு சொல்லி இருந்ததைப் போல இந்த ஆண்டும் மத்திய அரசினிடத்தில் பல்வேறு சர்க்கரை ஆலைகளுக்கான அனுமதி கேட்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். தர்மபுரி மாவட்டத்தில் இரண்டு சர்க்கரை ஆலைகள் வேண்டுமென்று நாங்கள் கேட்டிருந்தோம். அந்த அடிப்படையில் தர்மபுரி மாவட்டத்தில் இரண்டு சர்க்கரை ஆலைகள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் மூலமாக அரசை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்ற மாதம் தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் தர்மபுரி மாவட்டத்திற்கு சுற்றுப்பயணம் வந்தபோது அண்ணா போக்குவரத்துக் கழகம் என்று ஒன்றாக இருந்ததை இரண்டாகப் பிரித்து தர்மபுரி மாவட்டத்திற்கு என்று ஒரு கழகத்தைத் தனியாக ஏற்படுத்தித் தந்ததோடு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை ஈன்று தந்த அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகம் என்று அதற்குப் பெயர் வைக்கவேண்டுமென்று தர்மபுரி மாவட்டத்து மக்களெல்லாம் வைத்த கோரிக்கையையும் புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக் கொண்டு அந்தப் பெயரை அந்த மாவட்டத்தில் இயங்கக்கூடிய போக்குவரத்துக் கழகத்திற்கு வழங்கியதற்காக இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆனால் எங்களுடைய மாவட்டத்தின் போக்குவரத்துக் கழகத்திற்கு அன்னை சத்தியாவின் பெயரை வைத்தது குறித்து குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்—பேசத் தெரியாதவர்கள்—அன்னை சத்தியா பெயரில் போக்கு வரத்துக் கழகம் வைக்சலாமா என்று துண்டுப் பிரசுரம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களைப் பார்த்துக் கேட்கிறேன். கலைஞர் கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது அஞ்சுகம் பாசிப்பயறு என்றெல்லாம் அவர்களுடைய குடும்பத்தினரின் பெயரை வைத்து விளம்பரப்படுத்தியிருக் கிறார்கள். இந்த நாட்டுக்கு புரட்சித் தலைவரை ஈன்று தந்த, ஏழை எளியவர்களுடைய தெய்வத்தை ஈன்று தந்த அந்த தாயினுடைய பெயரை போக்குவரத்துக் கழகத்திற்கு வைப்பதில் என்ன தவறு இருக்கிறது என்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் இந்த நாட்டு மக்களாகிய நாங்கள் எல்லாம் வற்புறுத்திக் கேட்டபோதும் அவர்கள் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. முடியாது என்று சொன்னார்கள். தர்மபுரி மாவட்டத்தின் பல இலட்சக் கணக்கான மக்கள் அந்தப் பெயரைத்தான் வைக்கவேண்டும் என்று மிக வற்புறுத்திக் கேட்ட பிறகுதான் அவர்கள் அதற்கு இசைவு தந்தார்கள். உங்களுடைய தலைவர் கலைஞர் அப்படித் தான் வைத்தார்களா? அவர்கள் எப்படி வைத்திருந்தார்கள் என்பது நாடறிந்த உண்மையாகும்.

(திரு. க. இரா. சின்னராசு) [1987 மார்ச் 5

அதேபோல் தமிழகத்தில் கிடைக்கிற கச்சா எண்ணெய்யை சுத்திகரிப்பதற்குரிய ஆலையைத் தமிழகத்தில் நிறுவவேண்டும் என்று மத்திய அரசை நமது அரசு கேட்டிருப்பது, அதாவது 600 கோடி ரூபாய் செலவில் அந்த ஆலையை நிறுவ வேண்டுமென்று கேட்டிருப்பதைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. அந்த அளவுக்கு புரட்சித் தலைவர் ஆட்சி சிறப்பான திட்டங்களை ஆளுநர் உரையின் மூலமாக நாட்டுக்குத் தந்திருக்கிறார்கள். கிராமத்தில் இருக்கின்ற தாய்மார்களுக்கும், இளம்சிறார்களுக்கும் சிறப்பான திட்டத்தைத் தந்து அதோடு கிராமத்தில் இருக்கின்ற தாய்மார்களுக்கு, உழவுத் தொழில் செய்கிற பெண்களுக்கு உழவுத்தொழில் நுட்ப உத்திகளைக் கற்றுக் கொடுக்கும் புதிய திட்டத்தினை இதன் மூலமாக அறிவித்திருப்பதை நாம் பாராட்டியாகவேண்டும். அதுபோல பல்வேறு அம்சங்களை இந்த ஆளுநர் உரையிலே தந்திருக்கிறார்கள். அவைகளையெல்லாம் பாராட்டாமல் இங்கே பேசியவர்கள் என்ன இருக்கிறது என்ன இருக்கிறது என்று கேட்கிறார்களே தவிர, இருப்பதை நல்ல மனத்தோடு சொல்ல மறுக்கிறார்கள் என்பதுதான் இங்கே நாம் காண்பது.

(இரவு 6-20)

குறிப்பாக சாராயக் கடையும், கள்ளுக் கடையும் புரட்சித் தலைவர் அவர்கள் மூடிவிட்டு அதிலே பணியாற்றிக் கொண்டிருந்த மரமேறும் தொழிலாளர்களுக்கு 2 ஆயிரம் ரூபாய் நிதி உதவி தந்து இருப்பதை பாராட்டாமல் இருக்க முடியாது. அதோடு சாராயக் கடைகளை மூடியாக வேண்டும் என்று இந்த அவையிலேயே சொன்னோம். உடனே புரட்சித் தலைவர் அவர்கள் ஜனவரி 1 ஆம் தேதியிலிருந்து அதை நிறுத்தியிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு இந்த மன்றத்திலே என்ன பேசுகிறார்கள். கள்ளச் சாராயம் ஆறாக ஓடுகிறது, ஆறாக ஓடுகிறது என்று பேசுகிறார்கள். கள்ளச் சாராயம் எங்கே ஆறாக ஓடுகிறது. தண்ணீர் ஓடுகிற ஆற்றிலேயே தண்ணீர் கிடையாது. ஆனால் பெரும்பாலான காங்கிரஸ் கட்சியினைச் சார்ந்த நண்பர்கள் கள்ளச் சாராயம் ஆறாக ஓடுகிறது என்றுதான் பேசுகிறார்கள். நான் கேட்கிறேன், எந்த ஆட்சியில் கள்ளச் சாராயம் இல்லை. தி.மு.க. ஆட்சியில் கிடையாதா? காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கிடையாதா? அல்லது நாம் பழையபடி சாராயக் கடைகளை விட்டு இருந்தாலும் கூட கள்ளச் சாராயம் காய்ச்சுவதை காய்ச்சிக் கொண்டே தான் இருக்கிறார்கள். ஆனால் அதை ஏதோ பெரியதாக இந்த அரசு கவனிக்காமல் இருப்பதைப் போல் சொல்கிறார்கள். அன்றாடம் காவல் துறையினர் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். வழக்குகள் நடந்துக் கொண்டிருக்கின்றன. அதையும் மீறி செய்துக் கொண்டிருக்கிறார்கள். பிராந்தி கடைகளை விட்டு விட்டு சாராயக் கடைகளை மூடுவது சரியா என்று கேட்கிறார்கள். ஏன் அப்படி செய்தார்கள் என்பதை யோசித்துப் பார்க்க



1987 மார்ச் 5] [திரு. க. இரா. சின்னராசு]

வேண்டும். லைசென்ஸ் எடுத்து அருந்தலாம் என்று இருக்கிறதால், அதை பழகி விட்டவர்கள் லைசென்ஸ் வாங்கி அருந்தலாம். இல்லையென்றால் சாப்பிடுகிறவர்கள் வேறு மாநிலத்திற்கு சென்று சாப்பிடுகிற நிலையை மாற்ற வேண்டும் என்ற அந்த அடிப்படையிலேதான் இப்படிச் செய்யப்பட்டிருக்கிறது.

அடுத்து இந்த அரசு இதுவரைக்கும் செய்திருக்கிற நல்ல திட்டங்களை இதுவரைக்கும் பேசியவர்களில் அதை பாராட்டி யவர்கள் பலர் இருந்தாலும் இந்த அரசு போட்டிருக்கிற திட்டத்தில் இது சரியா இல்லையா அல்லது இப்படிச் செய்தால் சரியாக இருக்கும் என்று யாராவது சொல்வார்களா என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் ஒருவரும் அதைப் பற்றிச் சொல்லவில்லை. திட்டத்தையே குறை சொன்னார்கள். அதைப்போலவே தன்னிறைவுத் திட்டம் கொண்டு வந்தபோது இது நடக்குமா என்ன தன்னிறைவுத் திட்டம், எப்படி முடியும், எப்படி நடக்கும் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்கள் அதை எப்படி சரியாக செய்து வருகிறார்களோ அதைப்போலவே இந்த ஆளுநர் உரையிலே கொடுத்திருக்கும் அத்தனை திட்டங்களையும் சரியாக நடத்துவார்கள் என்பதில் ஐயமில்லை என்று சொல்லிக்கொண்டு என்னுடைய தொகுதி சம்பந்தமாக சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய மாவட்டத்திலே இருக்கிற, நீர்ப்பாசனத் துறை மூலமாக அரசு செய்ய வேண்டிய காரியங்கள் சிலவற்றை சொல்லி முடிக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

என்னுடைய கிருஷ்ணகிரி தொகுதியிலே தேன்கனிக் கோட்டை வட்டத்திலே தென்பெண்ணை ஆற்றின் மீது கேளவரப் பள்ளி என்ற அணைக்கட்டு ஒன்று இருக்கிறது. அணைக்கட்டுதான் இருக்கிறதே தவிர அதன் மூலம் ஈழம் ஆற்றிற்கு வர வேண்டிய தண்ணீர் வராமல்இருக்கிறது. ஆகவே அதை மாற்றி அமைத்து அந்தக் கால்வாயை சீரமைத்துத் தரவேண்டும் என்று இந்தநேரத் திலேகேட்டுக்கொள்கிறேன். அதேபோல என்னுடையதொகுதியில் நாச்சிக்குப்பம் என்ற பகுதியில் ஆற்றின் குறுக்கே ஒரு அணையைக் கட்ட மதிப்பீடு போட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதையும் இந்த நிதிநிலை அறிக்கையிலேயே சேர்த்து பணிகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல தேன்கனிக்கோட்டை வட்டத்தில் தொட்டல்லா அணைக்கட்டு ஒன்று கட்ட அரசு முடிவு செய்திருக்கிறது. அதையும் எடுத்துக் கொள்ளவேண்டும். அதேபோல தேன்கனிக் கோட்டை வட்டத்தில் சனத்குமார் நதியின் குறுக்கே ஒரு அணை கட்டுவதுபற்றி ஆய்விலேஇருக்கிறது. அந்த திட்டத்தையும் நடை முறைப்படுத்த வேண்டும். கடைசியாக என்னுடைய தொகுதியில் இரண்டு தலைநகரங்கள் இருக்கின்றன. ஒன்று தர்மபுரி, இரண்டாவது கிருஷ்ணகிரி, தர்மபுரியிலே அழகான பேருந்து நிலையத்தை அரசு கட்டியிருக்கிறது. ஆனால் கிருஷ்ணகிரி நகரத்திலே பேருந்து நிலையம் இல்லாமல்மக்கள் மிகவும் அவதிக்கு

உள்ளாகிறார்கள். அரசு அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து அந்த பஸ் நிலையம் கட்டித் தருவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. கே. முத்துவேல் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1987–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 27 ஆம் நாள் மரியாதைதக்குரிய ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நான் சார்ந்திருக்கிற அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சி சார்பாக ஒருசில கருத்துக் களை முன்வைக்க விழைகிறேன்.

சுமார் 200 கோடி ரூபாய் அளவிற்கு நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை என்று கடந்த 1–1–1987 ஆம் நாள் முதல் கள், சாராயக் கடைகளை தமிழ்நாட்டில் மூடிய தமிழக அரசையும், தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அதேசமயம் கள் இறக்குவோர் சுமார் 30,000 பேருக்கு அவர்கள் வேலை வாய்ப்பினை இழக்கும் காரணத்தால், கஷ்டப்படுவார்கள் என்பதை உணர்ந்து ரொக்க உதவியாக 2,000 ரூபாய் அளிக்க அரசு அறிவித்திருக்கிறது. அதையும் நான் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் உள்ள சோம சுந்தரம் நூற்பாலையை 1986 ஆகஸ்ட் திங்களில் மாநில அரசு அரசுடமையாக்கியது. அதற்காக இந்த அரசுக்கு என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல கோயம்புத்தூர், மதுரை போன்ற மாவட்டங்களில் மூடிக்கிடக் கின்ற ஆலைகளை திறக்க அதில் பணியாற்றுகின்ற தொழிலாளர் களையும், நிர்வாகத்தினரையும் அழைத்துப் பேசி இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்கே பட்டினியால் வாடிக் கொண்டிருக்கிற தொழிலாளர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கமுதி தாலுகா, அச்சன்குளம் கிராமத்தில் இராமநாதபுர மாவட்ட கூட்டுறவு நூற்பாலை ஒன்று 12,500 கதிர்களுடன் நல்ல முறையில் இயங்கிக்கொண்டிருக்கிறது. அந்த நூற்பாலையில் மேலும் 12,500 கதிர்களை அமைக்க கட்டிட வசதியும் மற்ற வசதிகளும் இருப்பதை நானே நேரில் சென்று பார்த்தேன். ஆகவே அரசு உடனடியாக மேலும் 12,500 கதிர்களை அந்த நூற்பாலையில் நிறுவி, அதற்கான கூடுதல் தொழிலாளர்களை பணியமர்த்தி, அந்தப் பின்தங்கிய பகுதியை முன்னேற்றம் அடைய செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது மாவட்டம் ஒன்றுக்கு ஒரு தொழிற்சாலை வைக்க வேண்டுமென்று மத்திய அரசின் கொள்கை இருக்கிறது. அதனைத் தளர்த்தி எங்களுடைய பின்தங்கிய இராமநாதபுரம்மாவட்டத்தில் வட்டம் ஒன்றுக்கு ஒரு தொழிற்சாலை என்ற வகையில் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



கூட்டுறவு கடன் வட்டி, அபராத வட்டி, காலம் கடந்த நிலுவைகள் சுமார் 120 கோடி ரூபாயை அரசு ரத்து செய்திருப்பதை நான் பாராட்டுகிறேன். 1987 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 28-ம் நாளுக்குள் மீதி இருக்கிற அசலில் பாதியைக் கட்ட வேண்டுமென்ற காலக்கெடுவை இன்னும் ஓராண்டிற்கு நீடித்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். காரணம், இப்போது தமிழகம் முழுவதும் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக, இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் முத்துராம லிங்கம் மாவட்டம், பெருந்தலைவர் காமராஜர் மாவட்டம் போன்ற மாவட்டங்கள் மிகவும் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அங்கே இருக்கிற மக்கள் எல்லாம் பிழைப்புத் தேடி அண்டை மாநிலங்களுக்கு பல்லாயிரக் கணக்கில் சென்றுவிட்டார்கள் என்பதை ஒருசில நாட்களுக்கு முன்பு பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். அந்த வகையில் அங்கேயிருக்கிற மக்கள் எல்லாம் பெரிதும் துன்பத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். உண்ண உணவு கிடையாது. குடிப்பதற்கு தண்ணீர் கிடையாது. கால்நடைகளுக்குத் தீவனம் கிடையாதுஎன்ற சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக முதுகுளத்தூர், கமுதி தாலுக்காக்கள் மிகவும் கடுமையாக வறட்சியால் பாதிக்கப் பட்டிருக்கின்றன. அந்தப் பகுதிகளை உடனடியாக அரசு பஞ்சப்பிரதேசமாக அறிவிக்க வேண்டுமென்று மெத்தப் பணிவன் போடு கேட்டுக்கொள்கிறேன். அங்கே இன்னும் ஒருசில மாதங் களில் பட்டினிச் சாவுகள் ஏற்படக்கூடிய அபாய நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே எங்களுடைய தொகுதியில் அரசே தலையிட்டு கஞ்சித் தொட்டிகளைத் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குடிப்பதற்கு லாரிகளில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தால் தான் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க முடியும். அதனை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, அந்தப் பகுதிகளில் கால்நடைகளையெல்லாம் விவசாயிகள் விற்றுவிட்டு வேறு இடங்களுக்குப்போய்விட்டார்கள். அங்கே இருக்கும் ஒருசில கால்நடைகளுக்கும் இப்போது தீவனம் கிடையாது. ஆகவே வெளி மாநிலங்களிலிருந்து தீவனங்களைக் கொண்டுவந்து மானியவிலையில் அரசு விவசாயிகளுக்குக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(இரவு 6-30)

அதோடு மட்டுமல்லாமல், ஆதிதிராவிட மக்களுக்கும், பின் தங்கிய மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் இந்தத் துறையின் மூலமாக நடத்தப்படுகின்ற மாணவர்கள் விடுதியில் உள்ள மாணவர்களுக்கு உணவுக் கட்டணத்தை உயர்த்திக் கொடுத்திருக்கிறது இந்த அரசு. அதற்காக இந்த அரசை நான்

பாராட்டுகிறேன். ஆனால் அங்கே பயின்றுகொண்டு இருக்கின்ற மாணவர்களுடைய எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கிறது. அந்த விடுதிகள் ஆரம்பிக்கப்பட்டபோது இருந்த எண்ணிக்கை தான் தற்போதும் இருக்கிறது. வளர்ந்துவரும் ஜனத்தொகையின் எண்ணிக்கைக்கு ஏற்ப அந்த மாணவர்களுடைய எண்ணிக்கையை கூட்டித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(இரவு 6.30)

அதோடு மட்டுமல்லாமல், பள்ளிச் செல்லுகின்ற சிறார்களுக்கு பாடபுத்தகங்களும், சீருடைகளும் வழங்குகின்ற தமிழக அரசு, வரும் 1987–88 ஆம் ஆண்டு முதல் அங்கே உள்ள குழந்தைகளுக்கும், ஏழை எளிய தாய்மார்களுக்கும் காலணி கொடுக்கும் திட்டத்தை அறிவித்திருப்பது வரவேற்கத் தக்க திட்டமாகும். இந்தத் திட்டத்தின் மூலம் ஏழை எளிய, வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள—தோல் தொழிலில் ஈடுபட்டு காலணிகளைத் தைத்துக்கொண்டிருக்கிற கூட்டுறவுச் சங்கங்களுக்கு புத்துயிர் அளிப்பதோடு— அதிலே ஈடுபட்டு இருக்கிற ஏழைத் தோல் தொழிலாளர்கள பயன் அடைவதற்கான வாய்ப்பிருக்கிறது. எனவே அந்தத் திட்டத்தை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து கமுதியை மையமாகக்கொண்டு, நகர பேருந்து விடப்படும் என்று சுமார் 1½ ஆண்டுகளுக்கு முன்பே இந்த அரசு அறிவித்திருந்தும், இன்னும் கமுதியை மையமாக வைத்து, நகரப் பேருந்து விடவில்லை. என்னுடைய தொகுதி மிகவும் பின்தங்கிய, வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்ற மக்கள் நிறைந்த பகுதி. இன்னும் அங்கே நகரப் பேருந்து விடாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. தற்சமயம் நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் போக்குவரத்துக் கழகங்கள் எல்லாம் மிகவும் சீரோடும் சிறப்போடும் செயல்பட்டுக் கொண்டிருக்கிற இந்த நல்லநேரத்தில், ஒருசில பகுதிகள் புறக்கணிக்கப்படுகின்றனவா அல்லது இதைப்பற்றி அரசுக்கு உரியவர்கள் எடுத்து கூறாமல் இருக்கிறார்களா, என்பதை அறிய விரும்புவதோடு, அந்தப் பகுதியிலே நகரப்பேருந்துகளை உடனடியாக விட வேண்டுமாய் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அங்கேயிருக்கின்ற நாராயண கால்வாய் திட்டம், கிருதமால் கால்வாய்த் திட்டம், மற்றும் ரெகுநாத கால்வாய்த் திட்டம் போன்ற திட்டங்களை எல்லாம் வருகின்ற வறட்சி நிவாரணத் திட்டத்திலாவது எடுத்து, அதைச் செயல்படுத்த வேண்டுமாய் மிக்கப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அடுத்தது, மலட்டார் திட்டம். நீண்ட நெடுநாட்களாக ஆய்வில் இருக்கிறது என்று கூறிக்கொண்டு இருக்கிறார்கள். இந்தத் திட்டம் செயல்பட்டால், மழைக் காலங்களில் வருகின்ற தண்ணீரை சேமித்து வைத்து, அங்கே நிலத்தடி நீர் குறைந்து இருக்கிற நிலையைப் போக்குவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதால், இந்த ஆண்டாவது இந்த மலட்டார் திட்டத்தை எடுத்து செயல்படுத்தி, எங்களுடைய பின்தங்கியப் பகுதிகளை முன்னேற்றம் அடையச் செய்யவேண்டுமென நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



மேலும் என்னுடைய முதுகுளத்தூரில் ஒரு அரசு மருத்துவமனை மிகவும் பாழடைந்த கட்டிடத்தில் இருக்கிறது. அது இடியும் தருவாயில் உள்ளது. இதை உடனே மராமத்து செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கமுதி ஊராட்சி ஒன்றியம், கடலாடி ஊராட்சி ஒன்றியங்கள் எல்லாம் 60 பஞ்சாயத்துக்களை உள்ளடக்கிய பெரிய ஊராட்சி ஒன்றியங்களாக இருக்கின்றன. தற்போது 15, 20 ஊராட்சிகளைக் கொண்ட, ஊராட்சி ஒன்றியங்கள் எல்லாம் இருக்கும்போது, 60 ஊராட்சிமன்றங்களைக் கொண்ட, பெரிய ஊராட்சி ஒன்றியங்களாக அவைகள் இருப்பதால், வருகின்ற நிதியும் குறைவாக வருகிறது,—அவற்றை எல்லாம் இரண்டாகப் பிரித்து, அவைகளுக்கு அதிகமாக நிதியையும் உயர்த்தித்தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தற்சமயம் ஏற்பட்டு இருக்கிற வறட்சியின் காரணமாக ஒருசில மாவட்டங்களில் வறட்சி நிவாரணப் பணிகள் வேலைகள் தொடங்கிவிட்டதாக பத்திரிகைகள் வாயிலாக அறிகிறேன். என்னுடைய மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே இதுபற்றி கேட்கும்போது, ஊராட்சி ஒன்றியத்திலே உள்ள பொது நிதியை வைத்து இந்த வறட்சி நிவாரண வேலைகள் தொடங்கப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கிற ஊராட்சி ஒன்றியங்களிலே பொது நிதி சுத்தமாக கிடையாது. அங்கே சுமார் 100, 200 ரூபாய் இருக்கக் கூடிய ஊராட்சி ஒன்றியங்கள் தான் இருக்கின்றன. ஆகவேதான் அங்கே வறட்சி நிவாரண வேலைகள் தொடங்கப்படாமல், இருக்கின்றன. எனவே அரசு இதிலே அதிக கவனம் செலுத்தி பின்தங்கிய வறுமைக் கோட்டிற்கு கீழே மக்கள் வாழுகின்ற, மிகவும் ஏழ்மை நிலையில் இருக்கிற இராமநாதபுரம் மாவட்டத்தை முன்னேற்ற, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் அதிக நிதி உதவியைச் செய்து, உடனடியாக வறட்சி நிவாரண வேலைகளைச் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இங்கு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன், வணக்கம், ஜெய் ஹிந்த்.

**திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன் :** மாண்புமிகு சட்டப் பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்டுள்ள மேதகு ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவித்து என்னுடைய தாழ்மையான கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மேதகு ஆளுநர் உரையிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய சிறிய நல்ல பல திட்டங்களை எல்லாம் இங்கே கோடிட்டுக் காட்டி இருக்கிறார்கள். இந்த பாரத தேசத்துக்கு வழிகாட்டியாக அமைந்து பல்வேறு நாட்டு நலப் பணிகளை எல்லாம் செயல்படுத்துவதற்கு அந்த திட்டத்திலே குறிப்பிட்டு இருப்பதை நான் மனதார பாராட்டுகிறேன்; வரவேற்கிறேன்.

அதைப்போலவே இந்த உரையிலே நல்லதொரு திட்டம் ஏற்கனவே தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களால் இந்த நாட்டு மக்களுக்கு உறுதி கொடுத்ததைப் போல பூரண மது விலக்கை செயற்படுத்துகிற நல்லதொரு திட்டத்தை இந்த மாமன்றத்தில் இந்த உரையின் மூலமாக ஒரு நல்ல செய்தியாக இந்த நாட்டு மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு குறிப்பாக தாய் குலத்திற்கு மகிழ்ச்சி தரும் அளவுக்கு அறிவித்து இருப்பதற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன், வரவேற்கிறேன், பாராட்டு கிறேன்.

அதைப்போல சுமார் 400 கோடி ரூபாய் திட்டத்திலே நல்லதொரு சுகாதாரத்தோடு கூடிய புதிய சத்துணவுத் திட்டத்தை ஏழை தாய்மார்களுக்கும், வறுமையால் வாடுகின்ற அனைத்துச்சிறார்களுக்கும் இந்த உரையில் குறிப்பிட்டுஇருப்பதை வரவேற்கிறேன்.

அதைப்போலவே இன்னும் ஏழை சிறார்களுக்கும், தாய்மார்களுக்கும் காலணி வழங்கும் திட்டத்தை இருக்கிறார்கள். இந்த திட்டத்தை பலரும் பல கோணங்களில் விமர்சனம் செய்த போதிலும் தாய்உள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மக்களுக்கு எது தேவை என்பதை அறிந்த தலைவர் அவர்கள் அதை சிறப்போடு—எத்தனை பேர் எள்ளி நகையாடினாலும்—செயற்படுத்துவதற்கான ஒரு குறிப்பை இந்த மாமன்றத்தில்வைத்து இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதைப்போல மின்சாரம் இந்த நாட்டுக்கு அத்தியாவசிய மானதாக இருந்த போதிலும் நமது தமிழகத்தைப் பொறுத்த வரையில் மின் தட்டுப்பாடும், மின் திட்டங்கள் போதுமான அளவுக்கு இல்லாமலும் இருக்கிறது. அதைநீக்கும்பொருட்டு இந்த ஆண்டில் பல புதிய மின் விஸ்தரிப்பு திட்டங்கள் இந்த உரையில் சுட்டிக்காட்டியிருப்பதை நான் பாராட்டுகிறேன்; வரவேற்கிறேன். இப்படி நல்ல பல திட்டங்கள் எல்லாம் இதில் பார்க்கிறோம். அப்படிப்பட்ட திட்டங்களைக் கொடுத்த தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் புதிய பொருளாதாரம் படைத்து வருகிறார். நாட்டு மக்களுக்கு என்ன தேவையோ அவைகளை செய்து வருகிறார். ஆகவே நாம் எல்லாம் அவர்களுக்கு நன்றிக் கடன் பட்டு இருப்பவர்கள் என்பதை கூறிக் கொண்டு நான் எனது தொகுதி சம்பந்தமாக சில கோரிக்கை களை இந்த நேரத்தில் இந்த மாமன்றத்தில் இந்த அரசின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

முதலாவதாக சேதுசமுத்திர திட்டம். இன்று தமிழகத்திலே மிகப் பெரிய நல்ல திட்டம். இந்த நாட்டினுடைய நலன் கருதி, பாதுகாப்பு கருதி பல ஆண்டுகளாக மிகப் பெரிய அரசியல் தலைவர்களாலும் அதை செயற்படுத்த ஏற்றுக்கொண்ட திட்டம். இந்தத் திட்டத்தை மத்திய அரசு ஆனாலும் சரி, மாநில அரசு



ஆனாலும் சரி இரண்டும் கலந்து கொண்டு இந்த அவசியமான திட்டத்தை இந்த தேசத்தின் பாதுகாப்பு கருதி, பொருளாதார மேம்பாடு கருதி, போக்குவரத்து கருதி,விரைந்து செயற்படுத்து வதற்கு மத்திய மாநில அரசுகள் இரண்டும் இணைந்து நல்ல ஒரு ஆக்கபூர்வமான செயற்பாட்டை செயற்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இலங்கைப் பிரச்னை. இந்தப்பிரச்னையின் விளைவு இன்று வருமோ? நாளை வருமோ? என்று தெரியாத நிலையில் இருக்கிறது. இதில் தேசத்தின் பாதுகாப்பே அடங்கியிருக்கிறது. எனவே இராமேஸ்வரத்திலிருந்து கன்னியாகுமரிவரை அகல ரயில் பாதை போட்டு இரண்டையும் இணைக்க வேண்டும் என்ற ஒரு திட்டத்தை இந்த மாமன்றத்திலே வைக்க விரும்புகிறேன். அகல ரயில் பாதைத் திட்டம் இராமேஸ்வரத்திலிருந்து அருப்புக் கோட்டை, தூத்துக்குடி, திருச்செந்தூர், வள்ளியூர் வழியாக கன்னியாகுமரிக்கு செல்ல வேண்டும். அந்தத்திட்டம் குறைந்த பட்சம் இந்த கடற்கரைப் பகுதிகளை அகல ரயில் பாதை மூலம் இணைக்கும் திட்டமாக இருக்கவேண்டும். அந்தத் திட்டத்தை மத்திய அரசு செயற்படுத்தினாலும் மாநில அரசு அதற்கான முறையான திட்டத்தை மத்திய அரசுக்குக் கொடுத்து அதற்கு அங்கீகாரம் பெற்று செயற்படுத்த இரண்டு அரசுகளும் முனைப்போடு செயற்படவேண்டும் என்று இந்த நேரத்தில்வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் தெரு விளக்குகள் எல்லாம் இன்று உள்ளாட்சித் துறையின் கீழும், மின்சார இலாகாவின் கீழும் இருந்துகொண்டு அவர்களை கேட்டால் எங்களுக்குத் தெரியாது என்றும் இவர்களை கேட்டால் அவர்களை கேளுங்கள் எங்களுக்குத் தெரியாது என்றும் சொல்லிக்கொண்டு இரண்டு இலாக்காக்களும் பொறுப்புக்களை தட்டிக்கழிக்கிறார்கள். இந்த இரண்டு இலாக்காக்களையும் சரி செய்ய ஒரே ஒரு வழி இருக்கிறது.

இன்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தந்த இலவச மின்சாரத்தை சிறு விவசாயிகள் என்ற போர்வையில் சில நடுத்தர, பெரிய விவசாயிகளும் அதை அனுபவிக்கிறார்கள். அதைப் போல நாம் குடிசைகளுக்கு இலவச மின்சாரம் கொடுக்கிறோம். அதைப்போலவே பொதுமக்கள் பயன் படுத்துகிற தெரு விளக்குகளுக்கும் மின் கட்டணத்திலிருந்து விதி விலக்கு அளித்தால் இந்த தெரு விளக்குகள் எரிகிற திட்டம் சற்று உற்சாகமாக இருக்கும். அடுத்து அந்த திட்டத்தாலே சில பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து என்பதை தெரிவித்துக் சொள்கிறேன். இவ்வாறு தெரு விளக்குகளுக்கு மின் கட்டணத்தில் சலுகைகள் அளித்து கட்டணம் வசூலிக்காமல்

இருந்தால் உள்ளாட்சித் துறைக்கும் சரி, மின்சாரத் துறைக்கும் சரி மொத்தத்தில் பொறுப்பு போடாமல் இருந்தால் ஏழை எளிய மக்களுக்கும் பொது மக்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் அந்த திட்டத்தின் மூலம் தெரு விளக்குகள் எல்லாம் சரிவர எரிவதற்கு ஏதுவாக இருக்கும். கட்டணம் செலுத்துவது என்பது ஒரு குறைபாடாகவோ அல்லது ஒரு சிக்கலாகவோ இல்லாமல் தீர்த்து வைக்கப்படும் என்ற கருத்தை இந்த அரசு பரிசீலனைச் செய்யவேண்டும் என்று இந்த மாமன்றத்தின் வாயிலாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும் நான் தாழ்மையோடு வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

(இரவு 6-40)

அதே போன்று எங்களுடைய பகுதி இப்போது இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, நெல்லை மாவட்டம் என்றும், சிதம்பரனார் மாவட்டம் என்றும் பெயரிடப்பட்டுள்ளது. புதிய சிதம்பரனார் மாவட்டத்தில் மிகப்பெரிய பிரச்சினை, தண்ணீர் பிரச்சினை. விவசாயம் செய்ய முடியாமல் தண்ணீர் பிரச்சினை இருக்கிறது. முன்பு எங்கள் பகுதிக்கு ஒரு பெருமை இருந்தது. தாமிரபரணி நெல்லையில் ஆரம்பித்து, நெல்லையிலே முடிகிற நல்லதொரு வாய்ப்பைப் பெற்றிருந்தோம். புதிய மாவட்டம் தொடங்கப்பட்ட பிறகு, எங்கள் பகுதி ஏழை எளிய விவசாயி களுக்கு விவசாயத்திற்கு தண்ணீர் கிடைக்காமல், நிர்வாகத்திலே எப்படி அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பது என்று தெரியாமல் இரண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இருந்தும்கூட தண்ணீருக்கு மிகவும் சிரமப்பட வேண்டியுள்ளது. தாமிரபரணி ஆற்று நீர் பங்கீட்டினை சீரமைக்கும்பொருட்டு, ஒரு எக்சிகுடிவ் என்ஜினியரை, சிதம்பரனார் மாவட்டம், தூத்துக் குடியைத் தலைமையகமாகக் கொண்டு செயல்படுமாறு நடவடிக்கை எடுக்க இந்த அரசை அன்போடு வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

கடம்பாவூரில் 13 குளங்கள் இருக்கின்றன. இந்த 13 குளங் களுக்கும், இந்த ஆண்டு அணையிலே தண்ணீர் இருந்தும்கூட, தண்ணீர் விடுவதற்கு வாய்ப்பு இல்லாமல் சென்றுவிட்டது. சுமார் 15,000 ஏக்கர் நஞ்சை விவசாயிகளும், ஆயிரக்கணக்கான புஞ்சை விவசாயிகளும் இந்தத் தண்ணீரை நம்பிக்கொண்டிருக் கிறார்கள். தண்ணீர் வராத காரணத்தினால் இந்த ஆண்டு மிகப் பெரிய பஞ்சத்திற்கு அவர்கள் ஆளாகியிருக்கிறார்கள்.

எங்களுடைய மாவட்டம் பிரிக்கப்பட்ட காரணத்தால், சிதம்பரனார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், தாமிரபரணி ஆற்று நீரை பங்கிட்டுக் கொள்வதற்கு என்று தனியான ஒரு அமைப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதன் மூலமாக அந்தப் பிரச்சினையை தீர்க்க முடியும். ஒரு குழுவை அமைத்து. 30 ஆண்டுகளுக்கு முன்பாக



ஏற்பட்ட திட்டத்தை வகுத்துக் கொண்டு, நீண்ட நாள் தேவையை பூர்த்தி செய்தும், முக்கியமான குறைபாட்டை நீக்குவதற்கும் அரசு முன்வர வேண்டுமென்று அன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று எங்கள் பகுதியிலே வெள்ளம் வந்தாலும், தாமிரபரணியில் வெள்ளம் ஏற்பட்டாலும், ஆத்தூர், புன்னக்கால் பகுதி பாதிக்கப்படுகிறது. அந்த விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு சட்டமன்றத்தில் அறிவித்தபடி புன்னக்கால் பகுதியில் நல்லதொரு மேம்பாலம் சுமார் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இருந்தது. அந்த மேம்பாலத்தைக் கட்டி அந்தப் பகுதி வாழ் ஏழை மீனவர்களின் உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாமிரபரணியில் இரு பெரும் கரைகளையும் பலப்படுத்த வேண்டும். பலமுறை அங்கே வெள்ளம் ஏற்பட்டபோது அதன் இரு கரைகளும் உடைந்து பல உயிர்களையும், ஆயிரக்கணக்கான கால்நடைகளையும் இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

முக்காணிப் பகுதியில் ஆரம்பித்து கடலில் சங்கமம் ஆகும் அந்தத் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்ட வேண்டுமென்று வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியிலே மத்திய அரசால் அனுமதிக்கப்பட்ட டிட்கோ மூலம் செயல்படுத்தப்படுகிற டைட்டேனியம் தொழிற் சாலையை திருச்செந்தூரிலே காயல்பட்டினம் பகுதியிலே திறக்க வேண்டுமென்று வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன். அதற்கான இடம் ஆய்வு செய்யப்பட்டு, தேர்வு செய்யப்பட்டு விட்டது.

அடுத்து திருச்செந்தூர் கோ—ஆப்பரேடிவ் ஸ்பின்னிங் மில் நாசரத்தில் இயங்கிக்கொண்டு வருகிறது. அந்தக் கூட்டுறவு நூற்பாலையை விரிவாக்கும் திட்டம் குலசேகரப்பட்டினத்தில் அமைய ஏற்கனவே மத்திய அரசுக்கு மாநில அரசு மூலமாக பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அந்த விரிவாக்கத் திட்டத்தையும் குலசேகரப்பட்டினத்தில் அமைத்துத் தருமாறு இந்த மாமன்றத்தின் மூலமாக வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பரமக்குறிச்சி பகுதியிலே ஏழை எளிய நெசவாளர்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு ஒரு இண்டஸ்ட்ரியல் திட்டம் அரசினுடைய அனுமதிக்கு இப்போது சமர்ப்பிக்கப்பட்டிருக் கின்றது. அந்தத் திட்டத்தையும் விரைந்து செயல்படுத்தி, அந்தப் பகுதியில் வாழ்கின்ற ஏழை விவசாயிகளுக்கும், நெசவாளர்களுக்கும், நிரந்தரமான ஒரு வாழ்க்கைப் பிரச்சினையை தீர்க்கின்ற வகையில் நடவடிக்கை எடுக்குமாறு அன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்] [1987 மார்ச் 5

நெசவாளர்களுக்கு என்று இரண்டு ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவர்களுக்கான குடியிருப்புகளைக் கட்டுவதற்கான திட்டம் அரசினுடைய ஆய்வில் இருக்கிறது. அந்தத் திட்டத் தையும் விரைந்து செயல்படுத்தித் தருமாறு இந்த மாமன்றத்தின் மூலமாக வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அத்தோடு நல்லூரில் ரயில்வே நிலையம் ஒன்றிருந்தது, மத்திய அரசு அந்த ரயில்வே நிலையத்தை மூடிவிட்டார்கள். ஏற்கனவே பல திட்டங்களைச் செயல்படுத்தி வரும் மாநில அரசு இந்த நல்லதொரு ரயில்வே நிலையத்தையும் மீண்டும் திறப்பதற்கு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து ரயில்வே நிலையத்தை திறக்க வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோன்று இன்று தமிழகத்திலே, புரட்சித் தலைவர் அவர்களால் விளையாட்டு பயிற்சி கழகத்திற்கு திரு. சிவந்தி ஆதித்தன் அவர்கள் பொறுப்பு ஏற்ற பின்பு, அவருடைய சீரிய தலைமையிலே தமிழகம் பெருமைப்படக்கூடிய வெற்றிகளைப் பெற்று செயல்பட்டு வருவதை கண்கூடாகக் காண்கின்றோம். இந்தியா முழுவதற்கும் 'ஸ்போர்ட்ஸ் அத்தாரிட்டி ஆப் இந்தியா' என்ற அமைப்பு என்று இருப்பதைப்போல தமிழ்நாடுமுழுவதிலும் 'ஸ்போர்ட்ஸ் அத்தாரிட்டி ஆப் தமிழ்நாடு' என்று அனைத்து விளையாட்டு ஸ்தாபனங்களையும் ஒருங்கிணைத்து ஒரே குழுவாக அமைத்தால் நிர்வாகத்திற்கும் சிரமம் குறைவாக இருக்கும். எனவே அனைத்து அமைப்புகளையும் ஒன்றாக இணைத்து 'Sports Authority of Tamil Nadu' என்று ஒரே குடையின்கீழ் கொண்டு வந்தால், விளையாட்டுத் துறையில் தமிழகம் சாதனைகளைப் புரிந்து முன்னணியில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு விசேஷமான அதிகாரம் மற்றும் நிதியுதவி கொடுத்தால், தமிழ்நாடு விளையாட்டுத் துறையில் இந்தியாவிற்கு பெருமை சேர்க்கும் என்று இந்த நேரத்திலே இந்த மாமன்றத்தின் மூலமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்து திருக்கோயிலில் பணியாற்றுகின்றவர்களுக்கு புரட்சித் தலைவர் அவர்கள் நல்ல சம்பளம் கொடுத்திருக்கிறார்கள். சில மாற்று கருத்து இருந்த போதிலும் கூட, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களை கலந்து பேசி இந்த ஆலய பணியாளர்களுடைய எஞ்சியத் தேவைகளை முறையாகத் தீர்த்து வைக்கும்படி கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

திரு. ச. கோவிந்தசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்திலே, இந்த ஆளுநர் உரையிலே கள் சாராயக் கடைகளை மூடியதாக ஒரு நல்ல அறிவிப்பு வந்திருக்கிறது. அதே நேரத்தில் நீண்ட நாட்களாக



1987 மார்ச் 5] [திரு. ச. கோவிந்தசாமி]

விவசாயிகள், விவசாயக் கடன்களை கட்ட முடியாத நிலையில் இருந்ததற்கு, அவர்களுக்கு அபராத வட்டியை நீக்கி, அவர்களுக்கு திட்டத்தட்ட 125 கோடி ரூபாய் சலுகை அளித்திருப்பதை மனதாரப் பாராட்டுகிறேன். கிராமத்திலே உள்ள சிறார்களுக்கும் தாய்மார்களுக்கும் இலவச காலணி திட்டம் அறிவிக்கப் பட்டிருக்கிறது. அதையும் பாராட்டுகிறேன். அவர்களுக்கு மின் அபிவிருத்தித் திட்டங்கள் இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. அதனையும் வரவேற்கிறேன். பெருமளவில் வீடு கட்டும் திட்டம் என்ற திட்டத்தை அறிவித்திருக்கிறீர்கள். கடந்த ஆண்டு ஆளுநர் உரையிலே 30 இலட்சம் வீடுகள் கட்டுகின்ற திட்டம் என்று அறிவித்தீர்கள். அது இப்போது பெருமளவில் வீடுகட்டும் திட்டம் என்று இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. கிராமப்புறத்திலே, கூட்டுறவுத் துறையிலே அதற்கு வேண்டிய சாமான்களை உற்பத்தி செய்து அந்த திட்டத்தை நிறைவேற்றுவதாக அதிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது.

கள், சாராயக் கடைகளை மூடுவது என்பது ஒரு வரவேற்கத் தக்க திட்டம் என்று சொன்னாலும் கூட, இந்த மது விலக்கிலே விஸ்கி, பிராந்தி போன்றவைகளுக்கு அனுமதி கொடுத்திருப்பது எப்படி சரியாக இருக்கும் என்று புரியவில்லை. அதே நேரத்திலே இன்று கள், சாராயம் தமிழகத்திலே இருக்கின்றன என்ற உண்மையை நாம் உணர வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகள் எடுத்தால்தான் இந்த மது விலக்கு திட்டம் பூரணத்துவம் அடையும். எனவே மதுவிலக்கு திட்டத்தை நல்ல முறையிலே அமுல் நடத்துவதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்திலே கள்ளச்சாராயம் போன்றவைகளை ஒழித்து, ஏழை எளிய மக்களுக்காக இந்த நல்ல நோக்கத்தை நிறைவேற்றித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

(இரவு 6-50)

இந்த ஆண்டு கடுமையான வறட்சி இருக்கிறது. அதைப் பற்றி ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்று பல பகுதிகளிலே மக்கள் குடிதண்ணீருக்காக மிகவும் கஷ்டப்படுகின்ற ஒரு நிலை இருக்கின்றது. அந்த குடிதண்ணீர் கஷ்டத்தைப் போக்குவதற்காக 8600 ஆழ் துளைக் கிணறுகள் போடுவதாக ஆளுநர் உரையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், அந்தத் திட்டங்கள் வருகின்ற ஏப்ரல் மாதத்திற் குள்ளேயே போடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. நான் வருந்தத்தோடு சொல்லிக்கொள்வது என்னவென்று சொன்னால், கடந்த ஆண்டு வறட்சிக்காக ஒதுக்கப்பட்ட ஆழ்துளைக் கிணறுகளே இன்னும் போடப்படாமல் இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. ச. கோவிந்தசாமி] [1987 மார்ச் 5

அந்த மக்கள் குடிதண்ணீருக்காக படும் துன்பமானது, பல இடங்களிலே வேறு இடங்களுக்கு அவர்கள் குடிபெயர்ந்து போகின்ற நிலை இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த வறட்சியினாலே பெரும்பாலான விவசாயிகள் இன்று தங்களுடைய பாசனக் கிணறுகள் எல்லாம் வறண்டு போய் விவசாயம் செய்ய முடியாத நிலை இருக்கின்றது. எனவே, அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் அளிக்க அரசு முன்வரவேண்டும். குறிப்பாகச் சொல்லப்போனால் இன்று பெரும்பாலான விவசாயிகள் தங்களுடைய கால்நடைகளை எல்லாம் விற்கின்ற நிலைமை இருக்கின்றது. இந்த நேரத்தில் அவர்களுக்கு மானிய விலையிலே மாடுகளுக்கு தீவனம், வைக்கோல் போன்றவைகளை வழங்க அரசு முன்வரவேண்டும் என்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியிலே, பூலாம்பாடி—ராசிபுரம் குடிதண்ணீர்த் திட்டமானது ஆய்விலே இருக்கின்றது. அந்தத் திட்டத்திற்கு நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் சேலம் மாவட்டத்திற்கு வரும்போது கால்கோள் போடுவார்கள் என்று எல்லோரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் என்னவோ, அந்தத் திட்டம் கால்கோள் போடுவதிலிருந்து தவிர்க்கப்பட்டு இருக்கின்றது. எனவே, அந்தத் திட்டத்தை அரசு விரைவாக நிறுவுவதற்கு முன்வரவேண்டும். ஏனென்றால், அந்தப் பகுதியிலே கடுமையான குடிதண்ணீர்ப் பஞ்சம் இருக்கின்றது. 300 அடி ஆழம் ஆழ்துளைக் கிணறுகள் போட்டால் கூட, தண்ணீர் இல்லாத நிலை இருக்கின்றது. எனவே, அங்கே ஆழ்துளைக் கிணறுகள் போடுவதற்கான அந்தத் திட்டத்தை, பூலாம்பாடி—ராசிபுரம் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகளை ஆராய்ந்து செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், அந்தத் திட்டம் நிறைவேறும் வரை, விரைவாக—அதாவது, வழக்கமாக 20 அம்சத் திட்டத்தின் கீழும், வழக்கமான குடிதண்ணீர் குழாய்க் கிணறுகள் போடுகின்ற திட்டத்தின் கீழும் போடுகின்ற குழாய்க் கிணறுகள் இன்னும் போடப்படாமல் இருக்கின்றன. அவைகளையும் விரைந்து போடவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், இன்று பெரும்பாலான ஆரம்பப்பள்ளிக் கூடங்கள், தரை இல்லாமலும், ஜன்னல் இல்லாமலும், கூரை இல்லாமலும், கட்டிடங்கள் பழுதுபட்டும் மிக மோசமான நிலையில் இருக்கின்றன. அந்தப் பள்ளிக் கட்டிடங்கள் எல்லாம் ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பிலே இருக்கின்றன. ஆனால், ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதைச் செப்பனிடுவதற்கு, பழுது பார்ப்பதற்கு போதிய நிதி வசதி இல்லை. வழக்கமாக, அரசாங்கம் அந்த பழுதுபார்ப்புகளுக்கு நிதி ஒதுக்குவது வழக்கம். கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக அரசு நிதி ஒதுக்காத காரணத்தினால், அந்தப் பள்ளிகள் எல்லாம் இன்று மிகவும் மோசமான நிலையிலே இருந்து வருகின்றன என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



1987 மார்ச் 5] [திரு. ச. கோவிந்தசாமி]

அதே நேரத்தில், இன்று பல பள்ளிகளிலே பெரும்பாலான குழந்தைகள், இரண்டொரு ஆசிரியர்களை வைத்துக்கொண்டு, அதாவது 50, 60 குழந்தைகள், ஒரு ஆசிரியருக்கு என்ற விகிதத்தில் இருக்கிறது. இன்று குழந்தைகளுடைய விகிதம் அதிகம் ஆகிவிட்டது. ஆசிரியர்கள் மிகக் குறைவாகவே இருக்கிறார்கள். கடந்த 2, 3 ஆண்டுகளாகவே இந்த நிலை இருந்து வருகிறது. கடந்த ஆண்டே ஒரு குறிப்பிட்ட அளவு ஆசிரியர்களை நியமிப்பதாக அரசு அறிவித்தது. ஆனால் அந்த ஆசிரியர்களை இன்னும் தேவையான அளவுக்கு நியமிக்காவிட்டால், அந்தக் குழந்தைகளுடைய எதிர்காலம் பாதிக்கப்படும் என்பதை வருத்தத்தோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், இப்போது இருக்கின்ற ஆசிரியர்கள் தங்களுடைய பள்ளி நேரங்களிலே ஒழுங்காக குழந்தைகளுக்கு பாடங்களைப் போதிப்பதில்லை. அதற்கு அவர்கள் சரியான பொறுப்பாக நடந்துகொள்வதில்லை. அதாவது, இப்போது இருக்கின்ற நடைமுறையிலே ஆசிரியர்களைக் கட்டுப்படுத்தக் கூடிய ஒரு கட்டுப்பாடு இருப்பதாக நான் கருதவில்லை. எனவே, அதைப் பற்றி அரசு தீவிரமாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அந்த ஆரம்பக் கல்வியைப் பொறுத்து, ஒரு உயர்மட்டக் குழுவையே நியமித்து, ஆரம்பக் கல்வியை எப்படி நம் கட்டுப்பாட்டிலே கொண்டு வருவது என்ற ஒரு ஆய்வினை எடுத்து ஒரு சரியான வழிமுறைக்குக் கொண்டு வராவிட்டால், இப்போது இருக்கின்ற கல்வியினுடைய, ஆரம்பக் கல்வியினுடைய நிலை மிக, மிக மோசமாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்கிறேன். அதே நேரத்தில் உயர்நிலைப் பள்ளிக் கூடங்களுக்கு கட்டிடங்கள் இல்லாமல் பல வகுப்புகள் மரத்தினுடைய நிழலிலே நடைபெறுகிறது; வராண்டாவிலே நடைபெறுகிறது. நீண்ட நெடுநாட்களாக இதுபோன்ற நிலை இருந்து வருகிறது. அங்கெல்லாம் பள்ளிக் கட்டிடங்களைக் கட்டிக் கொடுப்பதற்கு அரசு உரிய ஏற்பாடுகளை செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அரிசன மக்களுக்கு, இன்னும் அவர்களுக்கு வீட்டு மனைப்பட்டா கொடுக்கப்படவில்லை. ஏழை மக்களுக்கு, சுதந்திரம் அடைந்து 40 ஆண்டுகள் ஆகியும்கூட அவர்கள் குடியிருக்கும் வீடுகளுக்கு பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது. இதற்கு ஒரு குறிப்பிட்ட கால அளவை நிர்ணயித்து அந்த கால அளவிற்குள் குடியிருக்கின்ற அனைத்து அரிஜனங்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் ஏழை மக்களுக்கு எல்லாம் அவர்கள் குடியிருக்கின்ற வீடுகளுக்கு பட்டா வழங்க வேண்டுமென்ற ஒரு நியதியை, ஒரு உறுதிப்பாட்டினை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். பல அரிசன மக்களுக்கு வீடு கட்ட ஒதுக்கப்பட்ட நிலமானது நீதிமன்றத்தினுடைய தடையின் காரணமாக நீண்ட நெடு நாட்களாக முடிவடையாமல் இருக்கிறது. இதையெல்லாம் அரசு விரைவாக முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்;

[திரு. ச. கோவிந்தசாமி] [1987 மார்ச் 5

ஐ.ஆர்.டி.பி. திட்டமான, இந்த வறுமைக்கோட்டிற்கு கீழே
இருக்கின்ற ஏழை மக்களுடைய வறுமையைப் போக்குவதற்கு
அவர்களுடைய வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக மத்திய
அரசு மாநில அரசுக்கு நிதி உதவிவழங்கி இருக்கிறது. ஆனால் ஒரு
வருடமாக இந்தத் திட்டத்தை ஆரம்பித்து இந்த மார்ச் 31, நிதி
ஆண்டோடு முடிவடைகிற இந்த நிலையிலே கூட இன்னும் பல
கடனாளிகளுக்கு கடன் வழங்கப்படாமல் இருக்கிறது. இதற்கு
மாநில அரசிடம் ஒரு கடனாளி விண்ணப்பித்து அவன் நடையாக
நடந்து அவன் பயன்படுவதைவிட அதிகமாக நஷ்டப்படுகிறான்
என்பதை அரசு கவனத்திலே எடுத்துக் கொண்டு உரிய
காலத்திற்குள் அந்தக் கடன்களை கொடுப்பதற்கு போதிய
நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்
கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

* திரு. மா. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையிலே
என்னுடைய கட்சியின் சார்பாக எனக்கு முன்னாலே பல
கருத்துக்களை எங்களுடைய நண்பர்கள் எடுத்துச் சொல்லி
யிருந்தாலும் நான் என்னுடைய கருத்தையும் அத்தோடு
இணைத்து முதலிலேயே என்னுடைய தொகுதியிலே உள்ள
இரண்டொரு பிரச்சினைகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

இங்கே தொழிற்சாலைகளைப்பற்றியும், செருப்பு அதாவது
காலணி வழங்குகின்ற திட்டத்தைப் பற்றியும் மத்திய அரசு
இந்த தமிழக அரசுக்கு என்னென்ன வகையில், எந்தெந்த
தொழிற்சாலைகளுக்கு அனுமதி தந்திருக்கிறது என்பதைப்
பற்றியும் இங்கே ஆளுநர் உரையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள்.
ஆனால், என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை
தமிழகத்திலே இரண்டாவதாக இருக்கின்ற உப்புவளம்
தூத்துக்குடிக்கு அடுத்தபடியாக, அதிலே ஒரு காலத்திலே 15
ஆண்டுகளுக்கு முன்னாலே மாருதி என்ற அமைப்பு-கன்ஸ்ட்ரக்ஷன்
கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய்க்கு தொழிற்சாலை ஆரம்பிப்
பதற்காக திட்டம் தீட்டி நமது அரசிடத்திலே தந்திருக்கிறார்கள்.
ஆனால் இன்றையதினம் 40 லட்சம் ரூபாயிலே தொழில்
தொடங்க வேண்டுமென்று அரசுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்
அவர்கள் விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். ஆனால் அந்த
உற்பத்தியைச் செய்வதற்கு வேண்டிய வளங்கள், அதாவது சதுப்பு
நிலங்கள் இருந்தும்கூட நமது அரசு வேளாண்மைத் துறையிலே
அதிகக் கவனம் செலுத்துவதாகச் சொல்லிக்கொண்டிருக்கிற இந்த
அரசு இன்னும் அதிககவனம் செலுத்தவேண்டும் முக்கியமாக உரம்
தயாரிக்கின்ற ஒரு பெரிய மூலதனமான உப்பள பகுதியாக நிறைய
இருக்கிறது. அதை பயன்படுத்தி அங்கேகூட தொழிற்சாலை
ஆரம்பிக்கலாம் என்ற என்னுடைய யோசனையை தெரிவித்துக்
கொள்கிறேன். அதோடு மட்டுமல்ல, இப்போது பல திட்டங்கள்
நடைமுறையிலே இருந்தாலும் இங்கே மத்திய அரசு நமக்கு
அனுமதி தருகிறார்களா, தரவில்லையா, என்பதைப்பற்றி இங்கே



1987 மார்ச் 5] [திரு. மா. மீனாட்சிசுந்தரம்]

வாதத்திலே ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற நேரத்திலே நாம்
என்னென்ன திட்டங்களை போட்டிருக்கிறோம் என்பதை இங்கே
பட்டியல் போட்டு அதில் எந்தெந்த திட்டங்களுக்கு அனுமதி
தந்திருக்கிறார்கள் என்ற விவரத்தை இந்த ஆளுநர் உரையிலே
நாம் பார்க்க முடியவில்லை.

ஆகவே நமது மண்ணுக்கு ஏற்ற முறையிலே தமிழக அரசு
திட்டங்களைத் தீட்டி செயல்பட வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

[இரவு 7.00]

பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கெல்லாம் தேர்தல்
நடந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மூலம் நிர்வாகம் நடை
பெற்றாலும் அவர்கள் எல்லாம் செயல்பட முடியாத ஒரு
சூழ்நிலை இருப்பது நம் எல்லோருக்கும் தெரியும். லைட்
போட வேண்டுமென்றாலும் கூட, ஒரு பம்ப் ரிப்பேர் செய்ய
வேண்டுமென்றாலும் கூட பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்
தலைவர்களுக்கும் உரிமை இல்லை.
ஆணையர்களுக்கும், தனி அதிகாரிகளுடைய ஆட்சியிலே போடப்பட்ட உத்தரவுகள்
நீக்கப்படாமல் இருப்பதன் காரணமாக பஞ்சாயத்து வேலைகள்
சரிவர நடைபெறவில்லை. பழைய உத்தரவுகளை எல்லாம்
நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

காவிரி நீர் பிரச்னை பற்றி இங்கே பல உறுப்பினர்கள்
பேசினார்கள். காவிரி நீர்ப் பிரச்னையிலே ஏதோ தி.மு.க.
சர்க்கார் இருந்தபோது தவறு செய்து விட்டதுபோலவும்,
என்னவோ நீங்கள்தான் காவிரி நீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு
காண்பது போலவும் பல உறுப்பினர்கள் பேசினார்கள். அது
ஒரு பக்கம் இருந்தாலும், காவிரி நீர் பிரச்னையிலே தமிழக
விவசாயி ஒருவர் டிரிப்யூனலிலே வழக்கு தொடர்ந்து இருக்
கிறார். கர்நாடகம், ஆந்திரா ஆகிய அரசுகள் எல்லாம்
தங்களுடைய பதிலை டிரிப்யூனலுக்கு தந்துவிட்டன. தமிழக
அரசு மட்டும், காலம் தாழ்த்தி, டிரிப்யூனலேயிருந்து பல
தடவை வாய்தா வாங்கிய பிறகுதான் தன்னுடைய பதிலை
அனுப்பி இருக்கிறது. இதிலேயிருந்து காவிரிப் பிரச்னையிலே
நம்முடைய அரசு எப்படி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது
என்பது தெள்ளத் தெளிவாகத் தெரியும்.

பல திட்டங்களை அறிவித்தது போல 'காலணி' வழங்கு
கின்ற திட்டத்திற்கு நல்ல வியாக்கியானம் அளித்திருக்கிறார்கள்.
காலணி தயாரிப்பதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து அதன்
மூலமாக பல ஆயிரக்கணக்கானவர்களுக்கு பயன் கிடைக்கும்
என்று வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். அதோடு மட்டு
மல்ல காலணி வழங்குவதை தி.மு.க. எதிர்ப்பது போன்ற ஒரு
மாயையும் இங்கே தோன்றும்படி ஆளும்கட்சி நண்பர்கள் சில
பேர் பேசினார்கள்.

தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி).

[திரு. மா. மீனாட்சிசுந்தரம்] [1987 மார்ச்

எந்தத் திட்டமாக இருந்தாலும் நல்ல முறையிலே நடக்க வேண்டுமென்ற எண்ணத்திலேதான் சொல்கிறேன். காலணி வழங்குவது குறித்து வேறுபட்ட கருத்து எங்களுக்கு இல்லை. எதிர்ப்புத் தெரிவிக்கவும் நாங்கள் தயாராக இல்லை. திட்டங்களை நிறைவேற்றுவதிலேதான் எங்களுக்குச் சந்தேகமே தோன்றுகிறது. முன்னாலே அளிக்கப்பட்ட பல திட்டங்கள் எல்லாம் செயல்பாட்டுக்கு வராமல் போனது போல இந்தத் திட்டமும் செயல்பாட்டுக்கு வராமல் போய்விடுமோ என்ற ஐயத்திலேதான் கருத்துச் சொல்கிறோமே தவிர செருப்பு வழங்குவதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை, அதை எதிர்க்கவும் இல்லை.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்தப்பட வேண்டும். கூட்டுறவு சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தாததால் மத்திய அரசின் உதவியாகக் கிடைத்திருக்கக்கூடிய ரூ. 50 கோடியை அவர்கள் திரும்ப எடுத்துக் கொண்டுவிட்டார்கள். இந்த அரசினுடைய செயல்பாட்டு நிலைமையை இதிலேயிருந்தே தெரிந்து கொள்ளலாம். அந்தப் பணத்தை கூட்டுறவு சொசைட்டி இல்லாததால் தரமுடியாது என்று மத்திய அரசு சொல்லிவிட்டது. ஒதுக்கக்கூடிய பணத்தை சரிவர செலவு செய்யாத நிலையும் பல இடங்களில் இருக்கிறது.

கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்டம் என்ற ஒரு திட்டம் இருக்கிறது. இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே மத்திய அரசு அதற்கு ஒதுக்கிய ரூ. 1 கோடியை செலவு செய்யாமல் நமது மாநில அரசு சரண்டர் செய்திருக்கிறது. பல திட்டங்களுக்கு மத்திய அரசோடு விவாதித்து உதவி பெறுவது ஒரு பக்கம் இருக்கட்டும், ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்ற பணத்தை ஒழுங்காகச் செலவு செய்யாத ஒரு அரசாக இந்த மாநில அரசு இருக்கிறது.

இன்னொரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்த போது இருந்த பட்ஜெட் வருமானம் இப்பொழுது இருப்பது போல் கிடையாது. கழக ஆட்சிக் காலத்தை விட இப்போது 3, 3-1/2 மடங்கு அதிக வருமானம் வந்துகொண்டிருக்கிறது.

அப்போது போட்ட பாலங்கள் எத்தனை? இப்போது எவ்வளவு? அப்போது போட்ட ரோடுகள் எத்தனை? இப்போது இப்போது எத்தனை கிலோ மீட்டர் அளவுக்கு ரோடு போட்டிருக்கிறார்கள்? இப்போது எத்தனை ரோடுகள் போட்டிருக்கிறார்கள்? என்ற புள்ளிவிவரங்கள் எல்லாம் எங்களைவிட உங்களுக்கே நன்றாகத் தெரியும், நாங்கள் போட்ட திட்டங்களைப் பார்த்தாலேயே உங்கள் மனசாட்சிக்கு தெரியும். ஆனால் நீங்கள் திட்டமிடுவதை சொல்ல வேண்டுமென்றால் அவையெல்லாம் வெறும் தற்காலிகமான திட்டங்கள். ஒரு நிரந்தரமான திட்டம் என்று ஏதுமில்லை.



தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி).

1987 மார்ச் 5] [திரு. மா. மீனாட்சிசுந்தரம்]

நிரந்தரமான திட்டம் உண்டா என்றால் ஒன்றும் கிடையாது. எதோ இன்றைக்கு என்ன தேவையோ அதைச் செய்கிறீர்கள். ஏதோ பொழுது போக வேண்டும். ஓட்டு வாங்க என்ன பிரச்சினையோ அதைச் செய்கிறீர்கள். அதில் இந்த முதலமைச்சரைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஏனென்றால் அவருடைய புத்திசாலித்தனம் இருக்கிறதே அது இந்தியாவிலேயே ஏன், உலகத்திலேயே வேறு யாருக்கும் இல்லை. அந்த அளவுக்குப் புத்திசாலித்தனமாகச் செய்கிறார் * * *
* * * * * *

அதில் நாங்கள் தோற்றுத்தான் போவோம். ஆனால் நிரந்தரமான திட்டம் தீட்டுவது என்பதே கிடையாது. சுமார் 100 ஆண்டு அல்லது 200 ஆண்டு இருக்கக்கூடிய திட்டம் ஏதாவது இருக்கிறதா என்றால் இல்லை. ஏதோ சோறு போடுகிறோம், செருப்பு வாங்கிக் கொடுக்கிறோம். வெந்த சோத்தைச் சாப்பிட்டுவிட்டு விதி வந்தால் சாவதைப் போல் இருக்கிறதே தவிர வேறு ஒன்றும் கிடையாது. நிரந்தரமான திட்டமோ நீண்ட கால திட்டமோ இந்த அரசு செய்வதாகத் தெரியவில்லை. அப்படி எந்தப் பெரிய திட்டமும் நிறைவேறியதாகத் எங்களுக்குத் தெரியவில்லை. (மணி அடிக்கப் பெற்றது).

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

அடுத்து இலங்கைப் பிரச்சினையைப்பற்றி மாண்புமிகு துணை சபாநாயகராக இருப்பவர் காலையில் இங்கே பேசினார். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் எனக்கு முழுக்க முழுக்க அனுபவம் இருக்கிறது. எனக்கு இருக்கிற அனுபவத்தைவிட மற்றவர்களுக்கு இருக்க முடியாது. சில பேருக்கு இருக்கலாம். இல்லை என்று சொல்ல முடியாது. ஆனாலும் எனக்கு அதிலே நீண்ட அனுபவம் உண்டு. மூன்றாண்டுக் காலம் இலங்கைத் தமிழர்கள் அத்தனை பேரும் எங்களுடைய பாதுகாப்பில் இங்கே வந்தார்கள். அதற்கு எனக்குத் தந்த தொல்லைகள்— இந்த அரசு மட்டுமல்ல, மத்திய அரசு கூட சேர்ந்து—பல தொல்லைகளைக்கொடுத்தது. நான் அதைப்பற்றி கவலைப்படவில்லை.

[இரவு 7—10]

இலங்கை இனப் பிரச்சினையில் நான் முழுக்க முழுக்க குற்றஞ்சாட்டுவது நம்முடைய அரசைத்தான். அடுத்தபடியாகத்தான் மத்திய அரசைச் சொல்லலாம். இன்றைக்கிருக்கிற திரு. பிரபாகரன் என்கிற விடுதலைப் புலிகளின் இயக்கத் தலைவரைப்பற்றி இங்கே சிலர் கூட சொன்னார்கள். அவர் உண்மையிலேயே ஒரு தியாக புருஷர். அதில் யாரும் ஒன்றும் சொல்லவில்லை. சொல்ல முடியாது * * *

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

(இரவு 7–20)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுவரை பேசியவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அடுத்து திரு. ஹேமச்சந்திரன் பேசலாம். (குறுக்கீடு) இங்கே தனிப்பட்ட அரசியல் வார்த்தைகளை பேசுவதற்கு இது இடமில்லை. விஷயம் எங்கேயோ போய்விட்டது. முதலில் உறுப்பினர் அவர்கள் நன்றாகப் பேசிக்கொண்டிருந்தீர்கள். விவகாரம் வரும்போது அது பிரச்சினையாக ஆகிவிடுகிறது. தாங்கள் 10 நிமிடங்களாகப் பேசியிருக்கிறீர்கள். பிரச்சினையை நேரில் பேசியிருக்கலாம்.

**திரு. மா. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைக் போட்டால்தானே பேசலாம். காலையிலே பேசினதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. நான் பேசுவது உண்மையிலேயே பேசுகிறேன். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுதான் அரசியல். இதை தயவுசெய்து வேண்டுமானால் மேடையிலே பேசலாம். அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. இண்டர்நேஷனல் பாலிடிக்ஸ் எல்லாம் இங்கே வேண்டாம். (குறுக்கீடு) அந்த சப்ஜக்டை விட்டுவிடுங்கள். அடுத்து திரு. ஹேமச்சந்திரன் பேசட்டும்.

**திரு. மா. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைப் பிரச்சினையில், உண்மையிலேயே சுமூகமான பிரச்சினைக்கு நாமே தமிழ்நாட்டிலே இருக்கின்ற மாநில அரசோ அல்லது மத்திய அரசோ ஈடுபடவில்லை என்பது தான் என்னுடைய குற்றச்சாட்டு, அதற்கு மேலே உள்ளே போனால் அனுமதிக்க மாட்டீர்கள். நன்றாகத் தெரியும். அத்தோடு முடித்துக்கொள்கிறேன். அந்த தரப்பிலே மட்டும் எங்கள் கட்சித் தலைவர் பற்றி பேசலாம். நாட்டிலே அப்படித்தான் இருக்கிறது.

அதோடு மத்திய மாநில அரசுகள் உறவு பற்றி எல்லாம் பேசினார்கள். மத்திய மாநில அரசு உறவுகளைப்பற்றி சொல்லும் போது கணவன் மனைவி என்று அவரவர்களுடைய பேச் சாற்றலைப் பொறுத்து கொள்கை விளக்கங்களை கொடுத் தார்கள். நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இன்று இருக்கின்ற நிலைமை நாட்டிலே இன்றைக்கு தேர்தல் வருமா, நாளைக்குத் தேர்தல் வருமா என்று நான் இருக்கிறது. இன்றைக்கும் சட்ட மன்ற உறுப்பினர்கள் எல்லாம் இங்கே இருக்கின்றோம். நாளைக்கு ஊருக்குப் போகிறோம். வரும்போதே என்னுடைய நண்பர் ஒருவர் ரெயில்வே ஸ்டேஷனிலே கேட்டார். 'என்ன ஐயா, ராத்திரிக்கே சட்டமன்றம் கலைத்து விடுவார்கள் போல் இருக்கிறதே, டிரெயினுக்குப் போகிறீர்களே'' என்று கேட்கிறார். இப்படிப் பத்திரிகைகளிடையே செய்திகள், வதந்திகள் வந்து

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



கொண்டிருக்கின்றன, இந்த வதந்திகளே ஒரு விஷத்தன்மையான செய்தி ஆக ஆகிவிடுகிறது. ஆனால் பத்திரிக்கைகளிலே எழுதிக் கொண்டே இருக்கின்றார்கள், ஒரு ஸ்திரத்தன்மை இல்லா ஆட்சி இங்கே நடந்து கொண்டிருக்கிறதாக நான் குறைசொல்ல முடியும். நாட்டுக்குந் தெரியவேண்டும். தேர்தல் வருமா வராதா என்பது பற்றி எனக்கு பிரச்சினையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியென்றால் நீங்கள் பத்திரிகையிலே வந்ததையெல்லாம் ஒத்துக்கொள்கிறீர்கள், சட்டமன்றத்தைப்பற்றி, சட்டமன்றம் கலைப்புப் பற்றி நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?

**திரு. மா. மீனாட்சி சுந்தரம்:** அது உண்மையா இல்லையா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையாளர்களிடம் பேசும்போது முதலமைச்சர் அவர்களே இப்போது தேர்தல் இல்லை என்று சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் பேசுகிறபோது இப்போது தேர்தல் என்ற பிரச்சினையே கிடையாது என்று அவர்கள் சொல்லியிருக் கின்றார்கள். ஏன் அவர்கள் அநாவசியமாக அவர்களைக் குழப்பிக்கொண்டு ஸ்திரத்தன்மையைப் பற்றி சந்தேகப்பட்டு, ஸ்திரத்தன்மை அற்ற ஆட்சியென்றெல்லாம் சொல்லிக்கொண்டி ருக்கின்றார்கள் என்று தெரியவில்லை. குழப்பம் அவருக்குத் தானேதவிர இந்த பக்கம் குழப்பம் இல்லை. தேர்தல் வரப் போவது இல்லை என்று பலமுறை சொல்லப்பட்டு இருக்கிறது.

**திரு. மா. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கத்திற்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். தேர்தல் வருமா வராதா என்ற சந்தேகம் மக்கள் மத்தியிலே இருக்கிறது. பக்களை மட்டும் பாதிப்பதாக சொல்லவில்லை நான்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு சந்தேகம் இல்லை. மாண்புமிகு உறுப்பினருக்கு வேண்டுமானால் சந்தேகம் இருக்கலாம்.

**திரு. மா. மீனாட்சி சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களை சந்தேகிப்பதற்காக நான் இதை சொல்ல வில்லை. அதிகாரிகள் வர்க்கம் இருக்கிறதே, அது இன்றைக்குத் தேர்தலா, நாளைக்கு தேர்தலா என்கிற ஹேஷ்யத்தில் ஈடுபட்டு அரசு இயந்திரமே சரிவர செயல்படாத நிலை இருக்கிறது. நீங்கள் இருந்தால் இருங்கள் இல்லையென்றால் போங்கள். தேர்தல் வந்தால் வரட்டும். இல்லையென்றால் வேண்டாம், நாங்கள் அதைப்பற்றி கவலைப்படவில்லை. ஆனால் அரசு அலுவல்கள் சரிவர இன்றையதினம் செயல்படவில்லை. அ.தி.மு.க.வைப்பற்றி நான் இங்கே புதிதாக சொல்லவேண்டியது ஒன்றுமில்லை. மத்திய அரசு இதிலே தலையிடுகிறதா இல்லையா

என்பதல்ல பிரச்சினை. மத்திய மாநில அரசுகள் கணவன்-மனைவி உறவுடையவனாக இருப்பதால் தவறுகளை கண்டித்துக் கேட்பதற்கு யாரும் இல்லை. தடி எடுப்பவன் எல்லாம் தண்டற் காரன் ஆகிவிட்டான் என்பது போன்ற நிலைமைகள் ஏற்பட்டிருக் கின்றன. (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தடியெடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் என்பதல்ல, இப்பொழுது வெடிகுண்டு வைப்பவன் எல்லாம் தண்டல்காரன். (சிரிப்பு) தடி எங்கே இருக்கிறது? வெடி அல்லவா வைக்கிறான்.

*திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே வறட்சி நிலைமை பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் ஒன்றை சொல்லிக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிற வறட்சியின் யதார்த்தமான நிலைமை பற்றி இந்த அறிக்கையிலே சரிவர பிரதிபலிக்கப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்றைக்கு கிராமப்பகுதிகளிலும் குடிநீர் கிடைக்காத நிலை ஏற்பட்டிருக்கிறது. குடிநீர் மக்களுக்கு கிடைக்க போர் வெல்ஸ் போடுவது மட்டும் உதவாது என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். லாரிகள் வழியாக தண்ணீர் விநியோகம் செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் அதற்கான நடவடிக்கை இதுவரை போதுமான அளவுக்கு எடுக்கப்படவில்லை அதற்கு சமீபத்தில் நடந்த அதிகாரிகள் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. ஆனால் அதற்கு தேவையான பண ஒதுக்கீடு செய்திருப்பது போதுமானதல்ல. போதுமான பணத்தை வாங்குவதற்கான முயற்சியைஇந்த அரசு எடுத்துக்கொள்ளும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய சென்ற ஆண்டுகள் அனுபவம் என்னவென்றால், எந்த அளவுக்கு பணம் வேண்டு மென்று கேட்கப்படுகிறதோ அதிலே 20 அல்லது 25 சதவீதம் தான் வறட்சி நிலையைப் போக்குவதற்காக இந்த மாநிலத்திற்கு மத்திய அரசால் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை எல்லாம் கணக்கிலே எடுத்துக் கொண்டு பார்த்தால் வறட்சி நிவாரணத் திற்காக மத்திய அரசிடமிருந்து நிதி கிடைக்கும் என்று எதிர் பார்த்து மட்டும் இருந்துகொண்டிருந்தோமானால், நிச்சயமாக இந்தக் கடுமையானவறட்சியை நம்மால் சமாளிக்க முடியாது. ஆகவே இப்பொழுதே போதுமான அளவு பணத்தை ஒதுக்கீடு செய்து வறட்சி நிலையபோக்குவதற்குரிய நடவடிக்கையை துரிதமாக மாநில அரசு மேற்கொள்ள வேண்டுமென்ற என்னுடைய கருத்தை அங்கே வலியுறுத்தி கூறிக்கொள்கிறேன்.



அடுத்து, பழைய கிணறுகளையும் சரி பண்ண நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். அதிகாரிகளைக்கேட்டால் அப்படிப் பட்ட நடவடிக்கை எடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். குறிப்பாக என்னுடைய தொகுதியிலுள்ள, வேர்கிளம்பி பஞ்சாயத்து அலுவலகத்திற்கு உட்பட்ட கல்லன்குழியில் ஒரு பழைய கிணறு இருக்கிறது. அந்தக் கிணறை சிறிது ஆழப் படுத்தினால் மக்களுக்குத் தேவையான குடிநீர் கிடைக்கும் என்று அங்குள்ளவர்கள் சொல்கிறார்கள். அந்தக் கிணறை மாற்றி யமைக்க வேண்டிய அவசியம்,தேவை இருக்கிறது. இப்படிப்பட்ட கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கும் நேரத்தில், அப்படிப்பட்ட நடவடிக்கையை எடுக்க முடியாது என்று அதிகாரிகள் சொல் கிறார்கள் என்றால் அது சரியல்ல. அப்படிப்பட்ட நடவடிக்கையை அதிகாரிகள் எடுப்பதற்கான உத்தரவை இந்த அரசு பிறப்பிக்க வேண்டும்.

அடுத்து, மழைக் காலங்களில் ஓடுகிற தண்ணீர் எல்லாம் கட லுக்குச் சென்று வீணாகிறது. இதனைத் தவிர்க்க தேவையான இடங்களில் எல்லாம் அணைகளைக் கட்டவேண்டும். குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அணைகள் கட்டப்பட்டால் ஒவ்வொரு வருடமும் ஏற்படுகிற வறட்சி நிலையை சமாளிக்க முடியும் என்று 1983 ஆம் ஆண்டிலிருந்தே நான் சுட்டிக்காட்டி வந்திருக்கிறேன். இருந்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மாம்பழத்தணை கட்டப் பட்டால் குடிநீர் மிகவும் தேவையாக உள்ள பத்மநாபபுரம். நாகர்கோவில் போன்ற பகுதிகளுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்று ஏற்கனவே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆனால் Cost Benefit Ratio-வின் வாயிலாக அந்தத் திட்டங்களை அமல் படுத்த இந்த இலாகா, இந்த அரசு தயாராக இல்லை. அரசு அத்தகைய நிலையை மனத்திற்கொண்டு, மக்களுக்கு குடி தண்ணீர் கொடுக்கிற விஷயத்தில் காஸ்ட் பெனிஃபிட் ரேஷியோ குறுக்கே நின்றால் அதை மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(இரவு 7-30)

குளங்களை ஆழப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை, எடுக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு வாட்டர் சப்ளை ஸ்கீம் என்று அதனுடைய வேலைகள் முடிந்த பிறகும், மின்சாரத்துறையின் இணைப்பு கிடைக்கவில்லை என்பதால் அதை நடைமுறைக்குக் கொண்டு வர முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மின்சார இலாக் காவைக் கேட்டால், ஏப்ரல், மே மாதங்களில்தான் கனெக்ஷன் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். இன்றைக்குள்ள வறட்சி நிலைமையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, அப்படி முடிக்கப்பட்ட திட்டங்களுக்கு மின்னிணைப்பு கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.
மதுவிலக்கைப்பொறுத்தவரையில் அமல்படுத்தப்பட்டு இருக்கிறது
என்று சொல்லப்படுகிறது. ஆனால் மது விலக்கு ஏற்படுத்தப்
பட்டது என்றாலும், கள்ளச் சாராயம் காய்ச்சுவது இன்றைக்கு
அதிகரிக்கப்பட்டிருக்கிறது. காவல் துறையில் ஒரு நல்ல சதவீதம்
ஊழியர்கள் இதற்கு உடந்தையாக இருந்து கொண்டிருக்
கிறார்கள். இன்றைக்குக் காவல் துறையிலே உள்ள பல
அதிகாரிகள்கூட இவர்களோடு உறவு வைத்துக்கொண்டு இந்தக்
கள்ளச்சாராயம் நடமாடுவதற்கு விட்டுக்கொண்டிருக்கும்
நிலைமை தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறது. இதைப் போக்கு
வதற்கு அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த அறிவிக்கையிலே, தமிழகத்திலே ஏற்பட்டிருக்கும் ஜாதி,
மத மோதல்களைப்பற்றி அல்லது ஜாதி மத உணர்வுகளைத்
தூண்டி விட்டு மோதல்களை நடத்துவதற்கான முயற்சிகளைத்
தடுப்பதற்கான என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்
கின்றன என்பதைப்பற்றி அல்லது அப்படிப்பட்ட அபாயத்தைத்
தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைப்பற்றிச்
சுட்டிக்காட்டவில்லை. ஜனாதிபதி கூட நாடாளுமன்றத்திலே
கொடுக்கப்பட்ட அவருடைய அந்தப் பேருரையிலே, இப்படிப்பட்ட
உணர்வுகளைத் தடுத்து நிறுத்துவது சம்பந்தமான யோசனையை
குறிப்பிட்டிருக்கிறார்.

அதேபோன்று, இந்த அறிவிக்கையிலே, தொழிலாளர்கள்
சம்பந்தமான சில பிரச்சினைகளை விட்டுவிட்டிருப்பது சரியல்ல
என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால் ஒரு
தொழிலாளிக்கும் ஒரு முதலாளிக்கும் தகராறு ஏற்பட்டால் அந்த
நீதிமன்றத்திற்கு அல்லது தொழில் நீதிமன்றத்திற்கு விட வேண்டு
மென்பது நாமே இந்த அவையிலே ஏற்றுக்கொண்டு நிறைவேற்றப்
பட்ட சட்டம். ஆனால் மத்திய சர்க்காரால் என்ன காரணத்
தாலோ அந்தச் சட்டத்திற்கு அனுமதி வழங்கப்படவில்லை. அதே
நேரத்தில் அந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்டு இன்றைக்கு
இப்படிப்பட்ட தொழிலாளி முதலாளி வழக்குகள் ஏற்படுகின்ற
நேரத்தில், சமரசத்திலே அதை முடிக்க முடியாத நிலையில்,
அந்தப் பிரச்சினையில் தீர்வு காண்பதற்கு தொழில் நீதிமன்றத்
திற்கு விடாத நிலையை இன்றைக்குத் தமிழக அரசு எடுத்துக்
கொண்டு இருக்கிறது. உச்ச நீதிமன்றத்திலும், உயர் நீதி
மன்றத்திலும், இது சரியல்ல, விடவேண்டுமென்று ஏறத்தாழ
300-க்கும் மேற்பட்ட வழக்குகளிலே தீர்ப்பு கொடுக்கப்பட்ட
பிறகும், அரசு இது சம்பந்தமாக இன்னும் முடிவெடுத்து அந்த
வழக்குகளைத் தொழில் நீதிமன்றத்திற்கு வழக்காடு மன்றத்திற்கு
அனுப்பாமல் இருந்து கொண்டிருக்கிறது. அதை பாற்றி
உடனடியாக அனுப்புவதற்கான நடவடிக்கைகளை எடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மூடிக் கிடக்கின்ற ஆலைகள் சம்பந்தமாக, ஒரிரு
ஆலைகளை எடுப்பது சம்பந்தமான விஷயம் குறிப்பிட்டப்
பட்டிருக்கிறது. ஆனால், இன்றைக்குத் தமிழகத்தில் பல



ஆலைகள் இப்படி மூடப்பட்டிருக்கின்றன. அந்த ஆலைகளை
எடுத்து நடத்துவதற்கு மத்திய அரசின் கொள்கை இன்றைக்குக்
குறுக்கே நின்று கொண்டிருக்கிறது என்பது நம் அனைவருக்கும்
தெரியும். அந்த நிலையை மாற்றுவதற்கும், அப்படி மூடப்பட்ட
ஆலைகளை அரசே எடுத்து நடத்துவதற்கான நடவடிக்கைகளை
ஏற்படுத்த வேண்டுமென்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்படி ஒரு கொள்கை இருப்பதன் காரணமாகத்தான்
இன்றைக்குத் தென் இந்திய மில் முதலாளிகள் சங்கம் ஏற்றுக்
கொண்ட அந்த போனஸ் கொள்கையின் அடிப்படையில்
தொழிலாளர்கள் போனஸ் கேட்டதற்கு போனஸ் வழங்க
முடியாது என்று சொல்லி நாகர்கோயிலிலே நாகப்பாள் மில்
என்ற ஆலை — 400 தொழிலாளர்கள் வேலை செய்யும் அந்த
ஆலை நான்கு மாதங்களாக பூட்டப்பட்டிருக்கிறது. சதவடைப்பு
செய்த அந்த முதலாளி பேச்சுவார்த்தைக்கு வரக்கூடத் தயாராக
இல்லை. கலெக்டர் அவரை அழைத்துப் பேச வேண்டு
மென்றாலும் கூட அவர் வருவதற்குத் தயாராக இல்லை. லேபர்
கமிஷனர் அழைத்த பிறகும்கூட அவர் வரத் தயாராக இல்லை.
அப்படிப்பட்ட பிரச்சினைகளிலே இந்தத் தொழிலாளர்களின்
வேதனையைப் பார்த்துக் கொண்டு அரசு ஏனோதானோ என்று
இருக்கக் கூடாது. அப்படிப்பட்ட ஆலைகளை அரசு எடுத்து
நடத்த முன் வராமல் இருந்தால் தொழிலாளர்களுக்கு எந்த
விதமான பாதுகாப்பும் இராத ஒரு நிலைமை ஏற்படும். ஆகவே,
அதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

மது விலக்கை ஏற்படுத்தியதன் காரணமாக இன்றைக்குக்
கன்னியாகுமரி மாவட்டத்திலே ஏறத்தாழ 16,000-க்கும்
அதிகமான பனை ஏறும் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்
கிறார்கள். அவர்களுக்கு ஒரு கடைக்கு 4 பேருக்கு லைசென்ஸ்
என்ற முறையிலே நிவாரணம் என்று சொல்லப்படுகிறது. ஆனால்,
அந்தக் கடையினுடைய சொந்தக்காரர்கள் அதை வைத்துப் பல
தில்லுமுல்லுகள் செய்யும் நிலைமை நடந்து கொண்டிருக்கிறது.
பதினாறாயிரம் தொழிலாளிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

எதார்த்தமான அந்தத் தொழிலாளர்களுக்கு லைசென்ஸ்
வழங்காமல் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு லைசென்ஸ் வழங்கி,
அந்த நிவாரணத் தொகையாக வழங்கப்படுகின்ற 2,000 ரூபாயை
அவர்களே சாப்பிட்டுவிடுகிற நிலைமை ஏற்படுகிறது. அந்த
நிலையைப் போக்க வேண்டும். உண்மையிலேயே பாதிக்கப்பட்ட
எதார்த்தமான தொழிலாளர்களுக்கு, பனை ஏறும் அனைத்துத்
தொழிலாளர்களுக்கும் நிவாரணத் தொகையை அரசு வழங்க
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று இன்னொரு பிரச்சினையையும் சுட்டிக்காட்ட
விரும்புகிறேன். தேன் உற்பத்தி செய்கின்ற தொழில் இன்றைக்கு
பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. சுமார் ஒரு கோடி ரூபாய்

பெருமான தேன் தேங்கிக் கிடக்கிறது. ஆகவே, தேன் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களுக்கும் நிவாரணம் அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அதைப்போன்று, சோஷியல் வெல்பேர் டிபார்ட்மென்ட் மூலமாக அமுல்படுத்தப்படுகின்ற ஐ.சி.டி. ஸ்கீம் எந்த அளவுக்கு விரிவுபடுத்தப்பட முடியுமோ அந்த அளவுக்கு விரிவு படுத்தப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டம் கூட இந்த ஸ்கீமிலிருந்து விடுபட்டிருக் கிறது. அனைத்து மாவட்டங்களிலும் இந்த ஸ்கீமை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குத் தேவையான உதவியை மத்திய அரசிடமிருந்து பெற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சனவரி மாதம் துத்தரைச் சேர்ந்த ஆறு மீனவர்கள் கடலுக்கு சென்றவர்கள் திரும்பவில்லை. அதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டும்.

அடுத்தபடியாக, இன்றைக்கு தமிழ்நாட்டில் பல பள்ளிக் கூடங்களில் ஆசிரியர்கள் இல்லாத நிலைமை இருக்கிறது. இந்த நிலையைப் போக்க வேண்டும். மேலும் பள்ளிகளுக்குக் கட்டிட வசதி இல்லாமல் இருக்கிறது. எங்களுடைய மாவட்டத்தில் பல பள்ளிகளுக்கு கூரை இல்லை; பல பள்ளிக் கட்டிடங்கள் இடிந்து விடுகின்ற நிலையில் இருக்கின்றன. இப்படிப்பட்ட குறைகளைப் போக்க ஒரு 'ஃபேஸ்ட ப்ரோகிராம்' போட்டு, கூரை இல்லாத பள்ளிகளுக்கு கூரை போட வேண்டும்; பழுதடைந்துள்ள கட்டிடங் களைப் புதுப்பிக்க வேண்டும் என்று கேட்டு, நன்றி தெரிவித்து முடிக்கிறேன், வணக்கம்.

*திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது பேசுகின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்கு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஆளுநர் உரை தமிழக அரசினுடைய மறுமலர்ச்சித் திட்டங் களை எடுத்துக்காட்டக்கூடியதாக, பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை உள்ளடக்கியதாக அமைந்திருக்கிறது. பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்களும் திருப்திபடுகின்ற திட்டங்களை உடையதாகவும் இது இருக்கிறது என்று சொன்னால் அது மிகை யாகாது.

ஆளுநர் உரையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிற மறுமலர்ச்சித் திட்டங்கள், குறிப்பாக சிறார்களுக்கும், கிராமங்களிலே வாழுகின்ற ஏழை எளிய தாய்மார்களுக்கும் காலணி, அதாவது செருப்பு வழங்குகின்ற திட்டம் முக்கியமாக இடம் பெற்றிருக்கிறது. அதைப்போன்று டாசல் என்று சொல்லப்படுகின்ற தமிழ்நாடு மட்பாண்டத் தொழில் நிறுவனத்தைச் சீரமைக்கும் தி...



பெற்றிருக்கிறது. அதைப்போன்று கள்ளுக்கடைகளை மூடியதால் பாதிக்கப்பட்ட கள் இறக்கும் தொழிலாளர்கள் வாழ்க்கையில் ஒளி ஏற்ற வேண்டும் என்பதற்காக சுமார் 30,000 கள் இறக்கும் தொழிலாளர்களுக்கு குடும்பம் ஒன்றுக்கு 2,000 ரூபாய் உதவி அளிக்கின்ற சிறந்ததொரு மறுமலர்ச்சித் திட்டம் இடம் பெற்றிருக் கிறது.

அது மட்டுமல்லாமல் இன்னும் பல்வேறு வகையில் சிறந்த பல திட்டங்கள் எல்லாம் இந்த ஆளுநர் உரையிலே இடம் பெற்றிருக் கின்றன. ஆனால் இங்கே பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள், குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், கவர்னர் உரையில் ஒன்றையும் காணவில்லையே என்று சொன்னார்கள் அவர்களுக்கு இப்படிப்பட்ட மறு மலர்ச்சித் திட்டங்களைக் காண இயலவில்லையா அல்லது கண்டும் மறந்துவிட்டார்களா என்று தெரியவில்லை. உதாரணத்திற்காக மேலும் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

நூறு சதவீதம் ஏற்றுமதியையே நோக்கமாகக் கொண்ட "டாமின் கிரானைட்ஸ்" என்கிற தமிழ்நாடு கனிம நிறுவனத் தொழிற்சாலை மணலியில் தொடங்கப்பட்டுள்ளது. கிரானைட் தாதுப்பொருளைச் செய்முறைப்படுத்தும் தொழிற்சாலை ஒன்று சிவகங்கையில் அமைக்கப்பட நம்முடைய அரசு பெருமுயற்சி எடுத்துவருகிறது. 'எக்ஸ்' கதிர் படச்சுருள் தொழிற்சாலை ஒன்று உதகமண்டலத்திலே மத்திய அரசால் நிறுவப்பட, அதனை இந்த மாநில அரசு போராடி பெற்றதை யாரும் மறந்துவிட முடியாது. அதைப்போன்று சென்னை, எண்ணெய் தூய்மைப் படுத்தும் தொழிற்சாலை மணலியில் 600 கோடி ருபாய் செலவில் அமைக்கக் கருதியுள்ள 'அரோமாட்டிக் சேர்மங்கள்' தயாரிப்புத் தொழிற்சாலைக்கு மத்திய அரசை வற்புறுத்தி இசைவு பெற்றது இந்த மாநில அரசின் தொழில் வளர்ச்சித் திட்டங்களை எடுத்துக் காட்டவில்லையா? இப்படிப்பட்ட சிறந்த திட்டங்களை உள்ளடக்கி இருக்கிற, தமிழக அரசின் இத்தகைய முன்னோடித் திட்டங்களைத் தாங்கியுள்ள இந்த ஆளுநர் உரையை மாற்றுக் கட்சியினர் எவ்வாறு உதாசீனப்படுத்துகிறார்கள் என்பதுதான் நமக்குப் புரியவில்லை.

(இரவு 7-40)

இப்படி அவர்கள் சொல்வதற்குக் காரணம் இப்படிப்பட்ட மறுமலர்ச்சித் திட்டங்களின் காரணமாக தங்களுடைய வளர்ச்சி தங்களுடைய அரசியல் செல்வாக்கு தூக்கி எறியப்பட்டுவிட்டது என்பதால்தான். அதன் காரணத்தால்தான் இவர்கள் இவ்வாறு பொறுப்பற்றுப் பேசுகிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

[திரு. மு. மாரிமுத்து] [1987 மார்ச் 5

"Every action produces equal and opposite reaction." என்ற
நியூட்டனின் தியரிகூட, பௌதீக உண்மைகள் கூட இன்று புரட்சித்
தலைவர் அவர்களின் சமுதாய மறுமலர்ச்சித் திட்டங்களின் வீச்சுக்
களின் மூலமாகப் பொய்த்துப்போய் இருக்கின்றன. அந்த மறு
மலர்ச்சித் திட்டங்களால் ஏற்படுகிற விளைவுகள் reactions புரட்சித்
தலைவருக்கு ஏற்பட்டுள்ள அபரிமிதமான செல்வாக்கு திராவிட
முன்னேற்றக் கழகத்தை மிக வெகுவாக பாதித்து இருக்கிறது.
என்ற காரணத்தால்தான் Reactions அவர்களைப் பொறுத்தவரை
equal இல்லை என்ற ஆத்திரத்தால் திராவிட முன்னேற்றக்
கழகத்தைச் சார்ந்தவர்கள் இன்று இப்படிப்பட்ட மறுமலர்ச்சித்
திட்டங்களைக்கூடஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இல்லை
என்று நான் கருதுகிறேன். என்றாலும், மறுமலர்ச்சித்
திட்டங்களைப் புரட்சித் தலைவர் அவர்கள் தொடர்ந்து
நாட்டுக்குத் தந்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் தர இருக்
கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதி வளர்ச்சிப் பணிகளைப் பொறுத்த
வரையில், மதுரை மாநகரில் சென்னை உயர்நீதிமன்றத்தின் ஒரு
பிரிவை அமைத்திட வேண்டும் என்பது நீண்ட காலக் கோரிக்கை
யாக இருந்து வருகிறது. வழக்கறிஞர்களும், பொது மக்களும்
அவ்வாறு கேட்டுக்கொண்டு வருகிறார்கள். மத்திய அரசால்
அமைக்கப்பட்ட ஜஸ்வந்சிங் கமிஷன் கூட மதுரையிலே சென்னை
உயர்நீதிமன்றத்தினுடைய ஒரு பிரிவை அமைக்கவேண்டுமென்ற
கருத்து தெரிவித்திருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில்
விரைவாக மதுரையில் சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய ஒரு
பிரிவை அமைத்திட வேண்டுமென்று அரசை நான் கேட்டுக்
கொள்கிறேன்.

மதுரை பசுமலை மகாலட்சுமி மில் கடந்த 90 நாட்களாக
அடைக்கப்பட்டு கிடக்கிறது. ஏறத்தாழ 1,200 தொழிலாளர்கள்
வேலை செய்கிற மதுரை பசுமலை மகாலட்சுமி மில் மூடப்பட்டு
இருக்கிறது. அங்கே நிர்வாகத்தினர் நடந்து கொள்கிற முறை
சரியில்லாத காரணத்தால் கடந்த மூன்று மாதங்களாக வேலை
யின்றி அந்தத் தொழிலாளர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்
கிறார்கள். பணிக்கொடை, சேமநிதி, இ.எஸ்.ஐ. போன்ற
தொழிலாளர்களுக்கான நல நிதிகளை பிடித்தம் செய்கிற
நிர்வாகம் அதை ஒழுங்காக பங்குத் தொகையுடன் செலுத்தாமல்
தானே வைத்துக்கொண்டு அந்த மில் ஓடாமல் இருப்பதற்கு மூல
காரணமாக இருந்து வருகிறது. பலமுறை பேச்சுவார்த்தை
நடத்தப்பட்டும் இன்னும் அந்த மில் திறக்கப்பட முடியாமல்
இருக்கிற சூழ்நிலை இருக்கிறது. எனவே மாண்புமிகு புரட்சித்
தலைவர் அவர்களுடைய அரசு கோவையில் பவானி மில்லைத்
திறந்ததுபோல், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில்
சோமசுந்தரம் ஆலையை தேசியமயமாக்கியது போல் இந்த
ஆலையின் மீதும் தன்னுடைய கவனத்தைச் செலுத்தி
இதையும் திறப்பதற்கான வழிவகை செய்யவேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.



1987 மார்ச் 5] [திரு. மு. மாரிமுத்து]

நாடு முழுவதும் அதிகாரிகளுக்கு மட்டுமின்றி பகுதிநேர
ஊழியர்கள் உட்பட அனைத்து அரசு ஊழியர்களுக்கும் ரூபாய்
300-ஐ பொங்கற் பரிசாக மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள்
தந்திருக்கிறார்கள். கடைக் கோடியிலே இருக்கக்கூடிய ஏழை,
எளிய மக்கள் நன்கு வாழ வேண்டுமென்று விரும்புகிற இனிய
இதயத்திற்குச் சொந்தக்காரராக மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்கள் இருந்து வருகிறார்கள். அப்படிப்பட்ட புரட்சித்
தலைவர் அவர்களின் ஆட்சியில் பகுதி நேர ஊழியர்கள்,
ஊராட்சி மன்ற பகுதி நேர எழுத்தர்கள், அதாவது பார்ட் டைம்
க்ளார்க்ஸ் என்பவர்கள் குறைந்த சம்பளம் வாங்கிக் கொண்
டிருப்பது கவலை தருகின்ற விஷயம். அவர்கள் மூன்று, நான்கு
ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றியும் ஏறத்தாற 250 ரூபாய்
தான் மாதத்திற்கு பெறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே
அந்த ஊழியர்களை நிரந்தரமாக்கவேண்டும். அவர்களுடைய
சம்பள விகிதத்தையும் உயர்த்தவேண்டும்.

அதேபோல் கூட்டுறவுச் சங்கங்களில் கடைகளின் விற்பனை
யாளர்களுக்கும் சம்பளம் போதாது. எனவே அவர்களுக்கும்
சிறிது சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நான்
இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.
மதுரையில் திருப்பரங்குன்றம் தொகுதியின் முழுப்பகுதியிலும்
செல்கிற ஒரு அருமையான கால்வாய் நிலையூர் கால்வாய்,
அந்தக் கால்வாயை நவீனப்படுத்தி அதன்மூலம் திருப்பரங்குன்றம்
தொகுதியை ஒரு செழிப்பான பகுதியாக மாற்றவேண்டுமென்பது
நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. மாண்புமிகு
இதயதெய்வம் புரட்சித்தலைவர் அவர்கள் இக்கோரிக்கையை
ஏற்றுக்கொண்டு அதற்காக 18½ கோடி ரூபாய் அளவில் ஒரு
திட்டத்தையும் தயாரித்துக் கொடுத்து இருக்கிறார்கள்.
அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று தெளிவு
படுத்தப்பட்டு இருப்பதற்காக என்னுடைய தொகுதியின்
சார்பில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.
இந்தத் திட்டம் இந்த ஆண்டே முடிக்கப்பட வேண்டும் என்று
நான் கேட்டுக் கொள்கிறேன். காரணம் வறட்சியினால் பாதிக்கப்
பட்டிருக்கும் இந்த நேரத்தில் இந்த நிலையூர் கால்வாயை நவீனப்
படுத்தும் திட்டத்தை நடத்திக் கொடுப்போமேயானால் வறட்சிப்
பணி செய்ததாகவும் ஆகும், அதே நேரத்தில் வளர்ச்சிப் பணி
களை தொடர்ந்து நடத்திக் கொடுப்பதாகவும் ஆகும். எனவே
இந்த நிலையூர் கால்வாய் திட்டத்தை விரைவில் தொடங்கி
முடித்துத் தர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

கைத்தறித் தொழிலின் பாதுகாப்பில் அரசு மிகவும் கண்ணும்
கருத்துமாக இருக்கிறது என்றும் கைத்தறி நெசவாளர்களுடைய
மேம்பாட்டிற்காக அரசு பொருளாதார திட்டங்களைத் தீட்டிக்
கொண்டு இருக்கிறது என்றும் கவர்னர் உரையிலே சொல்லப்
பட்டிருக்கிறது. மைய அரசும், மாநில அரசும் இணைந்து
கைத்தறித் துணிகளுக்கான தள்ளுபடி நாட்களை உருவாக்கிக்

கொடுக்கிறார்கள். அப்படி 60 நாட்களாக கொடுத்து வந்த அந்த
தள்ளுபடி நாட்களை தற்போது 30 ஆகக் குறைத்திருக்கிறார்கள்.
அதுமட்டும் அல்லாமல் மைய அரசு தந்து வந்த 10 சதவீதம்
தள்ளுபடி விற்பனை உதவி தொகையை தற்போது நிறுத்தி
இருக்கிறது. இதனால் கைத்தறித் துணிகளின் உற்பத்தியிலே,
விற்பனையிலே பெரும் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. தயவுசெய்து
அரசு அதைக் கவனிக்க வேண்டும். அதேபோலவே கைத்தறித்
தொழிலாளர்கள் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து கேஷ் கிரடிட்
எனப்படும் காசு கடன்களை பெறுகிறார்கள். அதன் மூலமாகத்
தான் அவர்கள் நூலை வாங்குகிறார்கள். அந்தக் காசுக் கடனிற்கு
வங்கிகளுக்கு வட்டி செலுத்தி கொண்டிருக்கிறார்கள். ஆனால்
மத்திய அரசிலேயிருந்தும், மாநில அரசிடமிருந்தும் வழங்கப்
படும் தள்ளுபடி விற்பனை உதவித் தொகை சரிவர அந்தச் சங்கங்
களுக்குப் போய்ச் சேரவில்லை என்ற குறை இருக்கிறது. எனவே
அந்தச் சங்கங்கள் நொடித்துப் போகிற சூழ்நிலை தற்போது
நிலவுகிறது. அந்தச் சங்கங்களுக்கு சேர வேண்டிய பணத்தை
உடனடியாகக் கொடுக்க வேண்டும்.

குடிதண்ணீர் பிரச்னையில் மிகச் சிறப்பான பல பணிகள் பற்றி
இந்த ஆளுநர் உரையிலே சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.
என்னுடைய தொகுதியினைச் சேர்ந்த அவனியாபுரம் பேரு
ராட்சியில் 2 ஆண்டுகளுக்கு முன்பாக பாதுகாக்கப்பட்ட
குடிதண்ணீர் தர வேண்டும் என்று திட்டம் இடப்பட்டு, அதற்காக
சுமார் 1 லட்சத்து 72 ஆயிரம் ரூபாய் வரை குடிதண்ணீர்
வாரியத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிகாரிகளுடைய
மெத்தனப் போக்கினால் இந்தத் திட்டம் இன்னும் முடிக்கப்பட
வில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, ஆளுநர் உரையிலே மிகத் தெளிவாகச் சொல்லப்பட்
டிருக்கிறது. நகரத்தினுடைய மேம்பாட்டுத் திட்டத்திற்காக 800
ரூபாய் கோடி ஒதுக்கப்பட்டு இருப்பதாகவும், அதேபோலவே ஏரி
களை சீரமைக்கும் பணிகளுக்காக 400 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு
இருப்பதாகவும், நகரங்களின் நடுவிலே செல்லுகின்ற கால்வாய்
போன்றவைகளைச் செப்பனிட 140 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு
இருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அரசின் பரிசீலனை
யிலுள்ள இத்திட்டங்களில் மதுரையை மறந்துவிடக் கூடாது.
மதுரையில் வைகை ஆற்றிலே இன்னொரு மேம்பாலம் அமைக்க
வேண்டும்.

விளாச்சேரி கிராமக்கண்மாய், தென்கால் கண்மாய்ச், சிலைமான்
கண்மாய், துவரிமான் கண்மாய், மாடக்குளம் கண்மாய் போன்ற
வைகளை சீரமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
நாகமலை, புதுக்கோட்டை, திருநகர் பேரூராட்சி பகுதிகளுக்கு
குடிதண்ணீர் திட்டத்தை செய்துதர வேண்டும் என்று கேட்டு,
எல்லாவிதமான சிறப்பு திட்டங்களும் இடம் பெற்றிருக்கும் இந்த
ஆளுநர் உரையை வரவேற்று அமர்கிறேன். நன்றி. வணக்கம்.



திரு. ஜே. முகம்மது கனி: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு
நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் காங்கிரஸ் கட்சியின் சார்பில்
என்னை பேச அனுமதித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறேன். மேதகு ஆளுநர் அவர்களின் உரையிலே
ஊட்டியிலே ரூ. 170 கோடி செலவில் எக்ஸ் கதிர் படச்சுருள்
தயாரிப்புத் தொழிற்சாலையை நிறுவுவது குறித்தும், சென்னை
மணலியில் ரூ.600 கோடி செலவில் எண்ணெய் தூய்மைப்படுத்தும்
தொழிற்சாலையும் அமையவிருப்பதாக குறிப்பிட்டிருந்தமைக்கு
நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மைய அரசுக்கும், மாநில
அரசுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்தோடு
சிறுவர்களுக்கு காலணி வழங்கும் திட்டம் குறிப்பிட்டி
ருப்பதையும் நான் மகிச்சியோடு வரவேற்கிறேன்.

1-1-1987 முதல் கள், சாராயக் கடைகளை மூடுகின்ற
இன்றைக்கு திட்டத்தை வரவேற்கிறேன். புதுக்கோட்டை மாவட்
டத்தில் கள்ளச் சாராயம் மிக அதிகமாக இருக்கிறது என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக ஒரு டம்ளர் கள்ளச்
சாராயம் கொடுத்தால் அது 200 மில்லியாக இருப்பதோடு
அல்லாமல், அதற்கு ஒரு வாழைப்பழமும், அத்தோடு ஊறுகாயும்
சேர்த்து அங்கே இருக்கிற வியாபாரிகள் தந்து கொண்டிருக்
கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அதற்கு உடனடி
யாக நடவடிக்கையெடுக்க அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

(இரவு 7-50)

நலிந்த ஆலைகளுக்குப் புத்துயிர் அளிக்கும் நடவடிக்கையாக
1985—86 ஆம் ஆண்டில் நம்முடைய முன்னாள் கைத்தறித் துறை
அமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டத்தில் இருக்கிற காவேரி
நூற்பாலையை அரசு ஏற்று நடத்தும் என்று சொன்னார்கள்,
இன்றைக்கு வரைக்கும் அந்த நூற்பாலையை அரசு எடுத்துக்
கொள்ளவில்லை. ஆகவே அரசு விரைவான நடவடிக்கையெடுத்து
அந்த நூற்பாலையை ஏற்று நடத்த வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டிலும், இந்த ஆண்டிலும் எங்கள் மாவட்டத்தில்
வறட்சி அதிகமாக இருப்பதால் எங்கள் மாவட்டம் மிகவும்
பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே எங்கள் மாவட்டத்தை வறட்சி
மாவட்டமாக அரசு அறிவித்து, வறட்சியைப் போக்குவதற்கான
நடவடிக்கைகளையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
குறிப்பாக குடிதண்ணீர் பற்றாக்குறையைப் போக்குவதற்கு
போர்க்கால அடிப்படையில் அரசு நடவடிக்கையெடுக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கேட்கப்பட்ட 17
கோடி ரூபாயை எங்கள் மாவட்டத்திற்குத் தந்து எங்கள்
மாவட்டத்தின் வறட்சி நிலையைப் போக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக குடிதண்ணீர் குழாய்கள்

அமைப்பதற்காக எங்கள் மாவட்டத்தில் 100 கி.மீ. நீளம் பைப்புகள் வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். ஆனால் 10 கி.மீ. நீளம் தான் குடிதண்ணீர் குழாய்கள் தரப்பட்டிருக்கிறது. எங்கள் மாவட்டத்தின் வறட்சியைப் போக்க அந்தக் குழாய்களை உடனடியாகத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எங்களுடைய மாவட்டத்தில் பல இடங்களில் மேல் நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு இருக்கின்றன. இருப்பினும் மின் இணைப்பு கொடுக்காமல் இருப்பதால் அதிலிருந்து தண்ணீர் கொடுக்க முடியாத நிலையிருக்கிறது. இதற்குக் காரணம் மின் இணைப்புக் கொடுக்க தேவையான மின் கம்பங்கள் தரப்படாதது தான். அந்த கம்பங்களைத் தருவதற்கு நம்முடைய மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் உதவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி தருவாரானால் பல இடங்களில் மின் இணைப்பு கொடுக்கப்பட்டு, மேல்நிலைத் தொட்டிகள் இயங்குவதற்கு வசதியாக இருக்கும்.

அடுத்து எங்களுடைய மாவட்டத்தில் டி.பி.ஏ.பி.ஏரியா என்று சொல்லக்கூடிய கந்தர்வகோட்டையில் அதிகமான ஆழ்துளை கிணறுகளை ஏற்படுத்தி, அதன்மூலம் ஆதிதிராவிட மக்கள் அதிகமாக வாழ்கிற அந்தப் பகுதிக்கு குடிதண்ணீர் பற்றாக் குறையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து புதுக்கோட்டை நகரில் இருக்கிற அரசு பொது மருத்துவமனைக்கு 100 படுக்கைகள் கொண்டு ஒரு மருத்துவப் பிரிவும், ஒரு ஸ்பெஷல் வார்டும், அவசர சிகிச்சைப் பிரிவும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கந்தர்வகோட்டையில் மருது பாண்டியர் போக்கு வரத்துக் கழகத்தின் பணிமனை ஒன்றினை ஏற்படுத்தித் தர வேண்டும்.

கந்தர்வகோட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த வெள்ளாள விடுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றினை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பொதுப் பணித் துறையின் மூலம் கந்தர்வ கோட்டையில் இருக்கக்கூடிய எல்லாக் குளங்களையும் சீரமைப்பதற்கு மூன்று கோடி ரூபாய் தருவதாக முன்பு சொல்லியிருந்தார்கள். அதனை இந்த வருடம் தந்து எல்லா குளங்களையும் ஆழப்படுத்தி சீரமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் பல விஷயங்கள் இருந்தாலும், நேரம் கருதி என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

*திரு. கே. வி. வேணுகோபால்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தி மீது நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.



என்னுடைய தொகுதியில் தொட்டமஞ்சேரி என்ற கிராமம் இருக்கிறது. அந்த கிராமத்தில் 6,000 ஜனத்தொகை கொண்ட மக்கள் இருக்கிறார்கள். அதற்கு 16 கி.மீ. தூரத்திற்கு ரோடு வசதி செய்யப்படவில்லை. இதுவரைக்கும் மின் வசதி செய்து கொடுக்கப்படவில்லை. அவற்றை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் அஞ்சட்டிக்கு அருகில் தொட்டல்லா என்ற ஆறு ஓடுகிறது. அந்த ஆற்றில் சர்வே செய்து ஒரு டேம் கட்டினால் 6,500 ஏக்கர் நிலத்திற்கு பாசனவசதி செய்து கொடுக்க முடியுமென்று சொல்லியிருக்கிறார்கள். எனவே அந்த டேம் கட்டித் தர அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் இருக்கும் தளி பஞ்சாயத்து யூனியனில் 50 பஞ்சாயத்துகள் இருக்கின்றன. அதை இரண்டாகப் பிரித்து அஞ்செட்டியில் ஒரு தனி பஞ்சாயத்து யூனியன் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தேங்கனிக்கோட்டை என்பது ஒரு தாலுகா தலைநகரம் ஆகும். அங்கு 30 ஆயிரம் ஜனத்தொகை இருக்கிறது. குடிதண்ணீர் வசதி, தெருவிளக்கு வசதி போன்ற வசதிகள் சரிவர செய்து கொடுக்கப்படாமல் இருக்கிறது. குறிப்பாக குடிதண்ணீர் பிரச்னையைப் போக்க சநத்குமார் நதியில் ஒரு டேம் கட்டலாம் என்று சர்வே செய்திருக்கிறார்கள். இந்த டேமை உடனடியாகக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பல இடங்களில் சரியான சாலை வசதியும், போக்குவரத்து வசதியும் இல்லாமல் இருக்கிறது. டெங்கனிக்கோட்டை மற்றும் காவேரியிலிருந்தும் ஹோசூர் கோர்ட்டிற்கு வர வேண்டுமென்றால் 70 கி.மீ.,80 கி.மீ. ஆகிறது. ஆகவே தேங்கனிக்கோட்டையில் ஒரு முனிசிப் கோர்ட் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

என்னுடைய தொகுதியில் நிலவள பேங்க் ஒன்றை அமைத்துத் தர வேண்டும். மேலும் என்னுடைய தொகுதியில் உள்ள பள்ளிக் கூடங்களில் 140 வாத்தியார்களுக்கு மேல் இல்லாமல் பள்ளிக் கூடங்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. எனவே கல்வி அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தி வாத்தியார்களை நியமிக்க ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியிலே மஞ்சகொண்டபள்ளி என்ற ஒரு கிராமம் இருக்கிறது. கர்நாடகா பார்டரிலே. அந்த ஊருக்குக் கூட சாலை வசதி இல்லை. எனவே அந்தக் கிராமத்திற்கு சாலை வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும். அங்கே மின்சார வசதியும் இல்லை. எனவே மின்சார வசதியையும் செய்து கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. வி. வேணுகோபால்] [1987 மார்ச் 5

அடுத்து என்னுடைய தொகுதியான தள்ளியிலே கவர்ன் மென்ட் ஆஸ்பத்திரி கிடையாது. எனவே ஆஸ்பத்திரி ஒன்றை அமைத்துக் கொடுக்க ஆவன செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் உள்ள விவசாயிகள் மின்சார இணைப்பு கொடுக்கவேண்டும் என்று 10, 12 வருடங் களுக்கு முன்பாக அப்ளிகேஷன் போட்டும் கூட, இன்னும் மின்சார இணைப்புத் தரவில்லை. எனவே மின்சார இணைப்பையும் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் சரியான பஸ் வசதி கிடையாது. அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் பஸ் டெப்போ ஒன்றை அமைத்து, தற்போது 4 பஸ்களைத்தான் விட்டிருக்கிறார் கள். எனவே அதிக பஸ்களை விடவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே சாலை பிரச்சினை மின்சாரப் பிரச்சினை, மற்றும் தண்ணீர் பிரச்சனை போன்று நிறைய பிரச்சனைகள் இருக்கின்றன. மேலும் அஞ்செட்டியிலே ஒரு காவல் நிலையத்தை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் தெக்கட்டி என்ற ஒரு ஏரி இருக்கிறது. அதை மராமத்து செய்வதற்காக 66 லட்சத்திற்கு மோலக எஸ்டிமேட் போட்டிருக்கிறார்கள் என்று கேள்விப் பட்டேன். அதற்கும் ஆவன செய்யுமாறு நான் கேட்டுக்கொள் கிறேன். மேலும் என்னுடைய தொகுதியிலே காரண்டப்பள்ளி பஞ்சாயத்திலே முனகனப்பள்ளி என்று ஒரு கிராமம் இருக்கிறது. அங்கேயும் ஒரு ஏரி இருக்கிறது. 10 வருஷத்திற்கு முன்பு சாங்ஷன் ஆகியும் இன்னும் மராமத்துப்பணி பெண்டிங்கிலே இருக்கிறது. அதற்கு நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள் கிறேன்.

எனக்கு தமிழ் சரியாக வராது. நான் தெலுங்குதான் படித்து இருக்கிறேன். எனக்கு இங்கே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (6-3-1987) காலை 10.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7.57 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

V211,31 N87

7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும் எதுவுமில்லை.

N87.38-1

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

8. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) சமூக நலத்துறை தொடர்பான பத்திகள் பற்றிதான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பதாவது அறிக்கை (தமிழ், ஆங்கிலம்(

136504